
# தமிழர் ஆளுமைக் களங்கள்




068

ஆய்வர்கள்

புதுவைப் பல்கலைக்கழகம்

# தமிழர்

# ஆளுமைக்

# களங்கள்

ஆய்வர்கள்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி — 605 014

பதிப்புரிமை : ஆய்வர்கள்
மே/பா. தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி-605 014

விற்பனை உரிமை: **பாரி நிலையம்**
184, பிரகாசம் சாலை, பிராட்வே
சென்னை-600 108

பதிப்பாண்டு: திருவள்ளுவர் ஆண்டு 2022
சித்திரை முதல் நாள் (14-4-91)

படிகள்: 500

விலை: உரூ. **28**

அச்சகம்: சபாநாயகம் பிரிண்டர்சு
கீழ வீதி, சிதம்பரம், தொ.பே: 2350

## வாழ்த்துரை

**முனைவர் ஆ. ஞானம்**
துணைவேந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்

மீண்டும் மீண்டும் சோதனைகள் நிகழ்த்தி ஆதாரங்களை மையமாக வைத்து முடிவு கண்டுரைப்பது அறிவியலில் அரிச்சுவடி. இம்முறை, இயன்றவரை ஏனைய வாழ்வியல் துறைகளிலும் பயன்படுத்திப் பார்க்கும் முயற்சி உலகெங்கும் நடந்து வருகிறது.

புதுவைப் பல்கலைக் கழகப் புதுவை மையத் தமிழியல் துறை ஆய்வாளர்களும் கள ஆய்வு (Field works) போன்ற அறிவியல் நெறிமுறைகளைத் தம் ஆராய்ச்சிக்குக் கடைப்பிடிப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

எம். பில், பிஎச். டி ஆய்வு செய்வோர், தமக்குரிய மூன்றாவது தாளைக் கள ஆய்வு அடிப்படையில் அமைந்த

கட்டுரையாக வடிவமைத்து, நெறியாளர் பார்வைக்குப் பிறகு, கூட்டாக அச்சேற்றி ஒரு நூலாக வெளிக் கொணர்ந்திருப்பது வரவேற்கத் தக்க நன் முயற்சி.

கூட்டாக, இது போன்ற முயற்சிகளில் மாணாக்கர் ஈடுபடுவது தம்முள் கூட்டுணர்வையும் குழு உணர்வையும் (Team Spirit) வளர்க்கும்; வளர்க்க வேண்டும். தவிர, உயர்மட்ட ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர்கள், தங்கள் முயற்சி, விடைத் தாளாக மட்டும் மாறாமல், என்றும் நிலைத்திருக்கும் புத்தக வடிவு பெற்றுப் பலரும் பயன் பெறும் வகையில் அமையும் என்பதை உணர்வதால் அவர்களிடம் தீவிர முயற்சியும், ஊக்கமும் வளரும். அதன் அடிப்படையில் இம்முயற்சி போற்றற்குரியது.

தமிழ்ப் புத்தாண்டு அன்று இந்நூல் மலர இருப்பது அறிந்து மகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

துறைத் தலைவர் திரு க. ப. அறவாணன், நெறியாளர் களாக இருந்து ஊக்கப்படுத்திய ஆசிரியர்கள், திருவாளர்கள் அ. அறிவுநம்பி, நா. ஆறுமுகம், இளமதி சானகிராமன் ஆகியோரையும்,

ஆய்வாளர்கள் கொடுமுடி ச. சண்முகம், வே. சீதாலட்சுமி, கேசவ. பழனிவேலு, இராச, திருமாவளவன், த. புகழேந்தி, கலைவாணி, தேவசேனா, கண்ணன், உலக. வீரப்பன், குணசேகரன் ஆகியோரையும் பாராட்டுகிறேன்.

வெல்க நன் முயற்சிகள்.

ஆ. ஞானம்

**க. ப. அறவாணன்**
**தமிழியல் துறைத் தலைவர்**
**புதுவைப் பல்கலைக் கழகம்**
**புதுச்சேரி - 605 014.**

# நாங்கள் இராசாளிப் பறவைகள்

நம் நாடு எந்த இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது? நாம் எதனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்? நம்மை நடத்துவோர், நம்மையும் உட்கொண்டுதான் இயங்குகின்றனரா? நம் எதிர்காலப் பயணம் பற்றிய தொலைநோக்குத் திட்டம், நம் கைவயம் உள்ளதா? நம்மை நடத்துவோர் கைவயம் உள்ளதா? இந்த வினாக்களுக்கு விடையளிக்க நம் மண்டையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதே இல்லை.

விடைகள் முற்றும் எதிர்மறையானவை. ஏதோ நடக்கிறது; எங்கோ போய்க் கொண்டிருக்கிறோம், அவன் ஆட்டுவிக்க நாம் ஆடுகிறோம்; அந்த 'அவன்' யார்? கடவுளா? தலைவரா / தலைவியா? மதத் தலைவரா? சாதித் தலைவரா? அல்லது யாருமே இல்லையா?

**எங்கே போகிறோம்? ஏன் போகிறோம்?**

தமிழகத் தமிழ்த் துறையினருக்கும் இந்த வினாக்களும் விடைகளும் முழுமையாகப் பொருந்தும். ஊதிய இலக்கு, பணியாற்றுவோர்க்கும், பெறும்வரை வேலை இலக்கு, படிப்போருக்கும் முதன்மையாக இருக்கின்றன. கொள்கை இலக்கு, அறிவு இலக்கு, படைப்பு இலக்கு, தொண்டு இலக்கு, சமுதாய இலக்கு - ஆகியன நமக்கு உள்ளனவா? நெஞ்சைத் தொட்டு விடைகளை நினைத்துப் பார்ப்போம்.

தமிழ்நாடு-புதுவை உள்ளிட்ட பகுதிகளில் தொழில் சாராக் (Non-Professional) கல்லூரி, பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர் எண்ணிக்கை: 17631 + 291(புதுவை) = 17922. 1990இல் வெளிவந்த தமிழ் நூல்களின் எண்ணிக்கை: 1269. இந்திய மொழிகளில் வெளிவந்த நூல்களின் எண்ணிக்கை: 17,000. தமிழில் சராசரி ஒருவருக்கு ஒரு நூல்கூட வெளிவரவில்லை. பதினான்கு பேருக்கு ஒரு நூல்.

நம் நாட்டில் கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பேர் கல்லூரி/நிறுவனம்/பல்கலைக் கழகங்களில் பணியாற்றுகின்றனர். (இந்து, 13—3—91). ஒவ்வொருவர்தம் சராசரி மாத வருவாய் மூவாயிரம் ஆகும். அன்னோர் ஐம்பத்தெட்டு அல்லது அறுபது ஆண்டு வரை வேலை உறுதி பெற்றோர் ஆவர். ஓர் ஆசிரியர் ஒருநாள் ஊதியம் ரூ. 137/- கிராம உழைப்பாளியின் சராசரி ஒரு நாட்கூலி ரூ. 10 ஆகும். கிட்டத்தட்ட 14 உழைப்பாளியின் கூலியை ஓர் ஆசிரியர் பெறுகிறார்.

உழைப்பாளி, நேரடியாக உடல் உழைப்போடும், உற்பத்தியோடும் தொடர்புடையவர். ஆசிரியர் உடல் உழைப்போடும், உற்பத்தியோடும் நேர்த் தொடர்பில்லாதவர். ஒரு நாட்டின் பொருளாதாரம் உற்பத்தியுடன் தொடர்புடையது; உற்பத்தி, உடல் உழைப்புடன் தொடர்புடையது. இவ்விரண்டனுடன் தொடர்பில்லாத ஒருவர்க்கு, ஊதியத்தை மறைமுகமாக வழங்குபவர் உழைப்பாளியே.

இந்நிலையில், ஆசிரியர்தம் கடமை பதினான்கு மடங்காகிறது. பதினான்கு மடங்கு அல்ல; தனக்குரிய ஒரு மடங்கிற்காகவாவது, ஆசிரியர் உழைக்கிறாரா என்பது வினாவிற்குரியது. உழைக்கிறார் எனில் .. அவர்தம் பங்களிப்பு என்ன? எவ்வளவு?

சரி; அது போகட்டும்; நாம் படிப்பிக்கும் தொண்டு (?-தொழில்) புரிகிறோம்: நாம் படிக்கிறோமா? உலகப் புள்ளி விபரம் விடையளிக்கிறது. உலக மாந்தர் சராசரி முப்பத்தைந்து பக்கங்கள் படிக்க, நாம் மூன்று பக்கங்கள் படிக்கிறோம்; அவையும் சிந்தனை நூல்கள் அல்ல; பாடப் புத்தகங்கள்.

அதுவும் போகட்டும்.

நாம் சிந்திக்கிறோமா? நம் தனி நலன்களுக்கு அப்பால் நின்று, நம் மொழி நலன், இன நலன், சமுதாய நலன், நாட்டு நலன் ஆகியன பற்றியோ (1), இலக்கியம், இலக்கணம், படைப்பு, திறனாய்வு ஆகியன பற்றியோ (2)

நாம் சிந்திக்கிறோமா?


வினாவின் முதற் பகுதி பற்றிப் பெரும்பாலும் நாம் நினைப்பதே இல்லை. நம் கவலை எல்லாம், 'நான், என் மனைவி, என் குழந்தைகள், அவர்களுடைய படிப்பு, அவர்களுக்கு வேலை, அவர்களுக்குத் திருமணம், அவர்களுக்கு வீடு வாசல், சொத்து.

இவற்றிற்கு அப்பால் -

நாம் சிந்திக்கிறோமா?

வினாவின் இரண்டாம் பகுதிக்காகவும் நாம் சிந்திக்க வேண்டியதில்லை; சிந்திக்க மேலை நாட்டார் இருக்கிறார்கள்; அவர்களை அரை குறையாகப் படித்து, அதிலும் அரை குறையாக வாந்தி எடுப்பதுதானே நம் வழக்கமாகி வந்திருக்கிறது. நாம், நம்மிலிருந்து மண்மணம் கமழும் எத்தனைச் சித்தாந்தங்களை உருவாக்கியிருக்கிறோம்? திரும்பிப் பார்த்தால், நாம் ஆங்கிலேயர்/அயலார் முதுகில் தொடர்ந்து சவாரி செய்து கொண்டிருப்பது புலப்படும்; உண்மையில், ஆங்கிலேயர்/அயலார், நம் முதுகைவிட்டு இறங்காதது புலப்படாது. ஒட்டகங்கள் சுமைகளை இறக்க உடன்படுவதில்லை; அவை சுமப்பதையே தொழிலாக/தோலாகக் கொண்டு விட்ட பாலைவன அடிமைகள்.

சிந்தித்தல், படித்தல், செயலாற்றுதல் - படித்தல், சிந்தித்தல் என்ற சுழல் வட்டத்தை அடியொற்றிய கல்வியமைப்புதான் - நம் நாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வை நல்குவதாக இருக்க முடியும்; இருக்க வேண்டும். செயல் (action) தான் நடுநாயகமாக இருத்தல் வேண்டும்.




புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையைச் செயல் வடிவினதாக (action oriented) அமைத்துச் செயல்படுத்த முயன்று வருகிறோம். அதன் ஒரு பகுதி தான் ‘ஆளுமைக் களங்கள்’.

மக்களுக்கு வேண்டியவற்றை, மக்களுக்கு இன்று, நாளை பயன் படுவனவற்றைப் பற்றி உரக்க எண்ணத் துடிக்கிறோம்; அதற்காகப் படிக்கிறோம்; படிக்க வைக்கிறோம்; செயல் வடிக்க வைக்கிறோம். சந்திர மண்டலப் பயணம் வேண்டியதுதான் அமெரிக்கருக்கும், உருசியருக்கும்.

இங்கே, நமக்கு இக்கரையினின்று அக்கரைக்குச் செல்லப் பாலம் — அதுவும் மூங்கில் பாலம்கூடப் போதும்; அதற்கே முயற்சிகள் நடந்து வருகின்றன.

இந்நூல் உருவாக்கம் –

மண்ணிலிருந்து திடும் எனத் தோன்றிய வெண்கல விக்கிரகம் அன்று; இந்தச் சின்ன முயற்சிக்குக்கூட, எங்கள் நெஞ்சங்கள் காயப் படுத்தப் பட்டிருக்கின்றன; எங்கள் கால்கள் தளையிடப்பட்டன; எங்கள் கைகள் கட்டப்பட்டன. நெப்போலியர்களைச் சின்னத் தீவுகள், நிரந்தரமாகச் சிறைப் படுத்தி விட முடியாது.

*கடமைக்காகக் கடலையும் நீந்துவோம்;*
*விண்ணையும் சாடுவோம்; மண்ணையும்*
*அகழுவோம்!*
*காரணம்: நாங்கள் 'சின்னக்' குருவிகள் அல்ல;*
*இராசாளிப் பறவைகள்!*

சித்திரை முதல் நாள்
14 – 4—1991

க. ப. அறவாணன்

# பதிப்புரை

புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை ஆய்வு மாணவர்களின் குறு ஆய்வேட்டின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

வேறெந்தப் பல்கலைக் கழகத்திலும் இல்லாத அளவிற்குப் புதுமையானதாகப் புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுப் பட்டங்களின் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்க ஒன்று.

கள ஆய்வு நெறிமுறைகளை முதல் தாளாகவும், மனித ஆளுமை வளர்ச்சி, பேச்சு ஆங்கிலம் போன்றவற்றை இரண்டாம் தாளாகவும் அறிமுகப் படுத்திப் பாடத்திட்டம், ஆய்வு மாணவர்களின் திறனை மேம்படுத்துகிறது.

தமிழியல் துறை நெறியாளர்களும், எம்.ஃபில் ஆய்வாளர்களும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட திட்டப்படி, தமிழிலக்கண, இலக்கியங்களில் காணப்பெறும் சிக்கல்களைக் கருவாகக் கொண்ட குறு ஆய்வேடு ஒன்றை மாணவர்கள் அளித்தல் வேண்டும். அதில் தோன்றும் அறிவு முடிச்சுகளை அவிழ்ப்பதாக அமைந்த, துறை போகிய அறிஞர் மூவரிடம், 90 நிமிடம் நேர்காணல் செய்து திரட்டிய கருத்துகள் அடங்கிய ஒலி நாடா ஒன்றையும் அவர்கள் தருதல் வேண்டும். பாடத்திட்டத்தில் இவ்விரண்டும் சேர்ந்தே மூன்றாம் தாளாக அமைகின்றன.

இவற்றின் பயனாக ஆய்வு மாணவர்கள், நான்காம் தாளான நிறைவாய்வேட்டைச் செப்பமாகச் செய்யப் பயிற்சி பெறுகின்றனர். மேலும் ஆய்வு மாணவர்கள், வாழும் அறிஞர்களோடு தொடர்பு கொள்ளவும், கருத்துகளைப் பெறவும், அவர்தம் சொந்தக் குரலைப் பதிவு செய்து பாதுகாக்கவும் அரிய வாய்ப்பைப் பெறுகின்றனர். பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களை, 'ஒலிக் களஞ்சியம்' என்ற பெயரில் தமிழியல் துறை பாதுகாத்து வருகிறது. இந்த 'ஒலிக் களஞ்சியம்', ஆய்வாளர்களுக்கும், வரும் தலைமுறையினர்க்குமான 'தமிழ்ப் புதையல்' என்றே கூறவேண்டும்.

பொதுவாகக் குறு ஆய்வேட்டைத் தட்டச்சுச் செய்து அளிப்பதே வழக்கம். இவ்வாண்டு, எங்கள் தமிழியல் துறைத் தலைவரின் அரிய வழிகாட்டுதலால், குறு ஆய்வேடுகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளோம். தமிழியல் துறையின் வளர்ச்சி நோக்கிய திட்டம் ஒன்றில் நாங்களும் பங்கேற்றோம் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி; அதனால் பயனும் அடைகிறோம் என்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

நூலாக்க முயற்சியில் இன்றியமையா மற்றொரு பயனும் உண்டு. தட்டச்சுச் செய்வதால் பல்கலைக்கழக அலுவலகத்தில் மட்டுமே இருந்திருக்க வேண்டிய குறு ஆய்வேடு, இப்பொழுது நூலாக மலர்ந்து அறிஞர்களான உங்கள் கைகளில் தவழ்ந்து எங்களை மதிப்பிட உதவுகிறது; தட்டச்சுச் செய்து மூன்று படிகள் மட்டுமே அளித்திருந்தால், ஒவ்வொரு குறு ஆய்வேட்டிற்கும் உருபாய் 200 முதல் 300 வரை செலவு பிடித்திருக்கும். நூலாக உருவாக்கியதால் அச்செலவே, முதலீடாக மாறிப் பயன்தர வுள்ளது.

இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் தமிழர்தம் ஆளுமையின் பல்வேறு பக்கங்களை, அதன் நிறை குறைகளோடு சுட்டிக்காட்டி, ஒரு முடிவைப் பெற வைப்பதற்கான முயற்சியே எனலாம்.

இக்கட்டுரை ஆசிரியர்களை, ஆய்வு மாணவர்களாக ஏற்றுக் கொண்ட புதுவைப் பல்கலைக் கழகப் புதுவை மையத் தமிழியல் துறைக்கு எத்தனை நன்றி கூறினும் தகும்.

இந்நூலுக்கு, எங்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஆ. ஞானம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி ஊக்க மூட்டியுள்ளார். உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞரான துணைவேந்தர் அவர்களின் 'மெய் ஆகும் வாழ்த்துரை' கட்டுரை யாளர்களைத் தொடர்ந்து தரமான ஆய்வுகளைச் செய்ய ஊக்கப்படுத்தும்; அவர்களின் வழி, தமிழை வளப்படுத்தும்.

'தாயினும் சாலப் பரிந்து, அறிவையும், உழைப்பையும், தம் மாணாக்கர்களுக்கு அயராது ஊட்டும், எங்கள் துறைத் தலைவர் பேராசிரியர், முனைவர் க.ப. அறவாணன் அவர்கள் அணிந் துரை அளித்துச் சிறப்பித்துள்ளார்.

அவர் எங்களிடம் விதைத்தவற்றை, விளைச்சலாக்கிக் காட்டும் முயற்சியே இந்நூல் என்றால் மிகையில்லை.

பொறுப்பாசிரியராகவும், நெறியாளர்ராகவும் அமைந்த இணைப்பேராசிரியர், முனைவர் நா. ஆறுமுகம் அவர்களும், நெறியாளராக அமைந்த இணைப் பேராசிரியர் முனைவர் அ. அறிவுநம்பி அவர்களும், விரிவுரையாளர், முனைவர் க. இளமதி சானகிராமன் அவர்களும், கருங்கல்லைக் கவின்மிகு சிலையாகவும், கரியை வைரமாகவும் மாற்றும் வித்தகர்கள். இவர்களின் அன்பும், வழிகாட்டுதலும் இல்லை என்றால் இக் கட்டுரைகள் காட்டு மலர்களாய்க் கவனிப்பாரின்றி அலுவலகப் பேழைகளில் வாடியிருக்குமேயன்றி, முழு மலர்மாலையாய் அச்சுருவம் தாங்கி அனைவர் பார்வைக்கும் வந்திருக்கா.

தம் கருத்துகளால் பேருதவி புரிந்த விரிவுரையாளர்கள், முனைவர் அரங்க. நலங்கிள்ளி, ஆ. திருநாகலிங்கம் ஆகியோரும், தமிழியல் துறையில் பணியாற்றும் திரு. பாஸ்கர், திரு. முருகப்பன் திரு. இராமராசன், திரு. இராமச்சந்திரன் ஆகியோரும், பல்கலைக் கழகப் பல்வேறு அலுவலர்களும், ஒல்லும் வகையால் ஒத்துழைத்தது எங்களுக்குக், 'கல்மேல் எழுத்துக்கு நேர்'.

இத்தனை பேருக்கும் ஒற்றைச் சொல்லால், 'நன்றி' என்று சொல்வது முறையாகாது.

நன்றி என்ற சொல்லைச் செயலாக்கிச் செயலை இயக்க மாக்கி, இயக்கத்தைப் புகழாக்கிப், புகழை மாலையாக்கிச் சூட்டுவதே எங்கள் பணி.

அப்பணியை இனிதே முடிப்போம் உங்கள் வாழ்த்துகளோடு.

நெல்லுக்கும் உமியுண்டு; நிலவுக்கும் குறையுண்டு; எங்களிடமும் குறையிருக்க வாய்ப்புண்டு. அதனை உங்கள் அறிவுடைமை சுட்டிக் காட்டும்; எங்கள் பணிவுடைமை திருத்திக் கொள்ளும்.

நன்றி

பதிப்புக் குழுவினர்

புதுவை
சித்திரைப் புத்தாண்டு 14—04—91

# உள்ளுறை

1. *கண்ணன், க.*

**ஒருநாள்: நேரப் பங்கீடும் செயற்பாடுகளும் — 13**

2. *கலைவாணி, இரா.*

**நன்றியுணர்வும் குடும்பமும் — 26**

3. *குணசேகரன், எம்.*

**நெசவுத் தொழிலும் செய்முறைகளும் — 36**

4. *சண்முகன், கொடுமுடி. ச.*

**பெருவழி மண்டபங்கள் — 53**

5. *சீதாலட்சுமி, வே.*

**அரக்கு மாளிகை கதைப்பாடல் கூறுகள் — 81**

6. *திருமாவளவன், இராச.*

**அறிவுக் கோட்பாடு — 95**

7. *தேவசேனா, செ.*

**வணிகமும் தன்னம்பிக்கையும் — 117**

8. *பழனிவேலு, கேசவ.*

**தமிழர்தம் கல்வி வளர்ச்சி — 129**

9. *புகழேந்தி, த.*

**சமுதாயச் சீர்கேட்டை எதிர்நீச்சலிடும் துணிவு — 141**

10. *வீரப்பன், உலக.*

**தமிழரின் கூட்டுணர்வுச் செயற்பாடுகள் — 157**

க. கண்ணன், எம்.ஏ., எம்.பில்., பட்டத்திற்குத் 'தமிழர்தம் காலமேலாண்மை' எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். எம்.ஏ., செயல் முறைத் தமிழியலில் ''புதுவை நாட்டுப்புற நம்பிக்கைகள்'' எனும் தலைப்பில் ஆய்வு செய்தவர். இளம் இலக்கிய வியலில் (பி.லிட்) முதல் வகுப்பில் தேர்ச்சிப்பெற்ற தற்காக ஆதிதிராவிடர் நலத்துறை வழங்கும் ரூ. 1000% பரிசைப் பெற்றவர்.

நெறியாளர்

நா. ஆறுமுகம்

# ஒரு நாள்: நேரப்பங்கீடும், செயற்பாடுகளும்

**க. கண்ணன்**

'காலமும் கடலலையும் யாருக்காகவும்
காத்திருப்பதில்லை'

— இது முதியோரின் முதிர்மொழி

உலகில் தோன்றிய அனைத்தையும் ஈடுகட்டிவிடலாம். ஆனால் காலத்தை மட்டும் ஈடுகட்டவே முடியாது. ஒவ்வொரு நிமிடமும் நம் வாழ்நாளின் நீட்டிப்பைக் குறைப்பதாகும். இவ்வுணர்வைப் பெரும்பாலான மக்கள் அறிவதே கிடையாது. இதைமட்டும் உணர்ந்தார்களானால் அவர்கள் வாழ்வு செம்மையுறுவது உறுதி. சிலர் ஒரு நாளை ஒரு மணித்துளியாகக் கருதியும் ஒரு மாதத்தை ஒரு நாளாகக் கருதியும், ஓர் ஆண்டை ஒரு மாதமாகக் கருதியும், வீணே கழிக்கின்றனர். இதனால் அவர்கள் செய்யும் பணியில்கூட முழுமையாக ஈடுபட முடியாமல்

போய்விடுகிறது. நம்பணி வெற்றி பெறவும், நாம் முன்னேறவும் வேண்டுமானால் எதையுமே திட்டமிட்டுச் செய்ய வேண்டும். திட்டமிட்ட பயணம் மட்டிலா மகிழ்ச்சியைக் கொடுக்கும். அம்மகிழ்ச்சி வெற்றியின் ஏணிப்படியாகும்.

இன்றைய மக்களிடையே காலம் பற்றிய ஓர் உணர்வு இருக்கிறதா என்பது ஐயத்திற்கிடமான ஒன்றாகும். ஏன், அவர்கள் காலத்தைப் பற்றியே கவலைப்படுவதாகத் தெரிய வில்லை. ஆனால் காலமே வாழ்வின், உலகின் அளப்பறிய சக்தியாகும், என்பதை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டியது அவசியமாகும்.

தாம் வேலைக்குச் சென்றால் வேலையை உரிய நேரத்தில் முடிக்கவேண்டும் என்ற உணர்வைக் கொண்டிருந்தாலும் வேலை வாங்குவோர், வேலை செய்வோரை வேலை செய்வதில் குறை சொல்லி விட்டால் அல்லது அவதூறாகப் பேசிவிட்டால் தம்மால் முடிந்த மட்டில் வேலையைக் காலம் நீட்டித்துச் செய்வர். இதனால் காலம் வீணாகி, செயல் வெற்றி பெறாமல் போய் விடுதலும் உண்டு. இதைக் கிராமம், நகரமாகிய இரு இடங்களிலுமே காணலாம்.

கிராமங்களில் நடைபெறும் பள்ளிகளில் இன்றைய நிலையிலும் ஆசிரியர்கள் குறைவாகவே உள்ளனர். ஒரு பள்ளியில் ஆசிரியர்கள் இருவர் மட்டுமே பணியாற்றுவர். அவ்விருவரும் ஒன்று முதல் ஐந்துவரையுள்ள வகுப்புக்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு சொல்லிக்கொடுத்தால் உரிய வகையில் மாணவர்களை உருவாக்க முடியாதென்பது உண்மையே. அத்தோடு கிராமங்களில் பள்ளிக்கு மாணவர்கள் உரிய நேரத்தில் வருவதுகூட கிடையாது. அவ்வாறு வந்தாலும் ஒரு மணி நேரம் அல்லது அரை மணிநேரம் காலதாமதமாகும். மேலும் பள்ளியில் மாணவர்கள் அனைவரும் வரவேண்டும் என்பதற்காக ஆசிரியர் பள்ளிக்கு வந்திருக்கும் மாணவர்களை அனுப்பி, வராத மாணவர்களை அழைத்து வரும்படிப் பணிப்பார். அவ்வாறு அழைத்து வந்து பள்ளியில் சொல்லிக்கொடுப்பதும் இவண் சுட்டத்தக்கது. இப்படி இருக்கும் போது அவர்கள் எங்கே உரிய நேரத்தில் வரவேண்டும் என்ற உணர்வைப் பெறப்போகிறார்கள்? இதைப் பெற்றோர்கள் கண்காணிக்கவில்லை என்று கூறுவதற்

இல்லை. ஏனெனில் அவர்கள் காலையிலேயே வேலைக்குச் சென்று விடுவதால் கண்காணிக்க முடியாமல் போய்விடுகிறது. இதற்காக அவர்களை வேலைக்குச் செல்லவேண்டாம் என்று கூறுவதாக நினைத்தல் கூடாது.

இக்காரணங்களால்தாமோ என்னவோ கிராமங்களில் படித்து வரும் மாணவர்கள், நகரங்களில் படித்து வரும் மாணவர்களைக் காட்டிலும் வேறுபட்டுள்ளனர் போலும். இதன் மூலவேர் பொருளாதாரப் பிரச்சினையாக அமைகிறது. இவற்றை யெல்லாம், மனத்தில் கொண்டு நம்மால் ஏதேனும் முடிந்த வரையில் செய்யலாம் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இவ்வாய்வை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. முடிந்தவரையில் மக்களைத் தம் வழிக்குக் கொண்டு வருகின்றோமோ இல்லையோ காலம் பற்றிய ஓர் உணர்வையாகிலும் அவர்களிடையே பெற வைக்கலாமல்லவா? அச்சிறு முயற்சியில் வெற்றிபெற்றாலே போதுமானது. கள ஆய்வின்போது இவ்வுணர்வைப் பெற்ற தாகவே சிலர் கூறினர். அதாவது 'காலத்தைப் பற்றியே நினைக்காத எங்கள் மனதில் எண்ணிப் பார்க்கவாவது வைத்தீர்களே' என்ற ஏக்கப் பெருமூச்சினையும் காண முடிந்தது.

இவ்வாய்வு வினாநிரலின்வழி, தரவுகள் திரட்டப் பெற்று அத்தரவுகளின் வழி மேற்செல்கின்றது.

தமிழர் முன்னேற வேண்டிய தலைமைக் கூறுகளில் காலத்தைப் பற்றிய உணர்வு இருப்பதும் அவசியமாகும். ஒரு மணி நேரத்தில் செய்ய வேண்டிய செயல்களை ஒரு நாள் முழுவதும் நீட்டித்தும், ஒரு நாளில் செய்ய வேண்டிய வேலைகளைப் பல நாட்கள் நீட்டித்தும், ஒரு மாதத்தில் செய்ய வேண்டிய வேலைகளைப் பல மாதங்களுக்கு நீட்டித்தும் செய்வது கூடாது. இதனால் பொருட் செலவு, செயல் வெற்றி பெறாமை போன்றன ஏற்படும். இதையே திருவள்ளுவர்,

> ''சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்; அத்துணிவு
> தாழ்ச்சியுள் தங்குதல் தீது''[1]

—என்கிறார்.

அதாவது தாம் எடுத்த முடிவை உடனே நிறைவேற்றிட வேண்டும். அம்முடிவை நிறைவேற்றக் காலத்தாழ்ச்சி ஏற்படு

மானால் அத்தாழ்ச்சியே முடிவைத் தடைப்படுத்தி விடும். எந்தத் தாழ்ச்சியும் வெற்றியைப் பாதிக்காது. ஆனால் காலத் தாழ்ச்சி மட்டும் ஒரு செயலின் வெற்றியைப் பாதிக்கும். இதனால் ஆராய்ந்து பார்க்காமல் அவசரப்பட்டு முடிவை நிறை வேற்ற வேண்டும் என்பது கருத்தன்று.

பட்டப்படிப்புப் படித்து முடித்த இளைஞன், அடுத்து படிப்பைத் தொடருவதா, வீட்டுச் சூழ்நிலையை அனுசரித்து வேலைக்குச் செல்வதா எனும் சிக்கல் எழும்போது அவ்விளைஞன் தாம் படிப்பைத் தொடர்ந்தால் என்ன பயன்? படிப்பை நிறுத்தி விட்டால் எளிதில் வேலை கிடைக்குமா? வேலை கிடைக்க வில்லையென்றாலும் தமக்காகச் செலவிடும் பணத்தைப் படிப்பை நிறுத்துவதன் மூலம் குறைக்கலாமல்லவா என்றெல்லாம் நன்றாக யோசித்துத் தான் முடிவுக்கு வரவேண்டும். ஆனால் யோசிப்ப திலேயே நீண்ட நாட்களைச் செலவிடக் கூடாது. சில இழப் பைத் தாங்கினால்தான் ஒரு நன்மையாகிலும் கிடைக்கும், என்பதை மனத்தில் எண்ணி எது சாத்தியமாகுமோ அதை உடனே நிறைவேற்றிவிட வேண்டும். இல்லையெனில் எதுவு மின்றித் திண்டாட நேரலாம். இது காலத் தாழ்ச்சியின் விளைவைச் சுட்டும் உதாரணம்.

இக்கட்டுரை தமிழர்கள் ஒரு நாளில் எவ்வாறு செயல்படு கிறார்கள், எப்படிப் பங்கிட்டுச் செயல் செய்ய வேண்டும், அதனால் நன்மையென்ன, தீமையென்ன? தாம் செய்யும் தொழிலுக்கேற்ப நேரப் பங்கீடு மாறுகிறதா என்று கள ஆய்வின் வழிக் காணுவதே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## துயில், துயிலேவா?

புலரும் பொழுதில் விழித்தல் என்பது நகரங்களில் சாத்திய மில்லை. இதனால் விடியலில் எழுந்திருக்கக் கூடாது, எழுந்திருக்க மாட்டார்கள் என்பது கருத்தன்று. ஆனால் கிராமங்களில் விழித்தல் புலரும் பொழுதுக்கு முன்னரே நிகழும். நகரங்களில் பொழுதுபோக்குச் சாதனங்கள் மிகுதி. கிராமங்களிலோ அச்சாதனங்கள் குறைவு. எனவே கிராம மக்கள் இரவு ஏழு அல்லது எட்டு மணிக்கு உணவருந்தி, உடனே துயிலச் சென்று விடுகின்றனர். இவர்கள் எட்டரை அல்லது ஒன்பது மணிக்குள்

உறங்கச் சென்றுவிடுவதால் விடியற்காலையில் நாலரை அல்லது ஐந்து மணிக்குள் துயிலெழுகின்றனர். நகர மக்கள் மகிழ்ச்சிகரமாகப் பொழுது போக்குச் சாதனங்களுடன் உறவாடிவிட்டுப் பத்தரை அல்லது 11 மணிக்கு உறங்கச் செல்வதால் அவர்களுக்குப் புலரும் பொழுதாகக் காலை ஏழு அல்லது எட்டு மணி அமைகிறது. அத்தோடு நகர மக்கள் மிகுதியாக உடலுழைப்பிலிருந்து விலகி விடுவதால் உடல் சோர்வு ஏற்படுவது குறைவு. இதனால் அவர்கள் உழைக்க வில்லை என்பது கருத்தன்று.

எட்டு மணி நேரம் முதல் பத்து மணி நேரம் வரை 16% பேர் துயில்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் வீட்டில் வேலையின்றி இருக்கும் பெண்கள், படித்து வேலையற்றிருப்போர், படித்துக் கொண்டிருப்போர் ஆவர். ஐந்து மணி நேரம் முதல் எட்டு மணி நேரம் வரை 80% பேர் துயில்கின்றனர். இதுவே இயல்பான தூக்க நிலையாகும். மூன்று மணி நேரம் முதல் நான்கு மணி நேரம் வரை 4% பேர் துயில்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் காவலர்களே (Police) ஆவர். பத்து மணி நேரம் தூங்குபவர்கள் குறைந்தது இரண்டு மணி நேரமாவது குறைத்துக் கொண்டு, அந்நேரத்தைப் பிற செயல்கள் செய்யப் பயன்படுத்திக் கொள்ளலாம். பத்து மணி நேரம் தூங்கிவிட்டு, எனக்கு நேரம் போதவில்லை, நேரமே கிடைக்கவில்லையென்று கூறுவது முறையன்று. அதிக நேரமும் தூங்கக் கூடாது. இதை

''தூங்காதே தம்பி தூங்காதே – இப்போ
தூங்கிப் புட்டுப் பின்னாடி ஏங்காதே''[2].

என்ற பாடல் அடியும் உணர்த்தும். நாம் இப்போது அதிக நேரம் தூங்குவது எதிர்காலத்தில் எதையோ இழக்கப் போகிறோம் என்பதன் அறிகுறியாகும் என்கிறது இப்பாடல். மேலும் ஆற்றைப் போல நாம் செயல்பட வேண்டும் என்ற கருத்தையும் அப்பாடலிலேயே தொனிப்பதைக் காணலாம்.

''தூங்காம ஓடுதடா ஆறு — அது
தூங்கிப் புட்டா நமக்கு ஏது சோறு
ஓயாம சுத்துதடா பூமி — அது
ஓய்வெடுக்கும் நாளிருந்தாக் காமி''[3].

என்று சுட்டுகிறது அப்பாடல் அடிகள். இதை நோக்கும் போது தூக்கத்தை நாம் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு நமக்கு வரவேண்டும் என்று நம்மைக் கேட்பது போல் உள்ளது.

**வேலை, வாழ்க்கைக்குச் சோலை**

மனிதன் தன் வருமானத்தின் பொருட்டு எட்டு மணி நேரம் உழைக்க வேண்டும். சிலருக்கு அவ்வளவு நேரம் உழைத்தே அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியாக வில்லை. நாலரை மணி நேரம் முதல் ஆறு மணி நேரம் வரை 44% பேர் உழைக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் ஆசிரியர்களேயாவர். நாலரை மணி நேரம் வேலை செய்வோர் பகுதி நேரப் பள்ளியில் (Shift School) வேலை செய்வோராவர். இம் முறையைப் பயன்படுத்து வதால் அப்பணிபுரிவோரின் பாதி நாள் வீணடிக்கப் படுகிறது என்பது உண்மையே. இது நெய்யெடுக்கச் சென்று பாலையே கீழே கொட்டிவிடுவது போலல்லவா இருக்கிறது? எட்டு மணி நேரம் முதல் பத்து மணி நேரம் வரை 20% பேர் உழைக்கின் றனர். இவர்களில் பெரும்பாலோர் தலைமை நிலையிலிருப்போ ராவர். 10 மணி நேரம் முதல் 16 மணி நேரம் வரை 4% பேர் உழைக்கின்றனர். காவலர்களே (Police) இவ்வளவு நேரம் உழைப்பதாகக் குறிப்பிடுகின்றனர். இது சுட்டத்தக்க ஒன்று. காவலர்கள் தினமும் இவ்வளவு நேரம் உழைப்பதில்லை. ஒரு நாள் முழுவதும் வேலை நாளாக இருந்தால் அடுத்த நாளில் அரைநாள் மட்டுமே வேலையாகும்.

ஐந்து மணிநேரம் உழைப்பவர்கள் பெறும் ஊதியத்தைவிட ஏறத்தாழப் பத்து மணிநேரம் உழைக்கும் மக்களின் ஊதியம் குறைவு. நாட்டில் இதைப் போன்ற ஊதிய விகிதம் இருப்பதால் தான் மக்கள் அனைவரும் நிழல், காற்றோடு கூடிய வேலையை விரும்புகிறார்கள். இப்போக்கு மாற்றப்பட வேண்டும்.

**படிப்பே வாழ்க்கைக்குப் பிடிப்பு:**

கற்றல் என்பது தெரிந்து கொள்வதற்கு என்றிருந்த காலம் மாறி வேலைக்காக என்று மாறியதுமே, படித்தலில் சிறு தொய்வு ஏற்பட்டுவிட்டது. படிப்பது வேலைக்காக மட்டுமா என்ற வினாவும் எழுகிறது. பெரும்பாலோர் மாணவப் பருவத்தில்

படிப்பதே படிப்பு, மற்றப் பருவங்களில் படிக்கலாகாது, என்று நினைக்கின்றனர். அனைவரும் இவ்வாறு நினைப்பதில்லை.

மாணவர்களின் இடையில் குறிப்பாகக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களிடையே படிப்பதே ஒரு நாகரிகமற்ற செயலாகக் கருதப் பெறுகிறது. படிக்கும் மாணவர்களைக் கண்டாலே சில மாணவர்களுக்குப் பிடிக்காது. இந்த நிலையில் படிப்பதற்காக எல்லோரும் தினமும் நேரம் எங்கே ஒதுக்கப் போகிறார்கள்? சில மாணவர்கள் பொறுப்புணர்ந்து தினமும் படிப்பர். அன்று நடை பெறும், பாடத்தை அன்றே படித்து முடித்துவிட வேண்டுமென்று விடாப்பிடியாகவும் சிலர் இருப்பர். இவ்வாறில்லாது கடைசியில் மூட்டை அதிகமாகி எதையும் ஒழுங்காகச் செய்ய முடியாமல் (படிக்க முடியாமல்) போய்விடுகின்றவர்களும் உண்டு. இந்நிலை மாறித் தினமும் படிப்பதற்கு என்று குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிப் படிக்க வேண்டும். பட்ட மேற்படிப்பைப் படிப்போர் ஓரளவு அவரவர்களின் கடமையுணர்ந்து கண்ணும் கருத்துமாகப் படிக்கின்றனர்.

ஆறு மணி நேரம் முதல் பத்து மணிநேரம் வரை 16% பேர் படிக்கின்றனர். இவர்களில் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்களே மிகுதி. இவர்கள் பள்ளி, கல்லூரிகளில் செலவிடும் நேரத்தையும் சேர்த்துப் படிக்கும் நேரமாகக் குறிப்பிட்டுள்ளனர். சிலர் சில மணி நேரமே படிக்கின்றனர். உரிய காலத்தில் உரியதைச் செய்ய வேண்டும் என்பதை,

''உழுகிற நாளில் ஊருக்குப் போனால்
அறுக்கிற நாளில் அரிவாள் தேவையில்லை''

எனவரும் பழமொழியும் தெளிவுபடுத்துவதைக் காணலாம். உரியதை உரிய காலத்தில் செய்தால் மட்டுமே கைமேல் வெற்றி கிட்டும். படிக்காதவர்கள்கூட வானொலி, தொலைக் காட்சியின் மூலம் பல பயனுள்ள நிகழ்ச்சியினை அறிந்து பயன் பெறலாம்.

சிலர் செய்தித்தாள் படித்தல், பிற பத்திரிகைகள் படித்தலையே படித்தலாக நினைக்கின்றனர். அவ்வகையில் பார்க்கப் போனால்கூட 22% பேர் செய்தித் தாள்களே படிப்ப தில்லை, இவர்களில் பெண்களே மிகுதியானோராவர். பெண்கள் மட்டுமின்றி ஆண்களில் சிலரும் செய்தித்தாள்கள் படிக்கும்

பழக்கமே இல்லாதிருக்கின்றனர். அதுவும் ஒரு வகையில் நல்லது தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் வெட்கக் கேடாக அல்லவா இருக்கின்றன. அரசியல் பற்றி எழுதும் பத்திரிகைகளில் ஒருவரைத் தாக்கியும், மற்றவரை உயர்த்தியுமே எழுதுகின்றனர். இவற்றையெல்லாம் படிக்கும் போது உண்மை எது, பொய் எது என்று இனம் கண்டுகொள்ள முடிவதில்லை. எனவே இதற்காக ஒதுக்கும் நேரம் வீணாகத் தானே போய்விடுகின்றது. இதை மனத்தில் கொண்டுதானோ என்னவோ 22% பேர் பத்திரிகைகளே படிப்பதில்லை போலும். பத்திரிகைகள் படிக்க ஒன்றரை மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை 6% பேர் ஒதுக்குகின்றனர். இவர்களில் வீட்டில் வேலையற்றிருக்கும் பெண்கள் மிகுதியாவர்.

**வாழ்வு எந்திரமா?**

எவ்வளவுதாம் கடமையில் பற்றும், பாசமும் வைத்திருந் தாலும் 24 மணி நேரத்தில், சில மணி நேரமாவது பொழுது போக்கிற்கென்று ஒதுக்க வேண்டும். பொழுதுபோக்குக் கூறுகள் கலக்காதபோது வாழ்க்கையே எந்திரமயமாகிவிடும். வெறுத்தும் விடும். ஏன் வாழ்கிறோம், எதற்காக உலவுகிறோம் என்ற வினாக்கள் அடுக்காக எழும். இன்று பொழுதுபோக்கிற்காகத் தொலைக்காட்சி பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஒரு மணி நேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை பொழுது போக்கிற்காக 58% பேர் செலவிடுகின்றனர். 34% பேர் பொழுது போக்கிற்கென்று நேரமே ஒதுக்குவது கிடையாது என்று கூறி யுள்ளனர். இது தவிர்க்கப்பட வேண்டியதாகும். அவசியம் பொழுதுபோக்குத் தேவையே. நல்ல நிகழ்ச்சிகளைத் தொலைக் காட்சியில் பார்ப்பது, பயனுடைய வகையில் பொழுதுபோக்கு அமைய உதவும். 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பதுபோல பொழுதும் போகிறது, பயனுடைய செய்திகளும் தெரிந்து கொள்கின்றோம், என்ற வகையில் மன நிறைவு ஏற்படும்.

திருவிழாக் காலங்களில் இரவு நேரத்தில் பொழுதுபோக்கிற் கென்றே சில 'கலை நிகழ்ச்சி'களை ஏற்பாடு செய்வர். அதில் தெருக்கூத்து, கரகாட்டம், பொம்மலாட்டம், மேடை நாடகம் காணொலி (வீடியோ) படம் காட்டுதல் போன்றவை இடம்

பெறும். இந்நிகழ்ச்சிகளை நகரங்களைவிடக் கிராமங்களிலேயே பெரிதும் வரவேற்புடன் பார்ப்பர். நிகழ்ச்சி முழுவதுமே பார்ப்பர்.

## ஓய்வு, வாழ்வின் தேய்வு

வாழ்க்கையில் ஓய்வு தேவைதாம். ஆனால் காலம் முழுவதும் ஓய்வு நேரமாகவே அமைத்துக் கொள்ளக் கூடாது. ஓய்வு என்பது ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுவது எனலாம். அதாவது ஒரு பணி செய்யும்போது அப்பணியில் சலிப்பு ஏற்பட்டால் தற்காலிகமாக அதை நிறுத்தி வைத்துவிட்டுப் பிறிதொரு பணி செய்தலாகும். இவ்வகையில் ஓய்வு நேரத்தை அமைத்துக் கொண்டால் பயன் தரும். எதையும் செய்யாம லிருப்பது ஓய்வு என்பதை மாற்றிட வேண்டும். ஓய்வுக்காகச் சில மணி நேரம் சிலர் ஒதுக்கினாலும் 24% பேர் எதையும் செய்யாம லிருப்பது ஓய்வென்று நினைக்கவில்லை.

## போக்குவரத்து

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதால் பிறரோடு கூடியும், குலாவியும் வாழவேண்டியவனாகிறான். அவ்வாறு தொடர்பு கொள்ளவும், தம் சுய தேவைகளை நிறைவு செய்து கொள்வ தற்காகவும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்ல வேண்டியவனாகிறான். தொடக்க கால மனிதன் போக்குவரத் துக்காகத் தன்னுடைய கால்களை நம்பியதோடு, மாடு பூட்டிய வண்டியையும் பயன்படுத்தினான். இதனால் கால விரயம் ஏற்பட்டது என்றாலும் வேறு வழியில்லை. ஆனால் இன்றைய எந்திர உலகில் போக்குவரத்து மிக எளிதாகிவிட்டது.

பண்டைய மனிதன் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத் திற்கு ஒரு செய்தியைச் சொல்வதற்குத் தானே செல்லவேண்டிய வனாக இருந்தான். ஆனால் இன்றோ கடிதம், தந்தி போன்றன வந்துவிட்டன. அதோடு மிக விரைவாகத் தெரிவிக்கத் தொலை பேசியைப் பயன்படுத்துகின்றனர். தொலைபேசியினால் பல இழப்புகளைத் தவிர்த்து உடனே அருகிலிருந்து பேசுவதுபோல் உரையாடி அதற்காக ஆகும் நேரத்தையும் குறைக்கலாம். போக்குவரத்துக்காக இரண்டு மணிநேரம் முதல் மூன்று மணி நேரம் வரை 14% பேர் ஒதுக்குகின்றனர். ஆசிரியர்கள்,

அலுவலர்கள் தம் அலுவலகத்திற்கு வேலைக்குச் செல்லும் பொருட்டே போக்குவரத்திற்காக நேரம் ஒதுக்குகின்றார்கள். இவர்கள் இப்பயணத்தின்போது பயனுள்ள நூல்களை எடுத்துச் சென்று படிக்கலாம்.

**மகிழ்வோடு உண்பரோ!**

மனிதன் உயிர்வாழ வேண்டிய அவசியத் தேவையான உணவு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சிலர் வாழ்வதற்காக உண்கின்றனர். வேறுசிலரோ உணவுக்காகவே வாழ்கிறார்கள். அவ்வுணவை உண்ணும்போது வேகமாக உண்பதைவிட, பொறுமையாக நின்று நிதானித்து உண்ணல் வேண்டும். குறைந்தது ஒரு வேளை உணவை அரை மணி நேரமாகிலும் உண்ணுதல் வேண்டும். ஆனால் குறுகிய நேரத்தில் அதாவது மூன்று வேளையும் சேர்த்துக் கால்மணி நேரம் முதல் அரை மணி நேரம் வரை உணவு உண்போர் 16% பேர் ஆவர். இதைத் தவிர்த்து முன்னர்க் குறிப்பிட்டதுபோல் செய்யின் நலம்.

**பேசுதல்**

வாயுள்ள எந்த இனமும் அதனதன் மொழியில் கண்டிப்பாகப் பேசியே ஆக வேண்டும். ஊமையாக இருப்பவர்கள்கூட தம் கருத்தை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுகின்றனர். சமூகத்தில் அதிக நேரம் பேசுபவனை 'அறுவை மன்னன்' என்றும், குறைவாகப் பேசினால் அவனை 'வாயில்லாதவன்' என்றும் பெயர் சூட்டி வழங்குகின்றனர்.

ஒரு நாளில் பேச்சுக்கு என்று இரண்டு மணி நேரம் முதல் நான்கு மணி நேரம் வரை 36% பேர் ஒதுக்குகின்றனர். இவர்களில் வேலையற்றோர் முக்கிய இடம் வகிக்கின்றனர். பேசுதல் என்பது இங்கு வெட்டிப் பேச்சுப் பேசுவதைக் குறிக்கும். அப்பேச்சில் திரைப்பட விமர்சனம், ஊர்ப்பிரச்சனை போன்றனவும், பரபரப்பான செய்திகளாக இருப்பின் அரசியல் பிரச்சனையும் இடம்பெறுகின்றன. வீட்டில் வேலையின்றி இருக்கும் பெண்களே இதில் முக்கிய இடம் வகிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் பேசிப் பொழுதைக் கழிப்பதைவிடப் பயனுள்ள கைத்தொழில்கள் ஏதேனும் செய்யலாம். மேலும் கிராமங்களில் தேநீர் விடுதிகளில்

நால்வர் அல்லது ஐவர் அமர்ந்துகொண்டு மணிக் கணக்கில் பேசுவதும் சுட்டத்தக்கது.

### அலங்காரம்

பரவலாகப் பெண்களே அலங்காரத்திற்காக அதிக நேரம் ஒதுக்குவார்கள் என்றாலும், சில ஆண்களும் ஒப்பனைக்கு அதிக நேரம் ஒதுக்குகின்றனர். அலுவலகம், பள்ளிகள் போன்றவற்றில் வேலை செய்யும் பெண்களிடையே அலங்காரத்திற்காக நேரம் ஒதுக்குவது குறைவாகக் காணப்படுகின்றது. பிற பணிகள் செய்து கொண்டே தம்மை அலங்கரித்துக் கொள்வதாகக் கூறியுள்ளனர்.

முக்கால் மணிநேரம் முதல் ஒரு மணிநேரம் வரை 8% பேர் அலங்காரத்திற்காக ஒதுக்குகின்றனர். இவர்களில் பெரும் பான்மையோர் மாணவ மாணவியர்களே என்பது சுட்டத்தக்கது.

### இறைவழிபாடு

வாழ்வின் ஓர் அங்கமாக இறை வழிபாட்டினை மக்களில் சிலர் கொண்டுள்ளனர். சிலர் கால மாறுபாடுகளால் வழிபாட்டை மறந்தனர், மறந்து கொண்டிருக்கின்றனர். இறைவழிபாடு இன்மையே இன்றைய உலகில் நடைபெறும் வன்முறைகளுக்குக் காரணமோ என்று எண்ணத் தோன்றுகிறது. வழிபாடு மனத்தில் அமைதியைக் கொடுப்பது என்பது உண்மை எனக் கள ஆய்வில் கூறியுள்ளனர். வழிபாட்டோடு தொடர்பற்றவர்களாக 30% பேர் காணப்படுகின்றனர். இவர்களில் இந்துக்களே மிகுதியா யுள்ளனர். ஆனால் கிறித்தவர்கள் முசுலிம்கள் இதற்காகக் குறிப்பிட்ட நேரம் ஒதுக்குகின்றனர்.

### காலத்தை வீணே கழிக்கலாமா?

எவரும் நேரத்தை வீணாக்கும்போது தாம் நேரத்தை வீணாக்குகின்றோமே என்னும் உணர்வை அப்போதைக்குக் குறைவாகவே பெறுவர். ஆனால் பிறகு இவ்வளவு நேரம், இத்தனை நாட்கள் வீணாக்கி விட்டோமே என்று மிகுதியான உணர்வைப் பெறுவர். 'கண்கெட்ட பிறகுதானே சூரிய வணக்கம்' தொடங்குபவர்கள் நாம்.

நேரத்தை வீணாக்குவதே இல்லையென்று 48% பேர் கூறி யுள்ளனர். ஏன் அனைவரும் இதைப் போலச் செயல்படலா மல்லவா? எப்படித்தாம் நாம் நேரத்தை வீணாக்கக்கூடாது என்று செயல்பட்டாலும் சமூகச் சூழலால் அவ்வெண்ணம் பொய்த்துப் போகிறது.

தாம் என்ன செய்கின்றோம் என்று தெரியாமலே நான்கு மணி நேரம் கடப்பதாக 46% பேர் கூறியுள்ளனர். இது வருந்தத் தக்கதாகும்.

கிடைத்த தரவுகளைக் கொண்டு பார்க்கின்றபோது தாம், தம்மைச் சுற்றிய செயல்பாடுகளுக்காகவே அதிக நேரம் ஒதுக்குவது குறிப்பிடத் தக்கதாகும். 2% பேர் மட்டுமே சமூகச் சேவையில் சில மணித்துளிகளாவது செலவிடுவதாகத் தெரிகிறது. இவர்களில் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்கள், தலைமை நிலையிலிருப்போர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இவ்வுணர்வு ஏன் சிலரிடையே மட்டுமின்றிப் பலரிடம் வரவில்லை என்ற வினாவும் எழுகிறது. இதற்குப் பொதுநலத்தால் தன் நலம் பாதிக்கப்படும் என்று கருதுவது காரணமாக இருக்கலாம்.

சமூகத்தில் உறுப்பினர்களாக வாழும் நாம், சமூகத்தின் மீது ஏன் அக்கறை கொள்ளவில்லை என்பது வேதனையையே தருகிறது. ஒவ்வொருவரும் முடிந்தவரை, சமூகச் சேவை செய்யலாமல்லவா? எதற்கெல்லாமோ நேரம் ஒதுக்கும் நாம் இதற்காக மட்டும் ஏன் நேரம் ஒதுக்கக்கூடாது?

மேற்குறித்த 2% பேரும் கல்வியறிவு அற்றவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் முதலில் செய்ய வேண்டிய சேவை மக்களை விழிப்புணர்வு அடையச் செய்வதுதான்.

**முடிவுரை**

மேற்சுட்டப் பெற்ற கருத்துகளிலிருந்து பின்வரும் முடிவு களைப் பெறமுடிகின்றது.

(1) கிடைத்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது பெரும்பாலான நேரத்தை உறங்குவதற்காகவே

ஒரு நாளில் செலவிடுகின்றனர். இந்நேரத்தில் சில மணிகளைக் குறைத்துக் கொண்டு பிற செயல்களில் ஈடுபடலாம்.

(2) மாணவர்கள் படிப்பதற்காகச் சராசரி ஐந்து மணி நேரம் முதல் ஆறு மணி நேரம் வரை ஒதுக்குகின்றனர். இந்நேரம் அதிகமே. இவ்வளவு நேரம் ஒதுக்கிப் படித்தாலும் வளர்ச்சி தென்படாமைக்குக் காரணம் ஒருமுகப்பாடின்மையே. இவ்வொரு முகப்பாட்டிற்குத் தியானம் (ஆழ்நிலைத் தியானம்) செய்தல் நலம் பயக்கும்.

(3) பொழுதுபோக்குவதற்கு எதையும் பயன்படுத்துவ தில்லையென்று சிலர் கூறியிருக்கின்றனர். பொழுது போக்கு மனிதனுக்கு அவசியமாகும். நாளும் எந்திரமயமாகும் இவ் வுலகில் நமக்கும் அதற்குமுள்ள வேறுபாடுகளில் பொழுது போக்கு அம்சம் முதன்மையானதாகிறது.

(4) இன்றைய நிலையில் அலுவலர்கள், ஆசிரியர்கள் வேலை செய்யும் நேரம் குறைவே. இவ்வளவு நேரம் ஒதுக்குவது வளரும் நாடுகளுக்குப் போதுமானதாகத் தென்படவில்லை. இன்னும் சில மணி நேரம், வேலை செய்யும் நேரத்தைக் கூட்டலாம். அப்போதுதாம் நாம் பிறநாட்டினருடன் அருகில் நின்றாவது பார்க்கலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள். குறள், 671.
2. 'தூங்காதே தம்பி தூங்காதே' என்ற திரைப்படப் பாடல்.
3. மேலது.

இரா. கலைவாணி, எம்.ஏ., தற்போது இளம் முனைவர் பட்டத்திற்காகத் 'தமிழர்தம் நன்றி யுணர்வு' எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். எம்.ஏ., பட்டத்திறகாக பு. அ. பெரியசாமிப் பிள்ளை -- 'ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் ஆய்வு செய்தவர்.

நெறியாளர்

நா. ஆறுமுகம்

# நன்றியுணர்வும் குடும்பமும்

இரா. கலைவாணி

நாடோடிக் கூட்டத்தினராய் வாழ்ந்த மக்களிடத்தில் குடும்ப அமைப்பு ஏற்பட வாய்ப்பில்லை. இயற்கைச் சூழல்களால் தனித் தனியே பிரிந்து வாழ்ந்த மக்களினம் கால வளர்ச்சியில் திருமணம் என்னும் சமூக நிறுவன ஒழுக்கத்திற்குட்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட மணமுறைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பு முறையைச் சமூகவியலார் இருபிரிவுகளாகப் பிரிப்பர். அவை 1. தனிக்குடும்பம் 2. கூட்டுக்குடும்பம்.

இக்குடும்ப அமைப்பில் நன்றியுணர்வு தந்தை-மகன் தாய்-மகள் உறவில் அடித்தளமாக அமையவேண்டிய பண்பாகிறது. இப்பண்பு, குறையும் பொழுது குடும்ப அமைப்பின் நிலைகள் மாறுகின்றன.

தமிழர்களின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாக விளங்கும் நன்றியுணர்வு குடும்ப அமைப்பில் பண்டைக்காலம் தொட்டு இன்று வரை செயல்பட்டு வருகின்றது. அந்தப் பாங்கினைக் கள ஆய்வினை முதன்மை ஆதாரமாகக் கொண்டும், இலக்கியங் களைத் துணைமை ஆதாரங்களாகக் கொண்டும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

புதுவைப் பகுதியில் சாரம் ஆய்வுக்களமாகக் கொள்ளப் பட்டது. 35 பேர்களிடம் கிடைக்கப் பெற்ற கள ஆய்வுச் செய்தி களைக் கொண்டு இக்காலக் குடும்ப நிலையில் நன்றியுணர்வின் பங்கு எடுத்துக் கூறப்படுகிறது.

**பண்டைக்கால குடும்ப அமைப்பில் நன்றியுணர்வு**

சங்க இலக்கியப் பாடல்களில் குடும்ப அமைப்பு இருந்த தற்கான சான்றுகள் இருப்பினும், பிள்ளைகள் தம் பெற்றோர் களுக்குக் கைமாறு புரிந்தனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்தில. சங்க காலத்திற்குப் பின் எழுந்த பதினெண்கீழ்க் கணக்கு நூல்களான நீதி இலக்கியங்களில் பிள்ளைகள் நன்றிக் கடன் பட்டவராகவும், நன்றி மறந்தவராகவும் இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

> ''சிதலை தினப்பட்ட ஆலமரத்தை
> மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்குக்
> குதலைமை தந்தைகண் தோன்றில் தான் பெற்ற
> புதல்வன் மறைப்பக் கெடும்''[1]

எனும் நாலடியார் பாடல், பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர் களின் தளர்வினைப் போக்கி அதன் மூலம் தங்களின் நன்றியுணர் வினை வெளிப்படுத்தினார்கள் எனக் கூறுகிறது. மற்றொரு நீதிநூலான திரிகடுகம், பெற்றோர் செய்த உபசாரத்தை மறந்த பிள்ளையின் செயலை, இப்பிறவியில் எவர்க்கும் பயனில்லாத மக்களின் செயலோடு சேர்த்து,

> ''ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது
> வைதெள்ளிச் சொல்லுந் தலைமகனும் பொய்தெள்ளி
> அம்மனைத்தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
> இம்மைக்(கு), உறுதியில்லாள்''[2]

என உரைக்கின்றது.

**தற்கால குடும்பநிலையில் நன்றியுணர்வு**

கூட்டுக்குடும்ப வாழ்க்கையை விரும்புவோர் 35 விழுக்காட்டினரும் பிறந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்வோர் 2.8 விழுக்காட்டினரும், புகுந்த வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழ்வோர் 34.2 விழுக்காட்டினருமாக இருக்கின்றனர்.

**பிறந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்வோர் நிலை:**

பிறந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழும் பெண்கள் 11.4 விழுக்காட்டினராக உள்ளனர். ஆங்ஙனம் புகுந்த வீட்டில் கூட்டுக் குடும்பமாக வாழும் பெண்களில் சிலர் பெற்றோர்கள்மேல் கொண்ட அளவு கடந்த பாசத்தால் பிறந்த வீட்டிலேயே வாழ்கின்றனர். இன்னும் சில பெண்கள் வயதான காலத்தில் தங்களின் பெற்றோருக்கு உதவ வேறு யாருமில்லாத காரணத்தால் பெற்றோர்களுடனே சேர்ந்து வாழ்கின்றனர்.

**புகுந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்வோர் நிலை**

புகுந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்வோர் பெரும்பாலும் பெண்களே. குடும்ப அமைப்பில் பெண் திருமணத்திற்கு முன் பெற்றோர் பாதுகாப்பிலும், திருமணத்திற்குப்பின் கணவன் பாதுகாப்பிலும் வாழவேண்டியுள்ளது. புகுந்த வீட்டில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையை விரும்புவோர் 34.2 விழுக்காட்டினராக உள்ளனர். புகுந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழும் பெண்களில் 5.7% பேர் கணவன் வீட்டில்தான் வாழவேண்டும் என்ற கட்டாயத்தின்பேரில் வாழ்கின்றனர். அதே புகுந்த வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழும் 2.8% பெண்கள் தங்கள் கணவன் வீட்டினரை மதிக்க வேண்டும் என்ற காரணத்தால் வாழ்கின்றனர்.

பெரும்பாலும் இத்தகையோர் கூட்டுக்குடும்ப அமைப்பை விரும்பக்காரணம், கூட்டுக்குடும்ப அமைப்பின் மூலம் எளிதில் பயன் கிட்டும் என்பதுதான். 20% பேர் பலன் கிடைக்கும் என்பதாலேயே கூட்டுக்குடும்பமாக வாழ்வதை விரும்புவதாகக் கூறுகின்றனர். குடும்பத்தில் அனைவரும் கூட்டமாக வாழும் போது வேலை பகிர்வுக்கும், இன்பதுன்ப நிலைகளிலிருந்து ஆறுதல் பெறவும் கூட்டுக்குடும்ப வாழ்வினை மேற்கொள்

கின்றனர். இங்கு 5.7% பேர் வேலைபகிர்வு குறைவதற்காக வேண்டிக் கூட்டுக்குடும்பத்தை மேற்கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

குடும்பத்தில் ஒருவர் வேலைக்குச் செல்லும் போது அவருடைய பிள்ளைகளை மற்றவர்களின் பாதுகாப்பில் விட்டுச் செல்ல முடிகிறது. இதனால் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இருக்குமென்று 8.5% விழுக்காட்டினர் கூறுகின்றனர்.

மேற்கூறிய செய்திகளிலிருந்து பிறந்த வீட்டிலும் சரி, புகுந்த வீட்டிலும் சரி கூட்டுக்குடும்பமாக இருப்போர் அவர்களின் நன்மை கருதிதான் கூட்டுக்குடும்பமாக வாழ்கிறார்களே தவிர, தங்களின் பெற்றோர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக அல்ல என்பதை அறிய முடிகிறது. இவர்களில் பெற்றோர்களின் உதவிகளை நினைத்துப் பார்த்து அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகப் பிறந்த வீட்டில் கூட்டுக் குடும்பமாக இருக்கிறோம் என 2.87 பேர் கூறுகின்றனர். நன்றியுணர்வு இன்றைய மக்களிடையே குறைந்து சுயநல எண்ணம் மேலோங்கிய நிலையில் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கும் தங்களின் சுய தேவைகளுக்காகவுமே பெரும் பாலோர் கூட்டுக் குடும்பத்தை மேற்கொள்கின்றனர் எனலாம்.

**தனிக் குடும்பத்தை விரும்புவோர் நிலை**

தனிக் குடும்பத்தை விரும்புவோர் எண்ணிக்கையில் 67.7 விழுக்காட்டினராக உள்ளனர் என்றாலும் பெற்றோரின் வற் புறுத்துதலாலும் வேண்டுதலாலும் தனிக்குடும்பமாக இருப்போர் எண்ணிக்கை 40.1% விழுக்காட்டினராகவும் இருக்கின்றனர். இதற்குக் காரணம் கூட்டுக் குடும்பமாக வாழும்போது அக் குடும்பத்தில் இருக்கும் மூத்த பிள்ளையின் மீது அனைத்துப் பொறுப்புகளும் சுமத்தப்படுகின்றன. அவரே அக்குடும்பப் பொறுப்புகளை ஏற்கும் போது மற்ற பிள்ளைகளின் முன்னேற் றத்திற்காக மிகுதியாக உழைக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. அதனால் தன்னுடைய வருவாயைக் குடும்பத்திலுள்ள அனை வருக்கும் செலவு செய்ய வேண்டி இருப்பதால் தம்முடைய மூலதனம் வீணடிக்கப்படுகிறது என்ற காரணத்தால் தனிக்குடும் பத்தை விரும்பி வந்தோம் எனக் கூறுகின்றனர். இதன்வழி

பொருளாதாரமும், பொருள் சேர்க்கையும் குடும்ப உறவு நிலை களின் கட்டுக்கோப்பிற்குத் தடைக் கல்லாய் உள்ளமையை உணர முடிகிறது. மேலும் பிள்ளைகள் பெற்றோருக்கும் உடன் பிறந்தோருக்கும் ஆற்ற வேண்டிய கடமை உண்ர்வு, நன்றி உணர்வு முதலானவற்றிலிருந்து விலகி வாழ்வதை அறிய முடிகின்றது.

குடும்பத்தில் ஒருவர்மட்டும் உழைக்க மற்றவர்கள் சும்மா இருக்கும்போது ஏற்படுகின்ற சிக்கலைத் (சண்டையை) தனிக் குடும்பத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியுமென 45.7% கருதுகின்றனர். தங்கள் விருப்பம்போல் சுதந்திரமாக எங்கும் செல்லவோ வாழவோ முடியாது என்கின்றனர்.

தங்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்திற்காகவும் ஆடம்பர வாழ்விற்காகவும் பெற்றோர்களையும், உடன் பிறந்தோர்களை யும் மறந்து விடுகின்றனர். கூட்டுக்குடும்பத்தால் விளைகின்ற சிக்கலைப் போக்குவதற்காகத் தனிக் குடும்பத்தினை ஏற்று வந்தோம் என 11.4% பேர் கூறுகின்றனர்.

**பெற்றோரே விரும்பிப் பிள்ளைகளுக்குத் தனிக்குடும்பத்தை ஏற்படுத்தக் காரணம்**

கூட்டுக்குடும்பத்தில் இருந்து தனிக்குடும்பமாகப் பிரிந்து சென்றோர் சுயநலத்திற்காக அல்ல. பெற்றோர்களே வெளி யுலக அனுபவங்களைப் பெறவேண்டுமென்ற காரணத்திற்காக வைத்தனர் என்று 17% பேர் கூறுகின்றனர். அண்ணன் தம்பி இவர்களிடையே ஏற்படும் சண்டைகளை இத்தனிக் குடும்பத்தால் தவிர்க்க முடியுமென 14.2% பேர் கூறுகின்றனர்.

பிள்ளைகளை வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. பெரும்பான்மையான பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் கடமைக்குப் பிரதிபலனை எதிர்பார்க்காமல் வாழ்கின்றனர். பெற்றோர்கள் அங்ஙனம் நினைக்காவிட்டாலும் தம்மை வளர்த்த கடமைக்காவது பிள்ளைகள் அவர்களுக்கு நன்றியுணர்வோடு செயல்படுவது மனிதத்துவத்தை மேலோங்கச் செய்யும்.

பெற்றோர்களின் விருப்பமின்றித் தங்களுடைய சொந்த விருப்பத்தின் காரணமாகத் தனிக் குடும்பத்திற்கு வந்தவர் பலர்.

இதற்குக் குடும்பத்தில் ஏற்படுகின்ற சண்டைகளும், வெறுப்புகளுமே காரணமாக அமைகின்றன. தங்கள் குடும்பம் மட்டுமே பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகத் தனிக்குடும்பத்தினை 5.7% பேர் விரும்பி ஏற்றனர்.

குடும்பச் சண்டையும் உடன் பிறந்தோர் வெறுப்பும் இன்றிச் சொந்த விருப்பத்தின் காரணமாக வந்தவர்களின் எண்ணிக்கை 28.5 விழுக்காட்டினருக்கும் குறைவாகவே உள்ளனர் என்பதைக் கள ஆய்வின் வழி அறிய முடிகின்றது. தம்முடைய எல்லாவிதமான முன்னேற்றத்திற்குக் காரணமான பெற்றோரை மறந்து தனிக்குடும்பத்தினை மேற்கொள்கின்றவர் 2.8% பேர் உள்ளனர்.

**கல்விக்கு உதவியவர்**

களப்பணியில் பெரும்பாலும் பெற்றோர்களே பிள்ளைகளின் கல்விக்கு உதவுபவர்களாக உள்ளனர். அங்ஙனம் உதவிய பெற்றோர்களை மறக்கும் போது அவர்களிடையே உள்ள தாய்-மகன், தந்தை-மகள் எனும் உறவு நிலைகள் மதிப்பிழந்து போகின்றன. உடன்பிறந்தோர் கல்விக்கு உதவியதாகத் தகவலாளிகள் குறிப்பிடவில்லை. இதற்குக் காரணம் உடன் பிறந்தவர்களும் தங்களைப் போல் பெற்றோர்களின் பொறுப்பில் வாழ்வதால் பிறருக்கு உதவி வாழ வாய்ப்பில்லாமல் போனது எனக் கருதலாம்.

**தனிக் குடும்ப வாழ்வில் பிள்ளைகளின் செயல்பாடுகள்**

தனிக் குடும்பமாகப் பிரிந்து வந்தாலும் பெற்றோர்களுக்கு உதவுவதுண்டு என 60 விழுக்காட்டினர் கூறுகின்றனர். பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களுக்குப் பணம், பொருள், நலம் விசாரித்தல் ஆகிய மூன்று வழிகளில் உதவி வருகிறார்கள்.

பணமாகக் கொடுத்து உதவுகின்றவர்களைவிட அன்புடன் சென்று பெற்றோரின் நலத்தை விசாரித்து வருபவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது 45.7%. பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் இக்காலச் சமுதாயத்தில் பாசத்தையே மிகுதியாக விரும்பும் பெற்றோர்களின் எண்ணிக்கை 57.1%-க்கும் அதிகமாக இருப்பது கள ஆய்வின்வழிக் கண்ட செய்தியாகும்.

## தனிக்குடும்பம் சென்றபின் பெற்றோருக்கு உதவவில்லை

தனிக்குடும்பமாகப் பிரிந்து சென்றபின் பெற்றோர்களுக்கு எவ்விதங்களிலும் உதவுவதில்லையென்று கூறுபவர்களின் எண்ணிக்கை 25%க்கும் குறைவாகவே உள்ளது. இத்தகைய பெற்றோர்கள் எங்களைவிட வசதியாக இருப்பதால் பிள்ளைகள் உதவுவதைப் பெரிதாகக் கருதுவதில்லை என்று 22.8% பேர் கூறுவதைப் பார்க்க முடிகிறது. அதோடு மட்டுமின்றி, ''அவன் என்ன எங்களுக்கு உதவுவது'' என்று ஏளனம் செய்வதாலும் நாங்கள் உதவவில்லை என்கின்றனர். ''நாங்கள் உதவாவிட்டால் என்ன எங்களைப் போல் இருக்கும் மற்ற பிள்ளைகள் உதவுவார்கள்'' என்று 2.8% பேர் கூறுவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

''நீயோ எங்களைவிடச் சின்னவன்! நீ போய் எங்களுக்கு உதவுவதா? மேலும் உனக்கே வசதியில்லை! அந்நிலையில் எங்களுக்கு எப்படி நீ உதவுவாய்?'' என்று கூறுபவராகச் சில பெற்றோர்கள் இருப்பதைக் காண முடிகிறது. மேற்கூறிய தகவல்களின் வாயிலாக வீட்டில் மூத்த பிள்ளையாக இருப்பவர்கள்தாம் பெற்றோர்களுக்கு உதவவேண்டும் என்றில்லாமல் மற்ற பிள்ளைகள் பெற்றோருக்கு உதவுவார்கள் என்ற எண்ணத்தில் மூத்த பிள்ளைகள் தங்களின் பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர். இதன் காரணமாகவே பெரும்பாலோர் வயதான காலத்தில் பெற்றோருக்குப் பாதுகாப்பு அளிப்பதிலும், உதவி வாழ்வதிலும் நெறி தவறுகின்றனர் என்பதை உணரமுடிகின்றது.

அவ்வுதவியைப் பெற்றோர், தட்டிக் கழிக்கும் நிலையும் வழக்கத்தில் உள்ளமையைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. மேலும் வாழ்வின் அனைத்து முன்னேற்றத்திற்கும் காரணமாக உள்ள பெற்றோர்களுக்கு வசதியில்லாத காரணத்தால் உதவ முடியவில்லை என்று கூறும் பிள்ளைகளையும் இன்றைய சமூகச் சூழலில் பார்க்க முடிகின்றது.

## பிள்ளைகள் பணம் கொடுத்து உதவும் நிலை

பெற்றோர்கள் கேட்டால் மட்டுமே பணம் கொடுத்து உதவுகிறோம் என 8.5% பேர் கூறுகின்றனர். தாமாகவே விரும்பிக் கொடுப்போரின் எண்ணிக்கை 4.1%க்கும் குறைவாகவே

உள்ளது. இங்ஙனம் பணம் கொடுத்து உதவும் பிள்ளைகளும் பண்டிகை, சிறப்பு நிகழ்ச்சி, சிரமப்படும் காலம் போன்ற நாட்களில் மட்டுமே கொடுத்து உதவுகிறோம் என்கின்றனர்.

''நான் பெற்றோர்களின் மீதுள்ள அன்பால் பணம் கொடுத்து உதவினேன். ஆனால் அவர்களோ, என்னுடைய பணத்தை மட்டுமே விரும்புகின்றவர்களாக இருக்கின்றனர்'' என்று ஒரு தகவலாளி மிகவும் மன வருத்தத்தோடு கூறியது இங்குச் சிந்திக்கத்தக்கது. பிள்ளைகளின் பணத்தை விரும்பும் பெற்றோர்களின் எண்ணிக்கையைவிட அன்பை விரும்பும் பெற்றோர்களின் எண்ணிக்கைதாம் அதிக அளவில் இருப்பதைக் காண முடிந்தது.

எவருடைய அறிவுரையும் இல்லாமல் பெற்றோர்கள் கேட்பதற்கு முன் தாமாகவே விரும்பிக் கொடுக்கும் பிள்ளையின் செயலையும் காணமுடிகிறது. பெற்றோர்கள் கேட்டால் மட்டுமே கொடுப்போம் என்பவர்கள் பெற்றோருக்கு உதவுவதைச் சுமையாகக் கருதுகின்றனர் எனக் கூறலாம். பண்டிகை, சிறப்பு நிகழ்ச்சி, சிரமப்படும் காலம் போன்ற நாட்களில் மட்டுமே பணம் கொடுத்து உதவும் பிள்ளையின் செயல் பெற்றோர்கள் சிறப்பு நாட்களிலாவது மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென எண்ணி உதவுவதைச் சுட்டிக் காட்டுகிறது.

## பிறருடைய உதவி

45.7% பெற்றோர், உறவினர்களைவிட நண்பர்களே பெரும்பாலும் உதவியுள்ளனர் என்பது சிலருடைய கருத்து. ''உயிர் காப்பான் தோழன்'' என்னும் வாக்கிற்கேற்பப் பணத்தையே குறிக்கோளாகக் கொண்ட இக்காலச் சமுதாயத்தில் எவ்வித உறவும் இல்லாத நண்பர்களின் உதவியே பெரிதென மதிக்கும் தன்மையுடையோர் பெரும்பான்மையான எண்ணிக்கையில் இருப்பதை உணர முடிகின்றது.

''உடுக்கை இழந்தவன் கைபோல் — ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''[3]

எனும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, ''தாயிருந்தும், உடன் பிறந்தோர் இருந்தும் அவர்களிடமிருந்து எத்தகைய உதவியையும் என்னால் பெறமுடியவில்லை அத்தகைய சூழலில் நண்பரின் உதவி எனக்குப் பேருதவியாக இருந்தது. இன்று நான் நல்ல

நிலையில் இருக்கக் காரணமான அவருக்கு இன்றளவும் நன்றி யுணர்வு உடையவனாக நடந்து வருகிறேன்'' என்று கூறிய ஒரு தகவலாளியின் கூற்று இங்குச் சிந்திக்கத்தக்கது. இவரைப் பொறுத்தவரையில் கல்விக்குப் பெற்றோர்கள் உதவவில்லை என்பதை அறியமுடிகிறது. இத்தகையவர்களின் உறவுகளை விட நண்பனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தையே பார்க்க முடிகிறது. தமக்குத் தேவையான காலத்தில் உதவாத உறவினரைப் போற்ற மறுக்கும் இவரின் உள்ளப்பண்பு உதவிய நண்பருக்கு எவ்விதத்திலும் நன்றியுணர்வுடன் நடந்து கொள்ள முனைவது சிந்திக்கத்தக்கது.

மேற்கூறிய நண்பர் உதவியைப் பெரிதெனக் கருதும் தகவலாளி ஒருவரின் கூற்றிற்கு விதிவிலக்காக மற்றொருவர் ''நான் படித்த காலத்தில் என்னுடன் சேர்ந்து நண்பன் ஒருவனும் படித்தான். வீட்டிலிருந்து அவனுக்குப் பணம் அனுப்ப முடியாமல் கஷ்டப்படும் போது, அவனுக்காக நான் பணம் கொடுத்து உதவினேன். நான் உதவி செய்த நண்பன் இன்று உயர்ந்த நிலையில் இருக்கிறான். எனக்கு அவன் இப்போது உதவாவிட்டாலும் அன்று செய்த என் உதவியைச் சிறிதும் நினைத்துப் பார்ப்பதுகூட இல்லை. அவனுடைய இச்செய்கை எனக்கு நன்றி மறந்த செய்கையாக இருக்கிறது'' என்று மன வருத்தத்தோடு கூறியதை ஆய்வாளர் நேரில் கேட்க முடிந்தது.

எனவே இதன்மூலம் நண்பருக்கு உதவி செய்யும் மனநிலை யுடைய சமுதாயத்தில் மறுதலையாக நன்றியுணர்வற்று வாழும் நண்பர்களும் உள்ளனர் என்பதை உணர முடிகிறது.

இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில் களப்பகுதி மக்களில் 48.5 விழுக்காட்டினர் தங்களின் வீட்டிற்கு வேண்டிய அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களையும் தேவைப்படும் பொழுது ஒருவருக்கொருவர் கொடுத்து உதவி வாழ்கின்றனர். இவர்களில் சிலர் விதிவிலக்காகப் பொருள்களைத் திரும்பத் தருவ தில்லை என்கின்றனர். இதற்குக் காரணம் கேட்டால், கொடுத் தவர் வேண்டாம் என்று கூறி விடுகின்றனர் என்பதைக் கள ஆய்வின் வழி உய்த்துணர முடிகிறது.

## முடிவுரை

*''ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே''[4]*

*என்ற நிலைக்குட்பட்டு வாழ்ந்த தமிழகத்தில் கூட்டுக்குடும்ப வாழ்வை மேற்கொள்பவரும் தனிக்குடும்ப வாழ்வை மேற்கொள் பவரும் பலன் கருதி இருக்கிறார்களே தவிர, பெற்றோரின் நலனில் அக்கறை கொண்டவர்கள் ஒரு சிலரே. இன்றைய சூழலில் தந்தை தன்னுடைய பிள்ளைகளின் வாழ்விற்கும் வளத்திற்கும் கடமை உணர்வோடு செயலாற்றினாலும் பிள்ளைகள் பெற்றோருக்கு உதவும்போது சுயநலத்தின் வாயிலாக மேம்போக்காகவே வாழும் நிலையினை அறிய முடிகிறது.*

*பெற்றோர்கள் பிள்ளைக்கு உதவுவது கடமை என்று பெரும்பாலான பிள்ளைகள் கருதுவதால் பெற்றோரின் வயதான காலங்களில் அவர்களின் தேவைக்குப் பிள்ளைகள் உதவி வாழ வாய்ப்பில்லாமல் போகிறது. மேலும், பொருள் சேர்க்கும் எண்ணமும், பிள்ளைகள் தம்முடைய குடும்ப நலனில் மட்டுமே அக்கறை கொள்ளும் எண்ணமும், மேலோங்கி நிற்பதால் தன்னை ஈன்று வளர்த்த பெற்றோருக்கு நன்றியுணர்வோடு உதவி வாழ வேண்டும் என்னும் நினைப்புத் தோன்றுவதில்லை.*

*உறவு நிலைகளின் சிதைவிற்குப் பொருளாதார வசதிகள் காரணமாக உள்ளமையை உணர முடிகின்றது. ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பில் சிலர் நன்றியுணர்வுடன் பெற்றோருக்கு உதவி வாழ்ந்தாலும், பெரும்பாலோர் சுய நல எண்ணங்களுக்கு உட்பட்டுக் கடமையினின்று விலகி நன்றியுணர்வற்று வாழ்கின்றனர் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.*

## அடிக்குறிப்புகள்

1. *நாலடியார்*
2. *திரிகடுகம்*
3. *திருக்குறள்*
4. *புறநானூறு*

குணசேகரன், எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (சமூக வியல்) பி.எட்., புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் எம்.பில்., பட்டத்திற்குத் 'தமிழர் தம் உழைப்பு' எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். இவர் சித்த மருத்துவத்தில் சான்றிதழ் பெற்றவர். வாழ்வோடு இணைந்த இவ்வாய்வு அவரது உழைப்பின் மேன்மைக்கு உறுதியளிக்கும்.

நெறியாளர்
இளமதி சானகிராமன்

# நெசவுத் தொழிலும் செய்முறைகளும்

மு. குணசேகரன்

**முன்னுரை**

ஆறறிவு படைத்த மனிதனே ஆடை அணிந்து வாழ்கிறான். ஆடை, அவனுக்கு மிகமிக இன்றியமையாத ஒன்றாக விளங்கு கிறது. ஆடை, மனிதனது மானத்தைக் காப்பதுடன் அழகையும் தருகின்றது. எனவே கால மாறுதல்களுக்கு ஏற்பவும், தன் விருப்பத்திற்கு ஏற்பவும் பல்வேறு விதமான ஆடைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். முரட்டுத் துணிகளையும், மிருதுவான துணிகளையும் அணிகிறான். மேலும், அவன் அணியும் ஆடைகள் காலத்தின் நாகரிக வெளிப்பாடாகவும் அமைகின்றன. இத்தகைய இன்றியமையா 'ஆடை' குறித்த செய்திகளையும் அவ்வாடைகளின் சிறப்புகளையும், பருத்தி,

பட்டு முதலானவற்றிலிருந்து ஆடைகளைப் பெறும் முறைகளை யும் நெசவுத்தொழிலின் மேன்மைகளையும் இனிச் செய்ய வேண்டிய வற்றையும் இக்கட்டுரையின் வழிக் காண்போம்.

**ஆடை**

உடம்பை அடுத்து இருப்பதால் 'ஆடை' என்ற பெயர் பெறுவதாகக் கூறுவர்[1] இலை அடையைத் தைத்து உடுத்திய தனால் 'அடை' என்பது ஆடையாயிற்று'' என்பர்.[2]

இந்த 'ஆடை' என்ற சொல் சங்ககாலம் தொட்டே வழங்கப் பட்டு வந்துள்ளது. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலும் ஆடை பற்றிய சொற்களாக நூற்றுக்கும் மேற்பட்ட சொற்கள் அமைந்திருந்தன. நற்றிணை,[3] புறநானூறு[4], பரிபாடல்[5] போன்ற சங்கப்பாடல்களிலும், மணிமேகலை[6], சிலப்பதிகாரம்[7] போன்ற காப்பியங்களிலும், பெருமாள் திருமொழி[8], நாச்சியார் திருமொழி[9], இராமாயணம்[10] போன்ற நூற்பாடல்களிலும் 'ஆடை' என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது.

சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் தழை, மரவுரி, தோல் ஆகியவற்றால் ஆன ஆடைகளையே ஆதிமனிதன் அணிந்திருந்தான். சங்க காலத்தில், ஆடைகள் பருத்தி, பட்டு, எலி மயிர் ஆகியவற்றால் நெய்யப் பெற்றன. இவற்றுள் பட்டாடை 'நூலாக் கலிங்கம்'[11] என அழைக்கப்பட்டது. ஆடைகள் ''உடை, தழை, துகில், கலிங்கம், அறுவை, சிதார், உடுக்கை, கச்சு, ஈரணி, தானை, போர்வை, காழகம், கச்சம், கச்சை, வம்பு, மடி, பட்டு, சீரை, படம், படாம், பூங்கரை நீலம், உத்தரீயம், கம்பலம், கவசம், தூசு, மடிவை, சிதர்வை, சிதவல், 'வார், மெய்ப்பை, துகின்முடி மெய்ம்மறை, மெய்யாப்பு, வாலிது வெளிது, புட்டகம், நூல், பக்குடுக்கை'' எனப் பலவாறு அழைக்கப்பட்டன.[12]

மெல்லிய ஆடைகள் நுரை, புகை, பால், ஆவி, பாம்புரி போன்றவற்றுடன் உவமை கூறப்பட்டுள்ளன. ஆடைகள் கலை வேலைப்பாட்டுடன் நெய்யப்பட்டன. ஓரங்களில் அழகான கரைகள் அமைக்கப்பட்டன. ஆடைகளில் பூ வேலைப்பாடுகள் நிறைய செய்யப்பட்டிருந்தன. உள்ளீடு தெரியுமாறு அமைந்த ஆடையின் மென்மையும், இழைபோன வழியறிய இயலாதவாறு

அமைந்த அதன் நுண்மையும் சங்க இலக்கியங்களில் பாராட்டப் பட்டுள்ளன.

அக்காலந் தொட்டு இக்காலம் வரையிலும் சமுதாயத்தில் ஒவ்வொரு இனத்தாரும் தத்தம் பொருள் வளத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் ஏற்பவே வெவ்வேறு வகையான ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அணிகின்றனர்.

## ஆடையின் சிறப்பு

'அணியெல்லாம் ஆடையின் பின்,' 'அவளுக்கென்ன மகராசி முப்பாகம் புடவை கட்டுகிறாள்,' 'ஆள்பாதி ஆடைபாதி' 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்,' 'ஆடை உடையான் அவைக்கஞ்சான்,' 'ஆடையால் அரைமனிதனும் முழுமனிதனா வான்' போன்ற தமிழரின் முது மொழிகள் ஆடையின் சிறப்பினை யும், ஆடை, மனிதனின் அழகுக்கு அழகு சேர்க்கிறது என்பதனையும் வலியுறுத்துகின்றன. எனவேதான், 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் போல' மானம் காக்கும் ஆடைக்கு முதலிடம் கொடுத்து,

'கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்'[13]

என்று திருவள்ளுவரும் கூறிச் சென்றுள்ளார்.

தனிமனிதனிடமும், மனிதக் குமுகாயத்திடமும் தனிச் சிறப்புப் பெற்று விளங்கும் ஆடை 'எண்வகை இன்பம்'[14] 'எண்ணெண் கலைகள்'[15] ஆகியனவற்றுள் ஒன்றெனத்திகழும் தனித் தன்மையையும் பெற்று விளங்குகிறது.

மக்களின் வாழ்வு முறையையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் எடுத்துக்காட்டுவதாக விளங்குவது ஆடை ஆகும்.

இவ்வாறு, சிறப்புமிக்க பல்வேறு விதமான ஆடைகளை உருவாக்குவது 'நெசவுத் தொழில்' ஆகும். தமிழ் நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்நெசவுத் தொழில் சிறந்திருந்தது. தமிழர்கள் அக்காலந் தொட்டே **'பருத்திநூல்'** நெசவிலும், **'பட்டு நூல்'** நெசவிலும் தலைசிறந்து விளங்கினர்.

**நெசவு**

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நூல்களை ஒன்றோடு ஒன்று செங்குத்தாக வைத்துப் பின்னுவதற்கு **'நெசவு'** என்று பெயர். இந்நெசவு **'கைத்தறி நெசவு'** (Hand loom Weaving) **'விசைத்தறி நெசவு'** (Power loom weaving) என இரண்டு வகையாகச் செய்யப்பட்டு வருகின்றது.

**கைத்தறி நெசவு (Handloom Weaving)**

நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, உலகளவில் பல நாடுகளிலும் நடந்து வரும் தொழில் 'கைத்தறி நெசவுத்தொழில்' ஆகும். நூலைக் கொண்டு, கையால், கைத்தறியின் உதவியுடன் நெய்யப்படுவது 'கைத்தறி நெசவாகும்'.

இக்கைத்தறி நெசவானது, இந்தியாவில் பழங்காலத்திலிருந்து இன்று வரையிலும் தலையாய ஊரகத் தொழில்களுள் ஒன்றாக விளங்கி வருகின்றது. இது இன்றும் குடிசைத் தொழிலாகவே நடைபெற்று வருகின்றது. மேசைத்தறி, குழித்தறி, சட்டத்தறி, தானாகவே இயங்கும் பெடல்தறி என்பன கைத்தறியின் வகைகளாகும். தறியின் பாகங்கள் 20 ஆகும்.

**விசைத்தறி நெசவு (Powerloom Weaving)**

மின்சாரத்தினால் இயங்கும் இயந்திரங்களைக் கொண்டு செய்யப்படும் நெசவு 'விசைத்தறி நெசவு' எனப்படுகின்றது. இதுவே, பெரும் அளவில் மேற்கொள்ளப்படும்பொழுது 'ஆலைத் தொழில்' எனப்படுகின்றது.

நெசவுத் தொழிலில் தலையாய இடம்பெற்று விளங்குவது பருத்தி நூல் நெசவுத் தொழிலாகும். இரண்டாம் இடத்தில் அமையப்பெறுவது பட்டு நூல் நெசவுத்தொழிலாகும்.

பஞ்சாடை உற்பத்திக்கு அடிப்படையாக விளங்கும் பருத்தி நூல் உற்பத்தியின் மூலப் பொருள் பருத்தியிலிருந்து எடுக்கப்படும் 'பஞ்சு' ஆகும். பருத்தியிலிருந்து, பஞ்செடுக்கப்பட்டு, பஞ்சிலிருந்துதான் நூல் நூற்கப்படுகின்றது. நூற்கப்படும் நூலைக் கொண்டுதான் 'துணி' உருவாக்கப்படுகின்றது.

எனவே, முதலில், மூலப் பொருளான பருத்தியிலிருந்து எடுக்கப்படும் பஞ்சில் காணப்படும் இலைத்தூள், உடைந்த

விதைகள், மண், தூசு, காம்பு, அழுக்கு போன்ற அசுத்தப் பொருட்களையெல்லாம் நீக்கி நூல் நூற்க ஏற்றவாறு பஞ்சினைத் தூய்மை செய்ய வேண்டும் என்பது இன்றியமையாததாகிறது.

## நூல் நூற்றல்

தூய்மைப் படுத்தப்பட்ட பஞ்சிலிருந்து நூலாக நூற்பது நூற்றலாகும். இவ்வாறு நூலாக நூற்பதைச் சங்கப் பாடல்களின் சான்றே புலப்படுத்தும். பழைய காலத்தில் பல வகையான 'கை' இராட்டைகள் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவற்றுள் '**கிஸான் இராட்டை**' எனப்படும், இராட்டையே மிகவும் எளிதாக நூல் நூற்கக் கூடியதாக இருந்தது. இராட்டையில் 'பட்டறை, பெருஞ்சக்கரம், விசைச் சக்கரம், வீசனம், கதிர், கதிர் தாங்கி, நூல் வாங்கி' ஆகிய ஏழு பகுதிகளும் மிகவும் முக்கியமானவை. கதிர் வில்லையைக் கதிரில் அழுத்தமாயும், செங்குத்தாயும் சிறிதுகூட ஆடாதவாறும் பொருத்தி, இராட்டையைச் சமதளத்தில் வைத்து நூற்கத் தொடங்க வேண்டும். இவ்வாறு நூற்கும் பொழுது, பெருஞ் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றினால், கதிர் நூற்றிருப்பது முறை சுற்றும் வேகத்திற்கு அவ்வமைப்பு அமைக்கப்பட்டிருந்தது.

பருத்திப் பெண்டின் பனுவலை (நூலை) 'நெருப்புச் சினம் தணிந்த நிணத்திற்கு' ஒப்புமை காட்டுகிறார் சங்கப் புலவர். மேலும் இப் பெண்டிரின் நுண்மையான நூற்கும் திறனை, 'நுணங்கு நுண் பனுவல்' (நற். 353) என்ற நற்றிணையின் அடியாலும் உணர்த்துவர். மகளிர்க்கும், நூற்புத் தொழிலுக்கும் உள்ள நெருக்கத்தினை,

> 'நுண்ணிய பலவாயப் பஞ்சின் நுனிகளாற் கைவன்மகடூ உத்தனது
> செயற்கை நலம் தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றல் என்பது' (பக். 14)

என்று இறையனார் களவியல் உரை தெளிவுபடுத்துகின்றது.

> ''கையே வாயாகக் கதிரே மதியாக
> மையிலா நூன் முடியுமாறு'' (நூற்பா. 24)

என்ற நன்னூலாரின் நூற்பா அடிகளில் 'வாய்-கை; மதி-கதிர்' என்பதிலிருந்து 'கையால்' நூற்கப்பட்டதனை அறிய முடிகிறது.

வழிவழியாகத் தொடர்ந்து வரும் நூற்புத் தொழிலில், இன்றும் நூற்புக் கருவியைக் 'கதிர்' என்றே அழைப்பதுடன் 'குழல்'[16] என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறு, பருத்தியிலிருந்து, நூல் நூற்றெடுக்கும் முறையினைப் பின் வரும் அமைப்பின் மூலம் விளக்கலாம்.

பருத்தி
↓
கொட்டை நீக்குதல்
↓ கொட்டை
↓ பஞ்சு
↓
பஞ்சு அடித்தல்
↓
பட்டை போடுதல்
↓
நூல் நூற்றல்
↓ கை முறையில் நூற்றல்
  ↓ தக்களி
  ↓ இராட்டை
    ↓ கிசான் இராட்டை
    ↓ மதன் இராட்டை
    ↓ அம்பர் இராட்டை
↓ ஆலை முறையில் நூற்றல்

**நூலின் தரம்**

நூலின் தரம் காண வேண்டுமாயின் நூலின் நீளம், அதன் எடை, அதன் தடிப்பு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். நூலின் தரத்தைப் பற்றிக் கூறும் பொழுது பொதுவாக நேர்த்தியான நூல், முரட்டு நூல், சமமான நூல் என்று கூறாமல், நூலின் தரத்திற்கேற்ப, அவற்றின் வேறுபட்ட தரத்தைக் குறிக்கும் பொருட்டு, அதனை ஓர் எண்ணால் குறிக்கிறார்கள். பருத்தி இழை 10, 20, 40, 60, 80, 100, 120 எனப் பல எண் தரத்தைப் பெற்றுள்ளது. எண் பெரிதாகப் பெரிதாக, நூல் மிக நயமானதாகிறது. எண் குறையக்குறைய, நூல் தடிப்பாக இருக்கின்றது.

துணி நெய்யும் பொழுது, ஒரே எண்ணாலான நூலாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்றை முரடாகவும் மற்றொன்றை மெல்லியதாகவும் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே நேரத்தில் பாவுக்கு ஓர் எண் தர நூலும், ஊடைக்கு வேறு எண் தர நூலும் பயன்படுத்தலாம். ஆகையால், நெசவின் போது, நெசவிற்கு வேண்டிய சிட்டங்களைப் பொறுக்கி எடுக்க அல்லது தேர்ந்தெடுக்கச் சிட்ட நூலின் எண் தெரிந்திருக்க வேண்டும்.

நூலின் எண், தடிப்பு, நீளம் ஆகிய மூன்றும் ஒன்றிற்கொன்று தொடர்பு உடையவை. பஞ்சாலையில் நூற்கப்படும் நூலின் எண்ணை மதிப்பிட ஆங்கிலேயர்கள் பின்பற்றிய முறையே இங்கும் பின்பற்றப்பட்டு வருகின்றது. அதாவது 'ஓர் இராத்தல் எடைக்கு எத்தனைச் சிட்டங்கள் ஈடாகுமோ அதுவே அந் நூலின் எண்' எனக் கொள்ளப்படுகின்றது. இங்குச் சிட்டங்கள் ஒரே சீரானதாயிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

**நவீன முறையில் நூல் நூற்றல்**

விளை நிலங்களில் பயிராகும் பருத்தியானது குடியானவர்களால் பறிக்கப்பட்டு, பஞ்சு வியாபாரிகளிடம் போய்ச் சேர்கிறது. அவர்களிடமிருந்து அவற்றை மூட்டைகளாக மொத்தமாகக் கொண்டுசென்று 'ஜின்னிங் பேக்டரி' என்னும் ஆலைகளில் சேர்ப்பர். அங்கு இயந்திரங்களின் மூலம் பருத்தியிலிருந்து கொட்டைகளை நீக்கிப் பஞ்சைப் பிரித்தெடுக்கிறார்கள். இவ்வாறு கிடைத்த பஞ்சைப் பெரும் பெரும் பேல்களாகக் கட்டுகிறார்கள். (ஒருபேலில் 400 இராத்தல் பஞ்சு இருக்கும்). இந்தப் பஞ்சுப் பேல்கள் நூற்பாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

அங்குப் பேல்களை உடைத்துப் பஞ்சை நூற்பதற்கு ஏற்றதாகச் செய்வார்கள். பேலில் பஞ்சு மிகவும் இறுக்கமாகக் கட்டப்பட்டிருப்பதால் கட்டியாக இருக்கும். இந்தப் பஞ்சில் இலைத்தூள், உடைந்த கொட்டைகள், மண், தூசு, காம்பு போன்ற அசுத்தங்கள் கலந்து இருக்கும். இவற்றை நீக்க வேண்டுமானால், பஞ்சுக்கட்டியை நன்றாய்ப் பிய்த்து உதிரி செய்ய வேண்டும். இதற்குப் பயன்படும் இயந்திரம் ''பேல் பிரேக்கர்'' (Bale Breaker) எனப்படும். பஞ்சுப் பேலிலிருந்து

பஞ்சுக்கட்டிகளை உதிர்த்துத் தனித்தனியாகப் பிரிக்கப்படுவதால் இதில் உள்ள அசுத்தப் பொருள்கள் நீக்கப்படுகின்றன.

இங்கிருந்து பஞ்சு, காற்றின் உறிஞ்சும் சக்தியால் 'தானாகக் கலவை செய்யும் (Auto mixer) இயந்திரத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. இங்கு எல்லா வகையான பஞ்சும் சீராக்கப்படுகின்றன. இந்த இயந்திரம் சீராகக் கலவை செய்யும் வேலையையே செய்கிறது. பின்பு அங்கிருந்து ''பீட்டர்'' (Beaters) என்னும் அசுத்தம் போக்கும் இயந்திரப் பகுதிகள் வழியாகப் பஞ்சு செலுத்தப்படுகின்றது. இங்கே கூண்டு போன்ற பகுதியில் பஞ்சானது சுழற்றியடிக்கப் படுவதால், பஞ்சுக்கற்றை உதிரியாகி, அசுத்தங்கள் நீக்கப்படுகின்றன.

இந்தியப்பஞ்சு அதிகப் பீட்டர்கள் வழியாகவும், சுத்தமான அமெரிக்கன், ஆப்பிரிக்கன் பஞ்சு குறைந்த பீட்டர்கள் வழியாகவும் செலுத்தப்படுகின்றன. இவ்வாறு சுத்திச் செய்யப் பட்ட பஞ்சு பாய் வடிவில் (laps) ஒரு கம்பியின்மேல் சுற்றப் படுகிறது. இது 'இலாப்' (lap) என்று வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இலாப்பும் ஒரு குறிப்பிட்ட நீளமும், ஒரு குறிப்பிட்ட எடையும் உடையதாக இருக்கும். இவ்வாறு ''இலாப்'' வடிவிற்கு மாற்றப்படும் இடத்திற்கு ''புளோ ரூம்'' (Blow room) என்று பெயர் வழங்குகிறது.

புளோ ரூமிலிருந்து ''கார்டு ரூம்'' (card room)க்கு இந்த இலாப்புகள் கொண்டு வரப்படுகின்றன. இங்கு உள்ள எந்திரத் திற்கு ''கார்டிங் எந்திரம்'' (carding Engine) என்று பெயர். இதன் பின்புறம் இலாப் ஊட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான முள்களால் மூடப்பட்டுள்ள சிலிண்டரால் முன்புறம் கொண்டு வரப்படும். இங்கே பஞ்சானது தனித்தனி இழையாகப் பிரிக்கப்படு வதால், சின்னஞ்சிறு தூசும் இன்றிப்பிரிக்கப்படுகிறது. இவ்வாறு சுத்தமாக்கப்பட்ட பஞ்சு, சிலிண்டரிலிருந்து பாவாடை போலப் (web) பிரிந்து, முன் புறமுள்ள உருளைகளால் அழுத்தப்பட்டு, முறுக்கில்லாத திரியாக (sliver) வெளி வருகிறது. இந்தத் 'திரி' தகரக் குவளைகளில் (cams) அழகாக அடுக்கப்படுகின்றது.

இந்தத் தகரக் குவளைகள், பின்னர், 'டிராயிங் பிரேம்' (Drawing frame) என்னும் எந்திரத்திற்குக் கொண்டு வரப்படு

கின்றன. இங்கு '4' அல்லது '8' திரிகள் பக்கவாட்டத்தில் ஒன்றோடு ஒன்று சேர்ந்து அதனால் ஏற்பட்ட நீட்டுத் தன்மையுடன் (drafting) இழுக்கப்படுவதால், ஒரே சீரான மேடு பள்ளமில்லாத திரி கிடைக்கிறது. இந்தத் திரியும் நீண்ட குவளைகளில் அடுக்கப்படுகிறது. இந்த முறையினால் தனித் தனித் திரியிலுள்ள சமமற்ற நிலை நீங்கி விடுவதோடு, பஞ்சு இழைகள் (fibers) ஒன்றோடொன்று சம பக்கத்தில் இணையான நேராக இருக்கும்படி அமைக்கப்படுகின்றன. அதோடு ஒவ்வொரு கஜத்தின் எடையும் வித்தியாசமின்றி அமைக்கப்படுகின்றன. மிகவும் ஒழுங்கான திரிகளைப் பெற இரண்டு அல்லது மூன்று 'டிராயிங் பிரேம்களின்' மூலம் திரிகளைச் செலுத்துவதும் உண்டு.

இவ்வாறு குவளைகளில் சேகரித்த திரிகள் ''சிலப்பிங் பிரேம்'' (Slubbing Frame) என்ற எந்திரத்தில் ஊட்டப் படுகின்றன. இங்குத் திரிகள் நீட்டம் பெற்று முறுக்கேறி, மரக்குழல்களின் மேல் (bobbin) சுற்றப்படுகின்றன. இவ்வாறு விட்டத்தில் குறைக்கப்பட்டு, முறுக்கேற்றப்படுவதால்தான் சுலபமான முறையில், அடுத்த எந்திரத்திற்குத் திரிகளைக் கொண்டுபோக முடிகிறது. இந்த முறுக்கேறிய திரிக்கு ''ரோவிங்'' (Roving) என்று பெயர் வழங்கப்படுகிறது.

இந்த ''ரோவிங்'' உள்ள குழல்கள் நூல் நூற்கும் எந்திரத்திற்குக் (Ring spinning Frame) கொண்டு வரப் படுகின்றன. இங்கு முதலில் ரோவிங்கிலுள்ள முறுக்கு, உடை பட்டு, வேண்டிய நீட்டுத் தன்மையுடன் இழுக்கப்பட்டுத் திரி உருளை முன் வருகிறது. இதன் பிறகு வேகமாகச் சுழலும் கதிர்களால் (Spindles) முறுக்கேற்றப்படும் போது திரி 'நூலாக' இழைகிறது. இந்த நூல், கதிரின் மேல் செருகப்பட்டிருக்கும் குழல்மீது சுற்றப்படுகிறது.

தற்காலத்தில் டிராயிங் இயந்திரத்திலிருந்து வெளிவரும் பஞ்சுத் திரியை முன்போல சிலப்பிங்; இண்டர், ரோலிங் ஆகிய எந்திரங்களில் செயல்படவிடுவதில்லை. மாறாக, சப்பானியர் களால் புதுமுறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட ''சூப்பர் ஹைடி ராப்ட்'' என்னும் நீட்டுதல் முறையில் டிராயிங்கிலிருந்து வெளிவரும், திரி, நேரடியாக 'ரிங் பிரேமில்' ஊட்டப்பட்டு, நூலாக நூற்கப்படுகிறது.

இவ்வாறு நூற்கப்படும் நூல் மிகவும் நேர்த்தியாகவும், அதிக பலமுள்ளதாகவும் இருக்கக் ''கோம்பர்'' (Combing machine) என்னும் இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

இக்காலத்தில் இம்முறையில் (இயந்திரம் மூலம்) நூல் நூற்றலே நடைபெற்று வருகின்றது. தக்களி அல்லது இராட்டை கொண்டு நூற்கும் முறை, நவீன இயந்திரங்கள் தோன்றத் தோன்றப் படிப்படியாக மறைந்து விட்டது என்றே கூறலாம்.

**பாவாக்குதல்**

நூல் நூற்ற பிறகு, அவற்றைச் சிட்டம் அல்லது சிலுப்பை வடிவமாக மாற்றி விடுவார்கள். அவை சுமாராக ஒவ்வொன்றும் 840 கெஜங்கள் நீளம் உடையனவாக இருக்கும். இவ்வாறு கிடைக்கும் நூலிழையை நெய்வதற்குத் தேவையான நீளவாட்டப் பாவிழை தயாரிக்கத் தொடர்ச்சியாக வரும்படி நீண்ட நூலாகவும் தகுந்த பிகுவுடனும் கரப்பதற்கு ஏற்ற வகையில் இருக்குமாறு முதலில் பரிவட்டத்தில் இழைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு இழைப்பதற்குப் 'பரிவட்டம்' அல்லது 'வட்டில்லா டப்பா' அல்லது 'வட்டுள்ள டப்பா' பயன்படுத்தப்படும்.

இவ்வாறு இழைத்து எடுத்துக்கொண்ட பிறகு, அவற்றைக் கொண்டு, துணி நெய்வதற்குத் தேவையான நீளவச இழைகளை (பாவிழைகள்) உருவாக்குவார்கள். இதற்குப் 'பாவு ஓடுதல்' அல்லது 'பாவு தயாரித்தல்' என்று பெயர். பாவு தயாரித்தலை,

1. தெருவில் பாவு ஓடுதல்,
2. முளைகள் உள்ள சட்டத்தில் பாவு ஓடுதல்,
3. ஆலை மூலம் பாவு ஓடுதல்

எனப் பலவாறு தயாரிக்கலாம். இதிலும், ஆலை மூலம் பாவு தயாரித்தலை,

(அ) படுக்கை வசமுள்ள பாவாலை
(ஆ) செங்குத்துப் பாவாலை
(இ) பாகம் பாகமாகப் பாவு ஓடும் ஆலை
(ஈ) அமல்சாத் பாகம் பாகமாகக் கஞ்சி போட்டுப் பாவு ஓடும் ஆலை

என வகைப்படுத்தலாம்.

இவ்வாறு நெய்வதற்குத் தகுந்த நீளவாக்குப் பாவிழைகளை ஓட்டி எடுப்பதற்கும் இழைகளைப் பொறுத்து எண்ணிக்கையும், அளவும் உண்டு. முள் உள்ள ஆலையாயிருந்தால் ஒரு சேலைக்குப் பதின்மூன்று முள் என்ற அளவில் கணக்கிட்டு, நூலின் தரத்திற்கு ஏற்ப (60, 40...) 130 முள், 156 முள் என்ற கணக்கில் ஓடி எடுக்கப்படுகின்றது. ஒரு பாவிற்கு 2400 முதற்கொண்டு 3120 (3840) இழை வரையில் நெடுக்கு (நீளவாட்டில்) இழைகள் ஓட்டப்படும். பொதுவாகச் சேலையின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டுதான், 10 சேலை அளவு என்றும், 12 சேலை அளவு என்றும், (1 சேலைக்கு 8 கெஜம் நீளம்) கணக்கில் கொண்டு ஓட்டி எடுப்பார்கள். இவ்வாறு ஓட்டி எடுப்பது எல்லாம் நூலிற்கு (பருத்தி) மட்டுமே. பட்டுப்பாவாயிருந்தால், அது இயந்திர ஆலைகளில் ஓட்டி எடுக்கப்படுகின்றது. பாவு ஓட்டி எடுக்கும் கணக்கீடு வருமாறு,

பருத்தி நூல் (சேலைக்கு)

| 40 எண் தரம் | 60 எண் தரம் |
| --- | --- |
| 1 பாவுக்கு-13 சேலை வரையில் | 1 பாவுக்கு-10 சேலை மட்டுமே (அ) 11 வரையில் |
| 1 பாவுக்கு-390 அடுக்கு | 1 பாவுக்கு -300 அடுக்கு (அ) 360 அடுக்கு |

1 அடுக்கு–8 இழை
4 குலுக்கை–1 அடுக்கு
2 இழை–1 குலுக்கை
30 அடுக்கு–1 கால்

**பாவில் கஞ்சி தோய்த்தல்**

இவ்வாறு ஆலையில் (பெரிய இராட்டினத்தில்) தகுந்த முறையில் நூற்றெடுத்து அதனை நீளமாக விரிப்பர். நீட்டிய நூலின்மீது (பாவு மீது) பசையிட்டுத் தோய்த்து நூலுக்கு மெருகு ஏற்றுவர்; அதாவது நூலைக் கஞ்சியின் முரட்டுத்தன மில்லாமல் மென்மைப்படுத்துவர். இவ்வாறு நெசவுக்கு ஏற்றபடிச் செய்தலே 'பாவாற்றுதல்' எனப்படும்.

பா என்னும் சொல், பாவுதல் என்னும் பொருளில் பரந்து காணப்படும் தன்மையை விளக்கும். இலக்கியச் சான்றுகளில் இந்நிலையே உணர்த்தப்படுகின்றது. சங்கப் புலவர்கள் உவமை யின் வழி, 'பா' பரந்து கிடக்கும் தன்மையை விளக்குவர்.

'துகிலாய்ச் செய்கைப் பாவிரித்தன்ன
வெயிலவிர்பு நுடங்கும் வெவ்வங்களரி' (அகம். 293)

ஈண்டு வெயிலின் விரிந்த பரப்பு, துகிலைச் செய்யும் தொழில் தன்மையுடைய 'பா' விரிந்து கிடக்கும் தன்மையைப் புலப்படுத்து கின்றது.[17]

ஒற்றை நூலில் தயாரிக்கப்பட்ட 'பாவை' நெய்தலுக்குப் பயன்படுத்துவதற்கு வசதியாகப் பாவுக்குப் பலம் சேர்க்க வேண்டி யிருக்கிறது. இதற்குப் பெரும்பாலும் தெருவில் நீட்டி, கஞ்சி தோய்க்கும் முறையே பின்பற்றப்படுகின்றது. பாவின் நீளத் திற்குத் தகுந்தபடி, பாவை நீட்டிப் பரப்புவதற்கு வசதியாக இருக்கும்படி 'ஊடுதை' களை (வாணி அல்லது குதிரை) கவை $\overline{X}$ வடிவில் உள்ளனவற்றைத் தரையில் ஊன்றி, அவற்றிற்கு இடையே பாவு தரையில் படாதவாறு நீட்டிச் சென்று, பாவின் இரு முனைகளையும் கனமான தடியில் சேர்த்து, அவற்றின் இரு நுனிகளிலும் கயிற்றைச் சேர்த்துத் தரையில் ஆழமாகப் புதைக்கப் பட்டுள்ள கடப்பாரையுடன் இணைத்து வைப்பர். நூலானது, ஈரப்பசையின் காரணமாக ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்ளாமல் இருப்பதற்காகப் பாவின் குறுக்காகப் புணிகளுக்குள் மெல்லிய பத்தைகள் இரண்டிரண்டாகச் செருகப்பட்டிருக்கும். பின், நூலுக்குப் பசை தருவதற்காகத் தயாரிக்கப் பட்டிருக்கும் மாவுக் கஞ்சியை அதற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள கஞ்சிப்பையில் நிரப்பி, கஞ்சிப்பையின் வாய்ப்புறத்தை இறுக்கமாக மூடிக் கொண்டு பாவின் குறுக்காகக் கஞ்சிப்பையை வைத்து, பாவின் மேல் ஒரு முனையிலிருந்து அடுத்த முனைக்குச் சென்று, பாவைப் புரட்டி மீண்டும் அம்முனையிலிருந்து ஆரம்பித்த முனைக்கே இழுத்து வருவர். இவ்வாறு செய்யப்படுவதனால் பைக்குள் ளிருக்கும் கஞ்சி வடிக்கப்பட்டுப் பாவின்மேல் படிகிறது. கஞ்சி, பாவின் மீது படிந்து நன்கு ஈரப்பசையுடன் இருக்கும். அது இலேசாக் காற்றாடும் (உலரும்) நிலையில் நீண்ட புல்லுருவியைப் பாவின் அகலத்திற்குரிய அளவில், பாவின்மீது படிய வைத்துப் பாவு முழுவதும் ஓரே திசையில் இழுத்துச் சீவவேண்டும்.

புல்லுருவியை இவ்வாறு பாவு உலரும் வரை சீவுதல் வேண்டும். அதே நேரத்தில் இழைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளாதவாறு புணியில் செருகப்பட்டிருக்கும் பத்தைகளை மேலும் கீழும் அசைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இப்படிப் பலமுறை செய்யச் செய்யப் பாவு, பசையுடன் உலர்ந்து, நெய்வதற்கு ஏற்ற வகையில் பக்குவப்படும். நன்கு உலர்ந்த பின், பாவு முழுவதையும் ஒரு உருளையில் சுற்றித் தறியுடன் இணைப்பதற்காகத் தறி மேடைக்குக் கொண்டு செல்லப்படும். அங்குத் தறியில் ஏற்கனவே உள்ள பாவுடன் பிணைக்கப்பட்டு, அப்பிணையை நெய்யும்பொழுது, விழுதுகளின் வழியாக இழுத்து அறுத்து எடுத்து விடுவார்கள்.

**நவீன முறையில் துணி (ஆடை) தயாரித்தல்**

துணி தயாரித்தலில் இக்காலத்தில் நான்கு முறைகள் பின்பற்றப் படுகின்றன. அவை,

1. நெசவு (Weaving)
2. நிட்டிங் (Knitting)
3. பெல்டிங் (Felting)
4. பின்னுதல் (Braiding) எனவாம்.

நெசவு, மூன்று பகுதிகளாக நடைபெறுகின்றது. அவை,

(அ) ஷெட்டிங் (Shedding) — இது பாவு நூல்களைத் தூக்கப் பயன்படுகிறது.

(ஆ) பிக்கிங் (Picking) — பாவு நூல்களுக்கிடையே ஊடை நூல் செலுத்த உதவுவது.

(இ) பீட்டிங் (Beating) — ஊடை நூலைத் துணியோடு சேர்ப்பதற்குப் பயன்படுகிறது.

மேலும் நெசவில், 'சாதா நெசவு (இதில் கூடை நெசவு, ரிப்ட் நெசவு என இரண்டும்), டுவில் நெசவு, சாட்டின் நெசவு (இதில் சாட்டின், சாட்டீன் என இரு வகை உண்டு) எனப் பல வகைகள் உள்ளன.

**நிட்டிங்**

நிட்டிங் என்பது, பதினைந்தாம் நூற்றாண்டிற்கு மேல் கண்டுபிடிக்கப்பட்ட கலையாகும். முன் காலத்தில் இது

கையாலேயே செய்யப்பட்டு வந்தது. இப்போது இயந்திரங்களின் உதவியால் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் துணிக்கு 'இழுக்கும் தன்மை' (Elasticity) அதிகம். இம்முறை யினால் காலுறைகள், உள்ளாடைகள், கோட்டு, சூட்டு, கம்பளிச் சட்டைகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. 'நிட்டிங்' என்பது நூலை 'லூப்' ஆகச் செய்து ஒன்றுக்குள் ஒன்றாகப் பிணைக்கப் படுவதாகும். தொடர்ச்சியாக ஒரே நூலைக் கொண்டும் நிட்டிங் செய்யலாம். குறுக்கு வாட்டில் வேறொரு நூலைச் செலுத்தியும் நிட்டிங் செய்யலாம்.

நிட்டிங்கில், 'பாவு நூல் நிட்டிங், 'ஊடை நூல் நிட்டிங்', என இரு வகை உண்டு.

**பெல்டிங்**

இழைகளை ஒன்று சேர்த்துத் துணியாக்குவதற்கு 'பெல்டிங்' என்று பெயர். சாதாரணமாக, இதற்குக் கம்பளி இழைகளையே பயன்படுத்துவார்கள். இவ்வாறு தயாரிக்கப்படும் துணி மிகவும் கனமாக இருக்கும். இவ்வகைத் துணிக்கு இழுக்கும் தன்மையும், உறுதியும் கிடையா.

**பின்னுதல்**

நூல்களைச் செங்குத்தாக ஒரு மரக்கட்டையிலிருந்து தொங்க விட்டு, பல நூல்களை ஒன்று சேர்த்து ஒன்றோடொன்று நீள வாட்டில் பின்னுவார்கள். இம்முறையே 'பின்னுதல்' எனப் படுகின்றது. இம்மாதிரியான துணிகளை இப்பொழுது இயந் திரங்களின் உதவி கொண்டும் உருவாக்குகின்றார்கள்.

நவீன நெசவில், ''க்ரேப் நெசவு, கார்ட் நெசவு, பைல் நெசவு, (வெல்வெட், வெல்வெட்டீன் என இரு வகை), இரட்டை நெசவு, காஸ் அல்லது லீனோ நெசவு, 'ஸ்பாட்' 'ஸ்வில், 'லாப்பெட்' நெசவு, ஜக்கார்ட் நெசவு'' எனப் பல வகைகள் மேலும் உள்ளன. இவ்வாறாக இவ் ஆய்வுக் கட்டுரையானது நெசவுத் தொழிலைக் குறித்தும், அதைச் செய்யும் முறைகளைக் குறித்தும் காட்டி நிற்கின்றது.

**கட்டுரையின் முடிவுகள்;**

1. முதன் முதலில் அறியப்பட்டிருந்த நெசவு கைத்தறி நெசவே. இன்றளவும் கைத்தறி நெசவே சிறந்து விளங்குகிறது.
2. இந்தியாவிலிருந்தே உலகின் பிறநாடுகளுக்கு முதன் முதலில் பருத்தி அனுப்பப்பட்டது.
3. சுமார் முப்பது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பருத்தி ஆடை அணிந்து வந்தனர்.
4. பஞ்சிலிருந்து தக்களி இராட்டைகளின் உதவியுடன் கையினால் நூல்நூற்றல் மறைந்து போய், தற்காலத்தில் நவீன முறையிலேயே நூற்கப்படுகிறது.
5. பருத்தியின் பயன்பாட்டிற்குப் பிறகே, பட்டின் பயன் பாடு அறியப்பட்டது.
6. செல்வந்தர்களும், செல்வந்தர்களைச் சார்ந்தவர்களுமே பட்டாடைகளை அணிந்தனர்.
7. முதன் முதலில் சீனாவிலிருந்தே, உலக நாடுகளுக்குப் பட்டு பரவியது.
8. கைத்தறி நெசவில் மட்டுமே பூ வேலைப்பாடுகள் மிகவும் சிறப்பான முறையில் செய்யப்படுகின்றன.
9. உருவாகும் துணிகள் மிகவும் மெல்லிய இழையினால் நெய்யப்பட்டு, மேன்மை பெற்றிருந்தன. இன்றளவும் அப்படிப்பட்ட ஆடைகளே விரும்பப்படுகின்றன.
10. தொழில் சார்ந்தும், பால் சார்ந்தும், இனம் சார்ந்தும் ஆடைகள் வேறுபட்டன.
11. மகளிர், குழந்தையர், வயது முதிர்ந்தோர் என வயது வேறுபாடில்லாமல் அனைவரும் பங்கெடுக்கும் உழைப்பு மிகுந்த தொழிலாக நெசவுத் தொழில் இயங்குகிறது.
12. பஞ்சிலிருந்து தொடங்கி, துணியாக நெய்தெடுக்கப்படும் வரையிலும் தனி ஒருவரால் செய்யப்படாமல் அனைத்து நிலைகளிலும் கூட்டு உழைப்பே அமையப் பெறுகிறது.
13. நெசவாளர்கள் எதையும் கணக்கிட்டுப் பணியாற்றுவதில் வல்லவர்கள்.

14. ஆடைகளுக்கு அளிக்கப்படும் மதிப்பும் சிறப்பும் அதை உருவாக்கும் தொழிலாளிக்கு அளிக்கப்படுவதில்லை.

15. நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். நாளெல்லாம் உழைத்தும், நிம்மதியைப் பெற முடியாமல் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே அவர்களது வாழ்வு அமைந்து விடுகின்றது.

16. கைத்தறி நெசவின் சிறப்பினைச் சங்க இலக்கியங்களும் பிற இலக்கியங்களும் பெரிதும் போற்றிப் பாடியுள்ளன.

17. வழங்கும் பழமொழிகள் தொழில் தொய்வுறாச் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

18. கைத்தறி நெசவினை மேற்கொள்ளும் 'கைத்தறி'யைக் கண்டறிந்தவர் யாரென அறிய முடியவில்லை.

19. நகர்ப்புறங்களில் கைத்தறி நெசவு மங்கி, விசைத்தறி நெசவு ஆக்கிரமித்து வருகின்றது.

20. கைத்தறி நெசவுத் தொழில் இன்று குடிசைத் தொழிலாகவே நடந்து வருகின்றது.

**இனிச் செய்ய வேண்டியவை**

1. அரசு, நெசவாளர்கள் தொழில் செய்யும் பொருட்டு ஊக்க ஊதியமும், உதவித்தொகையும் வழங்க வேண்டும்.
2. நெசவுத் தொழிற்கூடங்களை அரசே அமைத்துக் கொடுக்க வேண்டும்.
3. நெசவாளர் குடும்பத்துக் குழந்தைகளின் படிப்பிற்கான-முன்னேற்றத்திற்கான உதவிகளை அரசு வழங்கவேண்டும்.
4. நெசவாளர்களுக்கு என்று தனியான மாடிவீடுகளை அமைத்து முறையான அடிப்படைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும்.
5. எல்லா வகையிலும் நெசவாளருக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு அரசு செய்யுமேயானால் நெசவாளிகள் முன்னேறுவர்; நெசவுத் தொழிலும் மேன்மையடையும்.

**அடிக்குறிப்புகள்**

1. அ. மீரா முகைதீன், தமிழிலக்கியத்தில் ஆடை வகைகள், ப. 90.
2. திருமதி தே. தியாகராசன், தமிழர் ஆடை, வ. சுப்பையா பிள்ளை பவளவிழா மலர், ப. 100
3. நற்றிணை, 33.
4. புறநானூறு, 275
5. பரிபாடல், 3: 88
6. மணிமேகலை, 5;61
7. சிலப்பதிகாரம், 11:50
8. பெருமாள் திருமொழி, 6:5,8.
9. நாச்சியார் திருமொழி, 3;1,4:5.
10. ஒட்டக்கூத்தரருளிய உத்தரகாண்டம், இராமாயணம், 10, 120.
11. பதிற்றுப்பத்து, 12: 21
12. கே. பகவதி, தமிழர் ஆடைகள், ப. 20
13. திருக்குறள், அழுக்காறாமை, குறள். 6
14. S. N. Dar, Costumes of India and Pakistan, P. 180
15. Tamil lexicon, vol. I, Part I, P. 180
16. கே. பகவதி, தமிழர் ஆடைகள், ப. 205
17. கே. பகவதி, தமிழர் ஆடைகள், ப. 206.

'பண்டைத் தமிழரின் பொறியியல் நுண்ணறிவு' என்ற தலைப்பில் ஆய்வை மேற்கொண்டுள்ள இவர் கல்வெட்டுகளைக் காதலிப்பவர்; எழுத்துச் சீர்திருத்தத்தில் ஈடுபாடுமிக்கவர். தட்டச்சுப் பொறிகள் இவருடைய விழைவிற்கேற்ப உருமாறின. அயரா உழைப்பால் பலவூர்களில் கள ஆய்வு மேற்கொண்டு 'மண்டபங்கள்' பற்றிய கட்டுரையை வழங்கியுள்ளார். கட்டுமானங்கள் பற்றிய இவர்தம் பட்டறிவுகள் பலருக்கும் பயன்தருபவை. 'தேனோலை' 'கொங்கு' இதழ்கள் இவர் கரம்பட்டு மிளிர்ந்தவை.

நெறியாளர்

அ. அறிவுநம்பி

# பெருவழி மண்டபங்கள்

கொடுமுடி ச. சண்முகன்

## முன்னுரை

பண்டைய மாமன்னர்களின் வரலாற்றினைப் போதிக்கும் போது வழிப்போக்கர் வசதிக்காக அம்மன்னர்கள் நெடுஞ்சாலைகள் அமைத்தனர்; சாலையோரம் நிழல் தரும் மண்டபங்கள் அமைத்தனர் சத்திரங்கள் அமைத்தனர் என்று தவறாமல் கூறுவர். கிட்டத்தட்ட எல்லா வடபுலப் பேரரசர்களுக்கும் இவ்வாறு கூறுவதுண்டு. தமிழகத்திலும் இதுபோன்ற சமுதாய நோக்குள்ள நற்பணிகள் பல நடைபெற்றுள்ளன. அவற்றில் பெருவழிகள்

பற்றியும் பெருவழியில் அமைந்துள்ள வழிப்போக்கர் மண்டபங்கள் பற்றியும் இந்தக் கட்டுரை சற்றே ஆராய முற்படுகிறது.

## 2. ஆறு

ஆறு என்ற சொல்லிற்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று நீரோடும் ஆறு; அடுத்தது வழி. நமது கிராமங்களில் இட்டேரி எனப்படும் குறுகலான பாதைகள் கட்டை வண்டிப் பாதை யாகவும், மழைக் காலங்களில் நீரோடையாகவும் பயன்படு கின்றன. இட்டேரிகள் பெரும்பாலும் தானாக அமைந்தவை. காடுகளின் மகசூலைக் கொண்டு வரவும், உரம் முதலானவை களை எடுத்துச் செல்லவும் பயன்படும் பாதைகள் இவை. கல்லடுக்கம் (Soling Stones) அமைத்துச் செப்பம் செய்யப் படாதவை. இறக்கம் அதிகமாக உள்ள இடங்களில் இரண்டு உயரங்களில் உள்ள பாதையின் நடுவே சரிவு அமைத்து அங்குக் கருங்கல் அடுக்கியிருப்பார்கள். அதிகமாக நீர் ஓடும்போது பாதையில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. எனவே நீரோடுவதால், அதிகம் பாதிக்கப்படாத வண்டிப் பாதையாக இட்டேரி பாதுகாக்கப் படுகிறது.

### 2.1 பெருவழிகள்

பேரூர்களை இணைப்பதற்காக அமைக்கப்படுபவை நெடுஞ் சாலைகள், பண்டைத் தமிழகத்தில் அவை பெருவழிகள் எனப் பட்டன. வேகமாகச் செல்லும் தேர்கள், பெரும் பாரங்களைச் சுமந்து செல்லும் வண்டிகள், சந்தைகளுக்கு ஓட்டிச் செல்லப் படும் கால்நடைகள் போன்றவற்றிற்காகப் பெருவழிகள் அமைக்கப்படுகின்றன. அரசர்கள் முயற்சியின்றி இவற்றை அமைக்க இயலாது. தனிமனிதர்களோ, சிறு குழுக்களோ அமைக்க இயலாத அளவுக்குச் செலவு பிடிப்பவை. தமிழகத்தில் அவை போன்ற பெருவழிகள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில பற்றிக் காண்பது தகுவதாகும்.

### 2.2 இராசகேசரிப் பெருவழி

கோவை மாநகரத்துப் பேரூருக்கு அருகில் உள்ளது சுண்டக்கா முத்தூர். அங்கிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில்

பச்சைப்பள்ளி என்ற இடம் உள்ளது. அங்குள்ள மலைத் தொடரில் கணவாய்ப் பகுதியில், செயற்கையாகப் பாறையைப் பிளந்து ஒரு பாதை அமைக்கப்பட்டுள்ளது. அங்குத் தமிழ் எழுத்திலும், வட்டெழுத்திலும் பெருவழியின் பெயரும் ஒரு வெண்பாவும் வெட்டப்பட்டுள்ளன.

இராசராச சோழனின் தந்தை சுந்தரசோழன். அவன் அண்ணன் கண்டராதித்தன். இராசகேசரிப்பட்டம் கொண்டவன். அவன் பெயரால் இக்கல்வெட்டு அமைந்திருக்கக் கூடுமென்று கருதப்படுகிறது.

**தமிழ் எழுத்து**

ஸ்வஸ்தஸ்ரீ இராசகேசரிப் பெருவழி

**வட்டெழுத்து**

ஸ்வஸ்தஸ்ரீ இராசகேசரிப் பெருவழி

திரு நிழலைப் பன்னா டிருஞ்சிருந்த மைப்ப
ஒரு நிழலிப் பய்ங்களன் பொங்கு – இரு நிழல்னல்
வாழியர் கோச் சோழன் வளங்கா விரிநாடன்
கோழியர் கோக் கண்ட ரதி (த் தன்)

கடைசி வரியின் இறுதிப் பகுதி அவ்வளவுத் தெளிவாக இல்லை. எனவே அரசன் கண்டராதித்தன் அல்லன்; இராசராசனே என்பாரும் உளர்.

தமிழ் நாட்டிலிருந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாகவே இன்றும் கேரளத்திற்குப் போக்குவரத்துகள் உள்ளன. இராச கேசரிப் பெருவழி அக்காலச் சேரநாடு செல்ல அமைக்கப்பட்ட பெருவழியே என்பதில் ஐயமில்லை.[1]

## 2.3 அதியமான் பெருவழி

தருமபுரி மாவட்டத்தின் ஒரு பகுதி அதமன் கோட்டை எனப்படும், அதியமான் கோட்டை ஆகும். அங்கு ஒரு கல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது,

அதியமான் பெருவழி
நாவற் தாவளத்துக்கு
இருபத்தியொன்பது காதம்.

என்ற வாசகத்தோடு, இதனடியில் இரண்டு பெரிய பள்ளங்களும் அதனடியில் வரிக்கு மூன்றாக மூன்று வரிகளில் ஒன்பது சிறிய பள்ளங்களும் செதுக்கப்பட்டுள்ளன. எழுத்தை வாசிக்கத் தெரியாதோர், குழியை எண்ணித் தூரத்தை அறியலாம்.

அதே மாவட்டத்தில் இன்னோர் இடத்தில் 27 காதத்தைக் காட்டும் கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு கல்வெட்டுகளிலிருந்தும் நாவற்தாவளம் இருந்த திசையை ஓரளவு ஊகிக்க இயலும். எழுத்தமைதி கொண்டு 12, 13 ஆம் நூற்றாண்டினதாக இதனைக் கருத முடிகிறது.

ஒரு காதம் என்பது 10 மைலுக்குச் சமம் என்ற கருத்து, தமிழ் அறிஞரிடையே நிலவி வந்தது. ஆய்வாளர் தமிழரின் நீட்டலளவுகளை ஆராய்ந்து ஒரு காதம் பத்து மைல் அன்று என்றும் சுமார் நான்கு மைலுக்குச் சற்றே கூடுதல் என்றும் நிறுவியுள்ளார்.[2]

அதன் கோட்டையிலிருந்து சுமார் 30 காதம் தொலைவில் நாவற்தாவளம் இருந்திருக்க வேண்டும். தற்கால அளவில் சுமார் 120 மைல் அல்லது 192 கிலோ மீட்டர். செய்யாறு ஊரிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் நாவல் பாக்கம் என்ற ஊர் உள்ளது,

நாவல் பாக்கம் ஒரு வைணவத் தலம். தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களுள் ஒருவரின் அரச குரு இவ்வூரைச் சேர்ந்தவர். எனவே சிறிய கற்றளியாக இருந்த கோயிலுக்கு முன்மண்டபம், மகாமண்டபம், இராசகோபுரம் ஆகியவை எடுத்து உதவியுள்ளான்.

இவ்வூரில் இன்றும் வேதம் ஓதிடும் வித்தகர்கள் வசித்து வருகின்றனர். ஒவ்வொரு வீடும் ஒரு வேதபாடசாலை என்னுமளவிற்கு வேதப் பயிற்சிகள் நடைபெறுகின்றன. நடுவரசின் உதவி பெற்ற ஓலைச் சுவடி நூலகம் ஒன்றும் உள்ளது.

ஊரைச் சுற்றிலும் பல ஏரிகள் உள்ளன. மழைநீர் பெற்று ஒரு காலத்தில் வளமாக இருந்திருக்கக் கூடும்.

தாவளம் எனில் தங்குமிடம், மருத நிலத்தூர் என்னும் பொருள்கள் உண்டு. உணவுக்கடை எனக் கருதுவாரும் உண்டு.

நாவல்பாக்கம் என்றழைக்கப்படும் இவ்வூர் அக்காலத்தில் நாவற்றாவளம் என அழைக்கப்பட்டிருக்கக் கூடும்.

அதியமான் வைணவத்திலும் அதிகப் பற்றுடையவன் என்பது அதமன் கோட்டைப் பெருமாள் கோயிலிலிருந்து அறியமுடிகிறது.

காஞ்சிபுரம் இங்கிருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காஞ்சி செல்வோர் முன்னதாகத் தங்கிச் செல்லும் இடம் எனவும் பொருள் கொள்ளலாம்.

தரைப்படத்தில் அளந்தால்; திருவண்ணாமலை வழியாகச் சுமார் 111 மைல் ஆகிறது. சாலை செல்லும் வளைவு வழியில் 120 மைல் தேறும் நீளம் பொருந்தி வருவது அறியலாம்.

எனவே 12, 13 நூற்றாண்டுகளில் பெருஞ்சிறப்போடு திகழ்ந்த நாவல் பாக்கமே நாவற்றாவளமாக இருந்திருக்கக் கூடும் என்பது ஆய்வாளரின் கருத்து.

## 2.4 ஆறகழூர் கல்

சேலம் மாவட்டத்தில் பண்டைச் சிறப்புமிக்க ஊர் ஆறகழூர். இவ்வூர் ஆத்தூரின் அருகில் அமைந்துள்ளது. இவ்வூரில் சுமார் 8 அடி உயரக் கல் புத்தர் சிலைகள் இரண்டு, அமர்ந்த நிலையில் உள்ளன. சிவன் கோயிலும் விட்ணு கோயிலும் பழமைச் சிறப்புடையவை. இவ்வூரில் ஒரு கல் கிடைத்துள்ளது. அவ்வூரை ஆண்ட குறுநில மன்னன் மகதேசன் பெயரில் ஒரு பெரும்வழி அமைந்துள்ளதை அது காட்டுகிறது. காஞ்சிபுரத்தின் தூரம் எழுத்தில் இல்லாமல், குழிகளில் குறிக்கப்பட்டுள்ளது. அடிப்பகுதி உடைந்து விட்டதால், மொத்தக் குழிகளின் எண்ணிக்கைத் தெரியவில்லை. உடைந்த பகுதிக்குமேல் 25 குழிகள் உள்ளன. இக்கல் தற்போது சிவன் கோயிலுக்குள் வைக்கப் பட்டுள்ளது. ஆறகழூர் - காஞ்சியின் இடைத்தூரம் சுமார் 190 கிலோ மீட்டர் இருக்கும். சுமார் 30 காதம் எனக் கொள்ளலாம். காதக்கல்லில் உடைந்துபோன பகுதியையும் சேர்த்தால் சுமார் 30 குழிகள் இருந்திருக்க வேண்டும்.

## 2.5 காசி – இராமேசுவரம் சாலை

காஞ்சி, வந்தவாசி, தெள்ளாறு, வெள்ளிமேடுப்பட்டு முண்டியம்பாக்கம் வழி சென்ற நூற்றாண்டிலும் இந்த தூற்

றாண்டின் தொடக்கத்திலும் காசி - இராமேசுவரம் சாலை என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. நிலம் வாங்கல், விற்றல் ஆவணங்களில் நிலத்தின் நான்கெல்லை குறிக்கும்போது காசி இராமேசுவரம் சாலைக்குக் கிழக்கு அல்லது மேற்கு எனக் குறிப்பிடும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

## 3.1 தேரோடும் வீதி

பெருவழிகள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள், தொலைவுக் கற்கள் கிடைத்துள்ளன. எனினும் பழைய சாலைகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவற்றின் தளங்கள் எவ்வாறு பாவப்பட்டிருந்தன என்றும் கண்டுபிடிக்க இயலவில்லை.

எனினும் தேரோடும் சாலைகளில் கற்கள் பதித்துக் கெட்டிப் படுத்தியிருக்கக் கூடும் என்று அனுமானிக்கலாம். கிருட்ணகிரி வட்டத்தில், மோரல் பாறை மீதிருந்த பண்டைய கிராமத்திற்குச் செல்லும் வழி கல் அடுக்கத்தால் உருவாகியிருப்பதைக் காண முடிகின்றது.[3] கிராமத்து இட்டேரிகளிலும் பல இடங்களில் கல் பாவும் பழக்கம் இன்றும் தொடர்ந்து வருகிறது.

தெருக்களில் அகல அளவுகள் இக்கால 11 அடி அகலத்தின் பெருக்குத் தொகையாக அமைந்திருந்தன. 11 அடி, 22 அடி, 33 அடி, 44 அடி என அமைந்திருந்தன. உத்தரமேரூர் கல்வெட்டு களில் இந்த வீதி அகலங்களைக் காணலாம்.[4] 55 அடி அகலத் தெரு அரசப் பெருந்தெரு என்றும் தேரோடும் வீதி எனவும் அழைக்கப்பட்டது. திருச்செங்கோடு நகரத் தேரோடும் வீதி 55 அடி அகலம் உள்ளது. அதன் பழமைக்கு இதுவே ஓர் எடுத்துக் காட்டு. இக்காலத்தில் ஒரு பாதை 12 அடியாகும். இரு வழிப் பாதை 24 அடி அகலம் இருக்கும். எனவே எந்தச் சிற்றூரில் பாலம் கட்டினாலும் 24 அடி அகலம் இருக்க வேண்டும் என்ற அரசாணை தற்போது தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது.

## 3.2. சங்க காலத் தேரோடும் வீதி

வள்ளல்களின் பெருமையை உணர்த்து முகத்தான் வந்த பாடல் ஒன்று உண்டு. வள்ளலின் அடுக்களையில் சோறு வடித்த கஞ்சி ஆறாகத் தெருவில் ஓடுகிறது. வண்டிகளின் ஏறுகள் செல்வதால் தெரு சேறாகி விடுகிறது. சேறு காய்ந்ததும், தேர்க்

கால் பட்டுத் தூளாகித் தூசு பறக்கின்றது என்கிறார் புலவர். சாலை மண்ணால் ஆனதென்றும், கல் பாவப்படவில்லை என்றும், சாலையோரக் கால்வாய் இல்லையென்றும் இப்பாட்டிலிருந்து பொருள் கொள்ளத் தேவையில்லை. புலவரின் உயர்வு நவிற்சி அணி என்றோ, அவர் பார்த்த ஒரு தெரு அவ்வாறு இருந்திருக்கக் கூடுமென்றோதான் பொருள் கொள்ள வேண்டும். பொதுமைப்படுத்தலாகாது.

## 3.3. காந்தளூர்ச் சாலை

பேரரசன் இராசராசன் மெய்க்கீர்த்தியில் வரும் 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி' என்ற தொடருக்குச் சரியான பொருள் இன்னும் அறிய இயலவில்லை. காந்தளூர்ச் சாலை அடையாளம் தெரியவில்லை. அக்காலத்தில் சாலை என்பதற்குப் பெருவழி என்று பொருள் கொள்ளக் கூடுமோ எனக் கண்டறிய வேண்டும். அவ்வாறு கொள்ளக் கூடுமாயின், காந்தளூர் செல்லும் நெடுஞ் சாலைக்குக் கல் பாவினான் இராசராசன் எனப் பொருள் கொள்ளல் சாலப் பொருந்தும் என்பது ஆய்வாளர் கருத்து.

## 3.4. பெருவழி வணிகர்கள்

உப்பு மூட்டைகள் ஏற்றிக் கொண்டு பெரிய வண்டிகளை ஓட்டிச் செல்லும் வணிகர்கள் அங்காங்கு நிறுத்தி, கல் அடுப்பு களைக் கூட்டிச் சமையல் செய்து உணவருந்தி இளைப்பாறித் தம் பயணத்தைத் தொடர்வர். அடுப்புக் கூட்டிய கற்களில் வேடுவர் தம் பகழியைத் தொடர்ந்து தீட்டிக் கொண்டிருப்பதால் அக்கற்கள் தேய்ந்து போன காட்சியை அகம் 159 ஆம் பாடலில் காணமுடிகிறது. இது போன்ற வண்டியோட்டிகள் செல்லும் காட்சிகளை எல்லாக் கால இலக்கியங்களிலும் காணலாம்.

## 3.5. சாலையோர மண்டபங்கள்

இவ்வணிகர்களுக்கு உணவு சமைக்கவும் ஓய்வு கொள்ளவும் தேவையானவை தண்ணீரும் தங்குமிடங்களும் ஆகும். இத் தேவைகளை நிறைவேற்றுபவையே சாலையோர மண்டபங்கள் ஆகும்.

## 4.0. சூழல்

சாலையோரம் மரங்களடர்ந்த சோலை; ஓர் ஊருணி; ஒரு மண்டபம்; ஒரு சுமைதாங்கிக் கல் ஆகியவை ஒரு சாலையோர மண்டபத்தின் சூழல் கூறுகள் எனலாம். தென்னாற்காடு, வடஆற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலைச் சம்புவராயர், செங்கை அண்ணா ஆகிய மாவட்டங்களில் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் இம்மண்டபங்களை ஆய்வாளர் கண்டு உள்ளார். புதுச்சேரியிலும் இம்மண்டபங்கள் காணப்படுகின்றன.

## 5.0. காலம்

பெரும்பாலான மண்டபங்கள் 14, 15, 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் அமைந்தவை போலத் தோன்றுகின்றன. திருவெண்ணைநல்லூர், நெமிலி, நல்லாண்பிள்ளை பெற்றாள் ஆகிய ஊர்களில் உள்ள மண்டபங்களில் எழுத்துகள் காணப் படுகின்றன. நல்லாண்பிள்ளை பெற்றாள் மண்டபத்தின் எழுத்துகளில் சுண்ணாம்பு பூசியுள்ளதால் முழுவதும் படிக்க இயலவில்லை. நெமிலி அருகில் கோழிப்பண்ணை என்னுமூரில் உள்ள மண்டபத்தின் விதானத்தில் எழுத்துள்ளது. அதனைப் படிக்கவும் மிகுந்த முயற்சி தேவைப்படுகிறது.

திருவெண்ணைநல்லூரின் எல்லையில் உள்ள மண்டபத்தில் காணப்பெறும் வரிகள்.

> சுபமஷ்து சிமதே ராமாநுசாய நம;
> கலியுகம் பிறந்த ணாலாயிரத்து எண்ணுற்று
> அம்பது அஞ்சாம் வறஷம் தாருண வருஷம்
> சித்திரை மாதம் 12-ந் தேதி
> வைகுண்ட வாசற்ருக்கு
> திரு முட்டம் நல்லான் சக்கறவத்தினுடைய
> மண்டப தற்மம் நிரவெரினான்
> சுபமஷ்து ததாய்து.

இக்கல்வெட்டு 26 வரிகளில் உள்ளது. தமிழ் எழுத்துகளுக்கு மெய்ப்புள்ளி இல்லை. ர, ற வேறுபாடு இல்லை. ஸ்ரீமதே = சிமதே என்றுள்ளது. யகரம் றகரம் போலத் தோன்றுகிறது. அதே போன்று ஸ - ய போல உள்ளது. ஸ்ரீமுஷ்ணம் என்ற பெயர் நல்ல தமிழில் திருமுட்டம் என எழுதப்பட்டுள்ளது.

திருவெண்ணைநல்லூர்ப் பெருமாளுக்கு வைகுந்தவாசர் என்ற பெயருண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

கலியுகம் பிறந்து நாலாயிரத்து எண்ணூற்று அய்ம்பத்து அய்ந்தாம் ஆண்டு கி.பி. 1754 ஆகும். தாரண என்ற பெயரும் பொருந்தி வருகின்றது.

இராபர்ட் கிளைவ் கடலூரில் இளம் ஆட்சியராக இருந்த காலம் இதுவே. எனினும் கட்டுமானத் தொழில் நுட்பம் அய்ரோப்பியர் நுணுக்கமோ, மகமதியர் நுணுக்கமோ இன்றிப் பண்டைத் தமிழ் மரபிலேயே அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

## 6. சுமைதாங்கி

தமிழர் சமுதாய வாழ்க்கையில் சுமைதாங்கி குறிப்பிடத் தக்க பங்கு வகிக்கின்றது. நீண்ட தூரம் தலைச் சுமையாகக் கொண்டு வரும் பாரத்தை இன்னொருவர் துணையின்றித் தானாகவே சுமைதாங்கியில் இறக்கி வைக்கவும், பின்னர்த் தலையில் ஏற்றிக்கொள்ளவும் இயலும். தமிழிரிடையே ஒரு மனப் பாங்கு, தலைப் பாரத்தை இறக்கி வைக்க உதவுவர்; ஆனால் தலையில் பாரத்தைத் தூக்கி வைப்பதற்குத் தயக்கம் காட்டுவர். சுமைதாங்கியில் வைத்த சுமையைத் தானே தலையில் ஏற்றிக் கொள்ள இயலும் வகையில் சுமைதாங்கி இருந்தது.

6.1. இரண்டு பக்கக் குத்துக்கல்; அவற்றை இணைக்கும் பலகைக் கல். ஒரு சாதாரணச் சுமைதாங்கியின் அமைப்பு இதுவே. குத்துக் கல்லில், இச்சுமைதாங்கி வைத்தவர் யார் என்றும் வைத்த காலம் எது என்றும் எழுதப்பட்டிருக்கும். சுமைதாங்கி வைத்த காரணம் எழுதப்படுவதும் உண்டு. தனக்கு வைத்த பில்லி சூனியம் அகன்றதை முன்னிட்டுச் சுமைதாங்கி வைக்கப்பட்டதாக, திருச்செங்கோடு வையப்பமலைச் சாலையில் உள்ள சுமைதாங்கியில் காணப்படுகின்றது. கருவுற்ற மகளிர் இறந்து போனால், அவர்கள் நினைவாகச் சுமைதாங்கி அமைக்கும் பழக்கமும் இருந்து வருகிறது.

6.2 குத்துக்கல்லில் கூர்முறை செதுக்கியும், மேல் வரும் பலகைக் கல்லில் துளை அமைத்தும், கோர்த்து

வைக்கும் சுமை தாங்கிக்கல் நெடுங்காலம் நல்ல நிலையில் இருக்கும். மரக்காணம் - திண்டிவனம் சாலையில் 60 கிலோ மீட்டர் கல் அருகே 1950-ல் வைத்த சுமைதாங்கி சான்று மரியமங்கலம் ல. வீராசாமி கல் 1950 என எழுதப்பட்டுள்ளது. கருவுற்றிறந்த மகளிர் நினைவாக வைத்த சுமைதாங்கியின் மேல்கல்லை, சில காலம் கழித்து, சுமைதாங்கி வைத்தவர்கள் தள்ளி விடுவது சில இடங்களில் மரபாக உள்ளதெனக் கரிசல் கி. இராசநாராயணன் குறிப்பிடுவார். (கி. இராசநாராயணன், புதுச்சேரி; 1990-04-16)

6.3. ஆத்தூர், கள்ளக்குறிச்சி வட்டாரங்களில் நான்கு குத்துக்கல் நிறுத்தப்பட்டு, அதன் மீது அகலமான பலகைக்கல் தூக்கி வைத்து, சுமைதாங்கிக்கல் அமைக்கப்பட்டிருக்கும். ஏழெட்டுக் கூடைகள் இறக்கி வைக்கத் தோதாக இஃது அமைந்திருக்கும். மலைப்பாங்கான பகுதியாதலின் முள் கத்தைகள் கொண்டு வருவோர் இக்கல்லின் மேல் அவற்றை இறக்கி வைப்பதைக் காணலாம்.

6.4. ஆளுயரச் சுமைதாங்கியைப் போன்றே இடுப்பளவு உயரமுள்ள சுமை தாங்கியும் ஆங்காங்குக் காணலாம். மேற் பலகையில் ஆடுபுலி ஆட்டக்கட்டம் கொத்தப்பட்டிருப்பது உண்டு. பாரத்தை இறக்கி வைத்தபின், அவர்கள் உட்கார்ந்து இளைப் பாறுவதற்கு வசதியாக இவ்வேற்பாடு இடம் பெற்றிருக்கிறது. விழுப்புரம்-திருவண்ணாமலைச் சாலையில் பல இடங்களில் இவை இன்றும் காணப்படுகின்றன.

6.4.1 புதுவையில் பெரிய முதலியார் சாவடியில் ஒரு சுமைதாங்கி உள்ளது. மணற்கல்லால் கட்டப்பட்டுள்ளது. பின் சாய்மானம் உள்ள ஒரு இருக்கை மட்டுமே உள்ளது. தலைச் சுமை இறக்கி வைக்கும் ஏற்பாடு இல்லை. எனினும் அவ்விருக்கையிலே சுமைதாங்கி எனப் பொறிக்கப்பட்டுள்ளதால், இவ்வகை இருக்கைகளும் சுமைதாங்கி என்று அழைக்கப்பட்ட செய்தி அறிகின்றோம்.[6]

எழுத்துப் பொறிக்கப்பட்ட கருங்கல், வழவழப்பாக்கப்பட்டு அதில் எழுத்துப் புடைத்துக் கொண்டிருக்கும் வண்ணம் பிற பகுதிகள் குழிப்படுத்தப்பட்டுள்ளன. நான்குபுறமும் பூ வேலை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுமைதாங்கி
கந்தப்ப முதலியாரவர்கள்
குமாரத்தி முத்தம்மாள்
செய்வித்த தற்மம்

இதனருகில், ஒரு மாளிகை போன்ற சத்திரமும், குளமும் உள்ளன.

6.5. சுமைதாங்கிகளுக்குத் தற்போது வேறு உபயோகம் காணப்படுகிறது. அவை பேருந்துகளில் சுமை ஏற்றப் பயன் படுகின்றன.

## 7.0. ஊருணி

சாலையோர மண்டபங்களின் முக்கியக் கூறு ஊருணி ஆகும். தண்ணீரின் தேவை பற்றி வள்ளுவப் பெருமான் அழகாகக் கூறியுள்ளார்.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

வழிப் போக்கர் குடிக்கவும், குளிக்கவும், சமைக்கவும் தண்ணீர் தேவைப்படுகிறது. வண்டி எருதுகளுக்கும் தண்ணீர் தேவை. சந்தைகளுக்கு ஓட்டிச் செல்லும் கால்நடைகளுக்கும் தண்ணீர் தேவை. பனிரண்டு மாதமும் தேவை.

7.1. தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவக்காற்று, தென் மேற்குப் பருவக்காற்று இரண்டும் மழை தரும் பருவங்கள். தென் மேற்குப் பருவமழை, மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரால் பாதிக்கப்பட்ட போதிலும், வடகிழக்குப் பருவம் ஓரளவு நம்பத் தகுந்ததாக இருக்கும். செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய மூன்று மாதங்கள் மழை மாதங்கள். இப்போது சேமிக்கப்படும் நீர் அடுத்து வரும் குளிர் காலத்திற்குப் பின் கோடைக்கும் ஈடு கொடுக்கும்.

7.2. ஊருணிகள், அளவில் பெரியதாக அமைந்திருக்கும். ஒரு மழை வந்தாலும், ஓடிவரும் நீரனைத்தும் தேடிவரும் வகையில் அமைந்திருக்கும். கீழ்ப்பகுதியில் வண்டல் படிந்து,

படிந்து, நீர் கசியாத் தளம் உருவாகிவிடும். கீழ் வழியில் அதிகம் ஊடுருவாமல் தேங்கும். நான்கு பக்கமும், கருங்கல் படிகளாகப் பரவப்பட்டிருக்கும். கருங்கல் நீர்க் கசியாத் தடையாகவும், மக்கள் வழுக்கி விழாமல், நிதானமாக இறங்கி ஏறும் படிகளாகவும் அமையும்.

7.3. ஒருசில இடங்களில் வேளாண்மை ஏரிகளும் அருகில் இருக்கும். வேளாண்மை ஏரிகளில் நீர் வற்றிப் போனாலும், ஊருணி நீர் நிறைந்தே இருக்கும்.

திருச்சி மாவட்டம், செயங்கொண்டத்தில் காணப்பெறும் ஆவேரி என்ற ஏரி பற்றிய கல்வெட்டு குறிப்பிடத்தக்கது. குடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்துமாறும். இறைத்தல் நீர்ப் பாய்ச்சல் செய்யக் கூடாதெனவும் ஒரு கல்வெட்டு கூறுகிறது.

''ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 12வது வைய்காசி மாத முதல் செயங் கொண்ட சோழப் பேராவி அகவாய் தாளையுடையார் திருவிக்கிர வெட்டின தன்மதானத்தில் யிறைத்தல், நீர் பாய்ச்சல் செய்ய நினைத்தார் உண்டாகில் நகரத் துரோகி நம்மில் ஒருத்தரல்லர்''.

குடிதண்ணீருக்கான ஏரிகளில் நீர் இறைத்தலும், பாய்ச்சலும் நகரத்துக்குச் செய்யும் துரோகம் என்ற கருத்து அறிந்து மகிழத்தக்கது. இத்தடை சாலையோர ஊருணிகளுக்கும் பொருந்தும். தண்ணீர் உள்வர அகவாய் மட்டுமே இருக்கும். வெளிச் செல்ல வழிவாய் அல்லது கழிங்கு இருக்காது. கழிங்கு தற்காலத்தில் கலிங்கு, கலிங்குளா என்று பிறழ வழங்கப்படுகிறது. ஊருணியின் பெரும் நீர் மட்டத்திற்கு மேல் தண்ணீர் உள்ளேயே வராது. அகவாய் வருமுன்னரே எதிர் நின்று வெளிப்பக்கமே ஓடிவிடும். ஊருணி என்ற வழக்கு இந்த வட்டாரத்தில் இல்லை; குளம் என்றே கூறுவர்.

7.5. சில இடங்களில் வெறும் மண்டபத்திற்குப் பதிலாகச் சத்திரம் கட்டப்பட்டிருக்கும். இவ்வகைச் சத்திரங்களின் அருகில் உள்ள ஊருணிகள், குளங்கள் போன்று மிகப் பெரிதாக இருந்துள்ளன. காஞ்சி — வந்தவாசி இடையே பெருங்குடி என்னும் ஊரில் உள்ள சத்திரத்தையும் பெருங்குளத்தையும் சான்றாகக்

கருதலாம். பெரிய முதலியார் சாவடிக் குளமும் ஓரளவு ஆழமானதென்பதைக் கண்டு அறியலாம்.

7.5. ஊருணித்துறையில் நிழல் தரு மரங்கள் பல வளர்ந்து சோலையாகப் பெருகியிருக்கும். கால்நடைகள் நிற்கவும், வண்டிகளை அவிழ்த்து விடவும் தோதாக இருக்கும். பாலைவனச் சோலைகளுக்கிணையாகச் சாலையோரச் சோலைகள் போல இவை திகழும்.

7.6. ஊருணிக் கரைகள் மட்டுமல்லாது, ஒவ்வொரு சிற்றூரைச் சுற்றிலும் ஏராளமான மரங்கள் வளர்க்கப்பட்டிருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புரட்சியாளர்கள், ஆட்சியாளர்களைத் தாக்கிவிட்டு இக்காடுகளில் மறைந்து விடுவதால், அவர்களைப் பிடிக்கும் தொல்லை கருதி இக்காடுகளை அழிக்குமாறு ஆங்கில அரசு உத்திரவிட்ட குறிப்புகள் கிடைக்கின்றன.

பண்டைக் காலத்தில் ஒரு நகரைச் சுற்றிலும் மிளைக் காடுகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் காட்டரண் எனக் குறிப்பிடுவர். அக்காடுகள் அரண்மட்டுமல்ல; நகரத்தின் உயிர் வளித் தேவையை ஈடுகட்டும் வகையில் அமைக்கப்பட்ட வன வளம். தற்காலச் சூழல் சமநிலைக் கொள்கைகளிலிருந்து இவ்வுண்மையைப் பெற இயலும்.

புதிய பெருநகரங்கள் அமைக்கும்போது பச்சை வளையம் என்ற மிளைக் காடுகள் வைக்க வேண்டுமென்பது தற்போதைய புதிய நகர நிர்மாண உத்தியாகும். தமிழரின் நகரமைப்புக் கலையிலும் இக்கூறு இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

## 8.1 மண்டபங்கள்

வழிப்போக்கர் தங்கி இளைப்பாறவும், உணவு கொள்ளவும் சற்று ஓய்வெடுக்கவும் ஆதாரமாக உள்ளவை மண்டபங்களே. இவை மூன்று பக்கம் அடைக்கப்பட்டும், முன்பக்கம் திறந்தும் உள்ளன. நடுவில் இரண்டு வரிசைத் தூண்களால் தாங்கப் படுவதால் மூன்று அங்கணமாகக் காட்சி அளிக்கின்றன. தரையிலிருந்து சுமார் 2½ அடி உயரம் உள்ள பீடிகைத் தளம் கொண்டுள்ளது. முன்பக்கம் ஓர் அங்கணம் அல்லது இரண்டு அங்கணம்

வெற்று மண்டபமாகத் தரையளவு தளத்தோடு காணப்படு கின்றது. உயர் பீடிகைத் தளத்தில் மக்களும் முன் மண்டபத்தில் கால் நடைகளும் ஓய்வெடுக்க இயலும்.

8.1.1 நெமிலி திருவக்கரைச் சாலையில் உள்ள மண்டபம் 8.10 மீட்டர் நீளம் 8.10 மீட்டர் அகலம் உள்ளது. (27 அடி 27 அடி நீள அகலம் கொண்டு சதுர வடிவில் உள்ளது) மூன்றில் ஒருபாகம் முன் மண்டபமாகவும், இரண்டு பங்கு உள் மண்டப மாகவும் திகழ்கின்றது.

8.1.2 திருவெண்ணெய் நல்லூரின் எல்லையில் உள்ள நல்லான் சக்கரவர்த்தி மண்டபம் 32' – 8'' அகலமும் 46 அடி நீளமும் கொண்டுள்ளது. இதில் 23' - 4'' உள் மண்டபமாகவும், 22' - 8'' முன்மண்டபமாகவும் உள்ளது. உள் மண்டபம், வெளி மண்டபம் அனைத்தும் இரண்டு வரிசை உள்தூண்கள் கொண்டுள்ளதால் மூன்று அங்கங்களாகப் பகிர்ந்து தெரிகின்றன. இதன் முன்மண்டபம் பெரிது. உள் மண்டபத்திற்குக் கிட்டத் தட்ட சமமாக முன்மண்டபம் உள்ளது. பிற மண்டபங்களில் உள் மண்டபத்தில் பாதி அளவே வெளி மண்டபம் இருக்கும்.

8.1.3 நல்லான் சக்கரவர்த்தி இறைப்பணிக்காகவும் சேர்த்துக் கட்டியதால் முன் மண்டபத்தைப் பெரிதாக அமைத் துள்ளார். போக்குவரத்து மிகுதியாக உள்ள சாலைகளில் இத்தகைய பெரிய மண்டபங்கள் காணப்படுகின்றன.

### 8.2.0 தூண்கள்

பொதுவாக உள் மண்டபத்தில் சுற்றுச் சுவரும் இரண்டு வரிசையில், வரிசைக்கு இரண்டாக நான்கு தூண்களும் இருக்கும். முன் மண்டபத்திற்கு ஒரு வரிசையில் அதாவது முன் வரிசையில் நான்கு தூண்கள் இருக்கும். சுமார் 40 செமீ × 40 செமீ அளவு தூண்கள்.

சில மண்டபங்களில் உள் மண்டபத்தின் நடுப்பகுதியின் விதானம் சற்றே உயர்வாக அமைக்கப்பட்டிருக்கின்றது. தூண்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரே கல்லால் ஆன தூண்கள். அழகாகச் செதுக்கப்பட்ட தூண்களின் நாற்புறமும் சிற்ப

வேலைகள் செய்யப்பட்டுள்ளன. உள் மண்டபக் கருங்கல் சுவரிலும் பல இடங்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

8.3.0 **சுவர்**

8.3.1 சுவர் கருங்கல்லால் ஆனது. எனினும் முழுவதும் கருங்கல் அல்ல. அக்கால வழக்கப்படி, சுவரின் இரண்டு பக்கமும் நன்கு செதுக்கிய கருங்கல்; இவற்றின் நடுவில், கனங்குறைந்த செங்கற்களைச் சுண்ணாம்புக் கலவையுடன் நிரப்பியுள்ளனர். 65 செமீ அளவு கனங்கொண்ட சுவரில் இடைநிரப்பல் மூன்றில் ஒரு பங்கு இருக்கலாம். மரக்காணம் மண்டபச் சுவர் 75 செமீ.

8.3.2 மேலே வரும் மூடுதல் உள்பக்கக் கருங்கல்லின் மீதும் மிதித்துக் கொண்டு இருப்பதால் பல இடங்களில் வெளிப் பக்கக்கல் மிதி இல்லாமல் விழுந்து இருப்பதைக் காணலாம்.

8.3.3 பல மண்டபங்களின் சுவர்களின் வெளிக் கருங்கற்கள் காலத்தால் விழுந்து விட்டன. எனினும் உள் வரிசைக் கருங்கல் மட்டுமே கூரையின் பாரத்தைத் தாங்குவதைச் செஞ்சி-வளத்தி வழியில் உள்ள மண்டபத்தில் காணலாம். கூனிமேட்டில் ஒரு பெருமாள் கோயில் இவ்வாறு உள்வரிசைக் கருங்கல் மீது நிற்கிறது. வெளிவரிசைக் கற்களும், இடைநிரப்பிய செங்-கற்காரையும் விழுந்து விட்டன.

இவ்வகைச் சுவர்களில் பெரும்பாலும் மிதி கற்கள் (பாண்டு) இருப்பதில்லை. இரண்டுபக்கக் கற்களையும் பிணைத்துக் கொண்டிருக்கும் பணியை இக்கற்கள் நிறைவேற்றுகின்றன. மண்டபங்கள் எதிலும் இவ்வகை காணப்படவில்லை. எனினும் இத்தொழில்நுட்பம் தமிழ்நாட்டு ஸ்தபதிகளுக்குத் தெரிந் திருந்தது என்பதை இந்த இரண்டு கோயில் சுவர்களிலிருந்தும் அறியலாம்.

8.3.4 விழுப்புரம் திருவண்ணாமலைச் சாலையில் ஆலூர் என்ற ஊர் உள்ளது. அதன் சிவன் கோயில் இடிபாட்டில் பாண்டுக் கற்கள் காணப்படுகின்றன. கங்கை கொண்ட சோழ புரத்தின் வடக்கு வாயில் கோபுரச் சுவரின் இடிபாடுகளிலும் இந்நுட்பத்தைக் காணலாம்.

8.3.5 பாண்டுக் கற்கள் வைக்கும் தொழில் நுட்பம் தெரிந்திருந்த போதிலும், வைக்காமைக்கான காரணம் பற்றி ஸ்தபதிகளிடம் விசாரிக்கப்பட்டது. இடைநிரப்பும் செங்கல் காரையால் பிணைக்கப்படுகிறது. காரையோடு வெல்லம், கடுக்காய் நீர் ஆகியவை சேர்கின்றன. இவை பசைப் பொருட்கள்.. கெட்டியாகப் பிடித்துக் கொள்கின்றன. தற்காலச் சிமெண்டை விட இவை சிறந்தவை. சிமெண்டுக் கட்டடங்களில் காரை எந்தவிதமான இழுப்பு விசையும் தாங்குவதில்லை. பசைப் பொருட்கள் கலப்பதால், பண்டைக் காரைப் பகுதிகள் மிகுந்த இழுவிசைத் தாங்கக் கூடியவையாக இருக்கின்றன. மயிலாடுதுறையில் மயூரநாதர் ஆலயத்தில் அபயாம்பிகை அம்மன் கோயிலின் கொடுங்கை முழுவதும் இக்கலவை கொண்டு ஒட்டப்பட்ட செங்கற்களாலானவை. கட்டுமானப் பணியில் கலவை இழுவிசையேற்பதற்கு இக்கொடுங்கை அரிய சான்றாக அமைந்துள்ளது.

8.3.6 கருங்கல் ஒன்றின் மீது இன்னொரு கல் படியும் போது மிகக் குறைந்த அளவே கலவை வைக்கப்படுகிறது. அதைக் கலவை என்பதை விடச் சுண்ணாம்புப் பசை என்று கூறலாம். சுவரைப் பார்க்கும்போது கல்லுக்குக் கல், கலவைக்கான இடைவெளி இல்லாமல் நெருக்கமாக இருப்பதை எல்லாப் பழைய கருங்கல் கட்டடங்களிலும் காணலாம்.

மண்டபச் சுவர்களோ அகலங் குறைந்தவை. அவற்றின் உள்வாய்ச் செங்கல் கட்டு வேலையும் குறைவாகவே இருக்கும். கோயில் கோபுரச் சுவர்கள் அகலம் மிகுந்தவை. அங்கும் இரு முனைகளில் மட்டுமே கருங்கல் இருக்கும். எனவே பண்டைய கருங்கல் சுவர்கள், இடையிலுள்ள செங்கல் சுவர்களுக்கு அமைக்கப்பட்ட போர்வை எனில் பொருந்தும்.

8.3.7 சாதாரணச் செங்கல், களிமண் குறைவாகவும், மணல் அதிகமாகவும் உள்ள மண்ணிலிருந்து செய்யப்பட்டுள்ளவை. இடையிடையே சுண்ணாம்புக் காரையிட்டுக் கட்டுமான வேலை செய்யப்பட்டிருக்கும். இவ்வகைச் செங்கற்கள் காலத்தின் சீற்றத்தைத் தாங்க வல்லவை அல்ல.

பானை வனையும் மண்ணில் களிமண் கூடுதலாகவும் மணல் குறைவாகவும் இருக்கும் கூரை ஓடுகள் இவ்வகை மண்ணால்

ஆனவை, கனங்குறைந்த செங்கற்களும் இதில் செய்யப் படுகின்றன. இவை ஓரளவு காலத்தின் சீற்றத்தைத் தாங்க வல்லவை, வடிவங்கள் ஒழுங்காகப் பழுதின்றி அழகாக இருக்கும்.

8.3.8 முன்னைப் பத்தியில் கூறிய மரபு வழிச் செங்கற் களால் ஆன கட்டடத்தின் புறப்பகுதியில், மிகு களிமண் செங்கற் போர்வை அமைக்கப்படுகிறது. மிகு களிமண் செங்கற்கள் ஒன்றோடொன்று, சுண்ணாம்புப் பசையால் ஒட்டப்படுகின்றன. எனவே அவை மிகவும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உள்ளேயுள்ள மரபுவழிச் செங்கல் கட்டடத்தைக் காப்பாற்று கின்றன. திருக்கோவிலூர் கிழக்கு வாயில் கோபுரத்தின் உட் புறத்தில் இவ்வாறு செங்கல் போர்வை உள்ளதைக் காணலாம். பெரும்பட்டாம்பாக்கம் சிவலோக நாதர் கோயிலின் சுற்றுச் சுவரிலும் இந்நுட்பம் காணப்படுகிறது. தரங்கம்பாடியிலும் இம்முறை காணப்படுகிறது.

8.3.9 சுற்றுச் சுவர் போன்ற கட்டுமானங்கள் மண் கலவை கொண்டு கட்டப்படுகின்றன. இரண்டு பக்கமும் அரைக்கல் வரிசையில் மண் கலவையுடன் செங்கல் அடுக்கப்பட்டு அவற்றின் இடையில் செங்கல் முட்டிகளும் மண்ணும் கலந்து நிரப்பப் பட்டிருக்கும். வெளித் தோற்றத்தில் நல்ல செங்கல் கட்டுமானம் போலத் தோன்றினும், நேர்த்தியான பணியன்று. இத்தகைய கட்டுமானங்கள் பல கோயில் மதில்களிலும், வீடுகளின் சுவர் களிலும் காணப்படுகின்றன. மேல்பட்டாம்பாக்கம் சிவலோக நாதர் கோபுரத்தை ஒட்டியுள்ள மதில், அரசமங்கலம் பிள்ளையார் கோயில் மதில், திருவக்கரையில் சுவர், வில்லியனூர், பள்ளிப்படைக் கோயிலின் சுற்றுச் சுவர் போன்ற பல இடங்களில் இந்நுட்பத்திற்குச் சான்றுகள் உள்ளன.

8.3.10 சாலையோர மண்டபங்கள் சில தூண்களால் தாங்கப்பட்டுத் தூண்களிடையில் முழுவதும் செங்கற் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. முண்டியாம்பாக்கம் வில்லியனூர் மண்டபங் கள் இவ்வாறுள்ளன.

## 8.4 கலை வண்ணம்

கருங்கல் கூட்டம் என்றாலே உளி எடுத்த கலைஞன் கைகள் வாளா இருப்பதில்லை. அற்புதமான உருவங்களைத் தூண்

முகப்பிலும் சுவர்களிலும் செதுக்கி விடுகின்றன. மண்டப நடுச் சுவரில் சிறிய மாடம் உள்ளது. சில மண்டபங்களில் இம்மாடத்தில் அனுமன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மண்டப மைய விதானத்திலும் கோலங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உற்சவ விக்ரங்கள் ஊர்வலம் வரும்போது, இவ்விடத்தில் வைத்து, மக்கள் வணங்கும் பழக்கம் இருந்துள்ளது. சுவர்களில் யானை, நீந்தும் மீன், பல்லி, ஆமை, பாம்பு தனியாகவும், பிணைந்த நிலையில் இணையாகவும் ஆங்காங்குச் செதுக்கப்படுகின்றன. அமர்ந்து ஓய்வு கொள்ளும் மக்களின் சலிப்பை நீக்கிச் சிந்தனை ஓட்டத்திற்கு இடம் தருபனவாக இவை அமைந்துள்ளன.

### 8.4.1. தசாவதாரம், புராண நாயகர்கள்

தசாவதாரச் சிற்பங்கள் தூண்களில் இடம் பிடித்துள்ளன. அவை வரிசைப்படுத்தப் பெற்று முறையாக இருப்பதில்லை. பத்து அவதாரங்களும் இருப்பதில்லை. ஒரு சில அவதாரங்கள் கற்பனைத் திறத்திற்கேற்ப அமைந்துள்ளன. இவைகளினூடே கோலங்கள், பிற அம்மன் சிற்பங்கள், புராணக் காட்சிகள் இராமாயணக் காட்சிகள், நடராசர், சிவன், பிரமன், இந்திரன், யாளி முதலானவை காணப்படுகின்றன. முழுதும் வைணவச் சிற்பங்கள் என்றோ சைவச் சிற்பங்கள் என்றோ தனித்து எதிலும் இல்லை. எல்லாம் கலந்தே உள்ளன. கண்ணனின் குழலூதும் வடிவம், கண்ணப்பன் கண்ணளித்தல் போன்ற பலவகைச் சிற்பங்களும் கலந்தேயுள்ளன. விழுப்புரம் - செஞ்சி வழியில் உள்ள மண்டபத்தில் முன் தூணின் முன்பக்கம் ஒரு யாளி அமர்ந்த நிலையில் அகல வாய் திறந்து சிரிக்கும் நிலையில் உள்ளது காணத்தக்கது.

### 8.4.2 காமக் கலை

மிதுனம் [எனப்படும் காமக் கலைச் சிற்பங்களும் ஏராளம். சில மண்டபங்களில் கடவுட் படிமங்களுக்குச் சமமாகவும் சில மண்டபங்களில் கூடுதலாகவும் இவை உள்ளன. இவை இல்லாத மண்டபங்கள் இல்லை. காமக் கலையின் பல்வகைப் பாணிகள், வேடிக்கை வடிவங்கள், ஆடையில்லா அணங்குகள் கோமாளிகள் எல்லாம் விரவி வருகின்றன.

மண்டபங்கள் மிகுதியும் பொழுது போக்கு இடங்களாக உள்ளமையாலும் களைத்து வருவோர் புத்துணர்வுடன் திரும்பிச் செல்வோராக வேண்டியிருத்தலினும், வீட்டைப் பிரிந்து நெடுநாள் பயணம் செய்யும் ஆடவர் மிகுதியானும் இவ்வகைச் சிற்பங்கள் முதலிடம் பெறுகின்றன. ஸ்தபதிகளிலும் குடும்பத்தை விட்டு நெடுநாட்கள் பிரிந்திருக்கும் ஆடவர் உண்டு. இவ்வகைச் சிற்பங்கள் அவர்களின் இயற்கை உணர்விற்கு வடிகாலாக அமைந்து விடுகின்றன. பெரும்பாலும் இலக்கணம் வரம்பு எதற்கும் உட்படாதவை இவை.

### 8.4.3 வழங்குவோர் உருவச் சிலைகள்

எல்லா மண்டபங்களிலும் வழங்குவோரின் உருவச் சிலைகள் வடிக்கப்படுகின்றன. கை கூப்பிய வடிவில் அவை காணப் படுகின்றன. வழங்கிய ஆடவர் தனியாகவும், மகளிரோடும் பல மண்டபங்களில் காணப்படுகின்றனர். அணிந்துள்ள ஆடை, அணிமணிகள், தலையலங்காரம், கிரீடம், உடைவாள், போன்றவை அக்காலத்து நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. திருமுட்டம் நல்லான் சக்கரவர்த்தியின் தோற்றம் அமர்ந்த நிலையிலும் நின்ற நிலையிலும் வடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் தலைத் தொப்பி உயரமாக உள்ளது காணத்தக்கது.

## 8.5 கூரை

8.5.1 கூரைக்குக் கருங்கல் சட்டங்கள் போடும் வழக்கம் அண்மைக் காலத்தில் இல்லை. இரும்பு வலிவூட்டிகளுடன் கூடிய சிமெண்டுக் கற்காரையின் பயன் பெருகிவிட்டதால் பழைய நுட்பம் அருகிவிட்டது. கூரை அளவுக்குக் கருங்கல்லைத் தூக்கி வைக்கும் நுட்பம் அறிந்த கல் தச்சர்களும் அருகிவிட்டனர்.

இந்நுட்பம் மிக எளிதானதுதான். ஒரு சில இடங்களில் தற்போதும் கோயில்களுக்குக் கருங்கல் பாவுவதுண்டு. கற்களைத் தூக்கும் முறையை ஒரு முறை காணின் எளிதில் செய்யலாம். பனந்துண்டங்கள், கயிறு, நெம்பு கோல்கள், போதிய ஆட்கள் போதும். எனினும் கிரேன் எனப்படும் பளுதூக்கிகள் எளிதில் கிடைப்பதால், தற்கால ஸ்தபதிகள் பழைய முறையில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. கருங்கற்களைச் செதுக்கும்

ஸ்தபதிகளின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. கடுமையாக உழைக்கும் போக்கும் தற்காலத் தொழிலாளிகளிடம் இல்லை.

8.5.2 எல்லா மண்டபங்களும் கருங்கல் உத்தரங்களாலும் கருங்கல் பலகைகளாலும் மூடப்பட்டுள்ளன. தூண்களை இணைக்க உத்தரங்கள், அவற்றின் மீது கருங்கல் பலகைகள், பலகைகளின் மீது செங்கல் கட்டடம் சுண்ணாம்புக் காரையில் கட்டப்பட்டுள்ளது. அவை சுண்ணாம்புக் காரையால் பூசப் பட்டுள்ளன. கனங்குறைந்த செங்கல் அய்ந்தாறு வரிசை நெருக்கமாகக் காரையுடன் அடுக்கப்பட்டிருப்பதால் ஒழுகல் இல்லாமல் காக்கின்றன.

## 9. அழிவு

9.1. பல மண்டபங்களில் கூரை கெட்டியாக உள்ளது. சில மண்டபங்களில் கூரை மீது புதர்போலச் செடி கொடிகள் வளர்ந்து உள்ளன. செங்கல்லும், சுண்ணாம்பும் மழையால் நனைந்து நொத, நொத வென்றாகிவிடுகின்றன. பறவைகளின் எச்சங்களாலும், காற்றாலும் தாவர விதைகள் விழுந்து அவை வேர் பிடித்து வளரத் தொடங்கி விடுகின்றன.

''அடம்பின் கொடியும் அடர்ந்தால் மிகும்'' என்பது போல, அவற்றை விலக்குவார் இன்மையால் தானே பெருகிக் கொள்கின்றன.

9.2 சுவரின் வழியாகவும் செடிகளின் வேர் ஊடுருவி உள்ளிருக்கும் செங்கல் பகுதிக்குச் சென்று விடுகின்றன. அவை பெருகப் பெருக வெளிவரிசைக் கருங்கல்லை வெளியே தள்ளி விடுகின்றன.

## 10. பயன்பாடு

இம்மண்டபங்கள் பல தற்போதும் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. கிராம மக்களின் திண்ணைப் பேச்சுக்கும், பகல் நேரத் தூக்கத்திற்கும், ஆடு புலி ஆடுவதற்கும், ஊர் நியாயம் பேசுவதற்கும் உகந்த இடமாக இருக்கின்றன. நகரப் பகுதியாக இருந்தால், சிறு கடைக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொள்ளு கிறார்கள். தனியார் சிலர் வைக்கோல் வைக்கவும், விறகு அடுக்கிக் கொள்ளவும் பயன்படுத்துகின்றனர்.

10.1 இம்மண்டபங்கள் பொதுச் சொத்தாக இருந்த போதிலும், அரசுத் துறையின் பொறுப்பில் இருப்பதாகத் தெரிய வில்லை. ஊராட்சியினர் வீடுகளுக்கு எண் போடும்போது இம்மண்டபங்களுக்கும் எண்ணிட்டுள்ளனர்.

## 11.0 பழுது பார்த்தல்

சில மண்டபங்கள் முழுதும் அழிந்துவிட்டன. கூரைக் கற்கள் உள்வரிசைக் கருங்கற்களால் தாங்கப்பட்டு நிற்கின்றன. வெளி வரிசைக் கற்கள் கொட்டிக் கிடக்கின்றன. ஒரு சில மண்டபங்கள், சிதையத் தொடங்கியுள்ளன. காடுபோல வளர்ந்துள்ள செடிகளே அழிவை விரைவுபடுத்துகின்றன. சிறிதளவு முயற்சி இருந்தாலே இவற்றைப் பேணி நல்ல நிலைக்கும் கொண்டுவந்து விடலாம்.

11.1 பழுது பார்க்கும் பணியைத் தற்காலப் பொறியாளர் களிடம் விடஇயலாது. அவர்களின் கட்டுமானக் கலை, இம்மண்டபங்களைப் பழுது பார்க்கப் பயன்படாது. பெரும் பெருங் கருங்கற்களை நெம்புகோல் உதவிகொண்டு தூக்கத் தெரிந்திருக்க வேண்டும். கூரைக் கற்களையும் எளிதில் ஏற்றத் தெரிந்திருக்க வேண்டும். கிரேன் என்னும் பளு தூக்கும் கருவியை, ஒரு மண்டபத்திற்காகவும், ஒரு சில கற்களுக்காகவும், தேடி அலைவதால் மிகுந்த செலவு பிடிக்கும். கல் மண்டபங்களைப் பழுது பார்க்கும் திறமை கொண்டவர்கள் ஸ்தபதிகள் என்னும் பெருந்தச்சர்கள் ஆவர்.

11.2 ஸ்தபதிகள் தொகை தமிழ்நாட்டில் ஓரளவு கணிச மாகவே உள்ளது. தொடக்கக் கல்வியோடு அனுபவத்தில் மிகுந்தவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். மிக நேர்த்தியான சிற்பங்கள் வடிக்கும் தொழிலாளிகள் பலர், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இன்றும் உள்ளனர். அனுபவக் கல்விக்கு ஈடு இணை இல்லை. பெருங்கற்களைக் கூரை உயரத்திற்கு எளிதில் தூக்க முடியும். கிரேன் போன்ற பளு தூக்கும் கருவிகள் இன்றிப் பனம்பத்தைகளின் உதவிகொண்டே எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் தூக்க இயலும். கல் மண்டபக் கட்டுமானத் திற்கு இந்த நுட்பம் தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

## 12. செய்ய வேண்டுவன

12.1 தமிழ் மக்களிடையே சமுதாயக் கூட்டுப் பொறுப்பு குறைந்து போய்விட்டது. தவறு செய்தவருக்குச் சமுதாயத்தில் தண்டனை உண்டு என்ற நிலைமை மாறிவிட்டது. குடியரசின் காரணமாக அரசாங்கத்தின் கட்டுப்பாடும் குறைந்துவிட்டது. பொதுவாகவே மீறல்கள் மிகுந்துவிட்டன. ஆக்கிரமிப்புகள் அதிகமாகிவிட்டன. நகரத்து மண்டபங்கள் சிறு வணிகர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கிடைப்ப தில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் மண்டபத்தின் பேணுதல் பணி யையும் கவனிப்பதில்லை. சமுதாயமே கூடிப் பேணும் நிலைமை கிராமங்களில் கூட இல்லை. கலைச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் மிகுந்த கோயில்களே அழிந்துகொண்டு வருகின்றன. இந்த நிலைமையில் இம்மண்டபங்களின் எதிர்காலம் ஒளிமய மானதாக இல்லை. பேணப்படாமல் அழிபடலாம்; அல்லது ஆக்கிரமிப்பால் அழிபடலாம். சிறுசிதைவுகள் இல்லாதவை நீண்ட நாட்கள் தாங்கும். முதல் சிதைவு தொடங்கியதும், பேணுவாரின்மையால் அழிவு விரைவில் வந்துவிடும். பெயர்ந்து விழுந்த கருங்கற்களை எடுத்துச் சென்று தனிமனிதர் பயன் படுத்துவதும் உண்டு.

12.2 அழிவுக்கு முன்னர் இம்மண்டபங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டித் தொகுத்தல் இன்றியமையாதது. எல்லாக் கலைச் சிறப்புகளையும் நுணுக்கமாக ஒளிப்படம் பிடித்துப் பதிவு செய்து வைத்தல், கட்டடக்கலை விவரங்களை வரைபடமாகத் தொகுத்து வைத்தல், ஒளிப்படமாக (வீடியோ) படம் பிடித்து வைத்தல் ஆகியவை மிகவும் இன்றியமையாதன. இத்தகைய ஆவணங்கள் பின்னர் ஆராய்வோருக்கு எளிதில் கிடைக்க வகை செய்ய வேண்டும். பல்கலைக் கழகங்கள் போன்ற ஆய்வு நிறுவனங்களில் பேணுவது பொருத்தமாக இருக்கும்.

12.3 ஊர்தோறும் பல நற்பணி மன்றங்கள் நாள்தோறும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. இம்மண்டபங்களை பேணுவதற்கென்றே ஒவ்வோர் ஊரிலும் ஒரு நற்பணி மன்றம் தோன்றுவது நலம் தரும். அம்மன்ற உறுப்பினர்களுக்குப் போதிய பயிற்சி அளித்துப் பேணுதல் பணியில் ஈடுபடுத்தலாம்,

முந்தைய தலைமுறையிலிருந்து நமக்கு வந்ததுபோல், இன்றைய தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்கு, இம் மண்டபங்களை நல்ல முறையில் மாற்றித்தருவது கடமையாகும். பதிவான தகவல்கள் எவ்வளவு இருந்தாலும் அவை அசலுக்கு ஈடாகா.

## முடிவுரை

1. மக்கள் உறவுமுறை கருதியும், தேர்த்திருவிழா, தீர்த்த யாத்திரை, வணிகம் போன்ற பல காரணங்களாலும் ஊர் விட்டு ஊர் செல்ல வேண்டியிருந்தது. கால் நடையாகவோ, மாட்டு வண்டி, குதிரை வண்டி போன்ற வாகனங்களோடோ பயணம் சென்றனர். பயணத்தின் இடையில் கடும் வெய்யிலில் ஓய்வெடுக்கவும், இரவில் சற்றே உறங்குவதற்கும் இடவசதி தேவைப் பட்டது. சாலையோர மண்டபங்கள் இக்குறையைப் போக்கின. சமுதாய நன்மை பயக்கும் இவ்வுதவியை ஆட்சித் தலைவர்களும் வள்ளல்களும் நிறைவேற்றி வைத்தனர்.

2. கருங்கல் மண்டபம், தண்ணீர் தேவையைத் தீர்க்கும் ஊருணி, சுமைதாங்கி ஆகியவை நெடுஞ்சாலைகளில் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. மண்டபம், சாவடி என்றும், குளம், ஊருணி என்றும் இவ்வட்டாரத்தில் வழங்கப்படுகின்றன.

3. பண்டு நெடுஞ்சாலைகள் பெருவழி என்று அழைக்கப் பட்டன. இராசகேசரிப் பெருவழி என்பது கண்டராதித்த சோழரால், அக்காலச் சேரநாடு செல்ல கோவை அருகே கணவாயில் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டிருந்தது. மகதேசன் பெருவழி சேலம் மாவட்டத்து ஆறகழூரிலிருந்து காஞ்சிபுரம் வரை அமைக்கப்பட்டிடுந்தது. அதியமான் பெருவழி அதமன் கோட்டையிலிருந்து நாவற்றாவளம் வரை அமைக்கப் பட்டிருந்தது. இத்துணை நாள் நாவற்றாவளம் எதுவென அறிய இயலாமலிருந்தது. தற்போதைய கள ஆய்வில் இவ்வூர் அடையாளம் காணப்பட்டுள்ளது.

4. வந்தவாசிக்கும், செய்யாற்றிற்கும் இடையில் நாவல் பாக்கம் என்ற ஊர் உள்ளது. வேத வித்தகர் பலர் தற்போதும் வாழ்கின்றனர். பெரிய பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது. அதமன் கோட்டையிலிருந்து 30 காத தூரத்தில் அதாவது சுமார்

120 மைல் தூரத்தில் இருக்க வேண்டுவது ஓர் அடையாளம். தூரம் பொருந்தி வருகின்றது. தாவளம் எனில் தங்குமிடம். காஞ்சி செல்லும்முன் இது ஒரு தங்குமிடமாக இருந்திருக்க எல்லா வாய்ப்பும் உண்டு. இந்த நாவல்பாக்கமே அக்கால நாவற்றாவளமாக இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

5. சுமைதாங்கி, தலைச் சுமையைப் பிறர் உதவியின்றித் தாமே இறக்கிவைக்கத் தோதான கருங்கல் கட்டுமானம். இரண்டு கற்களை நிறுத்தி, மேலே படுக்கைக் கல்போட்டு இதனை அமைக்கின்றார்கள். நான்கு கால்களோடும் அகலமான பலகைக் கல்லோடும் அமைந்த சுமைதாங்கிகளும் உண்டு. சுமைதாங்கி அருகில், அமரும் வகையில், அரை அளவு கட்டுமானமும் சில இடங்களில் இணைந்திருக்கும். பெரிய முதலியார் சாவடியில் வெறும் இருக்கை மட்டுமே சுமைதாங்கி என்று அழைக்கப்படுகிறது.

6. ஆண்டின் எல்லாப் பருவத்திற்கும் தேவையான நீரைக் கொள்ளும் அளவில் ஊருணிகள் அமைக்கப்பட்டன. அவ்வப் போது பெய்கின்ற மழையில் நிரம்பி ஆண்டு முழுவதும் பயன் தருகின்றன. சுற்றிலும் அமைந்த கட்டுக்கல் படிகளும், அடியில் படிகளும், அடியில் படியும் வண்டலும், கசிவின் மூலமான இழப்பைக் குறைத்தன. நீர் தேங்கும் காலத்தை நீடிக்கின்றன.

7. ஊருணிக்கரையில் சோலையாக வளர்ந்த காடுகள், வழிப்போக்கருக்கு வெய்யில் காலங்களில் இனிய உயிர் வளியை நல்கி, ஓய்வின் சுகத்தைக் கூட்டுகின்றன. பண்டைய மிளைக் காடுகள், காட்டரணானது மட்டுமின்றி நகரத்து மக்களின் உயிர்வளித் தேவைக்கான ஊற்றாக அமைந்திருந்தன என்பதை இக்காலச் சூழல் சமநிலைக் கொள்கைகளிலிருந்தும், பச்சை வளையம் (Green Belt) அமைக்கும் முயற்சியிலிருந்தும் உய்த்துணர் முறையில் அறிகின்றோம்.

8. கல்மண்டபங்கள், காலத்தை வெல்லும் வகையில் அமைக்கப்பட்டுக் கடந்த 300, 400 ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கின்றன. மண்டபங்கள் மக்கள் தங்குவதற்கும், கால்நடைகள் தங்குவதற்கும் ஏற்ற வகையில் பீடிகைப் பகுதியும், தரைப் பகுதியும் ஒரே கூரையில் அமைக்கப்பட்டுள்ளன.

8.1 சுவர்களின் வெளிப்பகுதிகள் கருங்கற்களால் போர்த்தப் பட்டு இடையில் செங்கல் காரையுடன் இட்டு நிரப்பட்டுள்ளன. இரண்டு வெளிக் கற்களையும் பிடித்து இணைக்கும் பாண்டுக் கற்கள் (Bond Stones) பெரும்பாலான மண்டபங்களில் காணப்பட வில்லை. ஆலூர் கோயில் சுவர் கங்கை கொண்ட சோழபுரக் கோயில் ஆகியவற்றில் பாண்டுக்கல் வைக்கும் தொழில் நுட்பம் காணப்பட்ட போதிலும், மண்டபங்களில் காணப்படாதது ஒரு குறையேயாகும்.

8.2 கருங்கல் தூண்களால் தாங்கப்படும் மண்டபங்களும் தூண்களின் இடையில் செங்கற்களால் ஆன சுவர் கொண்ட மண்டபங்களும் காணப்படுகின்றன.

8.3 வெளிப்புறம் அரைச் செங்கல் பாட்டு வரிசை வெளிப் பகுதிகளும், இடையில் களிமண், செங்கல் முட்டிகள் கலந்து நிரப்பப்பட்டும் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்ததையும் சுற்றுச் சுவர் அமைப்புகளின் மூலம் காணமுடிகிறது. கருங்கல் சுவரின் நுட்பம் இங்கே கையாளப்படுகிறது.

9. மண்டபங்களின் கூரைகள் கருங்கல்லால் வேயப்பட்டு, மேலே காரையிடையிட்ட செங்கல் வரிசையாக அமைக்கப்பட்டும், இறுதியில் காரைப் பூச்சோடும் காணப்படுகின்றன.

10. மண்டபங்கள் பல அழிந்து விட்டன. சில அழியத் தொடங்கியுள்ளன. கூரையின் செங்கல் மழையில் நொத நொதத்துப் போவதால், புல், பூண்டு முளைத்து விடுகின்றன. பறவைகளின் எச்சங்களில் பரவும் விதைகள் மூலம் மரங்களே முளைத்து விடுகின்றன. பாரைக்கு நெக்கு விடாக் கட்டடம் இளம் வேருக்கு விரிசல் விடுகின்றது.

11. இடிந்து விழுந்த மண்டபங்களை, மீண்டும் நிர்மாணிக் கும் தொழில் நுட்பம், ஸ்தபதிகளுக்குத் தெரியும். விழுந்துபட்ட பெருங்கற்களை மீண்டும் சுவரிலும், கூரையிலும் தூக்கி நிறுத்த அவர்களால் இயலும்.

12.1 சாலையோர மண்டபங்கள், ஏதேனும் அரசுத்துறை ஒன்றின் பொறுப்பில் விடப்பட வேண்டும்.

12.2 உரிய முறையில் அவற்றை ஆவணங்கள், ஒளிப்படங் கள், வீடியோ படங்கள் மூலம் பதிவு செய்ய வேண்டும். அவை

பல்கலைக் கழகங்கள் போன்ற ஆய்வுத்துறைகளின் பொறுப்பில் பாதுகாக்கப்படுவது, பின்வரும் ஆராய்ச்சிகளுக்குப் பயன்படும்.

12.3 சாலையோர மண்டபங்களைப் பேணிக் காத்திட ஊர் தோறும் நற்பணி மன்றங்கள் தோன்ற வேண்டும். மக்களின் ஒத்துழைப்பின்றி, இம்மண்டபங்களைப் பேணிக் காக்க இயலாது. இன்றைய தலைமுறைவரை நின்று வந்துள்ள மண்டபங்களை, அடுத்து வரும் தலைமுறையினரும் பயன்பெறும் வகையில் பேணிக் காத்திட உரிய ஏற்பாடுகள் செய்தல், இன்றைய தலைமுறையின் இன்றியமையாப் பணியாகும்.

**கள ஆய்வில் பெறப்பட்ட புதிய செய்திகள்**

1. அதியமான் பெருவழியின் இறுதி ஊர் நாவற்றாவளம் செய்யாறு வந்தவாசிக்கிடையேயுள்ள நாவல்பாக்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

2. மிளைக்காடுகளின் பயன் பாதுகாப்பு மட்டுமல்ல, நகரத்திற்குத் தேவையான உயிர்வளி தரும் பசுமை வளையம் என்பது ஊகித்தறியப்பட்டுள்ளது.

3. கருங்கல் சுவரிடையே, செங்கல் சுண்ணாம்புக் காரையிடையே இடைநிரப்பு என்பது அறியப்பட்டிருந்தது. இணைப்புக் கல் (பாண்டுக் கல்) வைக்கும் பழக்கம் பண்டைய இடிபாடுகளிலிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

4. வெளியே மிகுகளிமண் செங்கற் சுவர் போர்வையும், உள்ளே சாதாரணச் செங்கல் கட்டுமானமும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. போர்வைச் செங்கல் பசையால் ஒட்டப்பட்டுள்ளது. உள் செங்கல், காரையோடு கலந்த மரபு வழியில் கட்டப்பட்டுள்ளது.

5. சுற்றுச் சுவர் போன்ற எளிய கட்டுமானங்களுக்கு வெளியில் செங்கல் பாட்டு வரிப் போர்வைக் கட்டுமானம் உள்ளது. உள்ளே உடைந்த செங்கல் துண்டுகள் (முட்டிகள்) மண்ணோடு கலந்து நிரப்பட்டுள்ளன. இவ்வகைக் கட்டுமானம், காரையிலும் கட்டப்பட்டுள்ளது.

6. வெறும் இருக்கைகளே சுமைதாங்கி என்று அழைக்கப் பட்டுள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## பரிந்துரைகள்

### 1. கணக்கெடுப்பு

தமிழ் நாடு முழுவதும் உள்ள சாலையோர மண்டபங்களைக் கணக்கெடுக்க வேண்டும். அவற்றைப் பற்றிய தகவல்களை வரைபடங்களாகவும், ஒளிப்படங்களாகவும் பதிவு செய்து பேணுதல் வேண்டும்.

### 2. அரசுத்துறை பொறுப்பேற்றல்

இம்மண்டபங்கள் அரசின் ஏதேனும் ஒரு துறையின் கீழ் வருமாறு செய்ய வேண்டும். பழுதுபட்டவைகளைச் செப்பம் செய்யவும், பயன் படுத்தவும் வழி வகுக்க வேண்டும். செப்பம் செய்ய முடியாத அளவுக்குப் பழுதுபட்டுப் போனவைகளையும், உறுதித் தன்மையை இழந்து விட்டதால் அருகில் செல்வோர் மேல் விழுந்து உயிர்ச் சேதம் ஏற்படுத்தும் நிலையில் உள்ள வற்றையும் இடித்து விடும் பொறுப்பு அவசரத் தன்மையுடையது.

### 3. நற்பணி மன்றம்

சீராக உள்ள மண்டபங்கள், பழுதுறா வண்ணம் அவ்வப் போது பாதுகாப்பதற்காகவும், மண்டபம் தவறான வழியில் பயன்படா வண்ணம் பாதுகாக்கவும், சிறுசிறு பழுதுகள் தோன்றும் போது செப்பம் செய்யவும் இளைஞர்கள் முன் வரவேண்டும். அதற்கென நற்பணி மன்றங்கள் தோன்ற வேண்டும்.

## அடிக்குறிப்புகள்

1. *சண்முகப் பிரகதம்; கொடுமுடி; இராசகேசரிப் பெரு வழி;* **தேனோலை** 22/1976 பக்கம் 10 & 11.
2. *சண்முகப் பிரகதம்; கொடுமுடி; காதம்;* **குறும்பொறைக் கோமான்** பக்கம் 87.

| | | |
|---|---|---|
| ஆறு விரல் | — | ஒரு சாண் ($8\frac{1}{4}$ அங்குலம்) |
| இரண்டு சாண் | — | ஒரு முழம் ($16\frac{1}{2}$ அங்குலம்) |
| இரண்டு முழம் | — | ஒரு கோல் (2 அடி 9 அங்குலம்) |
| நான்கு கோல் | — | ஒரு தண்டம் (11 அடி) |
| 500 தண்டம் | — | ஒரு கூப்பிடு தூரம் (1 மைல் 220 அடி) |

4 கூப்பிடு தூரம் — ஒரு காதம் (4 மைல் 880 அடி)
4 காதம் — ஒரு யோசனை (16 மைல் 5பர்லாங் 220 அடி)

3. சண்முகன், கொடுமுடி ச., பண்டைய கருங்கல் கட்டுமானம்; புதுவைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் 54-ஆம் அறிவரங்கம் (1989—02—08).
4. குரோ, பிரான்ஸ்வா & நாகசாமி, இரா., உத்தரமேரூர்; பக்கம் 92.
5. புறநானூறு.
6. முதலில் தகவலளித்தவர் முனைவர் அ. அறிவுநம்பி.
7. திருக்குறள் எண் 12.

ஏறத்தாழ பத்தாண்டுகள் பாடம் பயிற்றிய பட்டறிவுடன் ஆய்வுலகிற்கு வந்துள்ள இவர் நாட்டுப் புறவியல் சிந்தனையாளர். கதைப்பாடல்கள் காட்டும் தமிழர் சமுதாயத்தை மீட்டுருவாக்கம் செய்ய முனைந்துள்ள இந்த ஆய்வாளர் 'திறவு' நூலில் கட்டுரை வழங்கிச் சிறப்புகள் சேர்த்தவர். பாரதக் கதையின் ஒரு பகுதியான அரக்குமாளிகை பற்றிய கதைப்பாடலை ஆய்வுப் போக்கில் அணுகியுள்ளார்.

நெறியாளர்
அ. அறிவுநம்பி

# அரக்குமாளிகை கதைப்பாடல் கூறுகள்

**வே. சீதாலட்சுமி**

ஒவ்வொரு மொழியிலும் அச்சு வடிவு தோன்றுவதற்கு முன்பு ஒலி வடிவில் பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கின. அவற்றில் சில கதைகள் பாடல்களாகப் பாடப்பட்டன. இவ்வாறு தான் கிரேக்க காவியங்கள் தோன்றின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கதை அழகு பெறவேண்டும் என்றால் அழகினைச் சிறப்பாகவுடைய பாடல்களில் கதையை அமைப்பது அவசியமாகிறது. செய்யுட்கள் உணர்ச்சியைப் பெருக்கவல்லன. செய்யுள் ஓசைக்குத் தனி இனிமை உண்டு. அவற்றால் விளையும் பயனும் பெரியதாகும். இச்சிறப்புக் கருதி, கவிஞன் தன் கவிதை எழுதுவதற்குத் திரையாகக் கதையை அமைக்கின்றான் எனலாம்,

இத்தகைய சிறப்பை உணர்ந்தே கதையை உணர்த்தப் பாடல் களைக் கருவியாகக் கொள்கின்றனர்.

கதைப்பாடல் பற்றி அறிஞர்தம் கருத்து, கதைப் பாடலின் வகை ஆகியவற்றைக் கூறி அவற்றுள் ஒன்றான அரக்குமாளிகை கதைப்பாடல் பற்றிய சிறப்பான கூறுகளைக் காட்ட முனைவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கதைப்பாடல் - விளக்கம்**

கதைப்பாடல் என்பது ஒரு கதையை பாடல் வடிவில் சொல்வதாகும். ஐம்பெரு-ஐம்சிறு காப்பியங்களும் பண்டைய இலக்கியத் தொகுப்புகளில் உள்ள சில தனிப் பாடல்களும் ஏதேனும் ஒரு கதையைப் பாடல் வரியில் எடுத்துச் சொல்கின்றன. ஆனால் அவற்றைக் கதைப்பாடல் என்று சொல்வது இல்லை. ஏன் சொல்வதில்லை என்ற வினா எழுகின்றது. ஒரு கதையைப் பாடல் வடிவத்தில் எடுத்துச் சொல்வதே கதைப் பாடலாகும். நமது புராணங்களும் புராணக் கிளைக் கதைகளும் காப்பியங் களும் பாடல் வடிவத்தில் சொல்லப்படும் கதைகளாகும். ஆனால் இவற்றைக் கதைப்பாடல் என்று சொல்ல முடியாது. இந்த வேறுபாட்டை வரையறுப்பது முக்கியமாகப் பாடுபொருளும் பாடுகளமும் ஆகும்.

**கதைப்பாடல் பற்றி அறிஞர்தம் கருத்து**

கதைப் பாடல் என்பது பற்றி ''நாட்டுப்புறக் கலைவகைப் பட்டதும் ஒரு கதைப்பாடல் வடிவில் எடுத்துச் சொல்வதும் கதைப்பாடல் ஆகும்''[1] என்று கேசவன் கூறுகிறார். கதையும் இசையும் கலந்து வருவது கதைப்பாடல். இதனைக் ''கதையுடன் இசையும் கலந்து வருவது கதைப் பாடல்''[2] என விளக்கம் தரு கிறார் ஏ. என். பெருமாள். இசை ஒழுங்குடன் பாடல்களால் இயற்றப்பட்டு நாட்டுப்புற மக்கள் எளிதாகச் சுவைத்து மகிழும் தன்மையுடன் கதைப் பாடல் விளங்குகிறது. கதைப்பாடல் பற்றி வரும் மற்றொரு விளக்கம் ''எல்லோருக்கும் தெரிந்த நாட்டுப் புறக் கதை ஒன்று பாடல் வடிவில் இசையுடன் பாடப்பட்டால் அதைக் கதைப்பாடல் என்கிறோம்''[3]

மேற்கருத்தை அடியொற்றி, ''நாட்டுப்புறவியலின் ஒரு பிரிவான கதைப்பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு கதையை உள்ளீ

டாகக் கொண்டன. இக்கதைகளே பாடல்களாகப் பாடப்பெறு வதால் கதைப்பாடல்கள் எனப்படுகின்றன.''[4] என ஓர் ஆய்வாளர் விளக்கம் தருகிறார். பெண்களுக்கும் கதைப் பாடலுக்கும் பெரிதும் தொடர்பு இருப்பதால், ''பெண்கள் விளையாட்டினின்றும் வளர்ச்சி பெற்ற நிலையே கதைப் பாட லாகும்''[5] என ஒரு கூற்றுக் குறிக்கிறது. ''கதையம்சம் கொண்ட நீண்ட பாடல்கள் மட்டும் கதைப்பாடல் எனக் கருதலாம்''[6] என்கிறார் ஆறு. இராமநாதன். இக்கருத்தை அரண்செய்வது போல தமிழகக் கதைப் பாடல் குறித்து, ''தமிழ்க் கதைப்பாடல் கள் நீண்டதாகவும் கதையை உள்ளடக்கியதாகவும் உள்ளன''[7] என்று மு. அருணாசலம் கூறுகிறார்.

ஆங்கிலத்தில் **Ballad** என்ற சொல்லுக்கு ஈடாக **'Song'**, **'tale'** **'ditty'** என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் இறுதியில்தான் **Ballad** என்ற இலத்தீன் சொல் நிலை பெற்றது என்றும் தெரிகின்றது. **'Ball'**, **'ballet'**, **'ballad'**, என்ற சொற்கள் தொடர்புடையன. இச்சொற்களுக்கு முறையே 'குழு நடனம்', 'கூட்டு நடன இசை', 'நடனப் பாட்டு' அல்லது 'கதைப் பாடல்' எனப் பொருள் தருகின்றது ஆங்கில - தமிழ் அகராதி.

**Ballad** என்ற சொல்லுக்கு எளிமையானது; மெருகிடப் படாதது; சிறிய பத்திகளானது; மக்களிடமிருந்து தோன்றியது; கதை வடிவானது; மேலும் இதே நடையில் எழுதப்படும் அனைத்துப் பாடல்களும் இவ்வகையில் அடங்கும் என ஆங்கில நூல் குறிப்பிடுகின்றது.

கதைப்பாடல் இலக்கணத்தை வரையறை செய்யும் ந. இராமச்சந்திரன் ''குறிப்பிட்டதொரு பண்பாட்டில், குறிப் பிட்ட சில சூழல்களில் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது குழுவினரோ சேர்ந்து நாட்டார் முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்தும் அல்லது நிகழ்த்திய ஒரு கதை தழுவிய பாடல் கதைப் பாடலாகும். அது வெவ்வேறு பெயரிட்டு வழங்கப்படலாம்''[8] என்பார். மேற்கூறப்பட்ட பல்வேறு அறிஞர்களின் கருத்துகளி லிருந்து, கதைப்பாடல் என்பது இசை ஒழுங்குடன் பாமரர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மையுடன் வாய்மொழியாக ஒரு பாடகனோ அல்லது குழுவினரோ சேர்ந்து பாடும் அல்லது

பாடிய ஒரு கதை தழுவிய பாடல் கதைப்பாடல் என்ற கருத்தைப் பெற முடிகிறது. இதிகாசம், புராணம் போன்றவை இவ்வாறில்லாமல் ஏட்டில் எழுதப் பெற்று மக்களிடம் உலா வருவன ஆகும்.

**கதைப்பாடலின் வகைகள்**

நாட்டுப்புறவியல் அறிஞர் பெலிக்ஸ் ஜே. ஒய்னாய் (Felix J. Oinas) அவர்கள் கதைப்பாடல்களை நான்கு பிரிவுகளாக வகைப் படுத்துகிறார். அவை,

1. மந்திரக் கதைப் பாடல்கள் (Shamantics)
2. வீரர் கதைப்பாடல்கள் (Heroic)
3. காதலர் கதைப்பாடல்கள் (Romantic)
4. வரலாற்றுக் கதைப்பாடல்கள் (Historical)

நா. வானமாமலை அவர்கள் கதைப்பாடல்களை,

1. தெய்வீகக் கதைப்பாடல் (Epic)
2. புராணக் கதைப்பாடல் (myth)
3. சமூகக் கதைப்பாடல் (Social)
4. வரலாற்றுக் கதைப்பாடல் (Historical)

என நான்கு பிரிவாக வகுக்கின்றார். தமிழ்ப் பேரறிஞர் மு. அருணாசலம் அவர்கள் கதைப்பாடலைப் பின்வருமாறு பகுத்துள்ளார். அவை,

1. காதல் கதைப்பாடல்கள் (Romantic ballads)
2. வரலாற்றுக் கதைப்பாடல்கள் (Historical ballads)
3. புராணக் கதைப்பாடல்கள் (Puranic ballads)
4. சமூகக் கதைப்பாடல்கள் (Social ballads)

என்பதாகும். கதைப்பாடலை வகுக்கும் பிறிதொருமுறை வருமாறு:

1. புராணக் கதைப்பாடல்
2. புராணச் சார்புக் கதைப்பாடல்
3. தெய்வம் புனைக் கதைப்பாடல்
4. புத்தார்வக் கற்பனைக் கதைப்பாடல்
5. சமூகக் கதைப்பாடல்
6. வரலாற்றுக் கதைப்பாடல்
7. இலக்கியப் புனைக் கதைப்பாடல்

ஏ. என். பெருமாள் கதைப்பாடலை,

1. புராணக் கதைகள்
2. புராணப் புனைவுக் கதைகள்
3. நாட்டுப்புறத் தெய்வக் கதைகள்
4. வீரவுணர்வுக் கதைகள்
5. வரலாற்றுக் கதைகள்
6. சமூக உணர்வுக் கதைகள்
7. அறவுணர்வுக் கதைகள்

என ஏழு வகையாகப் பகுக்கின்றார். நிர்மலாதேவி வகுக்கும் முறை வருமாறு:

1. புராண இதிகாசக் கதைப்பாடல்கள்
2. சமூகக் கதைப்பாடல்கள்
3. வரலாற்றுக் கதைப்பாடல்கள்
4. கிராமத் தேவதைகள் அல்லது தெய்வக் கதைப் பாடல்கள் எனப் பகுப்பது பொருத்தம் எனக் கூறுகிறார்.

சு. சக்திவேல் கதைப்பாடலை,

1. புராணக் கதைப்பாடல் (Mythical ballads)
2. வரலாற்றுக் கதைப்பாடல் (Historical ballads)
3. சமூகக் கதைப்பாடல் (Social ballads)

என்று மூன்று பிரிவுகளுக்குள் அடக்குகின்றார்.

கதைப்பாடலை வகைப்படுத்துவதில் பலரும் வேறுபடுகின்றனர். கதைப்பாடல்கள் அமைப்பு முறையிலும் பாடிச் சுவைக்கும் முறையிலும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபாடுகள் இல்லாமல் இருக்கின்றன. பாடும் சூழலும் ஒன்றாகவே இருக்கின்றன. கதைப்பாடல் சொல்கின்ற பொருள் பலவகையாக அமைந்துள்ளன. அதனால் பொருள் அடிப்படையில் கதைப் பாடலை வகைப்படுத்துவதே முறையானதாகக் கொள்ளலாம். புராணம், வரலாறு, சமூகம் என்று வகைப்படுத்தும் பகுப்பு முறையே சரியானதாக இருக்கவேண்டுமென ஆய்வாளர் கருதுகிறார். இக்கதைப்பாடல் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற காரணம் பற்றி ஆராய வேண்டியுள்ளது.

**செல்வாக்குப் பெறக் காரணங்கள்**

கதைப்பாடல்கள் எளிமையாகவும் இசையுடன் பாடுவதற்கு ஏற்றவாறும் இருப்பது அதன் வெற்றிக்குக் காரணமாகும்.

கதைப் பாடலில் காணப்படும் சொற்களும் நடையும் மக்களின் வாழ்வில் இயல்பாக அமைந்தவையாக இருப்பதைக் காணலாம். மக்களால் எளிதாகப் பொருளுணர்ந்து இனிதாகச் சுவைத்து மகிழும் தரமாகக் கதைப்பாடல் அமைந்துள்ளமையே மக்கள் மனத்தில் அவை இடம்பெறக் காரணமாயிற்று. அன்றாட வாழ்வில் அவர்களுடன் உறவாடும் சொற்களைக் கொண்டு அவர்களுக்கு ஏற்றவாறு எளிய நடையில் கருத்துக்களைக் கூறுவதால் மக்களால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடிந்தது. கதைப்பாடலில் காணப்படும் வியப்புறு நிகழ்ச்சிகள், அதிர்ச்சி யுறும் செயல்கள், இரக்கத்தை ஊட்டும் அவலங்கள் முதலியன நாட்டுப்புற மக்களின் மனத்தில் ஆழமான பாதிப்பை எளிதாக ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றன. மக்களுடைய ஆர்வத்திற்கும் தரத்திற்கும் ஏற்றவாறு அவ்வக்காலச் சூழலுக்கு ஏற்பக் கதைப்பாடலை மாற்றியமைக்கக் கதைப்பாடலை உருவாக்குபவர்களால் முடிந்தது. மக்களின் மனம் அறிந்து அக் கதைகள் இயற்றப்பட்டன. உலக மக்கள் மனம் மகிழக் கதைப் பாடல் பயன்பட வேண்டும் என்பதே ஆசிரியர்களின் நோக்கமாக இருந்தது என்பதைப் பவளக்கொடி மாலையில் (துரோபதை துதி) காணப்படும் முடிவுப்பகுதியைக் கொண்டு அறிய முடி கின்றது. சான்றாக

''இப்புவியோ ரெல்லாரும் ஒப்பி மனமகிழ
அப்பால் நடந்த கதை அடியேன் உரைத்திடுவேன்''

என்ற வரிகளைக் கொள்ளலாம். மக்களின் நல்வாழ்வை முக்கிய நோக்கமாகக் கொண்டு, கதைப்பாடல்கள் பாமரமக்களுக்கு ஏற்ற நடையில் சுவையாக எழுதப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

**அரக்கு மாளிகை கதைப்பாடல்**

மூன்றாகப் பகுக்கப்பட்ட வகைகளுள் புராணக் கதைப் பாடல் ஒருவகை. அவ்வகையில் ஒன்று அரக்கு மாளிகை கதைப் பாடல். பாரதக் கதையின் ஒரு பகுதியான 'அரக்கு மாளிகை' என்ற கதைப் பாடல் புதுவையிலுள்ள இலாசுப்பேட்டை திரௌபதியம்மன் கோயிலில் மக்கள் மத்தியில். பாடப்பட்டு வருகின்றது. இக்கதைப்பாடல் பக்தி உணர்வுடன் கோயில் முன் படிக்கப்பட்டுச் செயற்கையாக ஒரு மாளிகை கட்டிக் கதையில்

வருவது போல் அம்மாளிகையினைத் தீ வைத்து எரிக்கின்றனர். பாரதக்கதை முழுவதும் கதைப்பாடலாக மக்கள் முன் படிக்கப் பட்டு வருகிறது. பாரதக் கதையில் ஒரு பகுதியான 'அரக்கு மாளிகை' கதைப்பகுதி ஒரு நாள் நிகழ்ச்சியாகப் படிக்கப் படுகிறது. மக்கள் மத்தியில் இக்கதைப் பகுதி செல்வாக்குப் பெறக் காரணம் மக்களுக்குப் பழகிய க்தை என்பதும் பாரதக் கதையில் உள்ள விருப்பமும் ஆகும். கோவிலுடன் தொடர்புடைய விழாவில் பொருத்தமாக இக்கதை அமைகின்றது.

**கதைச் சுருக்கம்**

தந்தையின் மறைவுக்குப் பின் தருமன் அரசனாகிறான். இதனைக் கண்ட துரியோதனன் கோபம் கொள்கிறான். பாண்டவர்களை அழித்துவிட வழி கூறுமாறு சகுனியிடம் கேட்கிறான். பாண்டவர்களை வாரணாவதம் செல்லுமாறு உன் தந்தையிடம் அனுமதி பெறு என்று கூறுகிறான். புரோசனாவை அழைத்து வாரணவதத்தில் அரக்கு மாளிகை கட்டுமாறு கூறு கிறான். அம்மாளிகையில் பாண்டவர்கள் உறங்கும்போது மாளிகைக்குத் தீ வைத்துவிட வேண்டும் என்று சகுனி திட்டம் தீட்டுகிறான். அதன்படி மாளிகை கட்டப்படுகிறது. மாளிகை பற்றிய செய்தியினை விதுரரிடம் கனக சிற்பி கூறிவிடுகிறான். விதுரர் பாண்டவர்களைக் காக்குமாறு வேண்டிக்கொள்கிறார். கனகசிற்பி வீமனிடம் உண்மையினைக் கூறிவிடுகிறான். தன் சகோதரர்கள் உறங்கும்போது, தன் தோள்மீது அவர்களைத் தூக்கி ஒவ்வொருவரையும்' மாளிகையைவிட்டு வெளியேற்று கின்றான். மாளிகையின் உள்ளே புரோசனா உறங்குகிறான். பாண்டவர்கள் வெளியேறியதை அறியாமல் அம்மாளிகைக்குத் தீயிடப்படுகிறது.

**கதைப்பாடலின் சிறப்புக் கூறுகள்**

அரக்குமாளிகை கதைப்பாடல் பாமர மக்களுக்காகப் படிக்கப் பட்ட போதும் இலக்கிய நயத்துடன் விளங்குகின்றது. இக் கதைப் பாடலில் இலக்கிய உத்திகள் நிறைந்துள்ளன. யாப்பு நயத்துடன் பாடல் வரிகள் காணப்படுகின்றன. பாடல் வரிகளில் எதுகையும் மோனையும் இணைந்து செல்வதைக் காண முடிகின்றது. கதைப்பாடல் எங்கு வழங்கப்படுகிறதோ அவ் வட்டாரச் சொற்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது

கதைப்பாடலில் காணப்படும் பொதுத் தன்மையாகும். இலக்கிய நயத்துடன் கதைப்பாடல் காணப்பட்டாலும் பாமரமக்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கு ஏற்றவாறு எளிய சொற்களும் நடையும் கையாளப்பட்டுள்ளன.

'ஓய் மருமகனே'
'பளே பளே'
'சபாஷ் சபாஷ்'
'சஞ்சலம்'

மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் பாமர மக்களின் எளிமைப் பாட்டை நினைவூட்ட வல்லன. பாமர மக்கள் அன்றாடம் தங்கள் நடைமுறையில் பயன்படுத்தும் சாதாரணமான சொற்கள் கதைப் பாடலில் விரவி வருகின்றன.

பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பாடல் வரிகளும் சொல்லாட்சி யும் கலந்து கதைப்பாடலுக்குச் சிறப்பைக் கொடுக்கின்றன. 'இவர்களுக்கு இந்தப் பாத்திர அமைப்பு' என்பது போலப் பாடல்கள் அமைந்துள்ளன. சான்றாகச் சிலவற்றைக் காணலாம். அவை வருமாறு:

புரோசனா என்பவனை நம்பக்கூடாது என்று அர்ச்சுனனும், நகுலனும், சகாதேவனும் கூறுகிறார்கள். அவர்களின் பேச்சைக் கேட்ட தருமர்,

'குற்றமே பார்த்தால் குணமது வருமா'

என்று கூறுகிறார். இக்கூற்று அமைதியும் அறமும் கலந்த தருமரின் பாத்திரத்திற்குச் சிறப்பினைக் கொடுக்கிறது.

துரியோதனன் தம்பி துச்சாதனனின் குணத்தை விளக்குவது போல் கதைப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. துச்சாதனன் எப்படிப்பட்டவன் என்பதைக் கீழ்வரும் வரிகள் உணர்த்து கின்றன.

உடம்பிலோர் கட்டி கண்டால்
ஊக்கமாய் அறுத்து விட்டுத்
திடம் பெறுவார்கள் என்ற
செய்தி போலவைவர் தம்மை
கொடும் பகையாக வாட்டி

குவலயம் புகழாவிட்டால்
இடம் பெறப் பிறந் தென்னோடே
என்னதான் பலன் சொல்லண்ணா

என வரும் வரிகள், துச்சாதனனைப் பளிச்சென்று உணர்த்துகின்றன. துரியோதனனுக்கு ஏற்ற தம்பி தான் என்பதை மேலே உள்ள வரிகள் காட்டுகின்றன.

துரியோதனன் என்பவன் தீமை செய்யக்கூடியவன் என்றும் சூழ்ச்சியும் தந்திரமும் நிறைந்தவன் என்றும் பாமர மக்கள் எண்ணுகிறார்கள். இத்தகைய குணம் நிறைந்தவன் துரியோதனன் என்பதனை உணர்த்துவது போல,

போரிட்டு ஐவர்தம்மை போக்கலாம் பெரியோர் முன்னே
நேரிட்டால் சங்கட்டம் நினைத்தது போலாகாது
சீரிட்ட தந்திரத்தால் செயம்பெற வேண்டுமிப்போ
வீறிட்டுப் பகைவரோட மிக்க யுத்திகள் சொல்வீரே

என வரும் பாடல் வரிகள் அமைந்துள்ளன.

## இலக்கிய உத்தி

பின்னர் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சியை முன்னதாகவே உணர்த்துவது இலக்கிய உத்தி முறையாகக் கருதப்படுகிறது. அந்த உத்தி முறை அரக்குமாளிகை கதைப்பாடலிலும் பின்பற்றப் பட்டுள்ளது. வாரணாவதற்குச் சென்று பாண்டு மகாராசாவிற்கு ஓமக்கிரியைகள் செய்ய வேண்டும் என்பது திருதராட்டிரனின் விருப்பம். தருமர் தன் தாய் குந்தியை வாரணாவதம் செல்வதற்கு அழைக்கின்றார். அச்செய்தியைக் கேட்ட குந்தி,

பிள்ளைகளே என்மனம் பிசகுதே வருந்துதே
உள்ளக் கருத்தை வள்ளல் உண்மையாய்த் தெரியாதே

என்று புலம்புகிறாள். பின்னர் நடக்கப்போகும் நிகழ்ச்சியை எண்ணி வருந்துவதுபோல இவ்வரிகள் உள்ளன. துன்பம் தரக்கூடிய நிகழ்ச்சி நடைபெறப் போகிறது என்பதை மேற்சுட்டிய வரிகள் உணர்த்துகின்றன. இத்தகு உத்திமுறை கதைப் பாடலுக்குச் சிறப்பினைக் கொடுக்கின்றது.

கதைப்பாடலில் பழமொழிகள், உவமைகள், நீதிக்கருத்துகள் போன்றவை விரவி வருகின்றன. எந்த ஒரு கருத்தையும் அடைமொழியாகவும், ஒன்றின் மேல் ஏற்றியும் கூறுவது பாமர மக்களின் நடப்பியல். பழமொழி மூலம் கருத்தினை உணர்த்துவது அன்றாட நிகழ்ச்சி ஆகும். அரக்கு மாளிகை கதைப்பாடலிலும் மேலே குறிப்பிட்ட உத்திமுறைகள் காணப்படுகின்றன. சில வருமாறு:

**பழமொழிகள்**

i) ''ஆனையை விழுங்கும் அம்மையாருக்குப்
பூனை சுண்டாங்கி யாகுமா?''

ii) ''பாம்பினுக்கென் செய்தாலும்
பல்லிலே விஷந்தானுண்டு''

iii) 'குற்றம் பார்த்தால் குணமது வருமா'

iv) 'திட்டமில்லா முடவன் கொம்புத்
தேனுக்குச் சிற்றவாரே'

v) 'பூனைதனை யெலிக் கூட்டம் நம்பலாமா
பூதமதை பெண்டாகப் பிடிக்கலாமா
ஆனையது சிங்கத்தைக் கூடலாமா'

என அடுக்காகவும் வரும் வரிகளைக் கவனிக்க வேண்டும்.

**உவமைகள்**

கருத்துகளைச் சுவையுடன் சொல்வதற்கு உவமைகளைக் கையாள்வர். உவமை நயத்துடன் பாடல் பாடுவதால் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் ஆர்வம் பிறக்கும். கதைப்பாடலின் பொருள். சிறந்து விளங்குமாறு உவமைகள் கையாளப்பட்டுள்ளன. உவமைகள் மூலம் கருத்தினை உணர்த்தும் உத்திமுறை, பாமர மக்கள் எளிதில் புரிந்து கொள்ள உதவும். பாடலின் சுவையும் கூடும்.

'திட்டமாய் மதனைப் போலச் சிறந்த'. 'புண்ணிலே பட்ட அம்பதைப்போல', 'சிங்கம்போல', 'ஒரு கட்டி கண்டால் உடனே அறுத்துச் சவுக்கியம் செய்து கொள்வதுபோல', 'கிணற்றில் வீழ்ந்த கல்லென அருந்துயராகி நெஞ்சம் அனல்படு மெழுகைப் போல', 'மாயனைப் போல', 'மின்னொளி போல பலபல

விதமாய்' போன்ற வரிகள் உவமை நயத்துடன் கதைப் பாடலில் இடம் பெறுகின்றன. கதைப்பாடலின் பொருள் நயம்பெற உவமைகள் பெரிதும் துணைபுரிகின்றன.

கதைப்பாடல் வெறுமனே விவரிப்பு நடையில் மட்டும் செல்லாமல் இடையிடையே உரையாடல்கள், வசனங்கள் விரவி வருவதைக் காண முடிகின்றது. பாடல் வரிகளைப் போலவே அவை எதுகை மோனையுடன் காணப்படுவதை உரையாடல்களில் காணமுடிகிறது. சுவையாகவும், அழகாகவும் இவை அமைகின்றன. வசனங்களின் இடையீடும் தேவையானதாகிறது.

**உரையாடல்கள்**

துரியன் தரு: மனது வாடிக் குறைவுடன் வந்தேன் எந்தன் தந்தையே

திருதராட்டிரன் தரு: தனது கொண்ட புவியை யாள்தனையா என்ன சஞ்சலம்

துரியன் தரு: பெற்ற தந்தை பிள்ளை தன்னைப் பேதமாகச் செய்வதோ

திருதராட்டிரன் தரு: கற்றுணர்ந்த மைந்தன் கெட்ட காரணங் களில்லையே

இவ்வாறு இரண்டு அல்லது பல மாந்தர்கள் பாடல் வடிவில் உரையாடுவதைப் பரக்கக் காணலாம். விருவிறுப்பூட்டும் வண்ணம் இவை அமைந்துள்ளன.

பாடல் வரிகளை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பாடல் வரிகள் முடிந்தவுடன் வசனம் வருகின்றது. வசனம், பாடல் வரிகளின் பொருளை அப்படியே உரை பெயர்த்தது போலக் காணப்பெறுகின்றது. இக்கருத்தை,

**சகுனி (வி-ம்)**

எட்டு லட்சுமிகளும் உந்தன் இடத்திலே குடியாய் வாழ்ப்
பட்டன மெங்கும் கீர்த்தி புரவியுன் பேரை யோதத்
திட்டமாய் மதனைப் போலச் சிறந்த என் மருமகனே
நட்டமா முனது யெண்ணம் நாட்டுவாய் விளங்கத்தானே

வசனம்

அஷ்ட லஷ்மிகளும் உன்னிடத்தில் குடியாக இருக்கவும், பட்டணங்களெங்கும் உன் பெயரையே புகழாகப் பேசவும் மன்மதனைப் போல அழகு மிகுந்த என் மருமகனே உனக்கு என்ன துயரமிருக்கின்றது தெரியப் படுத்துவாய்

பொதுவாகப் பாடல்களில் பொருள் நேரடியாக, இலகுவாகப் புரிவதில்லை. வசனத்தின் வழியே பாடல் கருத்தை உணர்த்துவது போல் இவ்வசனங்கள் அமைந்துள்ளதால் கேட்பாருக்கு இவை மிகுதியும் பயன் தருகின்றன.

கதைப்பாடல் மக்களின் பொழுது போக்கிற்குப் பயன் படுவதுடன் நீதியை உணர்த்துவதிலும் பங்காற்றுகிறது என்பர். இக்கூற்றை அரண்செய்வது போல,

'வஞ்சகம் செய்வோர் கெடுவார்'

'மாண்டவர் வருவதுண்டோ மானிலந்தன்னில்'

'ஆண்டவன் செயல் போலாகும் அல்லது தடுக்க உண்டோ'

போன்ற அறச்செய்திகள் கதைப்பாடலில் அமைந்துள்ளன. நீதிக் கருத்துகள் மக்களின் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் பயன் படவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு கதைப்பாடல் கள் பல படைக்கப் பட்டுள்ளன.

அரக்குமாளிகை கதைப்பாடல் மிக எளிய நடையில் எதுகை மோனையுடன் எழுதப்பட்டுள்ளது. கதைப்பாடலை மக்கள் புரிந்து கொள்வதற்காக வசனம் கலந்த கதைப்பகுதிகள் காணப்படுகின்றன. இதனைக் கதைப்பாடலின் இயல்பு எனக் கொள்ளலாம். புதுவை மாநில மக்கள் இக்கதைப் பாடலைப் பாடிக்கேட்டு மகிழ்ந்து வருகின்றனர்.

இக்கதைப்பாடல் ''**வாசகப்பா**'' என்று அழைக்கப்படுகிறது. கலி, விருத்தம், அகவல், சிந்து, புலம்பல் போன்ற யாப்பிலக்கண முறைகள் இதில் கலந்து வருகின்றன.

இவ்வாறு பல்வேறு உத்திகளும், வசனங்களும், உரையாடல் களும், பழமொழிகளும், உவமைகளும் கலந்து வருவதாலும் மக்களுக்கு நன்கு தெரிந்த பாரதக் கதை என்பதாலும் மக்கள்

இதனைப் பெரிதும் விரும்புகின்றனர். பாடுகின்ற உத்தியாலும் பாத்திரங்களுக்கேற்ற பாடல் வரிகளாலும் மக்கள் மத்தியில் இன்று வரை இப்பாடல் பாடப்பட்டு வருகின்றது.

**வாசகப்பா**

'அரக்கு மாளிகை' ''வாசகப்பா'' என்று இக்கதைப் பாடலுக்குத் தலைப்பு அமைந்துள்ளது. எல்லாக் கதைப் பாடலும் போல் விநாயகர் துதியில் மங்களம் என்று முடிகின்றது. வாசகப்பா என்று கொடுக்கப்பட்டிருப்பதால் வசனமும் யாப்பு நயமும் பெற்று வருவதன் சிறப்புக் கருதி அவ்வாறு கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

அம்மானை, கதை, மாலை என்ற பெயரினைப் போல அரக்கு மாளிகை வாசகப்பா என்று குறிப்பிடப்பட்டுள்ளது எனலாம். வசனமும் பாவும் கலந்து கலந்து வருவதால் வாசகப்பா என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும்.

வாசகம் என்பது உரைநடை - பா என்பது பாட்டு.
பாட்டும் வசனமுமாக வருவதே வாசகப்பா

என்ற தெ. பொ. மீ. கருத்து[9] . மேற்கருத்தை அரண் செய் கின்றது. பாடலை எளிதாகப் புரிந்துகொள்ள முடியாமல் வருந்திய பாமர மக்கள் பாட்டின் கருத்தை அறிந்துகொள்ள கதை படிப்போர் உரைநடையில் (வசனநடை) கதைப் பகுதியைக் கூறியிருக்க வேண்டும். அதனால் உரையும் பாடலும் கலந்த நடை தோன்றியிருக்க வேண்டும். வாசகப்பா இலங்கையில் பெரும் வழக்காக இருந்தது என்று தெ. பொ. மீ. கூறுகிறார்.

## அடிக்குறிப்பு

1. கேசவன். கோ. புராணச் சார்புக் கதைப்பாடல்களில் ஆண் பெண் உறவுநிலை, ப–1.
2. பெருமாள். ஏ.என். தமிழில் கதைப்பாடல்கள், ப–3.
3. பிச்சை. அ, நாட்டுப்புறவியல் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம்,

4. சத்தியபாமா. ந, கதைப்பாடல்களில் பழமொழிகள், ஆய்வுக்கோவை, தொகுதி. 3, 15–வது கருத்தரங்கு 1983.

5. சக்திவேல். சு, நாட்டுப்புறவியல் ஆய்வு, ப–60.

6. இராமநாதன். ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப–76.

7. Arunachalam. M, Deeps in to Tamil Literature - The Ballad Poetry, p. 35.

8. இராமச்சந்திரன். ந, நாட்டார் வழக்காற்றியல், தொகுதி-1, எண் 122 ப-83.

9. தெ. பொ. மீ, நீங்களும் சுவையுங்கள்,

இராச. திருமாவளவன், எம். ஏ. பி. எட்., புதுவைக் கல்வித் துறையில் தமிழாசிரியராகப் பணியாற்று கிறார். பகுதி நேர இளம் முனைவர் பட்டத்திற்குத் 'தமிழர் பண்பாட்டில் மெய்ப்பொருளியல்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார்.

நெறியாளர்

அ. அறிவுநம்பி

# அறிவுக் கோட்பாடு

இராச திருமாவளவன்

**முன்னுரை**

மெய்ப்பொருள் என்பது மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலம் முதல், தோன்றி வளர்ந்து வரும் ஒரு பழைமையான அறிவுத் துறையாகும்.

'தொடக்கத்தில் மெய்ப்பொருள், எழுதுதல், படித்தல், கணிதம் போன்ற அனைத்து உயர்கல்விப் பரப்பையும் சேர்த்துக் கொண்டிருந்தது. அதனால் அக்கால மதிப்பில் மெய்ப்பொருள் 'அறிவியலின் தாய்' எனலாம்.[1] என்று அமெரிக்கக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுவது கருதத்தக்கது.

மெய்ப் பொருளின் ஒரு பகுதி, அறிவுக் கோட்பாடு (Theory of Knowledge) ஆகும்.

பிலோசபி (Philosophy) என்று ஆங்கிலத்தில் வழங்கும் மெய்ப்பொருளைக் குறிக்கும் சொல் 'அறிவார்வம்' என்று பொருள்படுவது எனலாம்.[2]

இந்தியத் தத்துவத் தரிசனங்களில் ஒன்றாகக் கூறப்படும் 'சாங்கியம்' என்பதன் சொற்பொருள் 'முழுமையான அறிவு' என்பதேயாகும்.[3]

தமிழிலும் அறிவு தொடர்பான கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

தமிழரிடம் காணப்படும் அறிவுக் கோட்பாட்டிற்குரிய கூறு களைக் கண்டறியும் முயற்சியே இந்த ஆய்வுக் கட்டுரை.

இக் கட்டுரை, முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று பகுதிகளை உடையது.

முதல் பகுதி 'அறிவுக் கோட்பாடு' என்பதைப் பற்றிய அறிமுகப் பகுதியாகும்.

இரண்டாவது பகுதி தமிழிலக்கியத்தில் 'அறிவுக் கோட்பாடு' பெற்றுள்ள இடத்தை விளக்குவதாகும்.

மூன்றாவது பகுதி, வினா நிரல்வழி, இன்றைய தமிழர் அறிவுக்குத் தரும் பங்கினை ஆய்வு செய்வதாகும்.

இம் மூன்று இயல்களின் வழியாகக் கிடைத்த முடிவுகள் தொகுக்கப் பெற்று முடிவுரையாக இறுதியில் தரப்பட்டுள்ளன.

## பகுதி I

## 2. அறிவுக் கோட்பாடு - ஓர் அறிமுகம்

2. 1. உலகில் தோன்றிய உயிரினங்களில் அறிவால் உயர்ந் தவன் மனிதன். மனிதனின் அறிவுத் திறனே அனைத்து உயிரி னங்களையும், இயற்கையையும் அடக்கியாள உற்ற துணையாக அவனுக்குப் பயன்பட்டது. அத்தகைய அறிவைச் சரியாகவும், செறிவாகவும் பெற மனிதன் விரும்பினான்; அதற்கான வழி முறைகளைக் கண்டான். அறிவைப் பற்றிய அவனது ஆராய்ச் சியே 'அறிவுக் கோட்பாடாக' உருவாகியது.

மேலைநாட்டு மெய்ப்பொருளும், இந்திய மெய்ப்பொருளும் அறிவுக் கோட்பாட்டிற்கு முதன்மையான இடம் தந்துள்ளன

எனலாம். தமிழிலும், அறிவுக் கோட்பாட்டின் கூறுகள் காணப் படுகின்றன.

## 2.2. அறிதல்

மெய்ப் பொருள் அடிப்படையில் 'அறிதல்' நான்கு கூறுகளை உள்ளடக்கியது. அவை: 1. அறிவான் (Knower) 2. அறியப் படும் பொருள் (Object of Knowledge) 3. அறியும் வழிகள் (Means of Knowledge) 4. பொருள் பற்றிய அறிவு (Knowledge) என்பன. இவற்றை வடமொழியாளர் முறையே, பிரமாதா, பிரமேயம், பிரமாணம், பிரமிதி என்று குறிப்பிடுவர்.

இந் நான்கினுள் அறிவானையும், அறியப்படும் பொருளையும் நுண் பொருளியல் (Metaphysics) ஆராய்கின்றது. அதனால் அறிவுக் கோட்பாட்டில் ஏனைய இரண்டான அறியும் வழிகள், அறிவு ஆகியன பற்றியே அறிஞர் ஆராய்கின்றனர்.

## 2.3. அறிவின் வாயில்கள்

அறிவு வாயில்களை ஆறாகப் பிரிப்பர் இந்திய மெய்ப் பொருளார். அவை 1. பிரத்தியட்சம் 2. அனுமானம் 3. ஆப்த வாக்கியம் 4. உபமானம் 5. அருத்தாபத்தி 6. அனுபலப்தி என்பனவாகும்.

தமிழில் இவற்றை முறையே 1. காண்டல் 2. கருதுதல் 3. ஆன்றோர் உரை 4. உவமை 5. உய்த்துணர்தல் 6. இன்மை உணர்தல் என்று கூறலாம்.

ஆறு அறிவு வாயில்களையும் இந்திய மெய்ப்பொருளார் அனைவரும் ஏற்றுக் கொள்வதில்லை. அவரவர் கருத்தடிப் படையில் அறிவு வாயில்களின் எண்ணிக்கையில் வேறுபடு கின்றனர்.

## 2.4. அறிவு வாயிலின் நம்பகமின்மை

காண்டல் என்ற அறிவு வாயிலின் நம்பகத் தன்மையை மெய்ப்பொருள் அறிஞர் பெரும்பாலோர் ஏற்பதில்லை.

மேலை நாட்டறிஞர் காண்டல் அறிவு சரியானதா தவறானதா என்பதை ஆராய்ந்து ஒரு கோட்பாடாகவே நிறுவியுள்ளனர்.

இதனைச் 'சரி, தவறு பற்றிய கோட்பாடுகள் (Thories of truth and error)'[4] என்று குறிப்பிடுவர்.

தமிழில் இதனைத் 'திரிபுக் காட்சி' என்பர்.

தொல்காப்பியர் 'ஐயம்' (தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 91) என்ற சொல்லால் இதனைக் குறிப்பிடுகிறார்.

## 2.5. திரிபுக் காட்சி

திரிபுக் காட்சியில் இரண்டு வகை உண்டு. ஒன்று பொய்த் தோற்றம். (Illusion); மற்றது மாயத் தோற்றம் (Hallucination)

பொய்த் தோற்றம் என்பது, பாம்பு கயிறாகத் தோன்றுவது போன்றதாகும்.

மாயத் தோற்றம் என்பது கானல்நீர், இறந்தவரை நேரில் காணுவதாகக் கூறல் போன்றதாகும்.

அகப்பொருள் இலக்கியங்களில் தலைவி, தலைவனுக்குத் 'தீண்டி வருத்தும் தெய்வமாகத் தோன்றுவது திரிபுக் காட்சியின் விளைவேயாகும்.

## 2.6. மேலை நாட்டினரின் வகைப்பாடு

மேலை நாட்டினர் அறிவுக் கோட்பாட்டைக் கருத்துப் போக்குகளின் அடிப்படையிலும், அறிஞர்களின் கால வரிசை அடிப்படையிலும், வகைப் படுத்துகின்றனர்; அறிவைப் பெறும் முறைகளின் அடிப்படையிலும் வகைப்படுத்துகின்றனர்.

கருத்துப் போக்குகளின் அடிப்படையில், 'கருத்துக்கொள்கைகள், உள்நிலைக் கொள்கைகள், இடை நிலைக் கொள்கைகள், பயனீட்டுக் கொள்கைகள், பகுப்பாய்வுக் கொள்கைகள்'[5] என்று வகைப்படுத்துகின்றனர்.

அறிஞர்களின் கால அடிப்படையில், அறிவுக் கோட்பாட்டைப் 'பிளேட்டோ, அரிஸ்டாட்டில், தெக்கார்த்தே, பர்க்கிலே, ஹியூம், காண்ட், பியேர்ஸ்'[6] என்று வகைப்படுத்துகின்றனர்.

அறிவைப் பெறும் முறைகளின் அடிப்படையில், 'புலன் வழிக் கொள்கை, அறிவு முதல் கொள்கை, உள்ளுணர்வுக் கொள்கை'[7] என்றும் வகைப்படுத்துகின்றனர்.

இவ்வாறு பலரும் பலவழிகளில் அறிவுக்கோட்பாட்டை விளக்க முனைந்திருப்பதைப் பலநாட்டு அறிஞர்களின் நூல்களும் எடுத்துக் காட்டுகின்றன.

## பகுதி II

## 3. தமிழிலக்கியத்தில் அறிவுக் கோட்பாடு

3.1 அறிவுக்கோட்பாடு எந்த நாட்டுக்கும், எந்த மொழிக்கும் எந்தத் தனிமனிதனுக்கும் உடைமையானதன்று. அறிவைப் பற்றிய சிந்தனைப் போக்கில் நாடுகளும், மொழிகளும், அறிஞர் களும் வேறுபட்டாலும், அறிவு உலகப் பொதுவானது.

தமிழில், அறிவு தொடர்பான கருத்துகள், தொல்காப்பியர் முதல் இன்றைய தமிழறிஞர் வரை அந்தந்தக் காலங்களில் அறிஞர் பலரால் விரிவாகவும் தெளிவாகவும் குறிப்பிடப் பட்டுள்ளன. அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் காண்பது தேவையாகிறது.

### 3.2 அறிவைக் குறிக்கும் சொற்கள்

'அறிவு என்பதைக் குறிக்கத் தமிழில், 'புலமை', 'உணர்வு', 'காட்சி', 'மதிமை', 'ஞானம்', 'கல்வி', 'புத்தி', 'போதனை' போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

'அறிதல்' என்பதனைக் குறிக்க, உணர்தல், தெரிதல், தேர்தல், தெளிதல், தோன்றல், சிறத்தல், ஓர்தல், நாடுதல், பெறல், போற்றுதல் போன்ற சொற்கள் ஆளப்படுகின்றன.

அறிவிற் சிறந்தவர்களைக் குறிக்க, அறிஞர், புலவர், உணர்வோர், அறிவர், தெரிந்தோர், தேர்ந்தோர், தெள்ளியோர், சான்றோர், சிறந்திசினோர், ஆசிரியர், வயங்கியோர், உயர்ந்தோர், பெரியவர், மறையோர், ஆய்ந்தோர், ஒள்ளியோர், மேதை, ஞானி, கற்றோர், நீரவர், தெளிந்தோர், கொள்வோர், காட்சியோர், வித்தகர் போன்ற சொற்கள் வழங்குகின்றன.

### 3.3 அறிவு – வரையறை

அறிவைப் பற்றிய கீழ்க்கண்ட தரவுகள் தமிழரின் அறிவு பற்றிய கண்ணோட்டத்தைக் காட்டுவனவாகும்.

'பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பது அறிவு' (திருக்குறள் 355), 'பிறப்பை நீக்கும் சிறந்த பொருளை அறிவது அறிவு' (திரு. 358), தீமையை அகற்றி நன்மையின்பால் சேர்வது அறிவு' (திரு. 422), 'கூறுவனவற்றின் உண்மைப் பொருளை அறிவது அறிவு' (திரு. 423), 'நிலையான நட்பு கொள்வது அறிவு' (திரு 42), 'உலகத்தோடு ஒத்து நடப்பது அறிவு' (திரு. 426) 'திமையை எடுத்துரைக்கின்ற ஆற்றல் பெற்றது அறிவு' (நாலடியார், 227), 'நன்மைகளை வெளிப்படுத்தி, தீமைகளை மறந்து, பிறர்க்கு உதவி செய்து வாழ்வது அறிவு, (சிறுபஞ்ச மூலம், 55) போன்றவை தமிழிலக்கியம் கூறும் வரையறை களாகும். இவற்றால், ஒன்றின் உண்மை நிலையை அறிவதும், நன்மை தீமையை அறிவதும் 'அறிவு' எனக் கொண்டனர் தமிழர் என்று அறிய முடிகிறது.

## 3.4 அறிவுடையார்-வரையறை

கீழ்க்காணும் தரவுகள் அறிவுடையார் எவரெனத் தமிழ் மாந்தர் கருதிய நிலையை எடுத்துரைப்பன.

'பின்னால் நிகழப் போவதை முன்னரே ஆராய்ந்து அறியும் ஆற்றல் பெற்றவர் அறிவுடையார், திரு. (427)', 'அஞ்ச வேண்டுவது, வேண்டாதது எது என்பதை அறிந்து அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுகிறவர் அறிவுடையார் (திரு 428)' 'அனைத்துச் சிறப்புகளையும் பெற்றவர் அறிவுடையார், (திரு. 430)' 'முக்காலமும் நடக்கும் நிகழ்ச்சிகளைக் குற்றமில்லாமல் உணரும் ஆற்றல் பெற்றவர் அறிவுடையார் (தொல். பொ. 74)' போன்றவை தமிழிலக்கியம் அறிவுடையோர்க்குக் கூறும் இலக்கணமாகும். இவற்றால் அறிவுடையோர் நன்மைதீமைகளைப் பகுத்துணரும் ஆற்றல் பெற்றவர் என்பதையும் அவர்கள் தீமை வரும் முன்னரே ஏனைய மக்களுக்கு அறிவுறுத்தி நல்வழிப் படுத்தும் கடமையாற்றிய சான்றோர் என்பதையும் அறிய முடிகிறது. ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'' (புறநானூறு 183) என்ற அடியும் இதனை உறுதிப்படுத்துகிறது.

## 3 5 இருபால் அறிவு

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதுக்கு?' 'பெண் புத்தி பின் புத்தி' என்பன போன்ற பழமொழிகள், பெண்களை

அறிவிற் குறைந்தவர்களாகவும்,அறிவைப் பெறத் தகுதி அற்றவர்களாகவும் காட்ட, இடைக்காலத்தில் தமிழகத்தில் தோன்றின.

ஆனால் அதற்கு மாறாகத் தொல்காப்பியர் காலத்திலும், சங்க காலத்திலும் பெண்கள் அறிவு மேம்பாட்டுடன் திகழ்ந்தனர். 'அறிவும் அருமையும் பெண்பாலான'' (தொல். பொ. 206) 'கிழவோன் அறியா அறிவினள் இவளென' (தொல். பொ. 115) ஆகிய அடிகள் பெண்கள் அறிவைப் பெற்றுச் சிறந்து விளங்கியதை உணர்த்துகின்றன.

மணிமேகலைக் காப்பியமும் ''அறிவு தலைப்பட்ட ஆயிழை தனக்கு'' (23 ஆம் காதை, வரி 29) என்ற தொடரில் பெண்கள் அறிவில் மேம்பட்டிருந்ததை உணர்த்துகிறது.

தலைவன் தலைவி இருவர்க்கும் இருக்க வேண்டிய தகுதிகளைப் பட்டியலிட்டுக் காட்டும் தொல்காப்பியர் அவற்றில் 'உணர்வு' என்பதையும் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். 'உணர்வு' என்பதற்கு 'அறிவு' [8] என்றே உரையாசிரியர்கள் பொருள் கூறுகின்றனர்.

மேற்கூறியவற்றால் தமிழகத்தில் ஆண் பெண் இருபாலரும் அறிவில் சிறந்தோராய் இருந்தனர் என்பது பெறப்படுகிறது.

## 3.6 அறிவின் நிலைகள்

அறிவைப் பல நிலைகளாகத் தமிழிலக்கியங்கள் பிரித்து ஆராய்கின்றன எனலாம்.

திருக்குறள், ''களவென்னும் காரறிவு'' (287), ''நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு', (331), ''அறிவறிவு'' (61), ''அருட்பொருள் ஆயும் அறிவு'' (914), ''தலையாய அறிவு'' (203) எனப் பகுத்தாய்கிறது.

நாலடியார் 'நல்லறிவு, புல்லறிவு' (320) என அறிவைப் பிரிக்கின்றது.

புறநானூறு, 'அறிவறிவு' (30) என்ற தொடரை ஆண்டுள்ளது.

'அறிவு மடம்' என்பது சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படும் சொல்லாட்சியாகும். இவ் 'வறிவு மடம்' காதல்

வயப்பட்ட பெண்களிடத்தும், கொடைத் தன்மை மிக்க ஆண்களிடத்தும் காணப்படும் என்று இலக்கியங்கள் சுட்டுகின்றன.

## 3.7. அறிவைப் பெறும் வழிகள்

3.7.1 இந்திய மெய்ப்பொருளார் கண்ட, 'அறிவு வாயில்கள்' ஆறு; அவற்றோடு 'இல்லது சுட்டிய இருந்தது' என்ற ஓர் அறிவு வாயிலையும் தமிழிலக்கியம் சுட்டுகிறது எனலாம்.

மேலும், கல்வியால் பெறும் அறிவு, மரபு நிலையால் வரும் அறிவு, இனத்தால் பெறும் அறிவு, உள்ளுணர்வால் தோன்றும் அறிவு ஆகியன பற்றியும் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### 3.7.2. காண்டல்

காண்டல் அறிவு என்பது, காதால் கேட்பது, கண்ணால் பார்ப்பது போன்ற பொறிகள் ஐந்தாலும் பெறும் அறிவாகும்.

''திறம்படத் தெரியுங் காட்சி'' (தொல். எழு. 83), ''செயிர் தீர்க் காட்சி'' (தொல். பொ. 111), ''மாசறு காட்சியவர்'' (திரு. 352), ''கடனறி காட்சியவர்'' (திரு. 218), ''புன்மையில் காட்சியவர்'' (திரு. 174) போன்ற இலக்கண, இலக்கியத் தொடர்கள் காண்டல் அறிவின் மேம்பாட்டைத் தமிழர் நன்குணர்ந்திருந்ததை வெளிப்படுத்துகின்றன.

### 3.7.3. கருதுதல்

கருதுதல் என்பது, நெருப்பைக் காணாமலே, புகையை மட்டுமே கண்டு, நெருப்பு அங்குள்ளது என்று அறியும் அறிவு ஆகும்.

தமிழிலக்கியத்தில் காணப்படும், ''அரில்தப உணர்தல்'' (தொல். பொ. 59), ''மெய்பெற உணர்தல்'' (தொல். பொ.228) ''திண்ணிதின் உணர்தல்'' (தொல். பொ. 271), ''நேரிதின் உணர்தல்'' (தொல். பொ. 571) ''அரில்தப தெரிதல்'' (தொல். பொ. 418, 429), ''காலங் கருதல்'' (திரு. 484, 485), ''பிணியளவும், காலமுங் கற்றான் கருதல்'' (திரு. 949) போன்ற தொடர்கள் கருதல் அறிவைக் குறிக்கப் பயன்படுகின்றன எனலாம்.

### 3.7,5 ஆன்றோர் உரை

சான்றோர்கள் தம் பட்டறிவைச் சொல்லியும் எழுதியும் வைத்துள்ளனர். அவற்றை ஒருவர் இன்று நேரடியாக அறிய முடியாது; கருதியும் உணர முடியாது. அவற்றையே 'ஆன்றோர் உரை' என்பர்.

ஆன்றோர் உரைக்குத் தமிழில் தலையாய இடம் தரப் பட்டுள்ளதை அறிய முடிகிறது.

நன்னூலார்,

> ''முன்னோர் மொழிப்பொருளே யன்றி அவர் மொழியும்
> பொன்னேபோல் போற்றுவம்'' (நூ. பா. 9)

என்றார்.

''வாய்மொழிப் புலவர்'' (தொல். பொ. 380), ''உயர்மொழிப் புலவர்'' (தொல். பொ. 472), ''தொன்னெறிப் புலவர்'' (தொல். பொ. 539), ''நுணங்கு மொழிப் புலவர்'' (தொல். பொ. 644), ''நுனித்தகு புலவர்'' (தொல். பொ. 656), ''ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை'' (தொல், பொ. 122), ''மறைமொழி சிறந்த மந்திரம்'' (தொல். பொ. 457), ''உயர்ந்தோர் கிளவி'' (தொல். பொ. 213), ''நிறைமொழி .. மறைமொழி' (திரு. 28) போன்ற தொடர்கள் அறிவு வாயில்களில் ஆன்றோர் உரைக்கு உரிய உயர் இடத்தைப் புலப்படுத்துகின்றன.

### 3.7.6 உவமை

உவமை வாயிலாய்ப் பெறும் அறிவு என்பது, ஒருவர் அறியாத பொருளை அறியச் செய்ய, அவர் அறிந்த, அதே போன்ற பொருளை உவமையாகக் கூறி, உணர்த்துவதாகும்.

தொல்காப்பியம் முதற்கொண்டு அனைத்துத் தமிழிலக் கியங்களும் உவமை என்ற இவ்வறிவு வாயிலுக்கு ஏற்றம் அளித்துள்ளன.

தொல்காப்பியர் தனது நூலில் தனித்த ஓர் இயலே ஒதுக்கி, 'உவமை' என்பதை விரிவாக ஆராய்ந்துள்ளார். உவமை என்பது எந்தெந்த வகையில் தோன்றும் என்பதை

''வினை, பயன், மெய், உரு, என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்''
(தொல். பொ. 272)

என்ற நூற்பாவால் விளக்குகிறார்.

அணி இலக்கணங்கள் அனைத்தும் உவமைக்குத் தலையாய இடம் தந்துள்ளன.

பிறிது மொழிதல் அணி என்பது உவமையை மட்டும் சொல்லிக் கருத்தை உய்த்துணர வைப்பதாகும். அதற்குச் சான்றாகப்

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'' (திரு - 475)

போன்ற இலக்கியப் பகுதிகள் உவமை என்ற அறிவு வாயில் தமிழில் இடம் பெற்றுள்ளதை உணர்த்துவதைச் சுட்டவியலும்.

### 3.7.7 உய்த்துணர்தல்

உய்த்துணர்தல் என்பது பகலில் உண்ணாத ஒருவன் பருத்திருக்கிறான் என்பதனால் அவன் இரவில் உண்கிறான் என்பதைச் சிந்தித்து அறிவதால் ஏற்படுவது போன்ற அறிவாகும்.

கருதுதலுக்கும், உய்த்துணர்தலுக்கும் உள்ள வேறுபாடு இன்றியமையாதது.

கருதுதல் என்பதில் காட்டப்பட்ட, புகை உள்ள இடமெல்லாம் நெருப்பு உண்டு என்பதில், நெருப்பு, புகை இரண்டிற்கும் உள்ள 'இடையறா உறவு' நிலை, கருதுதலுக்கு அடிப்படையானது. அவ்விடையறாவுறவு ஏதும் இல்லாமலே பெறும் அறிவு உய்த்துணர்தல் ஆகும்.

உய்த்துணர்தலைத் தொல்காப்பியர், ''உய்த்துக் கொண்டுணர்தல்'' (தொல். பொ. 656) என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரை எழுதிய பேராசிரியர். ''ஒரு வழி ஒரு பொருள் சொல்லியக்கால் அதன்கண்ணே மற்றொரு பொருளையும் கொணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச் செய்தல்''[9] என்று பொருள் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்திற்கு உரைகண்ட அடியார்க்கு நல்லார், ''முந்து நூல்களிற் காப்பியமென்னும் வடமொழிப் பெயர் இன்றேனும் ஆசிரியர், ''வட சொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'' என்றார்; 'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணரற்பாலதனை...''[10] என்று உரை எழுதும் போது 'உய்த்துணர்தல்' என்ற தொடரைக் கையாண்டுள்ளார்.

### 3.7.8. இன்மை அறிதல்

பேச்சு வழக்கில் 'பையில் பணமில்லை, பெட்டியில் நகையில்லை' என்பன போன்ற தொடர்களைக் கையாள்வது வழக்கம். பையும், பெட்டியும் வெறுமையாக உள்ள போதும் அவற்றில் இல்லாதது, முறையே பணம்தான், நகைதான் என்று அறிவதே இன்மை அறிதல் என்பதாகும்.

இதனைத் தொல்காப்பியர் வேறு வகையாக, ''வாராதது உணர்தல்'' (தொல். பொ. 656) என்று அவர்தம் இலக்கண நோக்கம் கருதிக் கூறியுள்ளார்.

### 3.7.9. இல்லது சுட்டிய இருந்தது

'இல்லது சுட்டிய இருந்தது' என்பதையும் தனி அறிவு வாயிலாகக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும், 'பூக்கூடை, பால் பானை' போன்றவற்றைக் குறிப்பிடக் காணலாம்.

பூ இருக்கும் போதும், பால் இருக்கும் போதும் மட்டுமே அவை அப்பெயரால் வழங்கப்படுவதில்லை. பூவும் பாலும் இல்லாத போதும் அவற்றோடு தொடர்பு படுத்தியே அறியப்படுகின்றன. அதற்குப் பூவும், பாலும் அதற்குரிய பாத்திரங்களில் முன்பு இருந்ததும், நாளடைவில் அவற்றைப் பயன்படுத்தவே தனித்தனிப் பாத்திரங்கள் உருவாக்கப்பட்டதும் காரணம் எனலாம்.

இதனைத் தொல்காப்பியர் தம் இலக்கணத் தேவைக்கேற்ப, ''வாராததனான் வந்தது முடித்தல்'' (தொல். பொ. 656) என்று குறிப்பிட்டுள்ளார்.

### 3.7.10. மரபுநிலை

அறிவைப் பெறுவதற்கு உரிய வழியாக மரபுநிலையும் தமிழிலக்கியத்தில் குறிக்கப்படுகிறது.

இதனை நாலடியார், ''மகனறிவு தந்தையறிவு'' (நா. 367) என்று குறிப்பிட்டுள்ளது.

### 3.7.11. இனம்

இனம் என்பது நண்பர் கூட்டத்தைக் குறித்து வழங்குகிறது. யாருடன், எந்த அறிவு நிலையில் உள்ளவரோடு பழகுகின்றனரோ, அதற்கேற்ப ஒருவர் அறிவு அமைகின்றது. அதனால் 'இனம்' அறிவு வாயிலாகின்றது. இதனைத் திருவள்ளுவர், 'இனத்தியல்ப தாகும் அறிவு'' (திரு. 452) ''இனத்துளதாகும் அறிவு'' (திரு. 454) என்ற தொடர்களால் குறிக்கின்றார்.

உளவியல் அறிஞர்கள் 'இனம்' என்பதனைச் சூழ்நிலை என்ற தொடரால் குறிப்பிடுகின்றனர். சூழ்நிலைக்கேற்பவே அறிவு அமையும் என்பர் சூழ்நிலை வாதிகள்.

### 3.7.11. கல்வி

கல்வி இன்று விரிந்த பொருளுடன் கையாளப்படுகின்றது. அதுவே அறிவைப் பெறுவதற்கு இன்றியமையாத வழியென அறிஞர் உலகம் கருதுகின்றது.

திருக்குறள் இதனைக், ''கற்றனைத் தூறும் அறிவு'' (திரு. 396) என்ற தொடரால், 'கல்வி அளவிற்கேற்பவே ஒருவர் அறிவு அமையும்' என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அதேபோல், நான்மணிக்கடிகை, ''கற்றறிவில்லா உடம்பு'' (நா. க. 22) என்று கல்வியால் அறிவு பெறப்படுவதைக் குறிப்பிடுகிறது.

### 3.7.12. உள்ளுணர்வு

தமிழிலக்கியத்தில், உள்ளுணர்வும் அறிவு வாயில்களில் ஒன்றாகத் திகழ்கின்றதெனலாம்.

திருஞான சம்பந்தர், இராமலிங்க அடிகள் போன்றோர் உள்ளுணர்வால் அறிவு பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களைக் 'கருவிலே திருவுடையார்' என்பர்.

திருக்குறள், ''உண்மை அறிவே மிகும்'' (திரு. 373) என்று குறிப்பிடுவது உள்ளுணர்வால் பெற்ற அறிவையே எனலாம்.

சிறுபஞ்சமூலம், ''மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு'' (சிறு.மூ. 22) என்று கூறியுள்ளதும் உள்ளுணர்வால் பெறும் அறிவைக் குறிப்பதாகும்.

## 3.8. அறிவும் உயிரினங்களும்

அறிவு வாயில்களாகப் புலன்கள், மனிதர்களுக்கு மட்டு மல்லாமல் பிற உயிரினங்களுக்கும் பயன்படுகிறது என்பதை நன்குணர்ந்தவர் தமிழர். அதனால், அவ்வுயிரினங்களும் அறிவு பெற்றுள்ளன என்பதை ஏற்றுக்கொண்டதனால் தொல்காப்பி யருக்கு முன்பே புலனறிவு அடிப்படையில் உயிரினங்களைப் பாகுபாடு செய்யும் நிலை இருந்தது. இதனைத் தொல்காப்பியர், ''நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே'' (தொல். பொ. 571) என்ற தொடரால் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழர், அறிவு அடிப்படையில் உயிரினங்களைப் பிரித்தனர் என்பதைக் கீழ்க்கண்ட தொடர்களால் அறியலாம். ''புல்லும் மரனும் ஓரறிவினவே'' (தொல். பொ. 572), ''நந்தும் முரளும் ஈரறிவினவே'' (தொல். பொ. 573), ''சிதலும் எறும்பும் மூவறிவினவே'' (தொல். பொ. 574), ''நண்டும் தும்பியும் நான்கறி வினவே'' (தொல். பொ. 575), ''மாவும் புள்ளும் ஐயறிவினவே'' (தொல். பொ. 576), ''மக்கள்தாமே ஆறறிவு யிரே'' (தொல். பொ. 577) என்பன தமிழரின் உயிரினப் பாகுபாடு ஆகும்.

இவ்வாறு, அறிவு அடிப்படையில் உயிரினங்களைப் பாகுபாடு செய்யும் நிலை, இந்திய மெய்ப்பொருளில் சமணரிடம் மட்டுமே காணப்படுகிறது.

அவர்கள் ஓரறிவு முதல் ஐயறிவு வரையே உயிரினங்களை வகைப்படுத்துகின்றனர்.

சமணராகிய பவணந்தி முனிவர் தான் எழுதிய நன்னூலில், ''ஓரறிவு ஆதியா உயிர் ஐந்தாகும்'' (நன். 444) எனவும்

''வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவியறிவோடு ஐயறிவு உயிரே'' (நன். 449)

என்றும் குறிப்பிடுவதால் இதனை அறியமுடிகிறது.

ஆனால் தொல்காப்பியர், ''அறறிவதுவே அவற்றொடு மனனே'' (தொல். பொ. 517), 'மக்கள்தாமே அறறி வுயிரே'' (தொல். பொ. 577) என்று தெளிவுபடக் கூறியுள்ளார். இவற்றால் தமிழரின் நுட்பமான அறிவுக் கோட்பாட்டை உணர முடிகிறது.

## பகுதி – III

## 4. வாழும் தமிழரிடம் அறிவு

4.1. வாழும் தமிழர்கள் தங்கள் வாழ்வில் அறிவிற்குரிய இடம் தருவதில் எவ்வளவு முனைப்போடு உள்ளனர் என்பதைக் கள ஆய்வு செய்ய முப்பத்தேழு வினாக்கள் கொண்ட வினா நிரல் கொடுக்கப்பட்டுத் தகவல்கள் திரட்டப்பட்டன.

அத்தகவல்கள் அடிப்படையில் இன்றைய தமிழர் வாழ்வில் அறிவு பெறும் இடம் ஆராயப்பட்டது.

ஒவ்வொருவர் வாழ்வோடும் மிக நெருங்கிய தொடர்பு கொண்ட குடும்பம், கல்வி, தொழில், சமயம், அரசியல் ஆகிய ஐந்து தலைப்புகளில் வினாக்கள் தரப்பட்டன. தகவலாளர் எண்ணிக்கை நூறு.

முதல் பன்னிரு வினாக்கள் தகவலாளரின் பெயர், வயது போன்றவற்றை அறிவதற்கான வினாக்களாகும். ஏனைய இருபத்தைந்து வினாக்கள் ஐந்து தலைப்புகளில் ஒவ்வொன்றிலும் ஐந்து வினாக்கள் அமையுமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.4. தமிழர்

தமிழரின் அறிவுக் கோட்பாட்டை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆதலால், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் களிடம் மட்டுமே தகவல்கள் திரட்டப்பட்டன.

### 4.3. களம்

புதுவை மாநிலத்தில் உள்ள நான்கு பகுதிகளில் புதுவைப் பகுதி மட்டும் ஆய்விற்குரிய களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## 4.4 தகவலாளர்

பால், வயது, கல்வி, வேலை, மனநிலை, சமயம், பொருளாதார நிலை, குடும்ப நிலை ஆகியவற்றால் வேறுபட்ட நூறுபேர் தகவலாளர்களாய்த் தெரிவு செய்யப்பட்டனர்.

## 4.5. பால்

தகவலாளரில் ஆண்கள் 61 பேர்; பெண்கள் 39 பேர். அறிவுக்குரிய இடம் தருவதில் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 88%. இதனைப் பெற்ற இருவரும் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறைந்த விழுக்காடு — 8%. இதனைப் பெற்ற இருவரும் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சராசரி விழுக்காடு ஆண்கள் 60.3%; பெண்கள் 50.7%

இதனால், பல்வேறு சமூகச் சூழ்நிலைகளால் பெண்களை விட ஆண்களே அறிவுக்குரிய பங்களிப்பில் முந்தியுள்ளனர் என்பது தெரிகிறது.

## 4.6. வயது

18 வயது முதல் 65 வயது வரையிலானவர்கள் தகவலளித்துள்ளனர்.

மிகக் குறைந்த வயதை உடைய தகவலாளர் மூவர். அவர்கள் பெற்ற அறிவுக்குரிய விழுக்காடு 60%, 72%, 12%.

தகவலாளர்களில் வயதில் மிகவும் மூத்தவர் பெற்ற விழுக்காடு 32%.

இவர்கள் நால்வரும் ஆண் தகவலாளர்கள்.

## 4.7. கல்வித் தகுதி

தகவலளித்தவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 86 பேர்; எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 14 பேர்.

அறிவுக்குரிய பங்களிப்பில் மிகக் குறைந்த விழுக்காடு 8% பெற்ற இருவரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்,

இதனால் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் அறிவுக்குரிய பங்களிப்பில் பிந்தியுள்ளனர் என்று தெரிகிறது.

## 4.8. வேலை

எந்த வகையிலும் வேலை செய்யாத, வருமானம் இல்லாத தகவலாளர்கள் 23 பேர்; வேலை செய்கிற அல்லது வருமானம் உள்ளவர்களாக இருக்கிற தகவலாளர்கள் 77 பேர்.

வேலை செய்யாதவர்கள் பெற்ற அறிவுக்குரிய பங்களிப்பில் மிகக் குறைந்த விழுக்காடு — 12%; மிக உயர்ந்த விழுக்காடு - 80%

வேலை செய்கின்றவர்கள் பெற்ற மிகக் குறைந்த விழுக்காடு —8%; மிக உயர்ந்த விழுக்காடு — 88%

## 4.9. மண நிலை

தகவலாளர்களில் திருமணம் ஆனவர் 79 பேர்; ஆகாதவர் 21 பேர்.

திருமணம் ஆனவர்கள் பெற்ற விழுக்காட்டில் அறிவை முதன்மைப் படுத்தியதில் மிக உயர்ந்த விழுக்காடு - 88%; மிகக் குறைவானது - 8%

அதேபோல் திருமணம் ஆகாதவர்கள் பெற்ற விழுக்காட்டில் மிக உயர்ந்த அளவு - 80%; மிகக்குறைவு - 12%

திருமணம் ஆனவரின் சராசரி விழுக்காடு - 57. 3%

திருமணம் ஆகாதவரின் சராசரி விழுக்காடு - 54%

இவற்றால், திருமணம் ஆனவர், வயது, பட்டறிவு போன்ற பல்வேறு காரணங்களால் அறிவுக்குரிய பங்களிப்பில் முந்தி யுள்ளனர் எனத் தெரிகிறது.

## 4.10. மதம்

இந்து, முஸ்லீம், கிறித்தவர் என்ற மூன்று மதத்தவரே தகவல்கள் அளித்தனர்.

தகவலளித்த இந்துக்கள் 70 பேர்; முஸ்லீம் 12 பேர்; கிறித்தவர் 18 பேர்.

அறிவுக்குரிய பங்களிப்பில் இந்துக்கள் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 88%; மிகக் குறைந்த விழுக்காடு - 8%

முஸ்லீம்கள் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 76%; மிகக் குறைந்த விழுக்காடு 12%

கிறித்தவர் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 80%; மிகக் குறைந்த விழுக்காடு - 16%

இந்துக்களின் சராசரி விழுக்காடு - 56.3%

முஸ்லீம்களின் சராசரி விழுக்காடு - 57%

கிறித்தவர்களின் சராசரி விழுக்காடு - 57.5%

கல்வி நிறுவனங்களை நடத்துவது, பெண்கல்வி போன்ற காரணங்களால் கிறித்தவர் அறிவுக்குரிய பங்களிப்பில் முந்தியுள்ளனர் எனலாம்.

## 4.11. பொருளாதார நிலை

தகவலாளர்கள் வசதியான குடும்பம், நடுத்தரக் குடும்பம் வசதி குறைவான குடும்பம் என முப்பிரிவாகப் பிரித்தறியப் பட்டனர்.

வசதியான குடும்பத்தவர் 6 பேர்; நடுத்தரக் குடும்பத்தினர் 71 பேர்; வசதி குறைவான குடும்பத்தினர் 23 பேர். அறிவை முதன்மைப் படுத்தியதில் வசதியானவர் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 64%; மிகக்குறைவு - 16% நடுத்தரக் குடும்பத்தினர் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு – 88%; மிகக் குறைந்த விழுக்காடு – 08%

வசதியற்ற குடும்பத்தினர் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 72%; மிகக் குறைந்த விழுக்காடு – 8%

வசதியானவர்களின் சராசரி விழுக்காடு – 51.3%

நடுத்தரக் குடும்பத்தின் சராசரி விழுக்காடு – 59.7%

வசதி குறைவான குடும்பத்தின் சராசரி விழுக்காடு – 48.5%

பொருளாதார நிலையில், திட்டமிட்டுச் செலவு செய்தல் போன்ற காரணங்களால் நடுத்தரக் குடும்பத்தினர் அறிவுக்குரிய

பங்களிப்பில் முந்தியுள்ளனர்; வறுமை போன்ற காரணங்களால் வசதி குறைவான குடும்பத்தினர் பிந்தியுள்ளனர் எனலாம்.

## 4.12 குடும்ப நிலை

பொதுவாகக் குடும்பம், கூட்டுக் குடும்பமாகவோ, தனிக் குடும்பமாகவோ, தனித்து வாழும் நிலையிலோ காணப்படுகிறது. ஆகவே இம்மூன்று பிரிவுகளில் தகவலாளர்கள் பிரிக்கப்பட்டனர்.

கூட்டுக்குடும்பத் தகவலாளர்கள் 37 பேர்; தனிக்குடும்பத் தகவலாளர்கள் 55 பேர்; தனித்து வாழும் தகவலாளர்கள் 8 பேர்.

அறிவுக்குரிய இடம் தருவதில் கூட்டுக் குடும்பம் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 84%; மிகக் குறைவு - 12%

தனிக்குடும்பம் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 62%; மிகக் குறைவு 8%

தனித்து வாழ்வோர் பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு - 88%; மிகக் குறைவு - 12%

| | |
|---|---|
| கூட்டுக்குடும்ப சராசரி விழுக்காடு | — 54.7% |
| தனிக்குடும்ப சராசரி விழுக்காடு | — 61.6% |
| தனித்து வாழ்வோர் சராசரி விழுக்காடு | — 31% |

குடும்ப நிலையில், வேலை வாய்ப்பு, தானே பொறுப்பேற்று நடத்துதல் போன்ற காரணங்களால் தனிக்குடும்பத்தினர் அறிவுக்குரிய பங்களிப்பில் முந்தியுள்ளனர் எனலாம்; ஆதரிப்பார் இன்மை, எதனையும் கலந்துபேசி சரி தவறு அறியமுடியா நிலை போன்றவற்றால் தனித்து வாழ்வோர் பிந்தியுள்ளனர் எனலாம்.

## 4.13. வினாக்கள்

வினாக்கள் ஐந்து துறைகளைச் சேர்ந்ததாகப் பிரிக்கப்பட்டன; ஒவ்வொரு துறையிலும் ஐந்து வினாக்கள் தரப்பட்டன. ஐந்து துறைகள்: குடும்பம், கல்வி, தொழில், சமயம், அரசியல்.

குடும்பப் பிரிவு பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 87%. இவ் விழுக்காடு, பொருட்களை வாங்குவதில் தேவைக்கேற்றதைத் தேர்ந்தெடுப்போர்க்குக் கிடைத்ததாகும்.

மிகக் குறைந்த விழுக்காடு 20%. இது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் அறிவாளியைக் குறிப்பிட்டோர்க்குக் கிடைத்ததாகும்.

கல்விப் பிரிவு பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 95%. இது படிப்பதற்கான சரியான வழி புரிந்துகொண்டு படிப்பது என்று குறிப்பிட்டோர் பெற்ற விழுக்காடு.

மிகக் குறைந்த விழுக்காடு 42%. இது அறிவைப் பெறுவதற்கான வழியாகக் கல்வியைக் குறிப்பிட்டோர் பெற்ற விழுக்காடாகும்.

தொழில் பிரிவு பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 83%. இது தாம் தேர்ந்தெடுக்க விரும்புவது 'திறமையை வெளிப்படுத்தக் கூடிய வேலையை' எனக் குறிப்பிட்டோர் பெற்ற விழுக்காடாகும்.

மிகக் குறைந்த விழுக்காடு 71%. இது தான் செய்யும் வேலையில் புதிய உத்திகளைக் கையாள்வதாகக் குறிப்பிட்டோர் பெற்றதாகும்.

சமயப் பிரிவு பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 79%. இது கோவிலை விடுத்துப் பள்ளிக்கூடம் கட்ட நன்கொடை தருவதாகக் குறிப்பிட்டோர் பெற்றதாகும். மிகக் குறைவான விழுக்காடு 24%. இது தலைவிதியை எப்போதுமே நம்புவதில்லை என விடையளித்தோர் பெற்றதாகும்.

அரசியல் பிரிவு பெற்ற மிக உயர்ந்த விழுக்காடு 69%. இது ஒரு கட்சியை விரும்ப அதன் கொள்கையே காரணம் என்றவர் பெற்ற விழுக்காடாகும். மிகக் குறைவான விழுக்காடு 5%. இது நாட்டை ஆள அறிஞர் வேண்டும் என்று குறிப்பிட்டவர் பெற்றதாகும்.

மொத்தமுள்ள 25 வினாக்களில், கல்விப் பிரிவைச் சேர்ந்த ஒரு வினாவே மிக உயர்ந்த விழுக்காடாக 95% பெற்றது. அதேபோல், அரசியல் பிரிவைச் சேர்ந்த ஒரு வினாவே மிகக் குறைந்த விழுக்காடு 5% பெற்றது.

குடும்பப் பிரிவின் சராசரி விழுக்காடு - 47.2%
கல்விப் பிரிவின் சராசரி விழுக்காடு - 72.4%
தொழில் பிரிவின் சராசரி விழுக்காடு 79%

சமயப் பிரிவின் சராசரி விழுக்காடு 50%
அரசியல் பிரிவின் சராசரி விழுக்காடு 34.4%

மொத்த சராசரி 56.6%

வினாக்களின் அடிப்படையில் மிக உயர்ந்த சராசரி விழுக்காடு தொழில் பிரிவிற்கும், மிகக் குறைந்த சராசரி விழுக்காடு அரசியல் பிரிவிற்கும் கிடைத்துள்ளது. இவற்றால், வளர்ந்த நாடுகளைப் போலத் தாமும் முன்னேற வேண்டும் என்றும், அதற்குத் தொழில் வளர்ச்சி இன்றியமையாதது என்றும் தகவலாளர்கள் கருதுகின்றனர் எனலாம்.

அதேபோல், இன்றைய அரசியலில் காணப்படும் குழப்பமான நிலை தகவலாளர்களிடமும் காணப்படுகிறது எனலாம். ஒட்டு மொத்தமாக அறிவில் ஆர்வம் வளர்நிலையில் உள்ளதெனலாம்.

## 5. முடிவுரை

இதுவரை தமிழர்தம் அறிவுக் கோட்பாடு பற்றிக் கண்ட கருத்துக்களின் தொகுப்பாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

1. அறிவுக் கோட்பாட்டை, இந்திய மெய்ப்பொருள் குறிப்பிடினும் சமய அறிவைப் பெறவும், வாதிடவுமே அதனைப் பயன்படுத்துகிறது.
2. தமிழில் அறிவுக் கோட்பாடு தனித்த நிலையில் வளர்க்கப் படாவிடினும், அதைப் பற்றிய சிந்தனை காணப்படுகிறது; திரிபுக்காட்சி போன்ற அறிவுக் கோட்பாட்டுக் கூறுகள் தொல்காப்பியம் முதலே குறிக்கப்பெறுகின்றன.
3. மேலை நாட்டறிஞர் அறிவுக் கோட்பாட்டை, அறிஞர் கால அடிப்படையிலும், கருத்துப்போக்குகளின் அடிப்படையிலும், அறிவைப்பெறும் வழிகளின் அடிப்படையிலும் வகைப்படுத்துகின்றனர்.
4. அறிவு வாயில்களை இந்திய மெய்ப்பொருளார் ஆறு பிரிவுகளில் அடக்குவர்.
5. அறிவு வாயில்கள் தமிழில் ஏழு உள்ளன எனலாம். அவற்றோடு அறிவைப் பெறுவதற்கான வழியாகக் கல்வி, மரபுநிலை, இனம், உள்ளுணர்வு போன்றனவும் குறிக்கப் படுகின்றன.

6. ஐம் புலன்களால் பெறும் அறிவோடு மனத்தால் பெறும் அறிவையும் சேர்த்து, 'ஆறறிவு' என அறிவைக் கணக்கிடு வதும், 'ஆறறிவு' அடிப்படையில் உயிரினங்களை ஆறு வகையாகப் பிரிப்பதும் தமிழர்க்கே உரிய 'அறிவுக் கோட் பாடு' எனலாம்.

   தொல்காப்பியத்திற்கு முன்பே இக்கோட்பாடு நிலவியதை அறிய முடிந்தாலும், பிற்காலத்தில், நன்னூல் போன்ற வற்றில் 'ஐயறிவு' பாகுபாடும் காணப்படுகிறது.

7. கல்வி, வேலை, பொருளாதாரம் போன்ற பல்வேறு காரணங்களால் ஆண்கள், பெண்களைவிட அறிவிற்குரிய பங்களிப்பில் முந்தியுள்ளனர்.

8. கல்வி நிலையில், எழுதப்படிக்கத் தெரிந்தவரும், மணநிலை யில் திருமணம் ஆனவர்களும், சமய நிலையில் கிறித்தவர் களும், பொருளாதார நிலையில் நடுத்தரக் குடும்பத்த வரும், குடும்ப நிலையில் தனிக்குடும்பத்தினரும், அறிவுக் குரிய பங்களிப்பில் முன்னிலை பெற்றுள்ளனர்.

9. தொழில் துறையில் அறிவார்வம் மிகுந்து காணப்படுகிறது; அரசியலில் குறைந்து காணப்படுகிறது.

## குறிப்புகள்


1. Encyclopedia America, Vol. 21 Pg. 925.
2. The concise Oxford Dictionary of Current English, 5th Ed. Pg. 912.
3. கி. லஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், ப. 188
4. பி. ஆர். நரசிம்மன், வைணவ மரபும் மெய்ப்பொருளி யலும், ப. 65
5. Thomas English Hill, Contemporary Theories of knowledge, Pg. V-VII.
6. Robert Ackermann, Theories of knowledge-A critical Introduction, Pg. IX.

7. வே. தில்லைநாயகம், ''திருக்குறளில் அறிவு'' ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு – கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள், தொகுதி – 3, ப. 493

8. க. வெள்ளைவாரணன் (ப. ஆ), தொல்காப்பியம், மெய்ப் பாட்டியல் உரைவளம், ப. 216-222

9. கே. பகவதி, (ப. ஆ), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) மரபியல், ப. 174

10. உ. வே. சாமிநாதையரவர்கள், (ப. ஆ), சிலப்பதிகார மூலமும், அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், ப. 6

தேவசேனா செயச்சந்திரன், எம்.ஏ., 'காரைக்கால் மகளிர் பத்திரிகை படிக்கும் பழக்கம்' என்ற தலைப்பினில் தம் முதுகலைப்பட்ட ஆய்வேட்டை அளித்தார். 'தேடல் - 4' ஆம் தொகுப்பில் 'பெண்ணியம் - தன்னம்பிக்கைக்கான தடைகள்' என்ற தலைப்பினில் கட்டுரை யாத்துள்ளார். தற்பொழுது 'தமிழர்தம் தன்னம்பிக்கை' என்ற தலைப்பினில் இளம் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு உள்ளார்.

நெறியாளர்

க. ப. அறவாணன்

# வணிகமும் தன்னம்பிக்கையும்

தேவசேனா செயச்சந்திரன்

மனித வாழ்வியல் கூறுகள் பண்டைக்காலம் தொட்டே பண்பாட்டளவிலும் சமூகப் பொருளாதார அளவிலும் மாற்றம் பெற்றுள்ளன. பண்டைய மக்களின் வாழ்வை அக் காலத்தில் இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகையான நிலப்பிரிவுகளுக்குட்பட்டு வாழ்ந்த மக்கள் அந்தந்த நிலத்தின் இயல்புக்கேற்ற வண்ணம் வாழ்வை மேற்கொண்டனர். மக்களின் சிந்தனை வளர்ச்சி வாழ்வியல் நெறிமுறைகளை மாற்ற உதவின. குழு நிலையில் வாழ்ந்த மக்களிடத்தில் உற்பத்தியும் உற்பத்திக் கருவிகளும் மாற்றங்களை ஏற்படுத்தின.

இதன் விளைவால் மக்களிடத்திலே இருந்த வாழ்வியல் முறைகளும் மாறின.

உற்பத்திப் பெருக்கத்தால் ஒரு பகுதியில் இருந்த மக்கள் பிற பகுதிகளுக்குச் சென்று உற்பத்தி செய்த பொருட்களை விற்றுத் தங்களுக்குத் தேவையான வேறு பொருட்களைப் பெற்று வருவது நடைமுறையாயிற்று. மனித நம்பிக்கையும், நடைமுறைகளும் மக்களை மேலும் வளர்த்தெடுத்தன. உள்ளுணர்வின் வளர்ச்சியும், சிந்தனை வளர்ச்சியும் மனிதனை விலங்கு நிலையில் இருந்து நாகரிக நிலையை அடையச் செய்தன. இந்நாகரிக நிலைகளே மனிதன் தனக்கெனப் பொருட்களைச் சேகரித்து வாழவும், தேவைக்கு அதிகமாக உள்ளனவற்றைப் பிறருக்கு வழங்கி வாழவும் கற்றுத்தந்தன. உழைப்பால் முன்னேற முடியும் என்ற தன்னம்பிக்கை வளர்ச்சியும் மனித வாழ்வில் தவிர்க்க முடியாததாயிற்று. தன்னம்பிக்கையோடு மனிதன் இயற்கைச் சூழலை வென்று நாட்டை விரிவுபடுத்தித் தனது வாழ்வைச் செம்மையுற அமைத்துக் கொண்டமையையும் பண்டைய இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இந்நிலையில் தன்னம்பிக்கை தனிமனித வாழ்விலும் அவனுடைய வளர்ச்சியிலும் பெரும்பங்கு வகித்தது. சமூக வளர்ச்சியில் தன்னம்பிக்கையின் வளர்ச்சி இயற்கைச் சூழலில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வை வளமைபெறச் செய்தது. மனிதனின் தன்னம்பிக்கையே இயற்கைத் தடைகளைத் தாண்டி ஊர்விட்டு ஊர்சென்று, நாடுவிட்டு நாடுசென்று பொருட்களை விற்கவும், புதிய பொருட்களை வாங்கவும் செய்தது. இவ்வகையில் அமைந்த வணிக முறையையும் வணிகத்தை மேற்கொண்டு வாழ்ந்த மக்களுடைய தன்னம்பிக்கை வளர்ச்சியையும் ஒருங்கிணைத்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

### வணிகத்தின் தோற்றம்

பண்டைக் காலம் தொட்டே வணிகம் மக்கள் வாழ்வில் இடம்பெற்று வருகின்றது. மனிதன் இடம்விட்டு இடம் பெயர்ந்து பரவலாக வாழத் தொடங்கிய காலத்தில் அவனுடைய தேவைகள் அதிகமாயின. உற்பத்திக் கருவிகளும், பொருட்களும் பெருகி, நாகரிகம் வளர்ச்சியுற்று மக்கள் திணை வாரியாகப் பிரிந்து வாழுகின்ற சூழ்நிலை மக்களிடையே நிலவியது.

அந்நிலையில் வணிகம் பண்ட மாற்று முறையாகத் தொடங்கியது; வளர்ந்தது. தனக்கு மிகுதியாகக் கிடைத்த பொருட்களைக் கிடைக்காதவர்களுக்குக் கொடுத்து அதற்கு ஈடாகத் தனக்குத் தேவையான பொருட்களைப் பெற்றனர்.

நெய்தல் நில பரத மகள் தன்னிடத்துள்ள மீனைக் கொடுத்துப் பதிலுக்குத் தானியங்களைப் பெறுவதாக,

''முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கொடிறு சொரிந்த
அகன்பெகு வட்டிநிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயிறு நிறைக்கு மூர''[1]

என்று ஐங்குறு நூற்றுப் பாடல் கூறுகின்றது. மேலும், குறிஞ்சி நிலக்குறவமகள் தன்மலைநாட்டில் விளையும் தேனையும் கிழங்கையும், மீன் நறவத்துக்காக விற்பதாகவும், கள், மான், இறைச்சி இவற்றிற்காகக் கரும்பையும், சோற்றையும் கொடுப்பதாகவும் பொருநராற்றுப்படை பாடல் வரிகள்,

''தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும் போ டவல் குத்தோர்
மான்குறையொடு மது மறுக்கவும்''[2]

என உணர்த்துகின்றன.

தொடக்கக் காலத்தில் பண்டமாற்று முறையாக இருந்த வணிகமுறை, கால வளர்ச்சியில் பொருளுக்கு ஈடாக விலை மதிப்புத் தரப்படும் வணிகமாக நடைபெறலாயிற்று. பொருட்களின் மதிப்பு நெல்லின் விலை மதிப்பை வைத்து முடிவு செய்யப் பட்டமைக்குக்

''குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்லிப் பஃறி[3]

என்னும் பட்டினப் பாலை அடிகள் சான்று பகர்கின்றன.

தொடக்கத்தில் பண்டமாற்று நிலை தனி நபர்களால் பரிமாற்றம் செய்யப்பெற்றது. பின்பு மக்களுக்குத் தேவையான பொருட்களை விற்கவும், வாங்கவும் பொதுவான தனி இடங்களைத் தேர்வு செய்து அங்கு வாணிகம் நடைபெற்றது. ஓர்

இடத்தில் விளைந்த தானியங்களையும், பிற விளை பொருட் களையும் பிறிதோர் இடத்திற்கு எடுத்துச் சென்று விற்கும் நிலை வளர்ந்தது. சங்க காலத்திலிருந்து வணிகம் மெல்ல வளர்ச்சி யடைந்த பாங்கினைப்

''பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சார் சிறப்பிற் பட்டினப் பாக்கமும் ..
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போ ரோதையுங் கொள்ளோ ரோதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடியிற் ..[4]

என்று சிலப்பதிகாரப் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

## குலமும் தொழிலும்

சமுதாயத்தில் குடும்ப அமைப்பு ஏற்பட்டு அது வளர்ச்சியுற்ற நிலையில் பரம்பரைத்தொழில் குடும்பச் சொத்தாகப் பாதுகாக்கப் பட்டது. இதன் விளைவு குலத்தொழில் வளர வழிகோலியது.

குடும்ப அமைப்பு தொழில் முறைகளைக் கற்பிக்கும் சமூக நிறுவனமாகச் செயல்பட்டமையால் குழந்தைப் பருவம் முதற் கொண்டே தொழில் முறையும், அதனைச் சார்ந்த செயல்முறை களும் கற்பிக்கப்பட்டன. இந்நிலை பரம்பரையாக வளர்ந்த தொழில் முறைகள் சொந்த உழைப்பின் மூலம் நிறைவேறு வதற்கான வழிகளை வகுத்தன. ஒவ்வொரு தொழிலையும் மேற்கொண்டவர்கள். சமுதாய அமைப்பினால் அத்தொழிலி லேயே ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்நிலையே வணிகத்தை மேற்கொண்ட மக்களுக்கு உடைத்தாயிற்று. இதனை

''வணிகர் பெருங்குலம் விளங்கப் பிறந்தருளிய பின்
அணிகிளர் மெல்லடி தளர்வுற் றசைநடைப் பருவத்தே ...[5]

என வரும் காரைக்கால் அம்மையாரின் புராணத்தின் வழி அறிய முடிகிறது. பரம்பரைத் தொழிலுக்கு முன்னர்க் கூறிய இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாது கள ஆய்வுச் சான்றுகளும் சான்று தருகின்றன. கொடுத்து வாங்கப்பட்ட பட்டியலின் வழி 50 விழுக்காட்டினர் குலத்தொழிலையே தொடர்ந்து மேற்கொண் டிருப்பதாகக் கூறியுள்ளனர். ஏனையோரில் 43 விழுக்காட்டினர் தங்களுக்குக் குலத்தொழில் வணிகம் இல்லை என்றும் வெவ்வேறு தொழிலிலிருந்து வணிகத்திற்கு வந்ததாகவும் கூறியுள்ளனர்.

குலத் தொழிலையே தொழிலாக மேற்கொள்ளுதல் தொல்காப்பியர் காலத்தில் மட்டும் இல்லாது, இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றது. அத்தொழிலைச் செய்பவர்கள் மேன்மைநிலையை வகிக்கின்றனர் என்பதை இன்றைய கள ஆய்வுச் செய்திவழி உறுதிப்படுத்த முடிகின்றது.

தொழில் வழிப் பிரிவுகள் கால வளர்ச்சியாலும், சமூக மாற்றத்தினாலும் சாதிய நிலைக்குட்பட்டன. முதலியார் 36.6 விழுக்காட்டினரும்; வன்னியர் 30 விழுக்காட்டினரும்; செட்டியாரும், பண்டிதரும் 6.6 விழுக்காட்டினரும் ஏனைய சாதியினரான ரெட்டியார், நாயக்கர், மீனவர், பிராமணர், பிள்ளை போன்றவர்கள் 3.3 விழுக்காட்டினரும் இன்று வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பண்டைய காலத்தில் வைசிக குலமாக இருந்து வணிகத்தை நடத்திய நிலைமாறி இன்று வைசிகர் அல்லாதவரான பிராமணர், பிள்ளை, ரெட்டியார், மீனவர், நாயக்கர் போன்ற சாதியினரும் வணிகத்தை நடத்தி வருகின்றனர் என்பதைக் கள ஆய்வு மெய்ப்பிக்கிறது.

**சொந்த முயற்சி**

எந்த ஒரு செயலில் ஈடுபடவும் சொந்த முயற்சி தேவையான தாகும். பரம்பரையையும், குலத்தையும் மட்டும் கூறிக்கொண்டு உழைக்காமல் இருந்துவிடக் கூடாது. வணிகக் குலத்திலேயே தோன்றியிருந்தும் கோவலனின் உழைப்பின்மை அவனை வேறு திசையில் செல்ல வைத்தது. எனவே தனிமனிதச் செயல் பாட்டிற்கும், அவனது உயர்வுக்கும் உழைப்பு, பட்டறிவு, கல்வி முதலியவையும் உந்து சக்திகளாக உள்ளன.

> ''யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
> சார்ந்துணையும் கல்லாத வாறு''[6]

இக்குறள் வழிக்கல்வி கற்றவனுககு எல்லா ஊரும் தன் சொந்த ஊராக, இருத்தலைப் போன்றே தன்னம்பிக்கையோடு சொந்த முயற்சியோடும் செயல்படுபவனுக்கு அனைத்துமே வெற்றியாக முடியும். இக்குறளுக்கு இலக்கணமாக, இன்று வணிகத்தில் ஈடு பட்டுள்ளோரில் 43 விழுக்காட்டினர் தமது சொந்த தொழில் (குலத்தொழில்) வேறாக இருப்பினும் சொந்த முயற்சியின் காரணமாக வணிகத்தை மேற்கொண்டு வெற்றி காண்கின்றனர்'

**கல்வியும் உழைப்பும்**

கல்வி கற்றவர்களே வாழ்வில் முன்னேற முடியும் என்ற கருத்து வணிகர்களின் வாழ்வியல் நிலையில் பொய்த்து விடுகின்றது. கல்வி என்பது பட்டறிவு, தன்னுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டதாகும். இவ்வணிகர்கள் தங்களிடம் உள்ள திறமையை மதித்து வாழுபவர் ஆவர்.

> "அறிவு சிறிதளவாயிருப்பினும் தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு பெருமளவில் ஒருவருக்கு இருக்குமானால் அவர் எந்தத் துறையிலும் பிரகாசிக்க முடியும் இது என் அனுபவம்."[7]

என்று தாமஸ் ஆல்வா எடிசன் கூறியுள்ளார்.

வணிகம் செய்யத் தங்களுக்குப் போதிய கல்வி இல்லை என்று கூறிவிட்டுப் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் தன்னை நம்புகிறவன் பிற எதையுமே வாழ்வின் தடைக்கல்லாக எண்ண மாட்டான். இன்று வணிக நிறுவனங்களை நடத்துகின்ற உரிமை யாளர்களின் கல்வி நிலை பின்வருமாறு,

| | படித்தவர் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|
| 1-இல் இருந்து 8-ஆம் வகுப்பு | 4 | 13.3% |
| 10-ஆம் வகுப்பு | 9 | 30% |
| 12-ஆம் வகுப்பு | 7 | 20% |
| இளநிலைப் பட்டப்படிப்பு | 5 | 16% |
| முதுகலைப் பட்டப்படிப்பு | 1 | 3% |
| தொழிற்கல்வி | 3 | 10% |

இதிலிருந்து 12-ஆம் வகுப்பிற்குள்ளாகவே தமது படிப்பை நிறுத்திக் கொண்டு தன் சொந்த உழைப்பைக் கொண்டு வணிகம் செய்து வாழ்வில் மேன்மையடையும் வணிகர் மிகுதியாவர். முதுகலைப் பட்டப் படிப்புப் படித்தவர் ஒருவரே உள்ளார் என்பதை நோக்குகையில் தற்காலக் கல்விக்கும் தொழிலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை உணரலாம். வணிகத் துறையில் திறமையும் உழைப்பும் தன்னால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை எண்ணமும் கொண்டவர்களே மிகுதியாகத்

காணப்படுகின்றனர். வணிகத்தில் கல்வி என்பது பட்டறிவும், விடாமுயற்சியுமே எனலாம்.

**உழைப்பே மூலதனம்**

கற்றவர்களின் வணிக வளர்ச்சி நிலைகளும், கல்லாதவர்களின் வணிக வளர்ச்சி நிலைகளும் ஒரே சீரான நிலையில் உள்ளமையைக் கள ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. இவ்விருவருமே தங்களுடைய வணிக வளர்ச்சிக்குக் காரணம் கூறுகையில் 100 விழுக்காடு தம் சொந்த உழைப்பே எனப் பதில் அளித்தனர். வணிகத்திற்குப் பொருளாதாரம் அவசியம் என்போர் 33.3 விழுக்காட்டினரும்; கல்வி தேவை என்போர் 10 விழுக்காட்டினரும்; அரசுத்துணை என்போர் 10 விழுக்காட்டினரும் உள்ளனர். எனவே, சொந்த முயற்சியே வணிகத்தின் சிறப்பு நிலைக்குக் காரணமாகின்றது. பிற கூறுகளின் உதவியோடு தொழிலையும் தொடங்கி அதில் வெற்றி காண முடியும் என்பதைக் கள ஆய்வு சுட்டுகின்றது.

> ''சுறுசுறுப்பு கடன்களை அடைப்பது மட்டுமல்ல. எதையும் எதிர்பார்க்காமல் கடமையைச் செய்து கொண்டே போகும் அரிய சாதனம்தான் சுறுசுறுப்பு. சுறுசுறுப்புடனும் தன்னம்பிக்கையுடனும், தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்''.[7]

என்ற பெஞ்சமின் பிராங்களின் கூற்றிற்கு இணங்க, வணிக நிறுவனங்கள் தொடங்கப்பட்டது முதல் இன்றைய நிலைவரை நோக்குகையில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக 26.6 விழுக்காட்டினரும்; சீரான முன்னேற்றம் இருப்பதாக 66.6 விழுக்காட்டினரும்; பின்தங்கிய நிலையில் உள்ளதாக 3.3 விழுக்காட்டினரும் பதிலளித்தனர். பின்தங்கிய நிலையில் இருப்பதாகப் பதில் அளித்தோர் கடை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1990-இன் இறுதி என்று குறிப்பிட்டனர்.

**சிக்கல்களைத் தீர்க்க முற்படுதல்**

செயல்களைச் செய்ய முற்படும்போது சிக்கல் எழுவது இயற்கையே. தங்களுக்கு நிகழும் சிக்கல்களைப் பல்வேறு வகையில் தீர்வு காண்கின்றனர். சிக்கல்கள் துறைக்குத்துறையும்,

நேரம், சூழல், இவற்றுற்கு ஏற்பவும் வேறுபட்டமைகின்றன. அந்தச்சிக்கல்களுக்கு முடிவெடுக்கும் திறன் தனிநபர்களைப் பொறுத்தேஅமைகின்றது. சிக்கல்கள் வணிகத்தில் எழும்போது,

1. தொழில் நுட்ப அறிஞர்களை நாடுதல்
2. சொந்தமாகச் சிந்தித்து அறிய முற்படுதல்
3. மூடநம்பிக்கைகளைக் கையாளுதல்

எனும் நிலைகளை வணிகவியலார் கையாளுகின்றனர்.

## தொழில் நுட்ப அறிஞர்களை நாடுதல்

தன்னம்பிக்கை வலுவடைய முதலில் அறியாமையைப் போக்கிக் கொள்ளுதல் அவசியம். எந்தத் துறையைச் சார்ந்தவரும் தன்னுடைய துறைசார்ந்த அறிவுடையோர் அல்லது அத்துறையில் கைதேர்ந்த தொழில் நுட்ப அறிஞர்களை நாடுதல் அவர்களுடைய வளர்ச்சிப் படிக்கு உறுதுணையாக இருக்கும். வணிகத்தில் சிக்கல் ஏற்படும் பொழுது நன்கு தோய்ந்தவர்களை நாடி ஆலோசனை கேட்டு நடத்தல் சிறந்தது. அவர்களது யோசனைப்படிச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதால் இனிஅச்சிக்கல் வராமல் இருக்கவும் வழி தோன்றும். இதனால், சிக்கலுக்குரியவர் அறியாமை நிலையிலிருந்து அறிவுநிலை எய்துகிறார். இன்று தொழில் நுட்ப அறிஞர்களின் கருத்துகளை ஏற்று நடக்கும் நாடுகளே பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளாக விளங்குகின்றன. அறியாமை இருள் விலகவிலக அறிவோடு கூடிய தன்னம்பிக்கை உறுதிப்படுகிறது. கள ஆய்வில் தங்கள் சிக்கல்களுக்கு அறிஞர்களை நாடி ஆலோசனை பெறுபவர்கள் 23.3 விழுக்காட்டினரே உள்ளனர்.

## சொந்தமாக முடிவெடுத்தல்

ஒருவன் தன்னுடைய தவற்றை அறிந்து திருத்திக் கொள்கையில் அவனது ஆளுமை வளர்ச்சி கூடுகிறது. மீண்டும் அந்தத் தவற்றைச் செய்யாமல் இருக்க முடிகிறது. கல்வியறிவு கொடுக்காததைப் பட்டறிவுத் (அனுபவம்) தருகிறது. சிக்கல்கள் ஏற்படுவதற்கான சூழலை அறிதல், இனி அதுபோன்ற சிக்கல்கள் வராவண்ணம் செயல்படுதல், தன்னைக் காத்துக் கொள்ளுதல் எனும் முறைகளே அறிவு சார்ந்த நிலையினை உடையன,

சிக்கல்களுக்குச் சொந்தமாக முடிவெடுப்பதை 50 விழுக்காட்டினர் பின்பற்றுகின்றனர்.

### மூடநம்பிக்கையைக் கையாளுதல்

தன்னம்பிக்கைக்குப் புறம்பானதும், அறிவு நிலைக்கு எதிரானதுமாக இருக்கக் கூடியது மூடநம்பிக்கை. அறியாமை நிலையில் உள்ளவர்களே இம்முறையைப் பின்பற்றுவர். தனது திறமை மீது நம்பிக்கை இல்லாதவர்களே பிறவற்றின் மீது நம்பிக்கை கொண்டு அவற்றைத் தம் வாழ்விலும் பின்பற்றுகின்றனர். அவ்வகையில் தன் மீது நம்பிக்கை இல்லாமல் பிறவற்றின் மீது கொண்டிருக்கின்ற எந்த நம்பிக்கையுமே மூடநம்பிக்கையில் அடங்கும். அவையாவன,

1. இறை நம்பிக்கை.
2. கிழமைகள் மீதான நம்பிக்கை.
3. சோதிடம் / வார / இராசிப்பலன் பார்த்தல்.
4. நேர்த்தல் கடன் செய்தல்.
5. திருஷ்டிக் கழித்தல்.

### இறை நம்பிக்கை

தன்னை மீறிய சக்தி ஒன்று உள்ளது என்பதை அன்று முதல் இன்று வரை மக்கள் நம்பி வருகின்றனர். தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணம் தங்களுடைய சொந்த உழைப்பே என்று வணிகர்கள் கூறினாலும், கள ஆய்வில் 90 விழுக்காட்டினர் இறை நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். தன்னை, தன்மனத்தைக் கட்டுப்படுத்தவும், தீயவழிக்குத் தன்னைக் கொண்டு செல்லாமல் இருப்பதற்கும் இறை நம்பிக்கையைப் புகுத்தினர். மனிதன் தன்னுடைய குறிக்கோளை அடைவதற்கு நேர்மையான வழியைப் பின் பற்றாமல், பிறவற்றின் மீது நாட்டம் கொள்கிறான். நேர்மையான வழியைப் பின்பற்றி ஒன்றை அடைய நீண்டநாள் ஆகும் என்பதால் பிறவழிகளை மேற்கொள்ள முனைகிறான். இந்தச் சூழ்நிலையில் மனத்தைக் கட்டுப்படுத்த அவனுக்கும் மேலாகச் சக்தி ஒன்று இருப்பதாக உணர்ந்து அதற்குக் கட்டுப்பட்டு நடக்கலானான். இவ் உணர்வே இறை உணர்வாகித் தன்னையும்,

தன் வாழ்க்கைப் பாதையையும் நிலை நிறுத்திக்கொள்ள மனிதனால் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

இறை நம்பிக்கை என்பது மூடநம்பிக்கை பாற்பட்டது. எனினும், அது தனிமனித ஆளுமை வளர்ச்சிக் கூறுகளை வளர்க்கவும் நேர்மையான வழியைப் பின்பற்றவும், மனிதனை நெறிப்படுத்தும் காரணியாகவும் விளங்குகிறது. இதையே ஆளுமைக் கோட்பாட்டறிஞர்கள் ''ஒருவன் வளர்ச்சிக்கு அவனுடைய எண்ணமே அடிப்படைக் காரணமாகும்'' என்கின்றனர். அந்த எண்ணத்தை ஒவ்வொரு நாளும் கொண்டுவர இறைவழிபாடு துணையாக அமைகின்றது. எனவே இறை வழிபாடு ஆளுமை வளர்ச்சிக்கு ஒரு கூறாகவும், தன்னம்பிக்கையின் செயல்பாட்டிற்கு உதவியாகவும் உள்ளமையைக் கள ஆய்வின் வழி உணர முடிகின்றது.

**கிழமைகள் மீதான நம்பிக்கை**

வாரத்தில் ஏழு நாட்கள் இருப்பினும், வெள்ளிக்கிழமையையே நல்ல நாளாகக் கருதுகின்றனர். அந்நாளில் மட்டும் வணிகக் கடைகளுக்குப் பூசை, ஆராதனை போன்றவற்றை மேற்கொள்கின்றனர். இவையல்லாது திருவிழா நாட்களில் கடைகளுக்குப் பூசை செய்வதாக 90 விழுக்காட்டினரும், திருவிழா போன்ற நாட்களில் மட்டுமே பூசை செய்வதாக 56.6 விழுக்காட்டினரும் விடையளித்தனர். நல்லநாள் பார்த்தலும், நேரம் பார்த்தலும் வழக்கில் உள்ளன.

**சோதிடம் வார இராசிபலன் பார்த்தல்**

சோதிடம் வார, இராசிபலன் பார்த்தல் எனும் மூன்றுமே இந்திய மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து நிற்கின்றன. மனிதன் தனது வாழ்நாளில் நல்லன நடக்கும்பொழுது அதைத் தன் சொந்த முயற்சி எனக் கருதிப் பெருமை பட்டுக்கொள்கிறான். அல்லன நடக்கும்பொழுது வருந்துகிறான். உழைப்பின்றிச் சோம்பித்திரியும் மனம் படைத்தவர்களே விதியின்மீது நம்பிக்கை வைப்பதும் ஊழ்வினைகளைக் காரணம் காட்டுவதும் நல்ல நேரம் பார்ப்பதும் செய்கின்றார். சமுதாயத்தை மையமிட்டே தனிமனித நடத்தைகள் நிர்ணயிக்கப் படுகின்றன. உழைப்பையே 100 விழுக்காட்டினர் நம்பி இருந்தாலும்,

சோதிடம், வார இராசி பலன் பார்க்கும் பழக்கத்திற்கு மக்கள் பொதுவாக அடிமைப்பட்டுள்ளனர். கள ஆய்வின் புள்ளி விவரப்படி 56 விழுக்காட்டினர் இவற்றில் நம்பிக்கையை கொண்டவர்களாக உள்ளனர்.

**நேர்த்திக் கடன்**

சோதிடம், வார, இராசிபலன் போன்றவை நாணயத்தின் ஒருபக்கம் என்றால், அதன் மறுபக்கமாவது; பலனை அடையவும்/ அடைந்ததற்காகச் செய்யப்பெறும் சடங்கும் நேர்த்திக் கடனும் ஆகும். ஒரு பக்கம் பெற்ற பலனும், மறுபக்கம் பலனை அடையச் செய்யும் வழிமுறைகளும் நேர்த்திக்கடன் மேன்மேலும் செய்ய வழி வகுக்கின்றன. நேர்த்திக்கடன் செய்ததும் தங்களுடைய சிக்கலுக்கு விடிவு கிடைத்து விட்டதாக மக்கள் கருதுகின்றனர். சிக்கலுக்குரிய காரணம் எதுவென அறியாமல் மீண்டும் மீண்டும் அதே சிக்கலுக்கு ஆட்படுகிறார்கள். நேர்த்திக்கடன் செய்பவர் 16.6 விழுக்காட்டினர்.

மூடநம்பிக்கை நேர்த்திக்கடனில் முதன்மை வகிப்பது 'திருஷ்டி'க் கழித்தல் 'கல்லடி பட்டாலும் கண்ணடி படக் கூடாது' என்ற பழமொழி திருஷ்டிக்கழித்தல் குறித்து வழங்கப் பெறுவது. தங்கள் வியாபாரம் நல்ல நிலையில் நடந்தால் அதைக் கண்டு பிறர் பொறாமைப்படுவார்கள் என்று எண்ணு கின்றனர். இதனால் வியாபாரம் தொடர்ந்து நடைபெறாது என வணிகர்கள் நினைப்பதால் அதற்குப் பரிகாரமாகத் திருஷ்டிக் கழித்தல் மக்களிடையே உள்ளது. திருஷ்டிக் கழிப்பதால் வருமானம் தடைபடாமல் இருக்குமென நம்புகின்றனர். திருஷ்டிக் கழிப்பதை 60 விழுக்காட்டினர் பின்பற்றுகின்றனர்.

**முடிவுரை**

மனித ஆளுமைப் பண்புகளுக்கு அடிப்படையாக விளங்கும் தன்னம்பிக்கை, மக்களது வாழ்விற்கு முதன்மையானதாக விளங்குகிறது.

தன்னம்பிக்கை வணிகத்தில் காலந்தோறும் செயலாற்றி மனிதனின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தமையை இலக்கி யங்கள் வாயிலாகவும் களஆய்வின் வாயிலாகவும் உணரமுடிகிறது.

பண்டைக்காலம்தொட்டுக் குலத்தொழில் முறையில் வாழ்ந்த மக்கள் மட்டும் அல்லாமல் தன்னம்பிக்கையின் விளைவால் அனைத்துப் பிரிவு மக்களும் வணிகத்தில் ஈடுபட்டிருப்பதைக் கட்டுரை வழி அறிய முடிகிறது.

தன்னால் முடியும் என்னும் நம்பிக்கை மனித ஆற்றலுக்கு அடித்தளமாக அமைந்தாலும், இறைவழிபாடு அதை நேர்வழியில் கொண்டுசெல்ல உறுதுணையாக நிற்கிறது.

வணிகத்தில் ஈடுபடுவோர் தன்மீது நம்பிக்கை கொண்டிருந்த போதிலும், சில சமயங்களில் மூட நம்பிக்கைகளுக்கு இடமளித்து வருவதால் அவர்களின் வளர்ச்சிப் பாதையில் சீரான முன்னேற்றம் உள்ளமையைத் தரவுகள் வழி அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. ஐங். 47: 1-3.
2. பொருநர்: 24-27.
3. பட். பாலை: 28-30.
4. சிலம்பு. இந்திர விழாவூரெடுத்த காதை 57-63
5. காரைக்கால் அம்மையார் புராணம், ப. எ. 3
6. குறள் 397.
6. தன்னம்பிக்கை தரும் பொன்மொழிகள். பக். 40.
7. தன்னம்பிக்கை தரும் பொன்மொழிகள். பக். 15

கேசவ. பழனிவேலு, தமிழியல் துறையின் முதலாவது முதன்மைப் பட்டதாரி. தமிழர்தம் குடிப் பழக்கம் எனும் தலைப்பில் நூலினை வெளியிட்டவர். தமிழ்த்துறையிலேயே முனைவர் பட்டத்தை மேற்கொண்டு வருபவர்.

நெறியாளர்

**க. ப. அறவாணன்**

---

# தமிழர்தம் கல்வி வளர்ச்சி

**கேசவ. பழனிவேலு**

---

சங்க காலம் பொற்காலமா, இல்லையா என்பது பற்றிய வேறுபாடுகள் ஆய்வுகொள்ளத் தொடங்கிவிட்டன. சங்க காலம் பாண் நாகரிகக் காலம் என்ற கருத்தும் இனக்குழுக்கள் கலைந்து அரசுகள் உருவான காலம் என்ற கருத்தும் ஆய்வாளர்களால் பெரிதும் பேசப்பெறுகின்றன. வேட்டுவ வாழ்க்கை முதல் - உணவுச் சேகரிப்பு வாழ்க்கை முதல் - கடல்கடந்து வாணிகஞ் செய்யும் பொருளாதார மேம்பாட்டு நிலையிலான வாழ்க்கை வரை அனைத்துச் சமூக வளர்ச்சி நிலைகளையும் சங்க இலக்கியம் பதிவு செய்து வைத்துள்ளது. பொதுவாகச் சங்க காலத்தை இனக்குழு வாழ்க்கையின் இடைநிலை அல்லது கடைநிலை எனக் கொள்ளலாம்.

**நிலமும் தொழிலும்**

பழந்தமிழர்கள் தமிழ் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்து வைத்திருந்தனர். இந்நிலப் பிரிப்பு முறை இலக்கியம் சார்ந்தது மட்டுமன்று மனித குல வளர்ச்சியுடன் தொடர்புடையது. இந்த ஐந்து நிலங்களுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்கள் குறிக்கப் பெற்றிருந்தன. ஒவ்வொரு நிலப்பகுதியும் திணையொழுக்கமாக ஒருசிலவற்றைக் கொண்டிருந்தது. இந்நிலங்களில் வாழ்ந்த மக்களும் அவர்தம் தொழில்களும் உரைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு நிலத்திற்குமான தொழில்களை அவ்வந் நிலத்திற்குரிய - அவ்வந்நிலத்து வாழ்ந்த - மக்களே மேற்கொண்டனர்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஒவ்வொரு நிலத்திற்குமான தொழில்களைக் குறிப்பிட்டுச் செல்கின்றனர். குறிஞ்சி நிலத்தில் தேன் அழித்தல், கிழங்கு அகழ்தல், திணை முதலியன விளைவித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிஞ்சி நில மக்களாகிய கானவர், வேட்டுவர், வெற்பன், சிலம்பன், பொருப்பன், கொடிச்சியர், குறத்தியர் என்போர் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர். முல்லை நிலத்தவரான அண்ணல், தோன்றல், கோவலர், இடையர், பொதுவர் என்போர் தமது நிலத்திற்குரிய தொழில்களாகிய ஆநிரை மேய்த்தல், வரகு முதலியன பயிரிடுதலில் ஈடுபட்டுள்ளனர். நெய்தல் நிலத் தொழிலான மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், அவற்றை விற்றல் போன்றன நுளையர், திமிலர், பரதவர், துறைவன், சேர்ப்பன் ஆகியோரால் நிகழ்த்தப் பெற்றுள்ளன. மருத நிலத்தில் உழவுத் தொழில் களமர், கடையர், மகிழ்நன், உழவர் ஆகியோரால் நிகழ்த்தப்பெற்றுள்ளது. பாலை நில மக்களான எயினர், எயிற்றியர், மறவர் போன்றோர் ஆறலைத்தலைத் தமது தொழிலாகக் கொண்டிருந்தனர்.

''சுடப்பட்ட கரிந்த புனத்தை மயங்க உழுது கொலைக்கண் கானவர் ஐவன நெல்லோடு தினையை விதைத்தனர் (புறம். 159), பலாவின் கனியைக் கொள்ளும் பொருட்டுக் குறவர் ஆங்காங்குக் குடிசையை நாட்டியிருந்தனர் (அகம். 12) பசுக்களை மேய்ச்சலினின்றும் மீட்டு வரும் கோவலர் புல்லாங்

குழலுடன் பொருந்த யாழின்கண் செவ்வழிப் பண்ணை இசைத்துப் பாடினர் (அகம். 214), தம்மிடம் வந்து இரந்தோர்க்கு மீன்களைக் கலன் நிறையச் சொரிந்து எஞ்சியவற்றை விலை கூறி விற்றுத் திண்ணிய மணற்பரப்பில் துறைவன் தூங்கினான் (அகம். 30) கரும்பு நெற்கழனிகளிடத்தே தொழில் செய்யும் களமரின் இசையொலி மிகுவதால் நாரைகள் அகன்று போயின (பொரு. 193, 194) கொடிய வில்லையுடைய எயினரின் ஊரிலிருந்து ஆறலைக்க முயலும் கொலைத்தொழில் மறவர் வில்லிடை மாய்ந்தோரின் பிணத்தை ஆலமரத்திலிருந்து காக்கைகள் கூட்டம் கவரும்'' என ஐந்து நிலத்து வாழ்ந்த மக்களைப் பற்றியும் அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில் களைப் பற்றியும் சங்க இலக்கியம் தெரிவிக்கிறது. ஒவ்வொரு நிலத்திற்குரிய தொழிலையும் அவ்வந்நிலத்திற்குரிய மாந்தர்களே மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு நிலத்திற்குரிய தொழிலையும் அவ்வந்நிலத்திற்குரியவரே மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை அன்றைய வாழ்க்கைத் தேவையை ஒட்டியதாக இருந்துள்ளது. பொருளாதார உயர்வு கருதியோ பிற காரணத்திற்காகவோ வேறு தொழில்களை மேற்கொள்ளும் முயற்சி காணப்படவில்லை.

ஐந்து நிலப்பிரிவுகளிலும் அவை சார்ந்த தொழில் பிரிவு களிலும் உயர்வு தாழ்வு என்ற எண்ணம் அக்காலத்தில் தோன்றவில்லை. இயல்பான இயற்கைப் பிரிவாகவே இவை காணப்பெறுகின்றன. வாழிடத்திற்குத்தக வாழ்க்கைச் சூழலை அமைத்துக் கொள்ளுதலே இங்குக் காட்டப்படுகிறது. நிலத்திற் குரிய மக்களின் பெயர்களைக் குறிக்கும் போது.

> பெயரும் வினையுமென் றாயிரு வகைய
> திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே
> (தொல். பொ. அகத். 20)

எனத் தொல்காப்பியம் அவ்வந் நிலத்தில் வாழ்ந்துவரும் குல மக்களின் பெயர் எனவும் தலைமக்களின் பெயர் எனவும் இரண்டு வகைப் பெயரைக் கூறுகிறது. இவ்விரண்டு வகைப் பெயர்களும் பொருள் பற்றி வரும் பெயராகவும் (இயற்பெயராகவும்) தொழில் பற்றி வரும் பெயராகவும் கூறப்பெற்றன என்பார் நச்சினார்க் கினியர். பிற நிலத்து வாழாத எல்லா நிலத்திற்கும் உரிய மேன்மக்களை ஒழித்து நிலம் பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து ஓதினார் என்பார் இளம்பூரணர்.

தொல்காப்பிய நூற்பா எல்லா நிலத்திற்கும் உரிய மேன் மக்களைச் சுட்டாமல் குறிப்பிட்ட நிலம்பற்றி வாழும் கீழ் மக்களையே குறித்தது என இளம்பூரணர் பொருள் கொள்ளுதல் சிந்திக்கத்தக்கது. இளம்பூரணரின் உரைக்கு விளக்கமளிக்கும் அருணாசலம் பிள்ளை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போர் ஒரு நிலத்திற்குரியரல்லர், எல்லா நிலத்தும் வாழும் உரிமை பெற்றவர். அவர்கள் அவ்வந் நில மக்களைக் காட்டிலும் மேம்பட்டவர்; அதனால் திணைநிலைப் பெயரென்றது நால்வருணத்தாரைக் குறிக்காமல் நிலத்து நிலையாக வாழும் குறவர், ஆயர் போன்றோரையே குறித்தது என்பார்.[1]

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மக்களன்றி நால்வருணத் தவரும் அந்நிலங்களில் வாழ்ந்ததாகக் கூறப்பெறுவது பிற்காலத் தெழுந்த வருண முறையினை வலிந்து ஏற்றுதலாகவே உள்ளது. நால்வருணச் சிந்தனையைத் தமிழகத்திற்குரியதாகக் கொள்ள இயலாது. அயலகத்திலிருந்து தமிழகத்திற்கு வந்ததாகவே கொள்ளவேண்டும். அரசும் வணிகமும் தோன்றித் தனது வல்லாண்மையைக் காட்டிய நிலை, பிற்கால நிலையே எனலாம். சங்க காலத்தில்தான் அரசின் தோற்றமும் வணிகத்தின் தோற்ற மும் சிறிது சிறிதாக அரும்புகின்றன. இந்நிலையில் நால்வருணத்து மக்களும் பழைய இனக்குழு மக்களான அவ்வந் நிலத்திற்குரிய மக்களுடன் வாழ்ந்தனர் எனக் கொள்வது மறுபார்வைக்குரியது. வருண அமைப்பு முறையில் ஒவ்வொரு வருணத்தவருக்கும் தனித்தனித் தொழில்கள் கூறப்படுகின்றன. தொல்காப்பியம் நால்வருணத்தவரைப் பற்றியும் அவர்க்குரியவற்றைப் பற்றியும் அவர்தம் தொழில்களைப் பற்றியும் கூறுகிறது. சங்க இலக்கியத் திலும் இவர்தம் தொழில்கள் ஆங்காங்குச் சுட்டப் பெறுகின்றன. அந்தணர்க்குரியவையாக ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட் பித்தல், ஈதல், என்பவை காட்டப்படுகின்றன. அந்தணர் தம் ஓதல் இங்குப் பேசப் பெறவில்லை.

### தந்தை மகனுக்குப் பயிற்றல்

தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறிப்பிடும் குலமக்கள் அந்தந்த நிலத்து வாழ்ந்த மக்கள். இவர்கள் தமிழகத்திற்கான பண்பாட்டினை முழுவதும் கொண்ட பழைய குடியைச் சார்ந்தவர்கள். ஐந்து நிலத்து வாழும் மக்களின் தொழில்களைச்

சுட்டும்போது கல்வி தனியே சுட்டப்பெறவில்லை. கல்வி ஒரு தனிப்பட்ட தொழிலுக்குரியதாக அமைந்திருக்க வில்லை. அதற்குக் காரணம் கல்வி அன்றைய வாழ்க்கைக்கு இன்றி யமையாததொரு கூறாக விளங்கவில்லை. இங்குக் கல்வி எனக் குறிக்கப்பெற்றது ஏட்டு அல்லது படிப்புக்கல்வியாகும். அக் காலத்தில் மக்களின் சமூக நிலைப்பாடு கல்வியைச் சார்த்தி நிர்ணயிக்கப் பெறவில்லை. தொல்காப்பியம் உயர்ந்தோர் என்ற சொல்லைப் பலவிடங்களில் ஆள்கின்றது. 'உயர்ந்தோர்' எனக் குறிக்கப் பெற்றவர்களைக் கல்வியால் உயர்ந்தோர், பொருளால் உயர்ந்தோர், வகுப்பால் உயர்ந்தோர் எனப் பல விதங்களில் பொருள் கொள்ளலாம். எனினும் உயர்ந்தோர் என்பதற்குக் கல்வியால் உயர்ந்தோர் என்றே பொருள் கொள் கின்றனர். உயர்வு, தாழ்வு என்ற நிலை இனக்குழு மக்களான பழந்தமிழர்களிடம் சிறிதும் இல்லை. மக்களிடம் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை இல்லாத நிலையில் கல்வியுடன் சார்த்தித் தாழ்வு கற்பிக்கப் பெற்றது பிற்காலத்திய சிந்தனையே எனலாம்.

கல்வி என்ற சொல்லிற்கு நிலையானதொரு வரையறையை அளித்தல் எளியதன்று. இச்சொல் காலந்தோறும் பல்வேறு பொருளில் வழங்கப்பட்டு வந்திருக்க வேண்டும். பொதுவாக 'அறிதல்' அடிப்படையில் கல்வி என்ற சொல் பயன்படுத்தப் பெற்றதாகக் கொள்ளலாம். இனக்குழு மக்களான பழந்தமிழர் களிடம் கல்வி பற்றிய வரையறுத்த சிந்தனை எதுவும் இல்லை என்றே கூறவேண்டும். இவர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மட்டுமே முதன்மையாகக் கொண்டு உற்பத்தி செய்து வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். இவர்கள் மேற் கொண்ட தொழில்கள் உடலுழைப்புச் சார்ந்தவைகளாகவே இருந்தன. இவர்கள் உழைப்பை முதன்மைப்படுத்திய மக்களாக இருந்தனர். அதனால் இவர்கள் தமது முன்னோர்களிடம் இருந்து தொழில் புரியும் முறையை உணவுத் தேவையைத் தீர்த்துக் கொள்ளும் வழிமுறையைக் - கற்றனர். இது பெரும் பாலும் நேரடியாகப் பார்த்து அறிதலாகவே இருந்தது. பார்த்து நிகழ்த்தும்போது ஏற்படுகின்றதவறுகளைத் தநதை திருத்தினார். தவறுகளைப் பழக்கத்தின் வழித் தானே திருததிகொண்டு தொழில் புரிதலை மேற்கொண்டனர். இத்தகைய நிலையினை

முயன்று தவறிக் கற்றல் (Trail and error) எனக் கூறலாம். தந்தை தனது மகனுக்குத் தொழில் செய்முறைகளைக் கற்றுக் கொடுத்தது அறிதலின் அடிப்படையில் கல்வியானது. ஏட்டுக் கல்வி தோன்றாத நிலையில் தொழில் செய்முறைகளையே மக்கள் கற்றனர். இந்த அனுபவக் கல்வி தொழில் நிகழ்த்தும் சூழலுக்கேற்பப் பெரியோர்களால் தமது இளையோருக்கு அளிக்கப் பெற்றது.

தொழில் செய்முறைகள் முறைப்படுத்தப்பெற்ற கொள்கை களாக அமைக்கப் பெறவில்லை. அதாவது அன்றைய நிலையில் மேற்கொள்ளப் பெற்ற வேட்டையாடல், பயிரிடுதல், கைத் தொழில்கள் முதலியன தனித் தனிக் கோட்பாடுகளாக உருவாக்கப் பெறவில்லை. இவை தனிக் கோட்பாடுகளாக உருவாக்கப் படாமையால் இவற்றைப் பயிற்றும் நிலை எழ வில்லை. தொழில் புரிதலுக்கான பயிற்சிகள் அந்தந்தத் தொழில் புரியும் களங்களிலேயே அளிக்கப் பெற்றன. தொழில்புரி களங் களில் பயற்சியளிக்கப் பெற்றதால் தொழில் செய்முறைகளைத் தனியே பயிற்றுதல் என்ற கல்வி முறை தோன்ற வழியின்றிப் போனது. இதனால் களங்களுக்கு வராதவர்க்கு அவற்றைக் கோட்பாடுகளாக்கிச் செய்முறைகளைப் பயிற்ற வேண்டிய தேவை ஏற்படவில்லை. அப்படிக் கோட்பாடுகளாகப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற சிந்தனையும் அன்றைய மக்களிடம் எழவில்லை. தன் குடும்பத்தாருக்கு உதவுதலின் மூலம் கற்றலாகவே தொழில் கல்வி இருந்தது. தந்தை தன் மகனுக்குக் கல்வியைக் கற்பித்த தால் ஆசிரியர் என எவரும் தோன்றவில்லை. அதாவது தொழில் கற்பிக்கும் தனிப்பட்ட ஆசிரியர் எவரும் அக்காலத்தில் இலர்.

**கற்றல் — வித்தும் விளைவும்**

கல்வி என்பதற்குப் பொதுவாகக் கற்றல் (Learning) என்ப துடன் இணைத்துப் பொருள் கூறப்படுகிறது. பிறப்பு முதல் நம்மிடம் இயற்கையாக அமைந்து காணப்படாமல் நாம் பின்னர் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும் கற்றல் என்ப தனுள் அடங்குவனவாம்.[2] இதன்வழி உலகியல் அனுபவங்களின் வழி பெற்ற அறிவு கல்வி எனப் பெறுகிறது. கல்வி என்ற சொல்லின் இன்றைய பயன்பாடு அனுபவம் வழிக் கற்றலைக் குறிப்பதன்று. மாறாக ஏட்டுக் கல்வியைக் குறிக்கிறது. இன்று

படித்தல், வாசித்தல் எனும் பொருள்களிலேயே 'கல்வி' எனும் சொல் வழங்கப்பெறுகிறது. இனக்குழு மக்களிடம் எழுத்தறிவு இல்லை. எழுத்தறிவு இல்லாத நிலையில் தொழில் கற்றலையே கல்வி எனக் குறித்துள்ளனர்.

தொல்காப்பியம் சுட்டும் ஓதல், கல்வியாகக் கொள்ளப் பெறுகின்றது. தொல்காப்பியம் பொருள், ஓதல், தூது, பகை முதலியவற்றைப் பிரிவுக்கு அடிப்படையாகக் காட்டுகிறது. இந்தப் பிரிவுகளில் ஓதலும் தூதும் உயர்ந்தவர்களுக்காக வரையறுக்கப் பெற்றுள்ளன. பொருள்வயின் பிரிவு அனைத்து மக்களுக்கு மானது. பொருள்தேடும் நிலையும் தூது, ஓதல் பொருட்டுப் பிரியும் நிலையும் பழைய இனக்குழு மக்களிடம் காணப்பெற வில்லை. அரசும் வணிகமும் வளர்ந்த நிலையிலேயே இவை காணப்படுகின்றன.

பழந்தமிழர்களிடம் கணித அறிவு மிகுந்திருந்தது. மிகை எண்களைக் குறிக்கும் பல பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப் பெறுகின்றன. ''நாழிகைக் கணக்கர் இரவில் வானோக்கிக் காலக் கணக்கை – கணிதத்தை - ஆராய்வர்'' எனக் குறுந்தொகைப் பாடல் (261) சுட்டுகிறது. ''இரவுத்தலை மண்டிலம் - திங்கள் மண்டிலம் – கடலிடத்துத் தோன்றும்போது அலைகள் மிகும்'' என நற்றிணை (375) உரைக்கிறது. வானவியலறிவும் அதன்வழிச் சோதிடம் பார்க்கும் பழக்கமும் பழந்தமிழரிடம் இருந்தது. இத்தகைய அறிவு குலத்தொழில் என்ற நிலையிலிருந்து வேறு பட்டமைகின்றது. இஃது உடலுழைப்பற்றது. மூளையுழைப்புச் சார்ந்தது. உடலுழைப்பிலிருந்து விலகி வேறு ஒன்றினை அறிதல் என்பதின் அடிப்படையில் வானவியலறிவைக் கல்வி எனக் கொள்ளலாம். கோள்களின் இயக்கத்தை ஆராய்ந்து உரைத்தல் மறைபொருள் – எளிதில் அறியாத – தன்மையாகும். இதனால் இஃது உயர்வு பெற்றிருக்கலாம். காலப்போக்கில் இது பிறதொழில் களிலிருந்து விலகி அரியதொரு கல்வியாக - வித்தையாக - இருந் திருக்க வேண்டும். வானவியல், சோதிட அறிவுக் 'கலை'யாகக் கற்பிக்கப் பெற்றிருக்க வேண்டும். இதுவும் தந்தை-மகன் என்ற குடும்ப வழியில் இருந்திருக்கலாம். எனினும் கற்பித்தல் – உடலுழைப்புச் சாராத கல்வி - என்ற நிலையில் இது வித்தை என அழைக்கப் பெற்றிருக்க வேண்டும். வித்தை என்ற சொல் கலைகளைக் குறித்து வழங்குதல் நோக்கத்தக்கது.

பழங்காலத்தில் கற்பித்தல் வித்தை, விச்சைக் கற்பித்தல் என்ற பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. விச்சைக் கற்பித்தான் எனக் கலித்தொகை (149: 4,5) கூறுகிறது. இது வித்தையை வேறு ஓர் ஆசிரியர் கற்பித்ததைக் காட்டுகிறது. தந்தை மகனுக்குத் தொழில் அறிவை - வித்தையைக் - கற்பித்து வந்த நிலைமாறி ஆசிரியர் கற்பித்ததைக் காட்டுகிறது. இந்த வித்தைத் தொழில் கல்வியாக இருந்திருக்குமா என்ற ஐயம் ஏற்படுகிறது. எழுத்துக் கல்வி தோன்றிய பிறகும் கல்வி என்பது தொழில் - வித்தை – கற்பித்தல் என்ற பொருளில் வழங்கியிருக்கலாம். கீழ்க்கணக்கு நூல்கள் கல்வியை வித்தை (விச்சை) என்று அழைக்கின்றன. ''குலவிச்சைக் கல்லாமல் பாகம் படும்'' (படி. 152: 3, 4) எனும் தொடர் குலத்தொழிலையே குறிக்கிறது. குலத்தொழில் கற்காமல் வந்தடையும் என்றதனால் கற்க வேண்டிய கல்வி வேறு ஒன்றாக இருந்தமையை அறியலாம். இது பிற்காலத்திய நிலை. சங்க காலத்தில் வித்தை எனக் குறித்தது குடும்பவழிக் கற்பிக்கப் பெற்ற கலைகளாக இருந் திருக்கலாம்.

**இனக்குழு மக்கள் - கல்வி**

> துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
> இந்நான் கல்லது குடியும் இல்லை (புறம். 335: 7, 4)

என்று பழைய குடிகள் புகழப் பெறுகின்றன. கோவலர், இடையர், இளையர், மழவர், கடம்பர் என்பவர் பழைய குடியைச் சார்ந்தவர்கள். இவர்கள் எழுத்துக் கல்வியை அறியாதவர்கள். அவ்வந் நிலத்திற்குரிய, தத்தமக்கு இன்றி யமையாத தொழிலை நன்கு அறிந்தவர்கள். இவர்களைச் சங்க இலக்கியம் கல்லாதவர் எனக் காட்டுகிறது. எழுத்துக் கல்வி தோன்றி நிலை பெற்ற காலத்தில் இவர்கள் கல்லாதவர்களாக - ஏட்டுக் கல்வியை அறியாதவர்களாக இருந்துள்ளனர்.

கல்லா இளையர், கல்லாக் கோவலர், கல்லா மறவர் என்ற தொடர்களுக்கு உரையாசிரியர்கள் தம் தொழிலன்றிப் பிற கல்லா எனப் பொருள் உரைப்பர். தொழில் கல்வி பரம்பரை வழிப் பயிற்றுவிக்கப் பெற்ற நிலையில் பிறதொழிலைக் கற்றல் என்ற நிலை உருவாகவில்லை. 'கல்லா' என்ற தொடர் மனிதர்களுக்கன்றி விலங்குகளுக்கும் பயின்று வந்துள்ளது.

இதற்குத் தன் தொழிலை முழுவதுமாகக் 'கல்லா' எனப் பொருளுரைப்பர். விலங்குகளின் குழவிப் பருவம் மிகக் குறுகியது. குறுகிய காலத்திலேயே குழவி தான் நடந்து கொள்ள வேண்டிய தன்மையை அறிந்து கொள்கிறது. ஆனால் மனிதனின் குழவிப் பருவம் நீண்டது. அவன் தனது எல்லாத் தேவைகளுக்கும் பிறரை எதிர்நோக்கும் தன்மையன். உலகத்தோடு ஒட்டி ஒழுக அவனுக்குப் பயிற்சி தேவைப்படுகிறது. இது அனுபவமாக, கல்வியாக முன்னோரால் அளிக்கப் பெற்றது. இவ்வனுபவக் கல்வி வாழ்வியலுக்கான தேவையாக அமைந்தமையைச் சங்க இலக்கியம் காட்டி நிற்கிறது.

''தாம் அம்பு விடுதலின் சிறப்பினைக் காணும் பொருட்டுப் புதியவராய் வருவோர் அணிகலன் இல்லாதவராயினும் அவர் களைக் கொன்று பறவைகளுக்கு உண்பிக்கும் கல்லாத இளையர் (அகம். 375:3,5) யானைக் கன்றினைப் பிடித்து வெண்கடம்பின் நாரால் பிணித்து இல்லத்தின் வாயிலில் கட்டிய கல்லாத இளையர் (அகம்.83:3-9), இனிய மணியின் ஓசை ஊர்முழுதும் கேட்கும்படிப் பல ஆநிரைகளை ஊரின் தெருவிலே செலுத்திவரும் கல்லாத கோவலர் (நற். 364; 6-10). கல்லாத கோவலர் தங்கள் ஆநிரைகள் நீர் பருகுதற்காகக் கோல்களாலே தோண்டப் பட்ட பள்ளத்தின்கண் ஊறிய நீரைக் காட்டுயானைகள் பருகின (ஐங், 304: 1,2) பனி நடுக்கம் விளைக்கும் காலத்தில் கல்லாத இடையர் தீக்கடைந்து நெருப்பு உண்டாக்கிக் கொண்டனர் (புறம், 331; 3-5), கல்லாத மழவர் வில்லினை இடப் பக்கத்தே தழுவிக் கொண்டு ஆறலைத்தலுக்காக வழி வருவோரைப் பார்த்திருந்தனர் (அகம். 127; 15,16) எனக் கல்லாத பழைய இனக்குழு மக்கள் காட்டப்படுகின்றனர்.

தொடக்க காலத்தின் கல்வி பற்றிய சிந்தனையற்ற நிலையையும் அதன் பிறகு கல்வி பற்றிய சிந்தனைகள் தோன்றிய நிலையையும் இவை காட்டுகின்றன. கல்லா என்ற தொடர் விலங்குகளுக்கும். மனிதர்களுக்கும் ஆகி வருதல் நோக்கத்தக்கது. மனிதருக்கும் விலங்குகளுக்கும் ஒரே பொருளில் தம் தொழில் கல்லா, தம் தொழிலன்றிப் பிற கல்லா என்றே பொருளுரைக்கப் பெறுகின்றது. இங்குச் சுட்டப்பெற்ற மக்கள் தம் தொழிலைப் பழுதறக் கற்றவர்களாகவே உள்ளனர். இவர்களைத் தம் தொழில் கல்லாதவர் எனப் பொருள் கூறுதல்

ஏற்புடையதன்று. மாறாகத் தம் தொழிலன்றிப் பிற கல்லா எனப் பொருளுரைப்பின் பிறதொழில்களைப் பயிலும் நிலையில்லாத சமூகத்தில் பிறதொழில் கற்பதாகக் கூறுதல் வலிந்து பொருள் கொள்ளுதலாகவே உள்ளது. பிற தொழில் என்பதனைக் கணிதம், சோதிடம் எனப்பொருள் கொள்ளலாம். கல்லாதவர் எனப் பழைய இனக்குழு மக்களைக் குறித்தது எழுத்துக் கல்வியின் அடிப்படையில் எனக் கொள்ளலாம். இந்தச் சிந்தனை எழுத்துக்கல்வி தோன்றிய பின்னர்த் தோன்றி யிருக்க வேண்டும். இதனால்தான் பழைய இனக்குழு மக்களான இளையர், மழவர், கோவலர் கல்லாதவராகக் காட்டப் படுகின்றனர்.

உழைப்புப் போக்கில் இருந்து மூளையுழைப்புப் போக்கு-அறிவுப் போக்கு - தனியே எழுந்தது. இது கல்வியாகக் கருதப் பெற்றது. இக்கல்வி சமூகத் தகுதியை நிர்ணயிக்கும் காரணியாகக் காலப் போக்கில் மாறியது.

## மன்னர்தம் கல்வி

சங்க இலக்கியத்தில் கல்வியைப் பற்றிய குறிப்புகள் அருகியே காணப்படுகின்றன. 'கல்வி' கற்றல் உயர்வானதாகக் கருதப் பெற்றது. இந்தக் கல்வி ஏட்டுக் கல்வியாக இருந்திருக்க வேண்டும். கல்வி அறிவுக்கு இக்காலத்தில் முதன்மையளிக்கப் பெற்றது. அதுவரை உடல் உழைப்பையே முதன்மைப்படுத்தி வந்த சமூகம் அறிவை - மூளையை முதன்மைப் படுத்தத் தலைப் பட்டது. இந்த அறிவுக்கல்வி ஒரு சிலரிடம் மட்டும் இருந்திருக்க வேண்டும்.

மன்னர்கள் கல்வி கற்றவர்களாகக் காட்டப்பெறுகின்றனர். ''நல்லவர் கூடியிருப்பதும் கற்றோர் தாம் கற்ற அறிவினை நன்கு எடுத்துரைத்தற்கு ஏற்றதுமாகிய அவை நன்னன் நாட்டில் விளங்கியது'' என மலைபடுகடாம் (77.79) கூறுகிறது. இதன் மூலம் அரசனின் அவையில் கல்விகற்ற அறிஞர்கள் கூடி இருந் தனர் என அறிகிறோம். பெரும்பாலும் மன்னர்களும், சமயம்சார் பெரியோர்களும் - முனிவர்களும் - கல்வி கற்றுள்ளனர். ''கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் பகைவராலும் போற்றப்பெறும் அழியாத கல்வியை உடையவன் (பதி. 43:29-31), ஆடுகோட்

பாட்டுச் சேரலாதன் இரவல் மாக்களின் சிறுகுடிகள் பெருகுமாறு, உலகத்தைத் தாங்கிய மேம்படு கல்வியை உடையவனாவான் (பதி. 59:79) என மன்னர் கல்வி கற்றிருந்தமைக் காட்டப் பெறுகிறது. இதேபோல் பலவற்றையும் கற்றோர்க்கு முதன்மையராக முனிவர் காட்டப்பெறுகின்றனர் (முரு. 133, 134, 137).

இங்குச் சுட்டப் பெற்ற கல்வி, ஒழுக்கம் சார்ந்த கல்வியாக இருந்திருக்க வேண்டும். சமய முதன்மை கொண்ட முனிவரும், சமூக முதன்மை கொண்ட அரசரும் கற்றுள்ளனர். இவர்கள் கற்ற கல்வி, பொது மக்களுக்குரியதாக இல்லை. கல்வியின் வளர்ச்சி நிலையில் முதலில் சமய குருமார்களும் - முனிவர்களும் பின்னர் அரசர்களும் கல்வி கற்றிருக்க வேண்டும். இந்நிலையில் கல்வி பொதுமக்களுக்கானதாக இல்லை.

''நடுநாள் யாமத்து பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே''
(புறம். 149:3-5)

எனக் கல்லாதவனின் நிலை காட்டப்பெறுகிறது.

''பள்ளத்தில் அகப்படுத்திய கன்றுகளையும் பிடிகளையுமுடைய பெரிய யானையினங்களை அகப்படுத்தும் பூசற்கண்ணே (எழினி என்பான்) வராது ஒழிய, அதனால் மிக்க சினங்கொண்ட சோழ மன்னனது ஏவலாற் சென்று மத்தி என்பான் நெடுஞ் சேய்மைக் கண்ணதாகிய நாட்டில் முதற்படையில் அகப்பட்டுக் கொண்ட கல்லாத எழினியின் பல்லைப் பறித்து வந்து கதவினில் பதித்தனர்'' என அகப்பாடல் (அகம். 211: 9-14) கூறுகிறது. அரசர்கள் கல்வி கற்றவர்களாகக் காட்டப் பெறினும் பழைய இனக்குழுத் தலைவர்கள் 'கல்வியறிவு' அற்றவர்களாக உள்ளனர். இனக்குழு நிலையில் இருந்து வளர்ந்தவர்களே முடியுடை மன்னர்கள். முடியுடை மன்னர்கள் கல்வி கற்றவர்களாகவும் பழைய இனக்குழுத் தலைவர்கள் கல்லாதவர்களாகவும் இருத்தல் பழைய இனக்குழுவின் கல்வியற்ற தன்மையைக் காட்டுகிறது.

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என அரசன் சமூகத்தின் முதன்மையானவனாகக் கருதப்பெற்றான். மக்களின் அனைத்து நிலைகளுக்கும் மன்னனே காரணம் என்ற நிலை

இருந்தது. இந்நிலையிலேயே அரசன் கல்வியைப் புகழ்ந்து பாடுகிறான். மக்கள் அனைவரையும் கற்கும்படித் தூண்டுகிறான். எனினும் அரசு கல்வியை ஏற்று நடத்தவில்லை. ''கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவன் அவன்கண் படுமே'' என்ற (புறம். 187) பாடல் கல்வியை அனைவரும் கற்க வேண்டும் என்ற பிரச்சாரப் பாடலே. கல்வியை அரசே ஏற்று நடத்திய நிலை பிற்பட்டதேயாகும்.

கல்வி பற்றிய சிந்தனையே இல்லாத நிலையினையும் மக்கள் கல்வியில் உயர்ந்து விளங்கிய நிலையினையும் சங்கப் பாக்கள் காட்டுகின்றன. சங்கப் புலவர்களின் பெயர்களாக இளம் பாலாசிரியன், கணக்காயன், குலபதி போன்ற பெயர்கள் கிடைக் கின்றன. இளம்பாலாசிரியன் என்பவர் இளைய மாணவர்க்குக் கற்பிக்கும் ஆசிரியர் எனப் பொருள் கொள்ளப் படுகிறார். குலபதி என்பது ஆயிரம் மாணவர்களை வைத்துக் கற்பிக்கும் ஆசிரியர்க்குரிய பட்டம் என்று உ.வே.சா (குறுந்தொகை பாடினோர் வரலாறு) குறிப்பார். கணக்காயர் என்பவர் தமிழ் அரிச்சுவடியாகிய கணக்கினை மாணவர் கூட்டத்திற்குக் கற்பிப் பவர் எனப் பொருள்கொள்ளப் படுகின்றனர். இவ்வாசிரியர் மக்களுக்குக் கல்வியறிவூட்டினர் எனக் கொள்ளலாம்.

தொடக்க காலத்தில் 'கல்வி' என்பது தமக்குரிய குடித் தொழிலைக் கற்றல் என்ற நிலையில் இருந்தது. காலப்போக்கில் கல்வி என்ற கருத்துருவம் தொடங்கியது. இக்கல்வி ஏட்டுக் கல்வியாக, அறிவுக்கு அடிப்படையாகப் பிற்காலத்தில் மாறியது. இதன் அடிப்படையில்தான் பழைய இனக்குழு மக்கள் கல்வி யற்றவர்களாகவும் இனக்குழுவில் இருந்து வளர்ந்தவர்கள் கல்விக்கு முதன்மையளிப்பவர்களாகவும் காணப்பெறுகின்றனர். கல்வி பற்றிய கருத்துருவாக்கம் முளைவிட்டுப் படிப்படியாக வளர்வதைச் சங்க இலக்கியத்தின்வழி உணர முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. முத்துச்சண்முகன், தா. வே. வீராசாமி (பதிப்பாசிரியர்கள்) தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், ப. 23.
2. எஸ். சந்தானம், கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள் ப, 1.

த. புகழேந்தி, முதுகலை, கணிப்பொறி சான்றிதழ் இளங்கலையில் புதுவை மாநிலத்தில் முதன்மை பெற்று 'Societe Progressiste' தங்கப்பதக்கமும் முதுகலையில் பல்கலைக் கழக முதன்மை பெற்று 'ஆனந்தரங்கர்' தங்கப் பதக்கமும் பெற்றவர். தமிழர் வளர்ச்சிக்கு வேண்டிய தகைமைகளில் எதிர் நீச்சலிடும் துணிவு (சங்க காலம்) என்ற தலைப்பில் இளம் முனைவர் பட்ட ஆய்வு செய்து வருகின்றார்.

நெறியாளர்

**க. ப. அறவாணன்**

# சமுதாயச் சீர்கேட்டை எதிர் நீச்சலிடும் துணிவு கள ஆய்வும் விளைவுகளும்

**த. புகழேந்தி**

மக்களுக்காக மக்களால் ஆளப்படுதலே மக்களாட்சி. இவ்வாட்சியில் இருக்கும் நிறைகுறைகளுக்கு மக்களே பொறுப்பாவர். தனி மனிதனாகப் பலர் இணைந்து அமைவதே மக்கள்கூட்டம். தனிமனிதனுக்கு ஏற்படும் துன்பமனைத்துமே சமுதாயத் துன்பமாகிவிடாது. சமுதாயத்தைப் பெரிதாகப் பாதிப்பதற்கு முன் தனிமனிதனிடமிருந்து தொடங்கும் துன்பங்கள் சில உள. அத்துன்பத்தைத் தனிமனிதன் முளையிலேயே கிள்ளி எறியின், அது சமுதாயத் துன்பமாக மாற வழியில்லை. அவ்வாறில்லாது அதனை எதிர் நீச்சலிட்டு அழிக்க அஞ்சின் அது சமுதாயத் துன்பமாகி மிகப்பெரிய அளவில் தனிமனிதனையே பாதிக்கும்.

எனவே மக்களாட்சியின் மாண்பு சமுதாயச் சீர்கேட்டை நோக்கிய தனிமனிதனின் எதிர் நீச்சலிடும் துணிவிலேயே அடங்கியுள்ளது. சமுதாயத் துன்பமாக வளர்க்கப்பெற்ற கூறு களை அழிப்பதில் ஒட்டுமொத்த சமுதாயத்தின் எதிர் நீச்சலிடும் துணிவே தேவையெனினும், அதன் தொடக்கமும் தனிமனிதனி டமே அடக்கம். பிறருக்கு அறிவுரை கூறுதலும் மேடையில் உலாவி உழைப்பின் உயர்வைப் பேசுதலும் ஏற்ற விளைவைத் தராது. எனவே சமுதாயச் சீர்கேட்டை எதிர்க்க வேண்டிய மக்களை நேரடியாக ஆயும்வழியே உண்மையை வெளிக்கொணர முடியும். இவ்வகையில் உற்றுநோக்கலும் உரையாடலும் உத்தி முறைகளாக இக்கள ஆய்வுக்குக் கொள்ளப் பெற்றுள்ளன.

**மொழி எதிர் நீச்சல்**

விடுதலை பெற்ற உடனேயே ஆங்கிலத்தை வெளியேற்றித் தமிழைப் பயிற்று மொழியாக்கிடத் தயங்கினர் தமிழர். இதனால் இன்று, என்றும் தமிழைப் பயிற்று மொழியாக்கிட முடியாதோ என்ற நிலை எழுந்துள்ளது. இவ்வகையில் பயிற்று மொழியில் துணிவான, சரியானதொரு எதிர் நீச்சலிட அஞ்சியதால், தயங்கியதால் தமிழருக்கு, தமிழுக்கு இத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. ‘அறிவியல் தமிழை ஆக்க வாருங்கள்’ என அறிஞர்களுக்கு அழைப்ப விடுவதன்வழி இத்தாழ்வைச் சீர்செய்ய தமிழ்ப்பற்றாளர் பறையொலி எழுப்புகின்றனர். ஆனால் அறிவியல் அறிஞர்களுக்கோ தமிழ்மொழி மறந்துவிட்டது. மறக்கும் வகையிலேயே இவர்கள் வளர்க்கப் பெறுகிறார்கள்.

இச்சிக்கலைத் தமிழர்குழாம் எதிர் நீச்சலிடும் முறைகாண மருத்துவம் பொறியியல் போன்ற தமிழுக்கு இன்று வேண்டும் துறைகளுக்கு அதிக அளவில் மாணவர்களை அனுப்புவதில் முன்னணியில் திகழும் இரு பள்ளிகளில் சிறு ஆய்வு ஒன்று மேற் கொள்ளப் பெற்றது. இவ்விரு பள்ளிகளிலும் தமிழில் மாணவர்கள் உரையாடின் தண்டனம் (அபராதம்) உண்டென்பது குறிக்கத் தக்கது. அப்பள்ளிகளில் பணிபுரியும், தமிழறிவையும் உணர்வை யும் ஊட்டுதலைக் கடனாகக் கடமையாகக் கொண்ட’ தமிழாசிரியர்களிடம் இது குறித்து வினவப் பெற்றது.

பள்ளி நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய இக்கட்டில் தம் தமிழ்ப்பற்று ஊட்டும் எதிர் நீச்சலின்

இயலாமையை அவர்கள் புலப்படுத்தினர். தாங்கள் தமிழுணர்விற்காகப் போராடுவதற்கு வெளியிலிருந்து பெரும் நிறுவனம் சார்ந்த பக்கபலம் இல்லாமையையும் வெளிப்படுத்தினர். அப்பள்ளி மாணவர்களை வினவுகையில் மொழியுணர்ச்சி; பற்றுத் தொடர்பான பாடங்களை நடத்துகையில், ஆசிரியர்கள் அப்பாடப்பகுதியின் கருத்தை மேம்போக்காய்க் கூறி நழுவிவிடுவதாக உரைத்தனர். எனினும் ஒரேயோர் ஆசிரியர் மட்டும் பள்ளியில் உரையாடாவிடினும் வெளியில் தமிழில் உரையாடுங்கள் 'என்று கூறுவதாகத் தெரிவித்தனர்.

இவ்வகையில் இச்சீர்கேட்டை அரசும், தமிழ் ஆர்வலர்களும். தமிழாசிரியர்களும் ஏற்ற வகையில் எதிர் நீச்சலிட்டுக் களையும் வரையில் தமிழ் வளர்ச்சியுறுவது ஐயமே.

### சுய வேலைவாய்ப்புத் திட்டம்

வாழ்க்கைப் போராட்டங்களை எதிர் நீச்சலிடப் பொருள் தரும் வேலை இன்றியமையாமை. அரசாங்கமே அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டுமென இன்றைய இளைஞர் எதிர்பார்க்கின்றனர். அரசு வேலை கிடைக்கா நிலையில் சோர்வுறுகின்றனர். இல்லையாயின் வேலை கொடுக்காத அரசினைச் சீர்குலைக்க வேண்டுமெனும் சமூக விரோதிகளாக மாறிவிடுகின்றனர். நாட்டின் முதுகெலும்பாய்த் திகழும் இளைய சமுதாயம் சோர்வுறுவதும் வன்முறையைக் கைக்கொள்வதுமாகிய இவ்விரண்டுமே சமுதாயத்தை நிலைகுலையச் செய்யும். இதனைத் தவிர்க்கச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை அரசு அறிமுகம் செய்துள்ளது. இதில் இளைஞர்கள் போதிய ஆர்வம் காட்டவில்லை. இதனை ஆராய ஆய்வொன்று மேற்கொள்ளப் பெற்றது.

வேலை வாய்ப்பு அலுவலகத்துக்கு வந்த 20 இளைஞர்களிடம் கருத்து வினவப்பெற்றது.இதில் ஏழு இளைஞர்கள் பட்டதாரிகள். அரசாங்க வேலையில்லாமல் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் தனியாக, எதனையும் எதிர் நீச்சலிட வேண்டியுள்ளதால், அதற்கு அஞ்சியே அவர்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை என்பது ஒட்டுமொத்தக் கருத்தாகப் புலப்பட்டது. வேலை செய்யினும் செய்யாவிடினும் மாதம் முதல் நாளன்று வருவாய் அளிக்கும்

அரசாங்க வேலையின் கவர்ச்சியே இவர்களுக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் விருப்பமின்மையை ஏற்படுத்துகின்றது. இதன் எதிரொலியாக 'வேலைவாய்ப்புத் திட்டத்தில் தோல்வி யடையலாம், அதில் முன்னேற வழியில்லை' போன்ற சோர்வுக் கருத்துகள் புனையப்பெறுகின்றன. எனவே, அரசாங்க வேலையை நிச்சயமற்றதாக ஆக்குவதும், உழைப்பிற்கேற்ற வருவாயை மட்டுமே அளிப்பதற்கு வழிவகை செய்வதுவுமே வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கும் வழியாகும்.

**ஏழையர்தம் தொழில் எதிர் நீச்சல்**

தெருவோரச் சிறு வியாபாரிகளிடம் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களும் அதனை அவர்கள் எதிர் நீச்சலிடும் முறையும் ஆராயப்பெற்றன. வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களைவிட மனிதர்களால் ஏற்படும் இழப்புகளே எதிர்க்க இயலாதனவாக உள்ளனவாகத் தெரிவித்தனர். வியாபாரத்தில் ஒரு நாள் ஏற்படும் இழப்பினை மறுநாள் எளிதாக ஈடு செய்துவிடலாம். ஆனால் வியாபாரம் சோர்வுற்ற நாள்களில் இரவுடிகள், காவல் துறையினர் முதலியோர் கேட்கும் 'மாமூல், கையூட்டு' போன்ற வற்றை அளிக்க முடியாமலும், அவர்களை எதிர்க்க இயலாமலும் திணறுவதை வார்த்தைகளால் வடிக்க முடியாதாம். எதிர்ப்பின், பண்டம் முழுதும் பறிபோய்விடுமாம். இவர்களுக்குக் கொடுக்கும் பணத்தைப் பண்டத்தின் விலையிலேயே ஈடு செய்ய வேண்டி யிருப்பதால் விலையும் ஓரளவு ஏற்றப்படுகிறது. அத்துடன் இரவுடிகள் வளர்க்கப்பெறுவதோடு காவல் துறை, சட்டத்தின் மீதான மதிப்பும் பறிபோய்விடுகிறது. இது வன்முறையின் மீது ஆர்வத்தை வளர்க்கிறது. குடியாட்சி கசக்கிறது. துப்பாக்கியைத் தூக்கியபின் 'குடியாட்சியின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்: வன்முறையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம்' எனக் 'கண் கெட்ட பின் கதிரவன் துதிபாடல்' ஏன்? எனவே, இருப்பதை ஒழுங்காக்க வேண்டும். இல்லாவிடில், இல்லாததின் மேல் இறுதி உணர்வுள்ள இளைஞர்தம் ஆர்வம் செல்லும். விளைவு — — — சமுதாயச் சீர்குலைவு. வன்முறை சரியா என்பதைவிட நன்முறையாம் குடியாட்சி நயவஞ்சகம் புரிகையில் வன்முறையைத் தவிர வேறுவழியில்லாமற் போகிறது.

இவ்வகையில் எளியோரின் எதிர் நீச்சலிடும் துணிவின்மையால் சமூகச் சீர்கேடுகள் தொடர்கின்றன. பெரும் சீர்குலைவுக்கு

வழிகோலுகின்றன. கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று அவர்கள் சோர்வாகக் கூறினர். இவ்வெதிர்பார்ப்பு நிகழக் கூடியதா?

**கையூட்டு எதிர் நீச்சல்**

இலஞ்ச ஒழிப்புத் துறை எனத் தனியொரு காவற்பிரிவே இருப்பினும், கையூட்டுத் தொடர்ந்து வாழ்கின்றது. கடமையைச் செய்யாத அதிகாரிகளை அதனால் பாதிக்கப் பெற்றோர் எதிர்த்துக் கேட்காது, தம் பணத்தைக் கொடுத்து, அவர்களது கடமையைச் செய்யும்படித் தூண்டுதலே கையூட்டின் காரண மாகும். அதிகாரிகளைக் கடமையைச் செய்யவிடாது தடுப் பதற்கும் இக்கையூட்டுப் பயன் செய்கின்றது. கடமை செய் வதற்காக அரசிடமிருந்து ஊதியம் பெற்றும், அக்கடமையிலிருந்து தவறுவதற்காகத் தனிமனிதனிடமிருந்து கையூட்டைப் பெற்றும், அரசு நிர்வாகம் சீர்குலைகின்றது. இதனைத் தடுக்கச் சட்டம் இயற்றியும் அரசினால் வெற்றிபெற முடியவில்லை. 'கொடுப்பவர் இருப்பதால்தானே வாங்குபவர் இருக்கின்றார்' என்ற விதிப்படிக் கையூட்டுக் கொடுத்தவர்களை அணுகியபோது பெற்ற கருத்து களாவன,

1. அதிகார வர்க்கத்தைஎதிர்த்துத் தனிமனிதனால் ஏதுவும் செய்யவியலாது.எதிர்ப்பின், இழப்பு ஏற்படுவது தனிமனிதனுக்கே. அத்துடன் இன்று கையூட்டு ஏற்றுக்கொள்ளப்பெற்ற மரபாகி விட்டது. எனவே ஊரோடு ஒத்துச் சென்றாலே பிழைக்க முடியுமென்பதால் தாம் கையூட்டுத் தரத் தயாராய் இருப்பதாக மொழிந்தனர்.

2. சட்டத்திலிருந்து தப்பிக்கும் முகமாக வாகனங்களில் போக்குவரத்து விதிமீறிச் சென்று, காவல் துறையினருக்குக் கையூட்டு அளித்த இருவரை அணுகியபோது, நீதிமன்றத்தில் காத்திருப்பதைத் தவிர்ப்பதுடன், அங்குக் கட்ட வேண்டிய தண்டனைத் தொகையில் பாதியே கையூட்டாய் அளிக்க வேண்டியிருப்பதால் தாம் தருவதாகக் கூறினர்.

இவ்வகையில் அதிகார வர்க்கத்தோடு முரண்படாமைக்கா கவும், நேரியதைவிடக் குறுக்கு வழியில் செல்லும் விருப்பத்தினா லும் இச்சமுதாயம் கையூட்டை எதிர் நீச்சலிடாது போகின்றது.

படிப்படியே இப்பழக்கம் நியாயப்படுத்தப்படுகிறது. இதனால் சமுதாய ஒழுங்கு சீர்குலைவதுடன் நேர்மையாக வாழ விருப்ப முள்ளவர்களும் நெறி பிறழ வற்புறுத்தப் பெறுகின்றனர். இதனால் நேர்மையாக வாழ்வதற்கே எதிர் நீச்சலிட வேண்டிய இக்கட்டு எழுகின்றது. சமுதாய அழிவு நோக்கிய பயணத்தை இது புலப்படுத்தும்.

**நேர்மை நீச்சல்**

சமூகத்தில் காவல் துறையினரின் பங்கு மிகப்பெரிது. குற்றவாளிகளைத் தண்டிக்க இயலாமல் அரசியல், பொருளா தாரம் போன்றன குறுக்கிடுகின்றன. எனினும் அனைவருமே இக்குறுக்கீடுகளுக்கு அடிபணிந்து விடுவதாகக் கூறவியலாது. இவ் வகையில் நேர்மையான அதிகாரிகள் தாங்கள் நேர்மையாகக் கடமையாற்றுவதற்கும், காவல் துறையை நேரிய வழியில் செலுத்துவதற்கும் எவ்வகையில் எதிர் நீச்சலிட வேண்டியுள்ளது என்பதை நன்கு அறிமுகமான நான்கு காவல் துறை உயர் அதிகாரிகளை நேர்முகம் கண்டவழிப் பெற்ற கருத்துகளாவன,

1. தன்னளவில் நேர்மையாக நடக்க முடிகின்றதேயன்றி, நிர்வாகத்தையும் நேர்வழியில் செலுத்த முடியவில்லை என்பதை வருத்தத்தோடு ஒப்புக்கொண்டனர்.

2. தன்னளவில் நேர்மையாக நடப்பதற்கும் கடினமாக உள்ளதென்றும் புறத்தாக்குதலால் வலிந்து அழுத்தப் பெறுவ தாகவும், தன்னிச்சையாகச் செயல்படாதவாறு துணை அதிகாரத் தில் அமுக்கப் பெறுவதாகவும், இல்லாவிடில் ஊர் மாற்றல் வழி அலைகழிக்கப்பெறுதலோ அன்றிப் பொய்க்குற்றச்சாட்டு வழிக் கட்டிப்போடப்பெற்று மிரட்டப்படுதலோ நிகழுமென்றும் இவை யனைத்தையும் தன்னளவில் நேர்மையாக நடப்பதற்கே எதிர் கொள்ள வேண்டியுள்ளதாகவும், இந்நிலையில் அரசின் நெறி பிறழ்வுகளைத் தட்டிக்கேட்பது கனவிலும் நினைக்க முடியா தொன்றென்றும் கூறினர். இத்தகு கடும் போக்கினாலேயே பலர் வேறுவழியின்றி நேர்மை பிறழ்ந்துவிட்டதாகவும் சான்றுடன் சுட்டிக்காட்டினர்.

3. நெறி பிறழ்ந்தவர் ஏதேனும் சிக்கலில் மாட்டிக் கொள்ளின் அவரைக் காப்பதற்குப் பலர் முன்வருவதாகவும்,

அதைப்போன்று நேர்மையாக நடப்பவர்களுக்கு வராமையாலும் மனம் வெறுத்துப் போவதாகவும், வேண்டுமென்றே சிக்கலில் மாட்டிவிடப் பலர் முனைவதாகவும், அதனை எதிர்நீச்சலிட்டுத் தம் பெயரையும் பதவியையும் காத்துக் கொள்வதற்காகவே சிறுசிறு நெறி பிறழ்வுகளைச் செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்வகையில் இச்சீரழிவை எதிர் நீச்சலிட்டு வெற்றி பெற, நேர்மைப் பற்றாளர்கள் ஒன்று சேர்வதும், ஒருவருக்கொருவர் உதவி புரிந்து தனிமனித அளவிலாவது நேர்மையைக் காப்பாற்றிக் கொள்வதும் இன்றியமையாததாகின்றன. அரசாங்க வேலையிலிருந்து எவரையும் தக்க காரணமின்றி நீக்க முடியாது என்ற தீயோரின் இயலாமையைப் பயன்படுத்தி நேர்மைக்காக எதிர் நீச்சலிடல் வேண்டற்பாலது. எவ்வகையிலாவது இத்துறையை நேர்மைவழிச் செலுத்த எதிர் நீச்சலிட்டாலன்றிச் சமுதாயம் செம்மையுறல் ஐயமே.

**தேவையில்லா மரபு நீக்கல் துணிவு**

ஏதோவொரு காரணம் கொண்டு தோன்றும் சடங்குகள் காலப்போக்கில் மாறி தேவையற்றனவாக மாறிவிடுகின்றன. இவற்றைக் களைதலே வளர்ச்சி பெற்ற சமுதாயத்திற்கு வழி வகுக்கும். இவ்வகையில் திருமணம் தொடர்பான சடங்குகளைக் களைவதில் மக்களின் மனப்பான்மை ஆராயப்பெற்றது.

திருமணத்தில் ''அதோ பார்! அருந்ததி நட்சத்திரம்' என்று 'கான்கிரீட்' மேல்தளத்தைக் காண்பிக்கின்றனரே, வடமொழியில் மந்திரமென முணுமுணுக்கின்றனரே அதைத் தமிழில் சொன்னால் கடவுளுக்குப் புரியாதா! சொல்வது தேவைதானா! ஐயர் ஒருவர் முன்னின்று நடத்தல் தேவைதானா! தாலி கட்டுதல் பெண்ணடிமையாகாதா! அப்பழக்கத்தை நீக்குவதுதானே'' போன்ற வினாக்கள் உரையாடல் போக்கில், விரைவில் திருமணமாகப் போகும் 13 இளைஞர்களிடமும் திருமணமான 8 ஆண்களிடமும் ஆய்வாளரின் நண்பர்கள் என்ற முறையில் வினவப் பெற்றன.

சீர்திருத்தக் கருத்துகளை ஒத்துக்கொண்டனரே யன்றி, அவற்றை நிறைவேற்ற அவர்கள் தயாராக இல்லை. அதற்கான

காரணத்தை அவர்களால் கூறமுடியவில்லை. குடும்பம், உறவினர் போன்ற 'மரபு மீது நம்பிக்கையுள்ள' சமுதாயத்தை எதிர்த்து, அவர்கள் புரட்சி செய்ய முன்வராமையே இதற்குக் காரண மெனலாம். இவர்களிடம் வினவிய வினாக்களை அவர்தம் பெற்றோர்களிடம் கேட்டபோது, ஆய்வாளரைப் 'பண்படாத வன்' விதண்டாவாதி, கறுப்புச்சட்டைக்காரன் (தி.க.) என இகழ்ச்சியாகத் தூற்றினர். இவ்வகையில் இளைஞர்தம் எதிர் நீச்சல் துணிவின்மை மேலும் ஆராயத்தக்கது.

**இரக்கம் முன்னிட்டு எதிர் நீச்சல்**

மிதிவண்டியில் வந்து இடித்துவிட்டதாகப் பள்ளி மாணவச் சிறுவன் ஒருவனை, லுங்கி கட்டிய ஆள் ஒருவன் அடித்துக் கொண்டிருந்ததை 22 பேர்கள் சுற்றி நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். 'இடையே சென்று தடுக்கக் கூடாதா' எனச் சுற்றி நின்றோரைக் கூட்டத்தில் ஒருவராக ஆய்வாளர் வினவினார். 'பார்த்தால் இரவுடி போன்று தெரிகின்றது. தடுக்கப்போய் நம்மை அடித்துவிட்டால் என்ன செய்வது? பாவம் அந்தப் பையன்', என்ற கருத்துகளையே ஒவ்வொருவரும் தெரிவித்தனர். 'நமக்கேன் வீண் வம்பு' என்றும் சிலர் தெரிவித்தனர். 'நாம் யாராவது இப்படி இரவுடியிடம் மாட்டிக்கொண்டு யாரும் உதவிக்கு வராவிடில் எப்படி இருக்கும்' என்றுஆய்வாளர் வினவியபோது, அதற்கெதுவும் விடை கூற இயலாது அவர்கள் முகம் சுளித்தனர். எனினும் எவரும் தடுக்க முனையவில்லை.

இப்படி 'அவன் அடித்துவிட்டால் என்ன செய்வது' என்ற கற்பனையினாலேயே அநியாயவாதிகளுக்கு மேலும் துணிவூட்டி விடுகின்றனர். இது அவர்களை எச்செயலையும் செய்யத் துணி வூட்டிச் சமுதாயச் சீர்குலைவிற்கு வழிவகுக்கின்றது. இதே போன்றே விபத்தில் அடிபட்ட ஒருவர் தன்னை மருத்துவமனையில் சேர்க்கும்படிச் சுற்றியிருந்த மக்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண் டிருந்தார். ஆய்வாளர் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முனைகையில் 'ரிக்சா ஓட்டுநர், ஆட்டோ ஓட்டுநர்' எவரும் முன்வரவில்லை. அவர்களிடமும் சுற்றியிருந்தோர்க ளிடமும் 'உங்களுக்கு இரக்கமில்லையா' என்று கேட்டதற்கு, அவர்கள் 'இது காவல்துறைத் தொடர்பான வழக்கு', 'நாம்

மாட்டிக்கொண்டால் நம் பிழைப்பு அவ்வளவுதான், இழுத்தடிப் பார்கள்' என்றனர்.

காவலர்கள் விபத்து வழக்கைச் சிக்கலின்றி நடத்த வேண்டு மென்ற அவர்களின் வசதிக்காக, மக்களின் உயிரைப் பலியாக்கு கின்றனர். இதனை அங்குள்ளோர் எவரும் எதிர்க்கத் துணிய வில்லை. எதிர்த்தாலன்றி இப்போக்கு உடைபடாது. இது பற்றிக் காவல் அதிகாரிகளிடம் வினவியதற்கு அவர்கள் மறுமொழி கூற மறுத்துவிட்டனர். பிறர் மீது அக்கறை கொள்ளும் உணர்வைச் சட்டமே நசுக்கிவரின், தன்னலம் தலைதூக்கிவிடும். இதனால், சமுதாய உணர்வே மக்களுக்கு இல்லாதுபோகும். சமுதாயத்திற்கு ஆபத்து வரும்போது, 'நாமனைவரும் தமிழர்! மனிதர்! ஒத்துழைப்புத் தாருங்கள்' என்று ஒருமைப்பாட்டு ஓசை யும் சமுதாயச் சிந்தை சங்கையும் எழுப்புவதால் என்ன பயன்? அவர்கள் எப்படி உதவுவர்? இது மிகப்பெரும் சமுதாய அழிவுக்கு வழி வகுக்கும். இதனை அரசோ அன்றி அறிஞர்களோ ஏற்ற எதிர் நீச்சலிட்டுத் தீர்வு காண்பதே சமுதாயக் கூட்டுணர்வுக்கு வழிகோலும்.

**பெண் கிண்டல்**

பெண்ணுரிமை பேசப்பெறும் இற்றை நாளிலும் பெண்களைக் கிண்டல் செய்யும் போக்குக் குறையவில்லை. படிக்கச் செல்வ தாயினும், வேலைக்குச் செல்வதாயினும் இவர்கள் ஆடவரின் கிண்டலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதிலிருந்து காத்துக் கொள்ள, சட்டப்பாதுகாப்பு அளிக்கப்பெற்றிருப்பினும் அதனை இவர்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பது ஆய்வின்வழித் தெரிய வந்தது.

உயர்நிலைப் பள்ளி மாணவிகள் பத்துப்பேர்களையும் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பத்துப்பேர்களையும் கல்லூரி மாணவிகள் இருபதுபேர்களையும், ஆடவர்தம் கிண்டல் பற்றி வினவுகையில் வெளிப்படையாக எவரும் ஏற்றபடி எதிர் நீச்சலிட விரும்பாமையைப் புலப்படுத்தினர். பள்ளி மாணவிகள் அனைவரும் 'அழுதுவிடுவோம்' என்றனர். கல்லூரி மாணவிகளில் எட்டு மாணவிகள் (குழுவாக இருந்தோர்) அதைப் பற்றிக் கவலைப் படுவதில்லை என்றும், சிலபோது விரும்புவதாகவும் தெரிவித்த

தோடு, மிதிவண்டியில் போகையில் (குழுவாகப் போகையில்) எவராவது கிண்டல் செய்யின் சண்டைக்குப் போவதாகவும், ஆயின் அவர்கள் இரவுடிகளாக இருப்பின் கண்டுங்காணாது சென்றுவிடுவதாகவும் தெரிவித்தனர். ஏனையோர், கிண்டல் செய்வோர் இல்லாத இடமாகவும் போக்குவரத்து அதிகமுள்ள நேரமாகவும் பார்த்துக் கல்லூரிக்குச் செல்வதாகக் கூறினர்.

ஒருவன் மிதிவண்டியில் வந்து, பெண்ணொருத்தியின் வாயில் புகைப்பானை வைத்ததாகவும் அதற்கவள் அழுதுகொண்டே வீடு சேர்ந்ததாகவும் தெரிவித்தனர். இதனை எவ்வாறு எதிர்நீச்சலிடுவதென அவர்தம் பெற்றோரை அணுகி வினவியபோது தம் மகள் செய்தது சரியெனக் கூறினர். இதைவிட மோசமாக எவனாவது கெய்ய முற்படின் என்ன செய்ய வேண்டுமென வினவியதற்குப் பெண்ணாய்ப் பிறந்தாலே பாவம்தான் என்று கூறினரேயன்றி எதிர்த்து நிற்க வேண்டுமென உரைக்கவில்லை.

ஆடவர்தம் இச்செயலைச் சட்டத்தின் உதவி கொண்டு எவரும் எதிர்க்க முனையாததோடு, அதற்கு அஞ்சி அஞ்சியே வாழ்கின்றனர். இதனால் ஆடவர்களும் மேலும் பல நெறி பிறழ்வான செயல்களைச் செய்வதற்குத் துணிவு பெறுகின்றனர்.

**பொதுக் குடிநீர் வீணாதல்**

இன்னும் பத்து ஆண்டுகளில் புதுவையில் குடிநீர்ப் பற்றாக் குறை ஏற்படும் என்பதால் வளைகுடாப்போர் ஏற்படுவதற்கு முன்பு 'குடிநீரைச் சேமியுங்கள்' என்ற அறிவிப்பு வானொலியில் தொடர்ந்து ஒலிபரப்பப்பெற்றது. இதில் மக்களுக்குள்ள ஈடுபாட்டை அறியும்பொருட்டு சிறு ஆய்வொன்று நடத்தப் பெற்றது. தெருவோரத்தில் அரசினால் அமைக்கப்பெற்றுள்ள பொதுக் குடிநீர்க் குழாயின்கீழ்ப் பாத்திரமொன்றை வைத்து நாள் முழுதும் நீர் வழிந்து ஓடும்படிச் செய்யப்பெற்றது.

அன்று அவ்வழியாகச் சென்றோர் எண்ணிக்கை 67. இரு கார்கள் சென்றன. காரில் சென்றோர் எண்ணிக்கைத் தெளிவாகத் தெரியவில்லையாதலால் அவர்தம் தொகை இதில் இணைக்கப்பெறவில்லை. நடந்து சென்றோர் 32 மனிதர். ஏவருமே குழாயை மூடவில்லை. வழிப்போக்கர் போன்று அம்

முப்பத்திரண்டு பேர்களையும் 'குழாயை மூடக்கூடாதா' என்று வினவுகையில் பெற்ற கருத்துகளாவன,

1. தமக்கு அக்கறையில்லை அல்லது அது தம் கவனத்தைக் கவரவில்லை என்றோர்–11.
2. நானொருவன் மூடிவிட்டால் நாட்டில் நீர் மிச்சமாகி விடுமா என்றோர்–2.
3. நான் மூடப்போய் எவராவது சண்டைக்கு வந்துவிட்டால் என அஞ்சியோர்–19.

இவ்வகையில் சமுதாய உணர்விருந்தும் எதிர்ப்பின் அச்சத்தால் அவ்வுணர்வைச் செயல்படுத்தாதோரே இங்கு நோக்கத் தக்கவர். பொதுச் சொத்தின் அழிவை எதிர்ப்பதற்குக்கூட இவர்கள் எதிர் நீச்சல் துணிவினைப் பெறாததால் சமுதாயம் பல இழப்புகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. சமுதாயச் சிந்தையுடையோரிடம் பொதுநலம் கையகப் பெறாமல், வேடதாரிகளிடம் ஒப்படைக்கப் பெறுகிறது. விளைவு ...... சுரண்டல், அதிகாரக் கையாடல், உண்மை ஒடுக்கப்படல், நேர்மை நசுக்கப் பெறல் - விளைவின் விளைவு .... சமுதாயச் சீர்குலைவு, வாய்ப்பில்லாதோர்; விருப்பமில்லாதோர் 'கலி' முத்திவிட்டதெனப் புலம்பல். எனவே சமுதாய உணர்வு உள்ளோருக்காவது எதிர் நீச்சல் துணிவு அளிப்பது இன்றியமையாதது.

### தெருவோரத்தில் எட்டு இடைஞ்சல்கள்

ஆய்வின் பொருட்டு ஆய்வாளர் உட்பட எட்டுப்பேர் நெரிசல் மிகுந்ததொரு தெருத்திருப்பத்தில் போக்குவரத்துக்கு இடையூறு நேரும்வண்ணம் மாலை 6 மணி முதற்கொண்டு 8 மணிவரை அரட்டை அடித்துக் கொண்டிருப்பதாக நடித்துக்கொண்டிருந்தனர். இடைஞ்சல் பெற்றுக் கடந்தோர் பலராயினும் மூன்று ரிக்சா ஓட்டுநர், ஒரு ஆட்டோ ஓட்டுநர்' தவிர எவருமே இச்செயலினைக் கடிந்துரைக்க வில்லை. இடைஞ்சலுற்றுச் சென்ற சிலரைத் தொடர்ந்து சென்று இச்செயலைக் கடிந்துரைக்காததற்கான காரணத்தினை வினவுகையில், 'நமக்கேன் வீண் வம்பு' என்னும் போக்கில் கூறியோர் ஏழு நபர்கள்.

'பார்த்தால் படித்தவர்களாகத் தெரிகிறார்கள். அவர்களுக்காவது அறிவு இருக்கவேண்டும். ஆசிரியர்களாவது

சொல்லித் தந்திருக்க வேண்டும்' என்னும் போக்கில் ஒரே மாதிரியாக உரைத்தோர் நான்கு ஆட்கள்.

'காவல் துறையினர் இதற்காகத்தானே ஊதியம் பெறுகிறார்கள். அவர்களே செய்யவில்லை' என்று அலுப்புடன் உரைத்தோர் பதினாறு பேர்.

இவ்வகையில் படித்தவர்களைப் போன்று உள்ளவர்களைத் தொடர்ந்து சென்று வினவியவழி அவர்கள் பிறர்மேல் பழி போடுகின்றனரேயன்றித் தாம் முன்வந்து எதிர்த்துத் திருத்த விழையவில்லை. இத்தகு படித்தோர்தம் நழுவிவிடும் எதிர் நீச்சல் இல்லாப் போக்கால் சமுதாயச் சீர்கேடுகள் ஒழியாதுள்ளன.

**மருத்துவமனைச் சீரழிவு**

மருத்துவமனைகளில் விலையுயர்ந்த மருந்துகள் அரசாங்கத்தால் அளிக்கப்பெறினும் அதனை அங்குள்ளோர் மறைவாக விலைக்கு விற்றுவிட்டு நோயாளிகளிடம் 'மருந்து தீர்ந்துவிட்டது' என்று கூறுகின்றனர். இதை 'எதிர்க்கக்கூடாதா' என்று அங்கிருந்த நோயாளிகளிடம் வினவியபோது 'யாரிடம் சென்று புகார் செய்வது, மேலதிகாரிகளுக்கும் இதில் பங்கிருக்கிறதே' என்று அப்போதிருந்த 19 பேர்களும் (பத்துப்பெண்டிர் ஒன்பது ஆடவர்) கூட்டாகக் கூறினர். ஒரு சிலர் மருந்து அளிப்பவரிடம் நேரடியாகவே கத்திவிட்டு வெளியேறியதைக் காண முடிந்தது. இம்மறைநிலை மருந்து விற்பனை உண்மையே என்பதை அங்குப் பணிபுரியும் ஊழிய நண்பர்வழி அறிய முடிந்தது. இதனை எதிர்த்து ஒடுக்க இயலாமல் ஏழை மக்கள் துன்புறுகின்றனர்:

அடி முதல் முடிவரை அனைத்து அதிகாரிகளுக்கும் கேட்கும் படியான எதிர்ப்பை எழுப்பாமல் இக்கொடுமையை ஒழிக்க வியலாது. ஏழைகளாகவும் படிப்பறிவற்றவர்களாகவும் திகழும் அந்நோயாளிகள் 'அநியாயம் செய்பவர்களைக் கடவுள் வெறுமனே விடமாட்டார்' என்று ஏற்ற எதிர் நீச்சலிடாது, இவ்விருபதாம் நூற்றாண்டிலும் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

**சுவரொட்டி எதிர் நீச்சல்**

பாலாஜி திரையரங்கின் முன்புறமாக, 'வீட்டின் மீது சுவரொட்டி ஒட்டுவதை உரிமையோடு தடுங்கள்' என்று புதுவை

அரசு விளம்பரப் பலகை வைத்துள்ளது. இது தொடர்பாக ஆய்வாளர் குடியிருக்கும் தெருவிலுள்ள மக்களின் கருத்துகள் பெறப்பட்டன. பொது விளம்பரங்களை எதிர்ப்பினும் தேர்தல் கால அரசியல் சுவரொட்டிகளையோ, வண்ணத் தீட்டுதல் களையோ எதிர்க்க அஞ்சினர். அரசியலார்தம் குண்டர் குழுக் களைப் பற்றிய அச்சமே இதற்குக் காரணம். இத்தகு அச்சத் தால் புதுவையின் புகழ் சுவரொட்டிகளால் புழுதியாக்கப் பெறுகிறது.

**முடிவுரை**

ஒன்பது அவதாரங்கள் எடுத்தும் தீமையை அழிக்க முடியாமல், கலியுகத்தில் உலகையே அழிக்கிறான் இறைவன். தீமையை அடக்கி வைக்க முடியுமேயன்றி முற்றுமே அழிக்க முடியாது என்பதையே இந்நிகழ்ச்சி சுட்டுவதாகக் கொள்ளலாம். இதனால்தான் சூரபத்மனை வெற்றிகொண்ட முருகரால், அவனை இவ்வுலகத்தை விட்டு வெளியேற்ற முடியாமல், 'சேவல், மயில்' என இரு கொடிகளாகப் பெறுகின்றார். இவ்வாறு எதிர்த்து அழித்துக்கொண்டேயிருப்பினும் மீண்டும் மீண்டும் தீமை முளைத்துக்கொண்டேயிருப்பதால், அதனை எதிர்க்காதிருப்பின் ஏற்படும் வளர்ச்சியின் விளைவைக் கூறத் தேவையில்லை.

தீமையை நசுக்குவதற்காக இன்று சட்டம் இயற்றப் பெறுகின்றது. தீமைக்கு எதிராக குரலெழுப்பினாலேயே அதை அடையாளங்கண்டு அது அழியுமாறு சட்டம் இயற்ற முடியும். நிர்வாகக் குறைபாடுகளால், இயற்றப்பெறும் சட்டம் தீமையின் கைகளிலேயே மாட்டிக் கொள்வதுண்டு. இதனை எதிர்த்துக் குரல் கொடுத்தாலன்றிச் சட்டத்தை மீட்டு உயிர் கொடுக்க வியலாது. அத்துடன் அச்சட்டம் தவறான முறையிலும் பயன் படுத்தப்பெறும். இவ்வகையில் எதிர் நீச்சலிடும் துணிவு மக்களிடம் தொடர்ந்து இருக்க வேண்டியது இன்றியமையாத தாகின்றது. அன்றைய தமிழர்களுக்கு எதிர் நீச்சலைப் போற்றும் உணர்வு இருந்தமையை நாலடியார் நூல் தொடர்பான வரலாறு காட்டும். ஆற்றின் போக்கிற்கு எதிர்ப்பாக நீச்சலிட்டு வந்த ஓலைச்சுவடிகளே நாலடியாராகத் தொகுக்கப் பெற்றன. தமிழ் மண்பதையின் நூல்கள் பல இப்படித்தாம். இவ்வுணர்வு நிலைத்

திருப்பின் தமிழர் வீழ்ச்சி அடைந்தவராக ஆகியிருக்க மாட்டார். இவ்வுணர்வு இருக்கிறது. ஆனால் மாற்றுருவம் பெற்றுவிட்டது. குறைகளைக் கூறிக் கொண்டே இருப்பதால் பயனில்லை. குறைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்க வழிகாணுவதே வளர்ச்சிக்கு வித்தாகும்.

**எதிர் நீச்சலிடத் தேவைப் பெறுவன**

1. எதிர்க்க முடியுமென்ற மனத்திட்பம்,
2. எதிர் நீச்சலின் இடையில் ஏற்படும் இழப்புகளுக்கு அஞ்சிப் பின்வாங்காமையும் சோர்வுறாமையும்,
3. எதிர் நீச்சலிடும் துணிவுள்ளோருடன் ஒழுகுதல்.

**மக்களிடம் இருப்பன**

1. தீமை இவ்வுலகில் இயற்கையானதும் வலிமையானது மென நினைத்து அதை எதிர்க்காதிருத்தல்,
2. எதிர்ப்பதால் ஏற்படும் இழப்புகளுக்கு அஞ்சலும் தீமையின் வளர்ச்சியால் வலிந்து புகுத்தப்பெறும் இழப்புகளை வேறுவழியின்றி ஏற்றுக்கொள்ளலும்,
3. சட்டத்தின் ஓட்டைகளையும் நெறி பிறழ்வோர் பயன் படுத்திக் கொள்வது போன்று சட்டத்தைக்கூட நெறி வாழ்வோர் பயன்படுத்தாமை,
4. இறைவன் இறங்கி வந்து இவ்வுலகை நல்வழிப்படுத்துவார் என்று இன்றும் நம்பியிருத்தல்,
5. உண்மையான எதிர்ப்புகளைவிட அதிகமாகக் கற்பனை யிலேயே, பல எதிர்ப்புகள் ஏற்படலாமென எண்ணி எதிர்க்காதிருத்தல்,
6. எதிர் நீச்சலிடுவோரை 'ஏமாளிகள், பிழைக்கத் தெரி யாதவர்கள்' எனத் தூற்றியோ, 'பின்புலம் உள்ளவர்கள், பிறவித் திருவுடையவர்கள்' என வியந்தோ அவர்களைப் பின்பற்றாதிருத்தல்.

**விளைவுகள்**

1. எதிர்க்காமையால் தீமைகள் மேலும் பெருகுகின்றன,
2. துணிவு அடைகின்றன,

3. தீமைகளின் வலிமை மிகுதியாக்கப்பெறுகிறது,

4. என்றுமே ஒழிக்க முடியாக் கடின இறுக்கத்தைப் பெறுகின்றன,

5. நேர்மையின் மீதுள்ள நம்பிக்கைக் குறைந்து காலப் போக்கில் தீமை செய்தாலன்றி வாழ முடியாதென்ற உணர்வு ஏற்படல்,

6. அனைவரையும் தீமையின் கண்கொண்டு காண்பதால் ஏற்படும் நம்பிக்கையின்மையும் உலக வெறுப்பும் மனித குலச் சோர்வும்,

**செய்ய வேண்டியன**

1. தீமைகளை இவ்வுலகின் இயற்கையென ஏற்றுக் கொள்ளவோ, அதற்குப் பழகிக்கொள்ளவோ கூடா,

2. இழப்புகளுக்காக எதிர்க்கத் தயங்காமை,

3. நல்லோர் ஒன்றுகூடிச் செயல்படல்,

4. எதிர்ப்பவரைக் காணின் உதவி புரிய ஓடுதல்,

5. சிந்தித்து எதிர் நீச்சலிட வேண்டுமென்பதற்காகச் சிந்தித்துக்கொண்டே காலங்கடத்தாமை,

6. எவருக்கோ என்று இருக்காமல் நாளைத் தனக்கு வர இருப்பது என எதிர்த்தல்,

7. எதிர்க்காமைக்காகப் புதுப்புதுக் காரணங்களைக் கூறிக் கொண்டிருக்காமை,

8. தீமை நோக்கிய எதிர்ப்புணர்ச்சியை வாய்க்குமிடமெல்லாம் பிறரிடம் உண்டாக்கல்,

9. எதிர்ப்பதுடன் நின்றுவிடாது தீர்வு காணும் வரை எதிர் நீச்சலிடல்,

10. சிறிய நெறி பிறழ்வையும் எதிர்த்தல், ஏனெனில் அது வளரப் போகும் பெரும் சீர்கேடுகளின் குழந்தை,

11. தன்னலத்திற்காகக் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்காமல் பொதுநல உணர்வோடு செயல்படல். ஏனெனில் நாளை மற்றொருவரின் குறுக்கு வழியால் நம் நேர்வழி தடைபடலாம்.

12. இறைவர் தண்டிப்பார் எனத் தீமை செய்ய விரும்புவோர் அஞ்ச வேண்டுமேயன்றி எதிர்க்க வேண்டியோர் காத்திருக்கக் கூடாது.

13. தேவைப்படுகையில் நல்லோர் தம் கையில் சட்டத்தைக் காக்கும் பொறுப்பினை எடுத்தேயாக வேண்டும். அதே நேரத்தில் சிறுமைபடுத்தப்பெற்று, அழிக்கப் படாதவாறு அறிவு நுட்பத்துடன் எதிர் நீச்சலிட வேண்டும்.

உலக. வீரப்பன் எம்.ஏ., எம்.எட்., புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் எம்.பில்., பட்டத்திற்குத் ''தமிழர்தம் கூட்டுணர்வு'' எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். இவர் 'தேடல்' நான்காம் தொகுப்பில் ''பிள்ளைச்சாவடி ஊர்ப் பெயராய்வு'' எனும் தலைப்பில் கட்டுரை படைத்துள்ளார்.

நெறியாளர்

அ. அறிவுநம்பி

# தமிழரின் கூட்டுணர்வுச் செயற்பாடுகள்

உலக. வீரப்பன்

**முன்னுரை**

பண்டைத் தமிழர்களிடையே கூட்டுணர்வு மேலோங்கி இருந்தமைக்கு இலக்கியச் சான்றுகளும், வேறு சில சான்றுகளும் காணப்படுகின்றன. இத்தகைய இலக்கியச் சான்றுகள் மற்றும் இன்னபிற சான்றுகளின் வழித் தமிழரிடையே காணப்பட்ட கூட்டுணர்வுச் சிந்தனைகளை விளக்கவும், சமூக நிறுவனங்களான குடும்பம், அரசு, வாணிபம், வேளாண்மை போன்றவற்றில் காணப்படும் கூட்டுணர்வுச் செயல்பாடுகளைத் தொகுத்தறியவும் இந்தக் கட்டுரை முற்படுகிறது.

**கூட்டுணர்வின் இன்றியமையாமை**

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் தனித்து வாழும் வாழ்க்கை உடையன அல்ல. இதற்கு மனிதர்கள் மட்டும்

விலக்கல்ல. பறவைகளும் விலங்குகளும் தத்தம் இனத்தோடே கூடி வாழும் சால்பினைக் கொண்டன. அங்ஙனமே மனிதனும் தம் குடும்பம், சுற்றம், நட்பு மற்றும் பிற தேவைக்காக மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழ்கிறான். இதனைக் கருதியே அரிஸ்டாட்டில் (Aristotle) 'மனிதனை ஒரு 'சமூகப் பிராணி' என்றார்.[1] உலகம் முழுவதும் காணப்படும் ஒரு கூறே இது. கூட்டுறவு இன்றி மனிதன் வாழ்வது அரிது[2] என்பதை இதன்மூலம் அறியமுடிகிறது.

### கூட்டுறவு – சொற்பொருள் விளக்கம்

'கூட்டுறவு என்பதற்கு நா. கதிரை வேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதி கூறும் விளக்கம், இணைந்த உறவு, சம்பந்தம், சேர்மானம் என்று பொருள் கூறுகிறது.[3] மேலும் தமிழ்ப் பேரகராதி கூட்டுறவு என்னும் சொல்லுக்கு சிநேகம் என்ற விளக்கத்தினையும், கூட்டம் என்பதற்குக் கூடுகை, திரள், சபை, இனத்தார், நட்பினர் மற்றும் கூட்டணி என்ற பொருள்களையும் தருகிறது.[4]

### பண்டைத் தமிழரின் கூட்டுணர்வு

'உலகின் பிற பகுதி மக்கள் நிலையான வாழ்வின்றி அமைதியற்று வாழ்ந்த காலத்திலேயே தமிழர்கள் நல்ல அரசியல் அமைப்பினையும், சமுதாய ஒருமைப்பாட்டினையும், வணிகச் சிறப்பினையும், இலக்கியச் செல்வத்தினையும் பெற்று வாழ்ந்து வந்தார்கள்[5] என்பதை இலக்கியங்களின் வழித் தமிழர்கள் கூட்டுணர்வாகச் செயல்பட்டதை நன்கு உணரமுடிகிறது.

### பழமொழியில் கூட்டுணர்வு

பண்டைத் தமிழர்கள் கூட்டுணர்வாகச் [செயல்பட்டு வந்ததைப் பழமொழிகளின் வாயிலாக அறியமுடிகிறது. கூட்டுணர்வாகச் செயல்பட வேண்டிய தேவை பற்றியும், அதற்கு மாறாக நிகழும்போது ஏற்படும் தீமை பற்றியும் பழமொழிகள் சுட்டுகின்றன. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' எனவும், 'ஊருடன் கூடி வாழ்' எனவும், 'ஊர் ஓடும்போது ஒத்து ஓடு' என வரும் பழமொழிகள் சான்றுகளாகும். இதுபோன்ற கருத்துக்கள் தமிழரிடையே இன்றும் நிலவுகின்றன. மேலும் தனித் தனியாகச்

செயல்படாமல் கூட்டாகச் செயல்பட வேண்டும் என்ற அறவுரையைத் தரும் வண்ணம் 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' எனவும், 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' எனவும் பொன்மொழிகள் காணப்படுகின்றன. இவற்றின்மூலம் ஊரிடம் பகைகொள்ளுதல் கூடாது எனவும், குழுநிலை இழந்து தனிநிலைக்குச் செல்லும்போது எந்த ஒரு செயல்பாடும் முழுமை நிலையினை அடைய முடியாது எனவும் உணர முடிகிறது. இக் கருத்துக்கு அரண் சேர்க்கும் நிலையில் 'காட்டில் மேயும் எருதுகள் ஒன்று சேர்ந்த நிலையில் எதிர்த்து விரட்டிய சிங்கத்தை, தனித் தனியாகப் பிரிந்த நிலையில் அவைகளைச் சிங்கம் எளிதில் கொன்றது. வல்லாண்மை அற்ற எருதுகளாயினும் கூட்டான நிலையில் எளிதில் சிங்கத்தை விரட்டிய நிலையும், பிரிந்த நிலையில் எருதுகள் ஒவ்வொன்றாக அழிந்த நிலையும் நோக்கும் போது கூட்டுணர்வின் வன்மை எளிதில் புலனாகும்'' என அறவுரைக்கும் கதை கூறப்படுகிறது.

## சமுதாயத்தில் கூட்டுணர்வு

குடும்பம்: சமுதாயத்தில் மிக முக்கியமான கூறாகத் திகழ்வது குடும்பமே யாகும். இக்குடும்பம் எனில் தாய், தந்தை, குழந்தைகள் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவாகும்.[6] இத்தகைய குடும்பத்தில் கணவரோடு ஒன்றுபட்டு வாழ்தலே பெண்டிர்க்கு நற் செய்கையாகும் என்பதை நான்மணிக்கடிகை

'ஒன்றூக்கல் பெண்டிர் தொழில் நலம்'

(நான்மணிக்கடிகை-87: 1)

என்று கூறும். எனவே குடும்ப வாழ்க்கைக்குக் கணவனும், மனைவியும் இணைந்த கூட்டுச் சிந்தனை மிக்க வாழ்வே சிறப்பானது என அறிய முடிகிறது. திருவள்ளுவரும் இல்லறவியலில் (குறள். 46) ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு நல்லறமாம் இல்லறத்திற் கியைந்த செயல்களை நாள் தோறும் செய்து, மக்கட் பேற்றுடன் கூடி மகிழ்ந்து வாழும் வாழ்க்கையாகும்' என்கின்றார்.

## துறவிகளும் கூட்டுணர்வாகச் செயல்படல்

குடும்ப வாழ்க்கையைத் துறந்து 'மனிதன் தனிமையை நாடிப் போவதாகச் சொல்லிக் கொண்டு போனாலும் அவன்

தன்னுடைய இயல்பை விட்டு விட முடியாதவனாகிறான்.[7] இதற்குக்காட்டாக 'உலக வாழ்வைத் துறந்து கானகம் செல்லும் துறவிகள் கூடத் தனித்து இருப்பதில்லை. பிற துறவிகளுடன் கூடி வாழ்கிறார்கள். அல்லது சீடர்களை ஏற்படுத்திக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டு வாழ்கிறார்கள்.[8] எனவே மனிதன் தனித்து வாழ்பவன் அல்லன். பல வழிகளிலும் குழுவுடன் இணைந்தே மனிதன் வாழ்கிறான் என்பது தெளிவாகிறது.

**விருந்தோம்பலில் கூட்டுணர்வு**

பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பலில் தலைச் சிறந்தவர்களாவர். குறிப்பாக இல்லறத்தான் விருந்தோம்பும் பண்பு கூட்டுணர்விற்கு மூல வித்தாக விளங்கி வந்ததை இலக்கியங்களின் வழியறிய முடிகிறது. 'இந்திரர்க்குரிய அரிய உணவான அமுதமே கிடைப்பதாயினும் அது தமக்கு இனியது எனக் கருதித் தாமே தனித்து உண்ணாமல் பிறருடன் கூட்டாக உண்ணுதலையே சிறப்பாகக் கொண்டனர். இக்கருத்தை உணர்த்தும் புறநானூற்றுப் பாடலாவது,

'உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே ...'

(புறம் 182: 1-3)

இவ்வாறு கிடைப்பதற்கு அரிய அமுதமாயினும் தனித்து உண்ணாமல் கூட்டாக உண்ணுதலும், இல்லறத்தில் குறைவான உணவு பெற்றிருப்பினும் வந்த விருந்தினர் அனைவரையும், நீண்ட நெடும் பந்தரின் கீழ் அமரச் செய்து விருந்து 'படைத்ததையும் புறமானது,

'இல்லது படைக்கவும் வல்லன்; உள்ளது
தவச்சிறிது ஆயினும் மிகப் பலர் என்னாள்
நீள் நெடும் பந்தர் ஊண் முறை ஊட்டும்
இந் பொலி மகடூஉப் போல'

(புறம் 331: 6—4)

என உணர்த்தும். இவ்வாறு விருந்து படைத்ததன் மூலம் அனைவரையும் கூட்டுணர்வுடன் செயல்பட வைத்ததையும்,

கூட்டுணர்வுக்கு இல்லறத்தாளே மூலக் காரணமாய் இருந்ததையும் உணர முடிகிறது.

## அரசியலில் கூட்டுணர்வு

'நாடு நல்லமைதி பெற்று மக்கள் இன்புற்று வாழ வேண்டுமானால் அந்நாட்டில் அரசு முறையும் சிறந்து விளங்க வேண்டும்.[9] நாட்டின் சிறப்பியல்பைக் கூற வந்த வள்ளுவர் (குறள் 740) மன்னன் அதிகாரங்களைக் கொண்டாலும் மக்களுடன் ஒன்று கூடி அவர்களுக்கு நீதி வழங்கியும், திட்டங்கள் தீட்டியும் பணி புரிந்திருக்கின்றார்கள். எனவே அரசு என்பது பலருடைய கூட்டுப் பணியால் உருவாவது இதனைப் பல சான்றுகள் சுட்டும்.

## ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும்

அரசியலில் மன்னரே பிரதானமாகக் கொள்ளாமல், அவ்வரசியலை நடத்திச் செல்ல ''அரசனுக்குத் துணையாக 'ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும்' இருந்தன''.[10] பண்டைக் காலத்தில் சிறப்பாக ஆட்சி மன்றக் குழுக்களே இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. எனவே எந்த ஒரு செயல்பாடும் மேற்சுட்டப் பெற்ற குழுக்களின் மூலம் செயல்படுகிறதே யன்றித் தனியொரு மன்னரால் செயல்படுவதில்லை என்பதை மேற்கூறிய சான்றுகளின் வழி அறியமுடிகிறது. இவையன்றி 'மன்றம்' என்பது ஒன்றுண்டு. அங்கு 'அவை' கூடும் என்று திருக்குறளும், மற்ற பிறவும் கூறுவதிலிருந்து ஊரவையும் அரசியலிற் பங்கு கொண்டதெனக் கருதுதல் தவறாகாது.[11]

## பாதீட்டு முறையில் கூட்டுணர்வு

தொல்காப்பியத்தில் வெட்சித் திணைக்குரிய துறைகளாகக் கூறியவற்றுள் இறுதியாகச் சொல்லப் பெற்ற மூன்று துறைகளும் இங்குக் கவனத்திற்குரியன. ''பாதீடு உண்டாட்டு கொடை என வந்த ஈரேழ் துறைத்தே' (புறத்திணையியல். 3) என நூற்பா கூறுகின்றது. மறவர்கள் கூட்டுணர்வாகச் சென்று பகை அரசனிடமிருந்து கவர்ந்து வரும் ஆநிரைகளைத் தம் ஊரிடத்தே கொண்டு வந்து நிறுத்தி அனைவரும் கூட்டாகப் பங்கிட்டுக் கொள்ளும் முறைக்குப் 'பாதீடு' என்று பெயர். இதனை விளக்கும் நூற்பா,

'ஒள்வாள் மலைந்தார்க்கும் உற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள் வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் — விள்வாரை
மாறட்ட வென்றி மறவர் தஞ்சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை'

(புறப்பொருள். வெண்பா-14)

இவ்வாறு கொண்டுவந்த ஆநிரைகளை மறவர்கள் மட்டும் கொள்ளாது தம்மைச் சார்ந்த வேல்வடித்துக் கொடுத்தவருக்கும், தூது சொன்னவருக்கும், நன் நிமித்தம் கூறிய புலவர்க்கும் மற்றும் உள்ள பிறருக்கும் பகுத்துத் தந்தனர். இந்நிலை 'காக்கை கரைந்துண்ணும் செயலுக்கு' ஒப்பு நோக்கத் தக்கது. மேலும் திருவள்ளுவரின் கூற்றான (குறள்-322) 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பதும் கவனத்திற்குரியது. எனவே தான் மட்டும் தணித்து உண்ணாமல் தன்னைச் சார்ந்த பிறரும் கூட்டுணர்வாகப் பங்கிட்டுக் கொள்ளும் முறையைப் 'பாதீட்டு முறை' என்பர். இம்முறை கூட்டுணர்வை வெளிப்படுத்துவதை அறிய முடிகிறது.

## புலவர்களிடையே கூட்டுணர்வு

மன்னர்களுக்குப் பல நிலைகளில் உற்ற உறுதுணையாக இருந்தவர்கள் புலவர் பெருமக்கள். மன்னரும் மக்களும் கூட்டுணர்வாகச் செயல்பட வேண்டுமென்பதே புலவரின் கொள்கையாக இருந்து வந்தது. இதனைச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பரக்கக் காண முடிகிறது. சான்றாக, 'சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்குமிடையே போர் ஏற்பட்ட தருணத்தில் கோவூர் கிழார் (புலவர்) அங்கே சென்று ஒரு குலத்தைச் சார்ந்த இருவரும் ஒருவரோடொருவர், போரிடுதல் முறையன்று என இடித்துரையும் கூட்டுணர்வாக இருக்கச் செய்தார். போரைத் தடுத்து ஒற்றுமையுடன் வாழப் புலவர்கள் தூது போன பாடல் வரிகளையும் உற்று நோக்கின் சமுதாயத்தின் ஒருமைப் பாட்டிற்குப் புலவர்கள் கொண்ட முயற்சிகள் புலப்படும்.

## அரசவையே புலவரவை

தமிழுக்குப் பெருந் தொண்டாற்றியவர்கள் புலவர் பெரு மக்கள் எனில் சாலப் பொருந்தும். இவர்களின் கூட்டுணர்வுச்

செயலை முச்சங்கங்களின் வாயிலாக அறிய முடிகிறது. புலவர்கள் 'மதுரை மாநகரில் கூடிய இடம் மன்னரின் அவையேயாம். அந்த அவை மன்னர் அமைச்சரோடு கூடுங்கால் அமைச்சரவை யாகவும் புலவரோடு கூடுங்கால் புலவரவையாகவும் விளங்கிற்று.[12] இதன் மூலம் புலவர் பெருமக்கள் ஒன்று கூடிக் கூட்டுணர்வாக அரசியலையும் இலக்கியத்தையும் வளர்த்துள்ளனர் என உணர முடிகிறது.

## இரட்டைப் புலவரின் கூட்டு வாழ்க்கை

அங்கக் குறைபாடான இரட்டைப் புலவர்கள் இலக்கிய வாழ்வு நடத்தினர். அவர்களில் ஒருவர் அத்தை மகன். மற்றவர் அம்மான் மகன். ஒருவர் குருடர். மற்றவர் முடவர். குருடரின் தோளில் முடவர் அமர்ந்து கொண்டு வழிகாட்டுவது வழக்கம். இவ்வாறாக ஒருவரின் துணை மற்றவர்க்குக் கிடைக்க இருவரும் சேர்ந்து கொண்டு ஒரு வகை கூட்டு இலக்கிய வாழ்க்கையை நடத்தினர்.[13] 'ஒரு கையால் ஓசை எழுப்ப இயலாது' என்பதைக் கருத்தில் கொண்டு இரு புலவர்களும் தனித்தனியாகச் செயல் படாமல் கூட்டுணர்வாகச் செயல்பட்டதன் மூலம் கூட்டுணர்வின் வன்மையை உலகிற்குக் காட்டினர்.

## வாணிபத்தில் கூட்டுணர்வு

வாணிபத்தின் மூலம் உள்நாட்டிலும் மேல்நாட்டிலும் தொடர்புற்று இருந்த வாணிகச் செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பலவிடங்களில் சுட்டும். 'பெரும்பாலும் வணிகர்கள் ஒரு குழுவாகவே இயங்கினர். வணிகக் குழுவினராக இயங்கும் பொது மரபு தவிர, தலைச்சுமையாய்ப் பண்டங்களைக் கொண்டு சென்று விற்போர், கூட்டங் கூட்டமாகச் சென்றனர்.[14] சாத்துகள் என வணிகர்கள் அழைக்கப்பட்டனர். குழுவினராகவே அவர்கள் பயணம் செய்தமையைப் பல சான்றுகள் கூறுகின்றன.

## வணிகர்கள் கூட்டம்

சங்க காலத்தில் பலநாட்டு வணிகர்களும் காவிரிப்பூம் பட்டினத்தில் வந்து தங்கியிருந்தனர். வேற்றுமை உணர்வின்றி அனைவரும் ஒன்றுபட்டு உறைந்தனர் என்றும், விழா நடக்கும் ஊர் போலவே மக்கள் கூட்டம் உடையதாய்க் காவிரிப்பூம்

பட்டினம் காட்சியளித்தது என்றும் பட்டினப்பாலை பாடல் வரிகள் சுட்டும்.

'மொழிபல பெருகிய பழிதீர்த்தே எத்தும்
புலம் பெயர் மாக்கள் கலந்தினி உறையும்'
(பட்டினப்பாலை: 216–217)

மேற்சுட்டப் பெற்ற பாடலின் மூலம் வணிகர்கள் கூட்டுணர்வாக வேற்றுமை உணர்வின்றி வாணியம் செய்து உறைந்து வந்தனர் என்பதை உணரமுடிகிறது.

இத்தகைய வாணிபம் பண்டைத் தமிழரிடையே வெகுச் சிறப்பாக நடைபெற்றது என்பதற்குக் கல்வெட்டுகளும் சான்று பகரும். அக்கல்வெட்டின் மூலம் வணிகர்கள் கூட்டம் கூட்டமாக வாணிகத்தில் ஈடுபட்டனர். உள்நாட்டுக் கூட்டத்திற்குச் 'சாத்து' என்று பெயர் வழங்கியதை அறிய முடிகிறது. மாங்குளம் கல்வெட்டின் மூலமாக வணிகக் குழுக்கள் இருந்தன என்றும் அவற்றுக்கு 'நிகாம' என்ற பெயருமுண்டு[15] என்பதன் மூலம் தமிழர்கள் கூட்டாகவே வணிகம் செய்து வந்தனர் என்பதை உணரலாம்.

**வேளாண்மைத் தொழிலில் கூட்டுணர்வு**

நாட்டு மக்களின் பசியைப் போக்குவதாக அமைவது வேளாண் தொழில். இத்தகைய தொழிலில் கிடைக்கும் பொருளை வணிகப் பெருமக்கள் பல்வேறு நாட்டுக்கு அனுப்பி வைத்து, நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர். எனவே வேளாண்மையை முதன்மையாக எடுத்துக் கொண்டு அவற்றின் கூட்டுச் செயல் பாட்டிற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு பயன்பட்டு வருகின்றன, என்பதைச் சுருக்கமாகக் காணுதல் தேவையான தாகும்.

''பல்வேறு அறிவியல் துறைகளுள் இன்றியமையாததாக உலகின் கவனத்தை ஈர்த்து விளங்குவது வேளாண்மை ஆகும். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு கொடுக்க உலகமே அத்துறையை எதிர்நோக்கி உள்ளது எனின் மிகையாகாது. மக்கள் தொகை நாளும் பல்கிப்பெருகுவது போல விளைநிலங்கள் விரிவடைவதில்லை. எனவே இருக்கின்ற நிலங்களில் விளைவைப் பன்மடங்கு பெருக்கியாக வேண்டும்''[16] இதற்கு வேளாண்

பெருமக்கள் தமக்குள் கூட்டுணர்வுடன் செயல்பட்டால் மட்டுமே நிறைவு காண முடியும்.

**கூட்டாகச் செயல்படல்**

'கூட்டுறவு என்ற சொல் சுதந்திர நாடுகளில் உழைப்பையும் மூலதனத்தையும் உற்பத்திக்காகக் கூட்டாகச் சேர்ப்பதையும் குறிக்கின்றது. பொதுவாகக் கூட்டுறவு என்பது கூட்டாக உழைப்பது, கூட்டு முயற்சி, ஒன்றுபட்டு செயல்புரிதல் ஆகியவற்றைக் குறிக்கும்'[17]. தமக்குள் வேறுபாடுகளை முன் வைத்துப் பலவாகப் பிளவுபட்டு நில்லாமல், ஒருவருக்கொருவர் பல்வித வகையால் உதவி செய்துகொண்டு பாடுபடுதலே கூட்டுணர்வாகும். செயலொன்றை அடிப்படையாக வைத்து ஒரே செயல்புரிவோர் இவ்வாறு கூட்டுறவு கொண்டிருப்பது நாட்டின் வளத்திற்கு உதவும்.

மேற்சுட்டப் பெற்ற கருத்துகளின் மூலம் வேளாண்மைக்குத் தனி மனிதன் உழைப்பு மட்டும் போதாது என்பதை அறியலாம். அனைவரின் கூட்டு முயற்சியின் பயனாக ஒன்றுபட்டுச் செயல் புரிவதே வேளாண்மை. வேளாண்மைக்கு உறுதுணையாக அமைவது கூட்டுறவுச் சங்கங்கள். இத்தகைய சங்கங்கள் வேளாண்மைக்குமிகுதியும் கூட்டுணர்வுடன் உதவி, ஒரு தொழிலில் கூட்டுணர்வு இல்லாது போனால் அத்தொழில், முறையாக நிகழ்வதில்லை. வேளாண்மைத் தொழிலின் பின்புலத்தில் இருக்கும் கூட்டுணர்வும் இதுவே.

**வறுமையும் வேளாண்மையும்**

இன்றைக்கு இந்தியாவில் 30 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்றார்கள். அவர்களில் 80 விழுக்காட்டினர் கிராமப்புறங்களிலும், 20 விழுக்காட்டினர் நகரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். வெறும் புள்ளி விவரங்களினால் மட்டும் இந்த ஏழை மக்களின் அவலங்களையும், வறுமையின் கொடுமைகளையும் விவரிக்க முடியாது. இதற்கு மாறாகக் கூடுதலான உற்பத்தியை வேளாண் மக்கள் கூட்டுணர்வு கலந்த கடும் உழைப்புடன் (Hard work) மேற்கொண்டால் மட்டுமே வறுமை நிலை போக்கப்பட்டு வளமாக வாழ முடியும்.

'வேளாண்மை என்பது பன்னெடுங் காலத்திற்கு முன்பே பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்பட்டு வரும் தொழிலாகும். எனவே இந்திய நாகரிகத்தை 'வேளாண்மை நாகரிகம்' என்றே வரலாற்று அறிஞர் சுட்டுவர்.[18]

**கூட்டுத் தொழிலே உழவுத் தொழில்**

உழவுத் தொழிலே தூய அறத் தொழிலாகும். உலக இலக்கியங்கள் அனைத்தும் உழவுத் தொழிலின் மாட்சியை விரிவாக விளக்குகின்றன. இதனை வள்ளுவப் பேரறிஞர்,

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை' (குறள் 1031)

என்றார். யார் யார் எங்கெங்குச் சுற்றித் திரிந்தாலும் முடிவில் உழவுத் தொழிலின் பலனை நாடியே வாழவேண்டியுள்ளது. ஆதலின் உடல் வருத்தம் தருகின்ற தொழிலாக இருப்பினும் உழவுத் தொழிலே தலையாய இடத்தைப் பெற்றுள்ளது. இன்று உழவுத் தொழிலே உயிர்காக்கும் தொழிலாக இருந்து வருகிறது. இது தனி மனிதனின் செயலன்று. கூட்டு முயற்சியில்லையானால் வேளாண்மை நடக்காது. கூட்டு உழைப்பின் பயனாகத்தான் உலகத்தின் பஞ்சம் தீர்க்கப்படும்.

**கூட்டு முயற்சியால் வறுமையைப் போக்குதல்**

மக்களை வறுமையிலிருந்து காப்பது அரசின் கடமை. நாட்டில் வறுமை நீங்கி வளம் செழிக்க மக்கள் கூட்டு முயற்சியையும், புதுமைத் திட்டங்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இதனை வேளாண்மையிலும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில்

'இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப் போர்'
(சிலம்பு. புகார். 149-150)

எனச் சுட்டுவது குறிக்கத்தக்கது. தற்போது கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி வேளாண்மைக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றது.

## உழவும் கூட்டு மனப்பான்மையும்

உழவியல் செயல்முறைகளில் ஐந்து நிலைகள் மிக முக்கிய மானதாகக் கொள்ளப்படுகின்றன. அவையாவன,

1. உழுதல் (Ploughing)
2. உரமிடுதல் (Fertilization)
3. களை நீக்குதல் (Weed control)
4. நீர் பாய்ச்சுதல் (Irrigation)
5. பயிர் பாதுகாத்தல் (Crop protection)

என ஐந்து நிலைகளும் உழவுக்கு மிகவும் இன்றியமையாதன என்பதை வள்ளுவர் சுட்டும் குறள் (1038) மூலம் அறிய முடிகிறது. இச்செயல்கள் முறையாக நிகழக் கூட்டு மனப்பான்மை இன்றியமையாதது. என்றுமே 'தனிமரம் நின்று தோப்பாக இயலாது'. அது போலவே தனி நபரின் முயற்சி மட்டும், உழவுத் தொழிலுக்குப் போதாது. பலரின் ஒன்று சேர்ந்த கூட்டு மனப் பான்மையே உழவுத் தொழிலுக்கு அவசியம். மேற்சுட்டப் பெற்ற ஐந்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மூன்று நிலைகள் கூட்டு மனப்பான்மையை அடியொற்றி இருத்தலைக் காண முடிகிறது.

### 1. உழுதல் (Ploughing)

அறத் தொழிலான உழவுத் தொழிலில் பயிர் சாகுபடி செய்வதற்காக முதன் முதலில் நிலத்தைப் பண்படுத்த ஏர்க் கருவிகள் போன்றவற்றைக் குறைந்த விலையில் இச்சங்கம் வழங்குகிறது. இதன் மூலம் தனி நபர் விவசாயி மட்டும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தனது பங்கை அளித்துவிட முடியாது. இந்நிலையில் வேளாண் பெருங்குடி மக்கள் அனை வரும் கூட்டுணர்வாக ஒருங்கிணைந்த பணிகளால் மட்டுமே உழுதலையும் பிறவற்றையும் மேற் கொள்ள இயலும்.

### 2. உரமிடுதல் (Fertilization)

நிலத்திற்குத் தேவையான உரங்களைச் சங்கங்களின் மூல மாகவும், இயற்கையான முறையில் கிடைக்கின்ற சாணம் முதலான பிற பொருட்களையும் கொண்டு வேளாண் பெருங்குடி

மக்கள் குறைந்த நிலத்தில் அதிகமான விளைச்சலைப் பெருக்கு கின்றனர். இதற்கு வேளாண் மக்களின் கூட்டு உழைப்பும், முயற்சியும், சங்கங்களின் ஆதரவும் துணை செய்கின்றன.

### 3. களை நீக்குதல் (Weed Control)

வேளாண் உற்பத்தியைக் குறைக்கும் களையை நீக்குதல் அவசியமாகிறது. தனி நபர் மட்டும், இருக்கின்ற நிலங்களில் களையை நீக்குதல் என்பது இயலாத காரியம். எனவே மற்ற நிலத்து வேளாண் மக்களும் ஒருங்கிணைந்து ஒரு நிலத்துக்குத் தேவையான களையை நீக்குதலும், பிறகு அந்நிலத்தவரும் அடுத்த நிலத்திற்குக் கூட்டாகச் சென்று உழைப்பதையும் இதனால் உற்பத்தி பெருகுவதையும் நோக்கும்போது, வேளாண் மக்கள் தனித்து செயல்படாமல் கூட்டுணர்வாகச் செயல்படுவதை உணர முடிகிறது.

### கூட்டு முயற்சியும் விரைவான வளர்ச்சியும்

வேளாண்மையில் கடின உழைப்பும் கூட்டுறவில் ஒத்துழைப்பும் இருக்கின்ற காரணத்தினால் இன்றைய தாய்த்திருநாடு வேகமான வளர்ச்சியைப் பெற்று விளங்கி வருதலை அறிய முடிகிறது.

கடந்த இருபது ஆண்டுகளில் இந்தியத் திருநாட்டில் விஞ்ஞானி களும், திட்ட ஆலோசகர்களும், விவசாயிகளும் கூட்டுறவுச் சங்கமும் ஒருங்கிணைந்து விரைவாகச் செயல்படுத்தித் தங்க ளுடைய முழுச் சக்தியையும் பயன்படுத்தி இருக்கக் கூடிய மிகக் குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு உழைத்தனர். அதன் பயனாக இன்று பாரதநாடு வெளிநாட்டுக்குப் பொருள் ஏற்றுமதி செய்கின்ற ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறதென்றால் வேளாண் மக்களின் கூட்டுப் பணியினைப் பற்றி அறியமுடியும்.

எனவே மேற்சுட்டப் பெற்ற அனைத்துத் தொழில்களும் தனி நபர் இருந்து செயலாற்றுவதை விடக் கூட்டுணர்வாக இருந்து செயலாற்றுவதைத் 'தங்கம் சாதிக்காததைச் சங்கம் சாதிக்கும்' என்ற புதுமொழி நிலைநிறுத்துவதை இங்கு உணரவேண்டும்.

## மேற்கூறப்பெற்ற செய்திகள் மூலம் பெறப்படுவன

1. உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் தனித்து வாழ்பவை அல்ல, ஒன்று பிறவற்றோடு சேர்ந்து வாழ்தலைக் காண முடிகிறது.
2. தனி மனிதன் செய்யும் செயலைவிடக் கூட்டாகச் சேர்ந்து செய்யும் செயலே சிறப்பாக அமைவதைக் காண முடிகிறது.
3. குடும்ப வாழ்க்கைக்குக் கணவன் மனைவி மற்றும் குழந்தைகள் தேவை, யாவரும் ஒருங்கிணைந்து வாழும் குடும்பம் சிறப்பான குடும்பமாக அமையும்.
4. துறவிகள் தனித்து வாழாமல் சீடர்களை ஏற்படுத்திக் கொண்டு வாழும்போது கூட்டுணர்வின் வன்மை புலப் படும்.
5. விருந்தோம்பும் செயல் பலரின் கூட்டுணர்வாக்கத்திற்கு அடிப்படையாக அமைவதைக் காணமுடிகிறது.
6. அரசியலில் கூட அரசவைக் குழுக்களின் மூலம் செயல்கள் நடைபெற்றதை உணர முடிகிறது.
7. வீரர்களும் தாம் பெற்ற ஆநிரைகளைத் தாமே கொள்ளாது தம்மைச் சார்ந்த அனைவருக்கும் பாதீட்டுத் தந்தனர். எனவே பாதீட்டு முறையும் கூட்டுணர்விற்கு மூல வித்தாக அமைவதைக் காண முடிகிறது.
8. புலவர்களும் கூட்டாக இலக்கியப்பணி செய்து வந்தனர் என்பதையறிய முடிகிறது.
9. வணிகர்கள் கூட்டுணர்வாகப் பிறநாடுகளுக்கு வாணிபம் நடத்தி வந்தனர் என்பதை இலக்கியங்களின் வாயி லாகவும், கல்வெட்டு மூலமாகவும் அறிய முடிகிறது. எனவே கூட்டுணர்வே மேலோங்கி இருத்தலை அறிய முடிகிறது.
10. வாணிபத்திற்கு ஆதாரமாக விளங்கும் வேளாண்மையும் பலரின் கூட்டுணர்வாக்கத்தின் மூலம் நடைபெறுவனவே யன்றித் தனி ஒருவரின் உழைப்பால் அன்று என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. டி. சுந்தரம் (ப. ஆ.) சமூகவியலின் அடிப்படைக் கூறுகள் ப. 1
2. வாழ்வியற் களஞ்சியம். தொகுதி. 8, ப. 531.
3. நா. கதிரை வேற்பிள்ளை, தமிழ் மொழியகராதி. ப. 503
4. லெக்சிகன், தமிழ்ப் பேரகராதி ப. 1067
5. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு ப. 20
6. கே. எம். கே. கோமதி சங்கர், சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம் ப. 5
7. டி. சுந்தரம் (ப. ஆ) மேற்சுட்டிய நூல், ப. 55
8. மேலது
9. சி. இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் ப. 35.
10. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு ப. 112.
11. மேலது
12. மு. பொ. மு. இராமசாமி, தமிழ்ச் சங்கம் ப. 9
13. சி. பாலசுப்பிரமணியன், மேற்சுட்டிய நூல், ப. 207
14. நா. சுப்ரமணியன், சங்க கால வாழ்வியல், ப. 288
15. கோ. கேசவன், மண்ணும் மனித உறவுகளும், ப. 113
16. இல. செ. கந்தசாமி, உழுகின்ற காலத்திலே ... பக். 66-67
17. கூட்டுறவு, ப. 1
18. இல. செ. கந்தசாமி, முற்சுட்டிய நூல் ப. 67

## ஆளுமையில்...

கால மேலாண்மை

நன்றியுணர்வு

நெசவுத் தொழில்

கட்டிடக் கலை

கதைப் பாடல்

அறிவு

தன்னம்பிக்கை

கல்வி

எதிர் நீச்சல்

கூட்டுணர்வு

068